THE LAW OFFICE OF
**GaryAnandasangaree**
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

# தாய் வீடு

THAIVEEDU JANUARY 2011 ஜனவரி HOME & LIVING

**FREE REAL ESTATE CLASSES**
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன்
சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
**SELVA VETTYVEL**
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®



# ஈழத் தமிழர்களுக்காகப் பேசவல்லவர் யார்?

## விக்கிலீக்ஸ்

## அரசன் அன்று கொல்வான் உறவுகள் நின்று கொல்லும்

படம்: REUTERS

**RAMAN APPLIANCES**
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு
வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
**FORMULA HONDA**
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL: 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH,
ONTARIO M1B 2W4.
TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465

**BUYING, SELLING,**
INVESTING & MORTGAGE NEEDS CALL
**SUN SANMUGATHAS**
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,E-mail:
kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
PMCI MORTGAGE CANADA INC.
One Source For Many Type of
Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

**Ahilan Thanabalasingham**
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடும் வீடுசார் விடயங்களுக்குமான பத்திரிகை

# The shortest distance between paradise and the place you call home




### Markham / 14th Avenue



**Call for Price**

Commercial/Retail, Excellent Opportunity! New Town Square Located At The High Traffic Intersection Of Markham/14th! Super High Density Area Surrounded By Commercial & Residential Areas


### Morningside / Finch



**$269,900**

3+1 Bedrooms, 2 Washrooms, Semi-Detached, Location! Cul De Sac, Close To Schools, Park, Hwy 401, Ttc, Mall, Library, Community Centre. Quiet Neighbourhood, Spacious Storage.


### Tapscott / Finch



**$279,000**

4 Bedrooms, 3 Washrooms, Large 4 Bedroom Freehold Townhome, Enclosed Front Porch, Wide Driveway Can Park 2 Cars, Perfect For 1st Home Buyer

### Mclevin / Sewells



**$279,900**

4+1 Bedrooms, 3 Washrooms, Detached 2-Storey,Large Family Home Could Be 5 Bedrooms. Approx. 2000 Sq. Ft. Main Floor Family Room And Den. Large Eat In Kitchen


### Neilson / Mclevin



**$289,000**

3 Bedrooms, 2 Washrooms, Att/Row/Twnhouse, Unique Layout, Real Brick House, 3 B/Room Corner Free Hold House,Huge Backyard, Steps To Mall, Elem.,Public,High Schools


### Neilson / Finch



**$289,900**

3+1 Bedrooms, 3 Washrooms, Detached 2-Storey, New Quality Laminated Fl Thru-Out , New Roof, Newer Wash Rooms, All Newer Windows, Bsmt Apt With Sep. Entrance


### Morningside / Mclevin



**$389,000**

3+2 Bedrooms, 4 Washrooms, Detached 2-Storey, Bright & Spacious. Main Floor Hardwood & 2nd Floor Laminate Finishes, Eat-In Kitchen. Oversized Fenced Backyard.

### Morningside / Finch



**$439,900**

4+2 Bedrooms, 4 Washrooms, Detached 2-Storey, Immaculate Double Garage Home With Basement 2 Room, Sitting Room And Separate Entrance. Over $20,000 Spent. You Must See. Renovated Washroom


### Bovaird / 410 Hwy



**$459,900**

4+1 Bedrooms, 4 Washrooms, Detached 2 Storey, Beautiful Home Backing Onto Turnberry Golf Course Approx 2150 Sqft, 9' Ceiling Main Floor, Large Eat In Kit With Walkout To Custom Deckage.


### Old Finch / Morningside



**$479,900**

4 Bedrooms, 3 Washrooms, Detached 2 Storey, Over 2700 Sq.Ft. W/ Loads Of Upgrades.Live In This Spacious Prof.Painted Beauty And Enjoy The Upgraded Kitchen


### 14th Ave & 9th Line



**$509,000**

3+1 Bedrooms, 5 Washrooms, Detached 2 Storey, Close To Schools, Transit, Shopping, Parks, Golf Course. This Home Has Been Recently Updated With Marble Countertops, Backsplashage.

### Cornell Centre Blvd / 16th Ave



**$514,990**

3+1 Bedrooms, 3 Washrooms, Detached 2-Storey, Brand New Home Built By Forest Hill Homes In Desirable Cornell Community. Hardwood Floors On Main Floor


### McCowan / Sheppard



**$523,800**

4 Bedrooms, 4 Washrooms, Detached 2 Storey, Closing July 2011. Brand New Home 2168 Sf On 35Ft Lot In High Demand Area. Quality Built 9'Ceiling


### Sheppard / Port Union



**$524,900**

4+1 Bedrooms, 4 Washrooms, Detached 2 Storey, Parking For 8 Cars, Professionally Finished Basement, Huge Kitchen, Wet Bar, Games Room, Close To Shopping, Near Rouge River Ravine

### Steeles / Markham



**$589,900**

4+1 Bedrooms, 5 Washrooms, Detached 2 Storey, Immaculate,Move In Condition,$100K Upgrades, 4Yr, 1 Owner Home. 9' Ceilngs, Professionally Landscaped, Interlocking Stones With Some Embedded Lights, Oak Floors

-digi Media-

## *24/7 Realtors*



**Vasanthy Niranjan**
Broker

Cell: **416-845-8272**
BUS: **416-298-3200**
Fax: 416-298-3440
vasanthyne@gmail.com,
vniranjan@trebnet.com

**Raj Ariyanayagam**
Broker

Cell: **416-930-4663**
BUS: **416-298-3200**
Fax: 416-298-3440
rajhomes@hotmail.com,
pariyanayagam@trebnet.com



HOMELIFE HIGHER STANDARDS

**HOMELIFE TODAY REALTY LTD.,** BROKERAGE
31 Progress Ave, Unit 210, Toronto, Ontario, M1P 4S6, Canada.

## தேவையான தலைமைத்துவம்

2011ம் ஆண்டு ஆரம்பித்திருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளும் தமிழர்களது வாழ்வில் மறக்க முடியாதவை. இதுவரை அறிந்திராத அளவிலான அழிவை ஈழத்தமிழர்கள் சந்தித்திருக்கின்றோம். சிங்களத் தலைமைகள் போர் முடிவுக்கு வந்துவிட்டதாக ஆர்ப்பரிக்கின்றன. இலங்கைத்தீவில் 'ஒரே இன' ஆட்சியென்பது இப்போதைக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. 'வந்தேறு குடிகளுக்கு உரிமைகளை வாரி வழங்க முடியாது; தருவதைப் பெற்றுக் கொண்டு அமைதியாகப் போய்விடுங்கள்' என்ற தொனியில் அரசதரப்பு கூறிவருகிறது.

போர் நடைபெற்ற பகுதிகளிலுள்ள தமிழர்களின் நிலை மிகத் துயரமானது. எவ்வித அடிப்படை மற்றும் கல்வி வசதிகளற்று முகாம்களிலும், குடிசைகளிலும் தமிழர் வாழ்வு நகர்கிறது. உயிரைக் காத்துக்கொள்ள இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டோர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர். இவர்களிற் பெரும்பாலானோரின் வாழ்க்கை முகாம்களிலேயே தொடர்கிறது. மேற்குலகுக்குப் புலம்பெயர்ந்தோர் அடையாளங்களைத் தொலைத்தவர்களாகி விடுவோமோ என்ற அச்சத்திலும், பல அணிகளாகப் பிளவுபட்டும் நட்டாற்றில் விடப்பட்ட நிலையில் இருக்கிறோம்.

இன்று குரல்கொடுக்க யாருமற்ற ஓர் ஏதிலி இனமாகிவிட்டோமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இந்த நிலையில் அண்மைக்கால வரலாற்றைத் திரும்பப் பார்க்கவேண்டிய கட்டாயத்திலும், கடந்தகால நடவடிக்கைகளையும் அரசியலையும் மீளாய்வு செய்யவேண்டிய அவசியத்துடனும் இருக்கிறோம். உணர்ச்சி வசப்படுவதை விடுத்து ஒரு விடயத்தை நாம் ஏற்றேயாக வேண்டும். தன்னலமில்லாது, சமூகமாகச் சிந்திக்கக்கூடிய, இன்றைய அரசியல் போக்குகளுடன் நகரக் கூடிய, கல்வியறிவு மிக்க, அரசியல் சாணக்கியம் மிகுந்த சரியான தலைமை ஒன்று எம்மிடம் இல்லை.

வெற்றிபெற்ற ஒவ்வொரு நாட்டுக்கும், சமூகத்துக்குப் பின்னால் ஒரு தூரநோக்குடைய தலைமை இருந்திருக்கிறது. இவ்வாறான ஒரு தலைமைக்கு சிங்கப்பூர் எமக்கு முன்னேயிருக்கும் ஒரு சிறந்த உதாரணமாகும்.

இலங்கை இந்திய அரசுகளுடன் ஒட்டிக்கொண்டிருப்போரும் தம்மை தாமே தமிழினத்தின் தலைமை என்று கூறிக்கொள்வோரும் எமக்கான தலைமைக்குப் பொருத்தமாயிருப்பர் என இனியும் எண்ணமுடியாது.

சிறந்த தலைமைத்திறன் மற்றும் தலைமைப்பண்புகள் கொண்டவர்கள் எம்மிடையே இருக்கின்றார்கள். சரியான தடத்தில் பயணிக்கக்கூடிய இளைய தலைமுறையொன்றை அடையாளம் காண்போம். இவர்களுக்குக் கடந்தகால அரசியலையும் வரலாற்றையும் வெற்றிகளையும் தவறுகளையும் கற்றுக்கொடுப்பதே எமக்கு முன்னேயிருக்கும் தலையாய பணியாகும்.

சரியானவர்களை இனங்கண்டு வளர்த்தெடுப்போம். சமூகப்பொறுப்புள்ள, தன்னலமற்ற, தூர நோக்குடைய, சரியானதையும் தவறானதையும் உறுதியுடன் ஆதரிக்கவும் எதிர்க்கவும் மனத்திடம் கொண்ட இளைஞர்களை, அவர்களிடமிருந்து ஒரு தலைமையை உருவாக்கியேயாகவேண்டும்.

III

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரி, பிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

அட்டைப் படம்: **REUTERS**

**Publisher & Editor : P.J. Dilipkumar**
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன்.

ஓவியங்கள் : ரமணி (இலங்கை), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), மு.சு. சிவகுமாரன் (ஜேர்மனி), கருணா (கனடா). ஜீவானந்தன் (இந்தியா)

புகைப்படங்கள்: கணா ஆறுமுகம், கருணா.

தட்டச்சு : கௌரி, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

அஞ்சல் முகவரி : **Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

றொறன்ரோ விநியோகம் : கிளி (சிவராஜா)
மொன்றியால் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா **1-514-299-3186**
ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு **1-613 -276-7253**

**Tel : 416-646-3422, 416-857-6406**
**Fax : 416-849-0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

# ஈழத் தமிழர்களுக்காகப் பேச வல்லவர் யார்?




ஆ கணபதிப்பிள்ளை

**உலகில் எந்த மூலையிலாவது எமக்காகக் குரல் கொடுப்போர் யாரும் இல்லையா என எண்ணுமளவிற்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.**




## விக்கிலீக்ஸ்

ஜிப்ரி உதுமாலெப்பை

**மிக பாதுகாப்பான உலக ரகசியங்களையே எடுக்க முடியுமென்றால் உங்கள் கணினியில் இருக்கும் தரவுகள் எவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறது. உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.**




## என்பு முறிவுகள்

கந்தையா செந்தில்நாதன்

**எலும்புகளைப் பலமாக வைத்திருப்பதற்குரிய எல்லா வழிகளையும் கடைப்பிடிப்பதன் மூலம் எலும்பு முறிவுகளால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கலாம்.**




## நம்பிக்கை மதிப்பெண்

செந்தூரன் புனிதவேல்

ஒருவருடைய நம்பகத்தன்மையையும் நாணயத்தையும் சுட்டிக்காட்டுவதே நம்பிக்கை மதிப்பெண் (**Credit Score**) என்றால் தவறாகாது.




## அரசன் அன்று கொல்வான்

குரு அரவிந்தன்

1976ம் ஆண்டு ஆஜன்ரைனாவில் நடந்த இராணுவப் புரட்சியின் போது பல படுகொலைகளைச் செய்ததற்காக 35ஆண்டுகளின் பின் சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டுள்ளார்.

வீட்டு மதிப்பீடும் பரிசோதனையும் — வேலா சுப்ரமணியம் 7
காதலும் வீரமும் கோபமும் குரூரமும் — நிமால் நாகராஜா 13
மார்பகப் புற்றுநோய் — சிவாஜினி பாலராஜன் 14
தலைமைத்துவப் பாதை — மாறன் செல்லையா 31
சட்டவிரோத வாகனத் தரிப்பும் தண்டப் பணமும் — சிவ பஞ்சலிங்கம் 32
இந்திய மீனவர் அத்துமீறல் தொடரும் அவலங்கள் — சி. சண்முகநாதன் 68
மகர முதல வளர்ப்பெல்லாம் — மஞ்சுளா ராஜலிங்கம் 34
ஓய்வூதிய வயதில் மாற்றம் — குமார் புனிதவேல் 43
மலசல வெளியேற்றக் கட்டுப்பாட்டிழப்பும்... — கந்தையா பரநிருபசிங்கம் 49
அந்திமகால சேவைக்கு யார் கட்டுவது மணி? 53
சிலிர்க்க வைக்கும் Seychelles — திரு மகேசன் 59
செவிப்புலனற்ற மற்றும் குறைபாடுடைய பிள்ளைகள் — ஜீவா திசைராஜா 60
விதிக்கப்பட்ட வாழ்க்கையும் வீழ்ந்து சென்ற நம்பிக்கைகளும் — அருண்மொழிவர்மன் 72
புலம் பெயர்வும் அலைந்துழல்வும் — சேரன் 74
தொலைந்து போன சிற்றோடை — என்.கே. மகாலிங்கம் 87
2010 - கவனிக்க வைத்தவை — கந்தசாமி கங்காதரன் 89
பதற்றம் — அ. முத்துலிங்கம் 99
ஈழக்கூத்தன் தாசீசியஸ் — ப. ஸ்ரீஸ்கந்தன் 108

*மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்*

# ஈழத் தமிழர்களுக்காகப் பேச வல்லவர் யார்?

- அ. கணபதிப்பிள்ளை -

இலங்கைத் தமிழர்கள் இலங்கைக் குடிமக்களா, சர்வதேசக் குடிமக்களா? அவர்களில் அக்கறை காட்டுவது இலங்கை அரசா, சர்வதேசநாடுகளா? அவர்களுக்காகவும் அவர்களது நலன்களுக்காகவும் பேச வல்லவர்கள் நாடுகளா தனிமனிதர்களா? ஒன்றுபட்ட தமிழினம் எப்பொழுது ஈழத்தமிழர்களுக்காகப் பரிந்து பேசும் நிலையினைப்பெறும் என்பன போன்ற ஐயப்பாடான கேள்விகளுக்கு மத்தியிலும் ஈழத்தமிழர்களைப் பீடித்துள்ள இருள்மறைந்து சுதந்திர ஒளியொன்று பிறக்கூடியதான பேசவல்லவர்கள் உருவாக்கம் பெறுவார்கள் என்ற எதிர்பார்ப்பானது காலத்தினால் உருவாக்கப்படுதல் நிச்சயம்.

காலத்துக்குக் காலம் ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவர்களும், அவர்களது நலனில் அக்கறை கொண்டோரும் உருவாக்கம் பெற்றிருக்கிறார்கள். உள்நாட்டில் உள்ளவர்களும் வெளிநாட்டில் உள்ளவர்களும் தனிநபர்களாகவும் நிறுவனங்களாகவும் நிறுவனங்களின் பின்னணியில் இருந்து கொண்டும் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு, சுதந்திரம், இயல்பு வாழ்க்கை என்பவற்றுக்கு இடைஞ்சல்கள் வருகின்ற பொழுதில் அவற்றிற்கு தீர்வு காணவேண்டி ஒலிக்கும் குரல்கள் தான் பேசவல்லார் தகுதியைக் கொண்டிருக்கின்றன.

இலங்கையில் தமிழர்கள் சுதந்திரத்துடனும் பாதுகாப்புடனும் வாழந்து வருகிறார்கள் என்பது அரசாங்கத்தின் வாதம். அரசுக்குத் துணை போகும் பேசவல்லார்கள் இலங்கையில் எதுவுமே பாரதூரமாக நடந்துவிடவில்லை என்றும் மக்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள் அவர்களைக் குழப்புகிறவர்கள் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் தான் என்ற தொனியில் பேசமுற்படுகிறார்கள். இவ்விதம் பேசுபவர்கள் ஒன்றில் அரசியலில் அரசாங்கத்துக்குத் துணை போகும் அரச ஆதரவாளர்களாகவோ அல்லது விடுதலை புலிகள் இல்லாத நேரத்திலும் அவர்களின் பெயரினால் அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்படுவதனைக் கண்டு மனம் பொறுக்காதவர்களாகவோ இருப்பார்கள். போர் ஒன்று நடந்ததன் பின்பாகத் தம்மை அரச ஆதவாளர்களாகத் தொடர்ந்தும் காப்பற்றி வைத்துக் கொள்ள விரும்பும் முதலாவது வர்க்கத்தினர் தான் இவ்விதம் இருபிரதேசத் தமிழர்களையும் ஒட்டவிடாமற் தட்டிவிட நினைப்பவர்களாயிருக்கிறார்கள்.

> “அன்று தமிழர்களையும் அவர்களது உயிர்களையும் காப்பாற்ற முடியாத ஐ.நா போர்க் குற்றவிசாரணையினை எந்தவகையில் விருப்பு வெறுப்புமின்றிச் செய்யும் என்ற ஐயப்பாட்டுடன் தமிழர்கள் இருப்பதில் வியப்பேதுமில்லை.”




மூன்றாவது வகையினர் சமூக கரிசனை கொண்டவர்கள் ஈழத்தில் போர் நடந்தகாலங்களிலும் சமாதான காலங்களிலும் தமிழர்களின் கலைகலாசார விழுமியங்களுக்கு ஏற்படும் வெளியாபத்துக்களுக்கும் அகத்தேயிருந்தெழும் ஆபத்துகளுக்கும் எதிராகக் குரல் கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். ஒருகுடம்பாலில் ஒரு துளிவிஷம் கலந்துவிடக்கூடாது என்பதில் அக்கறை கொண்டவார்கள் இவர்கள். ஒரு சிலர் செய்யும் அநாகரிக செயல்களுக்கு அத்தனைபேரும் அவப்பெயர் கொள்ளுதல் பொருந்தாதென்பதனைத் தெரிவுபடுத்த விரும்பும் பிரிவினர் சமூக முன்னோடிகளான ஈழ மாணவர் சமூகம். அவர்களது பிரசன்னமானது எந்தவித உளவாளிகளும், புலனாய்வாளர்களும் புகமுடியாத இடங்களுக்கும் சென்று விடுகிறது. பத்திரிகையாளர்கள் செய்திகளின் பரபரப்பினை விரும்புவது இயற்கை ஆனால் மாணவர்கள் பரபரப்பில்லாத சமூகத்தின் இயல்பு வாழ்க்கையினை விரும்பும் பேசவல்லவர்களாக உருவாக்கம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

வரலாற்றுக் காலத்தில் ஈழத்தமிழர்கள் பேரரசர்களினதும் சிற்றரசர்களினதும் கட்டுப்பாட்டில் இருந்தபொழுதில் அனுபவித்த துன்பங்களையோ இன்பங்களையோ ஒருவரும் அறிந்து கொள்ளமுயற்சி எடுக்கவில்லை. அவர்கள் வாழ்வின் எச்சங்களாயிருந்த கலாசார நிறுவனங்களும் கோவில்களும் மேல்மட்ட இன்ப வாழ்க்கையினைத் தெளிவுபடுத்தினாலும் சமாதானமில்லாக் காலத்தின் துன்பங்கள் இன்றிருப்பன போலன்றி வேறுபட்டிருந்திருக்கும் என்று சொல்லமுடியாது.

கடல்கடந்த கீழைத் தேயக்கலாச்சாரத்தின் மறைவுடனும் கடல்கடந்த மேலைத் தேயக் கலாசார உதயத்துடனும் இலங்கையில் உள்ள தமிழர்களின் நவீன அரசியல் வாழ்க்கையினை நோக்குகிறோம்.

அராபியர்களால் உருவாக்கப்பெற்றிருந்த ஈழத்தின் வர்த்தக முதலாளித்துவத்தின் விளைவாக அராபியர்களின் வழித்தோன்றல்கள் மேற்கிலிருந்து துரத்தப்பட்டபொழுது தமிழர்களுடன் இணைந்து கிழக்கை வாழிடமாகக் கொண்டிருந்தனர். வடக்கில் சங்கிலியனால் தண்டிக்கப்பட்ட கிறீஸ்தவத் தமிழர்களுக்குப் போத்துக்கீசரும் வன்னித்தமிழரும் பாதுகாப்பு வழங்கினர். இலங்கையினை அரசியலடிப்படையில் ஒன்றாக்கமுனைந்த பிரித்தானியர்களும் டச்சுக்காரர்களும் தமிழர் பிரதேசத்தில் இருந்த மதந்தழுவாததெரு இயல்பு வாழ்க்கையினைப் பேணவே முயற்சி செய்தனர்.

தமிழரின் கல்வி கலாசாரத்துடன் மதத்தினை இணைத்ததினால் இஸ்லாம் கிறீஸ்தவம் இரண்டும் இந்து மதத்துடன் இணைந்திருக்க வேண்டிய நிலையினுள் இருந்தன. இருப்பினும் ஆரம்பத்திலேயே இருந்துவந்த இந்து மத எழிச்சியானது பௌத்தத்துடன் இணைய மறுத்திருந்தது. இந்த நிலைமையானது இந்துக்களுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான தொரு இறுக்கமான இணைவைக்காப்பாற்றி வைத்துக் கொண்டிருந்தது. இந்நிலையில்தான் ஈழத்தமிழரின் கல்வி காலாச்சாரம் இரண்டும் தென்னிந்தியத் தமிழர்களுடனும் அவர்கள் குடியேறிய மலேசியா சிங்கப்பூர் ஆகிய பகுதிகளுடனும் இணைவினைப் பெற்றிருந்தன.

மதஆதிக்கம் முடிவடைந்து வர்க்கப் போராட்டம் முக்கியம் பெற்றிருந்தவேளையில் மாக்ஸிய, மோவோயிச சிந்தனைகளின் இருஅணியும் தோற்றம் பெற்றன. இலங்கைத்தமிழர்களின் சுதந்திரமான இயல்பு வாழ்க்கையில் ஒன்றுபட்ட வர்க்க ரீதியிலான சமூகத்தின் உருவாக்கம் சாத்தியமானதாக இருக்கவில்லை சீனாவோ ரஷ்யாவோ தமிழர்களின் பின்னணியில் நிற்கக்கூடும் என்பதற்கு தமிழர்கள் வர்க்கரீதியிலான சிந்தாங்கத்தில் கொண்டிராத அபிமானம் காரணமாயிற்று. தவிரவும் சிங்கள இடதுசாரிகளது உறுதியற்ற போக்கினால் தமிழர்களுக்காகப் பேசும் பாங்கும் பலமிழந்து போயிற்று.

தெற்கிலே இடது சாரிகளின் புரட்சி ஏற்பட்ட பொழுதில் தமிழர்களையும் இணைக்க வேண்டும் என்றதற்கு ஏற்ற சூழலைத் தமிழர்கள் உருவாக்கியிருக்கவில்லை. இனங்களுக்குள்ளான புரட்சியும் இனங்களுக்காக நடத்தப்படும் புரட்சிகளும் இருவேறு இனத்தின்பாற்பட்டதாக மாற்றமடைந்திருந்தமை சுதந்திரப் போராட்டத்துக்கான ஆதரவினைச் சமூகம் கடந்து வழங்குவதற்கு ஒருவரும் தயாரில்லை என்ற நிலையினை உருவாக்கிவிட்டது.

பூகோள அரசியலும், புதியபொருளாதார ஒழுங்குகளும் புதியதொரு அரசியற்பாதையினைத் திறந்துவிட வழிவகுத்தன. இந்நிலையில் பல்தேசிய நிறுவனங்கள் பல்நாட்டு முதலீடுகள் போன்றன உலகெங்கும் பெருகின புதிய அரசியல் பொருளாதாரக் கூட்டுக்களில் நாடுகள் தங்களை இணைத்துக்கொண்டன.

இலங்கை தன்னை இணைத்துக் கொண்ட கூட்டுக்களில் தென்னாசிய நாடுகளின் ஒப்பந்த இணைவு, அணிசேராநாடுகளின் இணைவு, பொது நலவாய நாடுகளின் இணைவு என்பன முக்கியம் பெற்றிருந்தன. இத்தகைய இணைவு தமிழர்களை இலங்கையின் தேசியக்குடிகளாகவே நோக்கவைத்தது. அவர்களுக்கு இழைக்கப்பட்ட அரசியல், சமூகப் பாரபட்சமானது உள்நாட்டுப் பிரச்சினையாகவே நோக்கப்பட்டன. ஆனால் இலங்கைத் தமிழர்கள் அவ்விதம் எண்ணவில்லை. தம்முடைய சுதந்திரத்துக்குப் பொறுப்பானவர்கள் சிங்கள

6ம் பக்கம் பார்க்க...

# விக்கிலீக்ஸ்



ஜிப்றி உதுமாலெப்பை
- கணினி வல்லுனர் -

M.G.R. அவர்களின் படம் பார்ப்பதுபோல் ஊழல் பெருச்சாளிகளின் முகத்திரையைக் கிழிக்கும் கதாநாயகனும், உண்மை வெளிவராமல் தடுக்க அடாவடித்தனம் பண்ணும் வில்லன் திரைக்கதைபோல் உள்ளது இந்த விக்கிலீக்ஸ் சமாச்சாரம்.

விக்கிலீக்ஸ் என்ற சொற்பதம் உலக அரசியலை ஒரு கலக்குக் கலக்கி வருவதை உள்நாடு மட்டுமல்லாமல் வெளிநாட்டு அரசியலில் ஈடுபடுபவர்களும் "யாரு இந்தப் பயலுகள்? அமெரிக்காவுக்கே 'தண்ணி' காட்டுகிறார்கள்" என்று முக்கில் மேல் விரல்வைத்து ஒரு சந்தோசம் கலந்த கலக்கத்துடன் நிமிர்ந்து பார்த்து வருகிறார்கள்.

விக்கிலீக்ஸ் பற்றிய சங்கதிகளை 'லீக்' பண்ணுவதுடன் இந்த நிகழ்வுகள் கணினி உலகில் வாழும் எங்களுக்குக் கூறும் படிப்பினை என்ன என்பதனை எடுத்துவருவதே இந்த கட்டுரையின் நோக்கம்.

விக்கிலீக்ஸ் தகவல் கருத்து பரிமாற்றல் துறையில் ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கியுள்ளது. 'அவர் சொன்னார் இவர் சொன்னார்' என்பதனை விடுத்து பொது மக்களுக்கு வழங்கப்படும் செய்திகளின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தக் கூடியதான உண்மையான ஆவணங்கள், ஒலிப் பதிவுகள், ஒளிப்பதிவுகளை செய்தியாக அப்படியே தரும் ஒரு புலனாய்வுத் தகவல் கலையை விக்கிலீக்ஸ் உருவாக்கியுள்ளது.

கருத்து சுதந்திரம் என்பது உலகில் இருக்க வேண்டும். உலகில் பெரிய இடங்களில் நடக்கும் மர்மமான திட்டங்கள் பொது மக்களையும் போய்ச் சேரவேண்டும், வல்லரசுகளின் - கொடுங்கோல் அரசுகளின் முகத்திரை கிழிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் உருவானதுதான் விக்கிலீக்ஸ் என்ற (தன்னார்வ தொண்டர்களைக்கொண்ட) இணையத் தளத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு. 2006ஆம் ஆண்டு Wikileakes.com என்ற இந்த இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பித்த ஒரு வருடத்திலேயே 1.2 மில்லியன் மிக முக்கியமான, மறைக்கப்பட்ட தகவல் கோப்புகள் இந்த இணையத்தளத்திற்கு வந்து சேர்ந்தன. இந்த இணையத்தளமானது சீனாவில் இருந்து வெளியேறியவர்கள், தன்னார்வ பத்திரிகையாளர்கள், இவர்களுடன் அமெரிக்கா, தாய்வான், ஐரோப்பா, அவுஸ்திரேலியா, சௌத்ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த கணினி வல்லுனர்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த Julian Assange (3 July 1971) என்பவரே இந்த இணையத்தளத்தின் பொறுப்பாளர் அல்லது பிரதம ஆசிரியர். ஜூலியன் ஒரு பௌதீக, விஞ்ஞான கணினி மென்பொருள் விற்பன்னர். 1980களிலேயே இவரும் இவருடைய சில நண்பர்களும் சேர்ந்து 'International subversives' என்ற அமைப்பின் ஊடாக பல அரச கணினிகளை ஊடறுத்து அதிர்ச்சியான உண்மைகளை வெளிக்கொண்டு வந்தனர். 1989 NASA Atlantis விண்வெளிக்கலத்தை செலுத்த ஆயத்தமான போது இந்த நண்பர்கள் கூட்டம் NASA விண்வெளி மையத்தின் கட்டுப்பாட்டுக் கணனிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அதிர்ச்சி அலையை ஏற்படுத்தினார்கள். அன்று தனது உந்து சக்திக்காக புளுடோனியம் நிறைந்திருந்த அந்த அட்லாண்டிஸ் விண்கலம் தரையில் வெடித்திருந்தால் முழு கலிபோர்னியாவும் அணுகுண்டு வெடித்ததுபோல் அழிந்திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. இந்தத் தாக்குதலில் தன் நண்பர்கள் ஈடுபட்டாலும் தான் பங்குபற்றவில்லை என்று ஜூலியன் கூறி வந்தார். இதன்பின் அமெரிக்க அரசு இவர் மீது தன் கவனத்தைக் காத்திரமாக வைத்திருக்க தொடங்கியது. ஆனால், ஜூலியன் தன்னைக் கவனிப்பவர்களை அவர்களை விடவும் முந்திக்கொண்டு கவனித்து வந்ததாக இவரைப் பின்தொடர்ந்து செல்ல அமைக்கப்பட்ட ஆஸ்திரேலிய அரச காவல் துறையினர் "He was one stop ahead of us!" என்று கூறுகிறார்கள். மெல்பர்ன் நகரின் மத்திய தொலைத் தொடர்பு நிலையத்தைத் தனது வெளிநாட்டு தொடர்புகளுக்காக ஜூலியன் ஊடறுத்தார். இதற்காக கைது செய்யப்பட்டாலும் பின்னர் இதனால் பெரிய ஆபத்து ஏற்படவில்லை. ஒத்திவைக்கப்பட்ட தண்டனையும் சிறிய தண்டப் பணமும் தண்டனைகளாக வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். பல முக்கியமான நாடுகளைப் பகைத்துக் கொண்டதினாலும், Interpol அமைப்பினால் தேடப்படுபவராக வரிசைப் படுத்தப்பட்டதினாலும் பொதுவாக ஒரே நாட்டில் தங்காமல் பல நாடுகளிலும் வாழ்ந்து வந்தவர். ஊடக சுதந்திரம் புலனாய்வு, பத்திரிகையாளர் சுதந்திரம் போன்றவற்றில் மிகவும் நம்பிக்கையுடன் செயல்பட்டதன் காரணமாக மூன்று தடவை சிறந்த பத்திரிகையாளருக்கான கௌரவத்தை விக்கிலீக்சுடன் சேர்ந்து வேலை செய்ததற்காகக் கிடைக்கப்பெற்றவர் ஜூலியன் அசாஞ்ஜே. மீண்டும் 1996இல் ஜூலியன் உடன் சேர்ந்து அவரின் நண்பர்களும் ஆஸ்திரேலியாவில் நடந்த பல Computer Hacking நடவடிக்கைகளுக்காக சந்தேகிக்கப்பட்டார். இவரின் ஒரு நேர்காணலை youtube.com URL மூலமாகவோ http://www.youtube.com/watch?v=bVGqE726OA0 அல்லது Julian Assange என்ற அவரின் பெயரை அழுத்துவதன் மூலமும் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.



கென்யாவில் இடம்பெற்ற இனப் படுகொலைகள், பெற்றோலிய உற்பத்தி இரசாயன கழிவகற்றல் போன்றவையுடன் Church of Scientology manuals, Guantanamo bay ரகசியங்கள், ஈராக் யுத்தத்தில் அமெரிக்காவின் தான்தோன்றித் தனமான மனித உயிர்கள் மீதான நடவடிக்கைகள் பற்றிய ஏராளமான ஒளிப்பதிவுகளின் வெளியீடு, பல நாட்டுக் கோடீஸ்வரர்களின் சுவிஸ் வங்கிப் பணம் பற்றிய தகவல்கள் என்று சாதாரண மக்களுக்குக் கிடைக்கக்கூடாது என்று பெரிய இடங்களில் நடக்கும் பல 'திருகுதாளங்களை' இந்த இணையத்தளம் வெளியிட்டது.

இதன் உச்சகட்டம்தான் 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆந் திகதி விக்கிலீக்ஸ் தங்களது Twitter Message மூலமாக அமெரிக்க அரசின் Top Secret என்று கருதப்பட பல லட்சம் பத்திரக்கோவைகள் தங்களிடம் உண்டு என்று கூறி உலகத்தைத் தன் பக்கம் முழுமையாகத் திரும்பிப் பார்க்க வைத்த நான்கு வரிச் செய்தி. உலக வல்லரசான அமெரிக்க நாட்டின் அரசு தனது வெளிநாடுகளில் இருக்கும் தூதரகங்களுடன் பரிமாறிக் கொண்ட மிக ரகசியமான embassy cables மூலமாக பரிமாறப்படும் தகவல்களை இணையத்தளத்தில் வெளியிட்டது.

"இது என்ன மதுரைக்கு வந்த சோதனை?" என்று ஒரு சாராரும், "இந்தப் பூனையும் பால் குடிக்குமா?" என்று சிறிய நாடுகளும் தலையில் கைவைத்து இருந்துவிட்டார்கள். 1966 - 2010 வரையான 274 Embassiesகளுடனான பல லட்சக் கணக்கான பத்திரக் கோவைகள் பல படிமுறைகளில் வெட்டவெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

'விக்கிலீக்ஸ்'இல் வெளியாகும் ஒலி, ஒளி, ஆவணங்கள் யாரால், எந்த புகைப்படக் கருவி, அல்லது எந்த கணணி மூலமாக எடுக்கப்பட்டது என்பதனை மிக புத்திசாலித்தனமாக அழித்துவிட்டு ஆவணங்களை வெளியிடுவதனால் யாரால் இவர்களுக்கு எப்படி, எந்த முறை ஊடாக இந்த ஆவணங்கள் கிடைத்தன என்பது கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது.

விக்கிலீக்ஸ் அமைப்பை பயமுறுத்தல்கள் DoS (Denial-of Service attack), ஹக்கிங் மூலமாக இணையத்தளத்தைப் பாவிக்க முடியாமல் தடுக்க மிகப் பெரிய முயற்சிகள் செய்யப்பட்டன. நூறு தடவைகளுக்கு மேல் wikileakesஐ Host பண்ணும் கணினி hack பண்ணப்பட முயற்சிகள் நடந்ததாக கூறப்படுகிறது. ஆனால் அதன் Bullet Proof-Servers பாதுகாப்பு அமைப்பினால் அந்த கணினிகளை அழிக்க நினைத்தவர்களுக்கு அதனை நெருங்க முடியவில்லை. இந்த விக்கிலீக்ஸ் இன் கணினி அமைப்பின் பாதுகாப்பு வலையம் கணினி உலகில் இருப்பவர்களுக்கு ஒரு முக்கிய உதாரணமான கட்டமைப்பாக கருதப்படுகிறது. அமெரிக்க அரசு பல வழிகளில் முயன்றும் இந்த பத்திரக் கோவைகள் வெளி வருவதைத் தடுக்க முடியவில்லை. கடைசி ஆயுதமாக wikileaks.org என்ற இணையத்தளம் அது பதிவு செய்யப்பட்டிருந்த Every DNS என்ற Domain Name Registerஇனால் கைவிடப்பட்டது. இதனால் wikileaks.com மற்றும் wikileaks.org இணைய வலய அமைப்பிலிருந்து மாயமாக மறைந்துபோனது. நீங்கள் wikileaks.com மற்றும் wikileaks.org என்று கூகுள் இல் தேடினாலும் கிடைக்காது. (Google இல் காஷ் முறையில் தேடினால் பழைய இணைய தள தொடர்பைப் பெற்றுக் கொள்ளலாம்) இப்போது இந்தக் கட்டுரை எழுதும் நிமிடத்தில் http://213.251.145.96 என்ற இணைய தொடர்பில் அல்லது http://wikileaks.de என்ற இணைய தளங்கள் ஊடாக தகவல்களை wikileaks அமைப்பினர் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இதில் சுவாரசியமானது என்னவென்றால் உலகில் உள்ள அதி பாதுகாப்பு கூடிய அமைப்புகளை ஊடறுத்து விக்கிலீக்ஸ் ஆதரவாளர்கள் தகவல்களை திரட்டும்போது இந்த திரட்டப் பட்ட தகவல்களை எல்லாம் எந்த கன்னித் தீவில் இவர்கள் சேமித்து வைத்திருந்து வெளியிடுகிறார்கள் என்று புரியாமல் அமெரிக்க கணினி நிபுணர்கள் அசந்துபோய் நிற்பதுதான் அமெரிக்க இராணுவத்தை கிலிகொள்ள வைத்துள்ளது. எதிர்காலத்தில் அமெரிக்க ராணுவ உபகரணங்களுள் இவர்கள் ஊடுருவி அனர்த்தங்கள் நிகழ்ந்தால் அதனை எப்படி எதிர்கொள்வது என்பதே முதல் கேள்வியாகவுள்ளது.

wikileaks அமைப்பின் பிரதான ஆசிரியராகக் கருதப்படும் Julian Assangeக்கு எதிராக ஸ்வீடன் நாட்டில் பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, கைது செய்வதற்கான ஆணையையும் அந்நாட்டு நீதிமன்றம் பிறப்பித்து

20ம் பக்கம் பார்க்க...

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


| தலைப்பு | ஆசிரியர் | பக்கம் |
|---|---|---|
| புத்தாண்டு மாற்றங்கள் | கருணா கோபாலபிள்ளை | 11 |
| ஒக்கிட்டு | செல்லையா சந்திரசேகரி | 19 |
| வாடகை வீடு | கரு கந்தையா | 22 |
| உங்களுக்கான வீட்டை வாங்குவது எப்படி? | எஸ்.கே. பாலேஸ் | 24 |
| மருத்துவக் கேள்வி - பதில் | இராஜசேகர் ஆத்தியப்பன் | 26 |
| மீன் தொட்டியில் மண்ணின் முக்கியத்துவம் | | 39 |
| சுருளும், தலைமுடியும் | சசி நரேன் | 40 |
| ஒழுங்கான பராமரிப்பே திறவுகோல் | பிரபா சின்னா | 44 |
| ஞாபகம் வருகிறதா? | சிவவதனி பிரபாகரன் | 46 |
| நோயின் பன்முகம் | போல் யோசேப் | 50 |
| மனிதரிடையே தோன்றியுள்ள புதிய மிருகத்தனம் | ஆ.க. ஆனந்தநாதன் | 54 |
| சிங்களவர்கள் ஆரியர்களா? | முருகேசு பாக்கியநாதன் | 62 |
| இன்றைய நோக்கில் பண்டைய தமிழிலக்கியங்கள் | நா. சுப்பிரமணியன் | 66 |
| முதுபெரும் தமிழ் அறிஞர் | த.சிவபாலு | 68 |
| குடும்பம் | குமார் புனிதவேல் | 79 |
| சூழலும் சக்தியும் | பொன் குலேந்திரன் | 81 |
| வாழந்த தமிழரும் தாழ்ந்த தமிழரும் | சி.சண்முகநாதன் | 83 |
| கழிந்துபோன ஆண்டும் எஞ்சிய நாட்குறிப்பின் பக்கங்களும் | தேவகாந்தன் | 92 |
| கிரேக்க இன்பியல் நாடகம் | ஞானம் லேம்பட் | 93 |
| மன்னாரில் ஒரு 'கின்னஸ்' சாதனை | கே.எஸ். பாலச்சந்திரன் | 94 |
| உறவுகள் பலவகை | வி. கந்தவனம் | 100 |
| எல்லை வேலியை ஒழுங்காய் நிறுத்தி வைக்கும் பூவரசு | பொ. கனகசபாபதி | 103 |
| முதுபெரும் கலைஞன் என்.எஸ். மணியம் | சேகர் தம்பிராஜா | 107 |
| ஆயுட் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும்போது... | சிறீதரன் துரைராஜா | 110 |

ஆட்சியாளர்களில்லை அவர்களது பாராளுமன்றத்துக்கு அனுப்பப்படும் பிரதிநிதிகள் தமக்காகப் பேசவல்லவர்கள் அல்லர் என்ற உணர்வும் உதயம் பெற்றிருந்தன.

இலங்கைத் தமிழர்கள் அரசாங்கங்களில் இணைந்து செயற்பட்ட பொழுதிலும் அவர்களால் அரசியற் திட்டத்திலோ, பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டங்களிலோ எந்த விதமான பாதிப்பினையும் ஏற்படுத்த முடியாத விடத்து இந்த ஐயப்பாடு வலிமை பெறத் தொடங்கிற்று. 1972ல் புதிய அரசியற்திட்டத்தினால் தமிழுக்கான பிரத்தியேக சலுகையுடைய 29வது சரத்து நீக்கப்பட்ட பொழுதிலும் தொடர்ந்து அடுத்த அரசியற்திட்டத்தில் தமிழ் இரண்டாம் நிலைக்குத்தள்ளப்பட்ட பொழுதிலும் பிரித்தானியாவோ இந்தியாவோ பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டைத்தான் தமிழர்கள் கொண்டிருந்தார்கள். உள்நாட்டில் எழுந்த குரல்கள் ஒடுக்கப்படுவதும் கையறுநிலையில் கடவுள் தான் எம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று வாயடைத்துப் போன நிலைமைகளும் தான் மிஞ்சியிருந்தன.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து தமிழர்கள் எத்தனையோ எதிர்பார்ப்புக்களுடன் புதிய கட்சிகளை அமைத்தனர். ஏற்கனவே இருந்த கட்சிகளுடன் இணைந்தும் செயற்பட்டனர். பிரதானகட்சிகள் தமது அரசியலாதிக்கத்துக்கான கரிசனையுடன்தான் தொழிற்பட்டன. தமிழர்கள் முன்வைத்த சமத்துவக் கோரிக்கையோ, கூட்டாட்சிக் கோரிக்கையோ ஒன்றிணைந்த தனியரசுக் கோரிக்கையோ அரசாங்கத்தினால் அக்கறையுடன் பரிசீலிக்கப்படவில்லை. அரசாங்கங்கள் உருவாக்கத்தயாரான அதிகாரப்பரவலாக்கம் என்பது இலங்கை முழுவதுக்கும் தான் என்பதாகவே இருந்தது. பிரத்தியேகப் பகுதிகள், பிரச்சினைக்குரிய பகுதிகள், சிறப்புப் பிரதேசங்கள் என்ற கருத்து அரசியலில் முன்னிறுத்தப்பட்டிருக்காததினால் இலங்கையில் எந்த விதமான பிரச்சினையும் இல்லை என்பதனை அரசாங்கங்கள் வலியுறுத்த முனைந்து கொண்டிருந்தன.

இந்நிலையில் இனக்கலவரங்களும் உருவாக்கம் பெற்றிருந்தன. தரப்படுத்தல் சனவிகிதா சாரத்தன்மையின் அறிமுகம் ஆகியவற்றின் மூலம் தமிழர்கள் ஏற்கனவே பெற்றிருந்த உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. போர், ஒத்துழையாமை என்பன தோற்றம் பெறப்பெற படைகளிலும் நிர்வாக அதிகாரத்திலும் தமிழர்களல்லாதவர்களே இடம் பெறவேண்டிய தேவையினை அரசு உருவாக்கியிருந்தது. இந்நிலையில் தான் உள்நாட்டு அரச எதிர்ப்பியக்கங்கள் அடக்கப்படுதலும் அவை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படும் நிலைமையும் தோன்றிக் கொண்டிருக்கிறது.

மலையகத் தமிழர்குடியுரிமை பறிக்கப்பட்ட பொழுது இந்தியா கேட்குமா? தமிழுக்கான பிரத்தியேக பயன்பாட்டுச் சலுகை நீக்கப்பட்டதைப் பிரித்தானியா கேட்குமா என்ற குரல்களுக்கு உடனடி ஏமாற்றம் தான் கிடைத்தது. மெதுவாக ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தம் தொடர்ந்தும் மலையகத்தமிழர் வாழ்வின் ஒருபகுதியினருக்குக் குடியுரிமை வாழ்வைக் கொடுத்தது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் மலையகத்தமிழர் நாடுகடத்தப்பட்டதை வேறுஎந்த நாடும் கேட்கவில்லை. 1983 கலவரங்களின் பின்பாக தமிழர்கள் நாடுகடந்தமை விருப்பத்தின் பேரில்தான் என்ற அரசாங்கத்தின் வாதம் பிழையென்பதனைத் தட்டிக்கேட்க எந்த நாடும் தயாராக இருக்கவில்லை. அதையடுத்து தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் அவர்கள் வாழ்வுக்கு உத்தரவாதம் வேண்டும் என்று கேட்க எந்த நாடாவது தயாராக இல்லை.

பூகோள அரசியலில் ஏற்படும் மாற்றங்களில் முக்கியமானது நாடுகளின் அரசியலில் நேரடியாகக் தலையிடுவதும் மறைமுகமாகத் தலையிடுவதுமாகும். அரசியற் புலனாய்வுத் துறையில் விஞ்ஞான முன்னேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் நாடுகளோ தனிமனிதர்களோ நேரடித் தொடர்புக்கு அச்சம் கொண்டிருக்கிறார்கள் ஆனால் பணத்துக்காகவும் பதவிக்காகவும் உறவின் அடிப்படையிலும் தொடர்பினைப் பேணுகின்றவர்கள் அப்பாவித்தனமாகத் தண்டிக்கப்படுதல் தவிர்க்க முடியாததாகிறது.

1983ம் ஆண்டின் பின்னரான ஈழத் தமிழரின் விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியில் உயிரினப்பாங்கு உருவாக்கம் பெற்றது. தப்பிப் பிழைத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற அதிகாரத்தை எடுத்துக் கொண்டு இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தியது. தமிழர்கள் தங்களுக்காக விடுதலைப்புலிகள் குரல் கொடுக்கலாம் என்பதனை ஏற்றுக்கொண்டிருந்தனர். இதற்குப் பல நாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவினை வழங்கியிருந்தன. இத்தகைய சூழலில் இந்தியாவின் குரல் ஒலிக்க வேண்டும் என்ற விரும்பம் ஈழத் தமிழரிடமுமிருந்தது.

மத்திய அரசில் இந்திராகாந்தியும் மானிலத்தில் எம்.ஜி.ஆரும் ஆயுதப் போராட்டத்தினை ஊக்குவித்தனர் வங்காள தேசத்தின் உருவாக்கத்தை உதாரணமாக்கித் தமிழ் ஈழம் ஒன்று தவிர்க்கமுடியாதது என்ற நிலை உருவாக்கம் பெற்றிருந்தது. ஜனநாயக வழியிலும் ஆயுத வழியிலும் தமிழ் மக்களின் கோரிக்கை ஒன்றாகவே இருந்தன. இதனால் பேச்சுவார்த்தை என்பது பாராளுமன்றப் பிரதிநிதிகளைவிட விடுதலைப்புலிகளின் அரசியல் அங்கத்தவர்களுடனேயே நடாத்தப்பட்டன.

உலகப் பயங்கரவாதம், நாடு கடந்த பயங்கரவாதம் என்ற இரு பொறியினுள் அகப்பட வைக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் நடவடிக்கையில் படிப்படியாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இந்தியாவில் காங்கிரஸ் அரசும் மானிலத்தின் கருணாநிதி அரசும் தென்னிந்தியாவில் ஓங்கியிருந்த விடுதலைப் புலிகளின் ஆதரவைக்குறைக்க எடுத்த முயற்சிகள் தமிழருக்காகப் பேசவல்லவர் விடுதலைப் புலிகளில்லை என்ற கருத்தினை நிலை நிறுத்தவே பயன்படுத்தப்பட்டன. இந்திய மத்திய அரசின் திட்டங்களுக்கு உதவுகின்ற மானில அரசானது முழுமையாக இந்திய நலனுக்குக் கொடுத்திருந்த முக்கியத்துவமானது ஈழத் தமிழர்களின் நலனில் இந்தியாவின் மத்திய அரசின் விருப்பத்துடன் ஒன்றிப் போயிருந்தது.

முள்ளிவாய்க்காலில் முடங்கியிருந்த போரும், போர்ப்பொறியினுள் அகப்பட்ட பொதுமக்களும் முடிவில் தங்களுக்காகப் பேசவல்லவர் தமிழக அரசும், தமிழக மக்களும், வெளிநாட்டுத்தமிழர்களும் என்று நம்பியிருந்தார்கள். வெளிநாட்டுத்தமிழர்கள் தாம் வாழும் நாடுகளிலுள்ள அரசுகளுக்குக் கொடுக்கின்ற அழுத்தமானது தம்மையும் தமது உயிரையும் பாதுகாக்கும் என நம்பினர். சர்வதேச போர் விதிகளை நம்பியிருந்த விடுதலைப்புலிகள் ஐ.நா.வூடாக ஏதாவது வழிபிறக்கும் என்று நம்பியிருந்தார்கள். அன்று வந்து தமிழர்களையும் அவர்களது உயிர்களையும் காப்பாற்ற முடியாத ஐ.நா போர்க் குற்றவிசாரணையினை எந்தவகையில் விருப்பு வெறுப்புமின்றிச் செய்யும் என்ற ஐயப்பாட்டுடன் தமிழர்கள் இருப்பதில் வியப்பேதுமில்லை.

உலகின் உயர் நிலைச்சமாதான நிறுவனங்களால் உட்புகமுடியாத ஈழத்தமிழர்களின் வாழ்விடங்கள் இனியும் இந்திய இருப்புக்கரங்களுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்குமா இந்திய இறையாண்மையினுக்கப்பால் நின்று தமிழருக்காகக் குரல் கொடுக்க வேறு எந்த நாடாவது முன்வருமா என்றால் இல்லை என்பதனை வரலாறு காட்டிநிற்கிறது.

இந்தியா தனது தேசிய நலனுக்காகக் கொடுக்கின்ற குரலானது ஈழத்தமிழன் வாயால் வெளிவரவேண்டும் என்ற நிலை தோற்றம் பெற்றிருக்கும் சூழலில் ஈழத்தமிழருக்காகப் பேசவல்ல இந்தியா ஆமைவேகத்திலேயே அடுத்த நடவடிக்கைகளை எடுக்கும். ஈழத் தமிழரின் பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் விரைவுபடுத்தும் வல்லமை பெற்றவர்கள் உலகெங்கும் பரந்து ஒன்றிணைந்த ஏழுகோடி தமிழர்களே என்ற நிலைமை முன்னிலைப் படுத்தப்படுகிறது.

kanapathipillai.a@thaiveedu.c

■ ■ ■


# Your Home Doesn't come with Mortgage advice. I do.



- Purchase Refinance Preapprovals
- Builder rate hold up to 24 months
- Special program for Self employed and New immigrants
- Unlock your equity in your home with RBC Home Line Plan
- Available 7 days a week

## Call now before rate goes up!

As your RBC Mortgage Specialist and a trusted member of our community I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. I can meet with you at a **place** and **time** that is **convenient** for you.

**Ram Krish**

**RBC Royal Bank**

Mobile Mortgage Specialist

Direct: **416-849.5363**

Email: ram.krish@rbc.com

* Some conditions apply.



RBC

- digi Media -

# வீட்டு மதிப்பீடும் பரிசோதனையும்

பொதுவாக வீட்டு மதிப்பீடும் பரிசோதனையும் (Appraisal & Inspection) பலருக்கும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்கின்றது. சுருங்கக் கூறின் வீட்டு மதிப்பீடு என்பது கடன் வழங்கும் வங்கி போன்ற நிதி வழங்கும் நிறுவனங்களுக்காக பதிவு செய்யப்பட்ட ஒரு மதிப்பீட்டாளரினால் (Appraiser) வீட்டின் பெறுமதியை டாலரில் மதிப்பீடு செய்து அறிக்கை வழங்குவதைக் குறிக்கும்.

ஆனால் வீட்டுப் பரிசோதனை என்பது இதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். அதாவது கட்புலனுக்குத் தெரியக் கூடிய வீட்டின் அமைப்பு, இணைப்புக்களின் இயக்கம் என்பவற்றை முகட்டில் இருந்து (Top to Bottom) அடித்தளம் அரை பரிசீலித்து வீட்டின் உண்மையான நிலைப்பாட்டை (Condition of the house) வீடு வாங்குபவருக்கு எடுத்து விளக்குவதையே வீட்டுப் பரிசோதனை குறிக்கின்றது.

## வீட்டுப் பரிசோதனை என்பது என்ன?

எமது வாழ்நாளில் நாங்கள் செய்யும் முதலீடுகளில் 'வீடு' வாங்குவது என்பது ஒரு மிகப்பெரிய முதலீடாக அமைகின்றது. அத்தகைய ஒரு பெரிய முதலீட்டை செய்கின்ற போது கைக்கொள்ளப்படும் வீடு வாங்கும் படிமுறைகளில் வீட்டுப் பரிசோதனை என்பது மிக முக்கியமான அத்தியாயமாகும். ஒரு வீட்டை வாங்குபவர்கள் அந்த வீட்டின் உண்மைத் தன்மையை, நிலைப்பாட்டை முன்கூட்டியே அறிந்துகொண்டு ஒரு திடமான முடிவை எடுப்பதற்கு வீட்டுப் பரிசோதனை வழி வகுக்கின்றது.

அது மட்டுமன்றி கனடிய சட்ட விதி முறைகளுக்கமைய புதிய வீடுகளுக்கான உத்தரவாதத்தை உறுதி செய்யவும் வீடு விற்பவர்களின் விற்பனை விலையை ஸ்திரப்படுத்தவும் அத்துடன் ஏற்கனவே வீட்டில் வசிப்பவர்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வீட்டுப் பரிசோதனை செய்யப்படலாம்.

பொதுவாக வீடு விற்பனை முகவர் ஊடாக ஒரு வீட்டை வாங்குகின்ற போது எத்தனையோ வீடுகளைப் பார்த்த பின்னர் பிடித்த ஒரு வீட்டை வாங்குவதற்கான முதற்படியாக, எழுத்துமூல விண்ணப்பம் (Offer) கையளிக்கப்படும். சாதாரணமாக அத்தகைய ஒப்பந்தத்தில் வீட்டின் விலை, வீட்டுப் பரிசோதனை, வீடு அடமான ஒழுங்கு என்பன உள்ளடக்கப்பட்டு இருக்கும். குறிப்பாகக் கூறுவதானால் வீடு வாங்குபவரின் உத்தேச விலை, வீட்டை விற்பனை செய்பவரினால் ஏற்றுக்கொள்ளப்-

**வீடும் விடியலும் - 57**

படுமிடத்து பின் வரும் முக்கிய இரண்டு நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு இறுதி முடிவு எடுப்பதற்காக இத்தகைய ஒப்பந்தம் கையளிக்கப்படும்.

- வீட்டுப் பரிசோதனை.
- அடமான ஒழுங்கு.

மேற்கூறப்பட்ட இந்த இரு நிபந்தனைகளுக்கும் பொதுவாக 5 - 10 நாட்கள் வரை காலக்கெடுவும் போடப்பட்டு இருக்கும். அத்தகைய காலக்கெடு முடிவதற்குள் ஒரு தராதரம் பெற்ற வீட்டுப் பரிசோதகரை அணுகி, உத்தேச வீட்டின் உண்மைத் தன்மையை அறிந்துகொண்டு அதற்கு ஏற்ற முடிவை, வீடு வாங்குபவர் எடுக்க வழி வகுப்பதே வீட்டுப் பரிசோதனை ஆகும்.

## வீட்டுப் பரிசோதகரை ஒழுங்கு செய்யவேண்டியது யார்?

வீடு வாங்குபவர் தனக்கு நம்பிக்கையான ஒரு தராதரம் பெற்ற வீட்டுப் பரிசோதகரை தனது சுய விருப்பப்படி ஒழுங்கு செய்வதே முறையான நடைமுறை ஆகும். ஆனால் வீடு விற்பனை முகவர்களே, தாம் வாங்கிக் கொடுக்க இருக்கும் வீட்டை பரிசோதிக்க ஒரு வீட்டுப் பரிசோதகரை ஒழுங்கு செய்வது நம்மவர் மத்தியில் பழக்கமாகப் போய்விட்டது. புத்திசாலித்தனமான வீடு வாங்குபவர்கள் அதற்கு உடன் படக்கூடாது என்ற கருத்தும் பலரது மத்தியில் நிலவுகின்றது. வீடு விற்பனை முகவர் தனக்குப் பிடித்த ஒரு வீட்டுப் பரிசோதகரை திணிக்காது, வீடு வாங்குபவர்களுக்குச் சில பரிசோதகரை சிபாரிசு செய்து அவர்கள் தமக்குப்பிடித்த ஒரு பரிசோதகரை சுதந்திரமாகத் தெரிவு செய்ய சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டியதே முறையான நடைமுறையாகும்.

எது எப்படி இருப்பினும் ஒரு வீட்டுப் பரிசோதகர் பக்கச் சார்பின்றி வீட்டைப் பரிசோதித்த பின்னர் அதன் உண்மை நிலையை வீடு வாங்குபவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டியது அல்லது ஆவணப்படுத்த வேண்டியது மிக முக்கியமானது. அதன் பின்னர் வீடு வாங்குபவர் தமக்கு ஏற்படக்கூடிய வீடு பற்றிய சந்தேகங்களைத் தெளிவு படுத்திய பின்னர், அடமான ஒழுங்குகளும் சரி வந்து இருந்தால் சலனமின்றித் திடமுடனும் துணிவுடனும், நிபந்தனை அடிப்படையில் கொடுத்திருந்த ஒப்பந்தத்தை குறிப்பிட்ட காலக்கெடு முடிவதற்குள் திடமான ஒப்பந்தமாகக் கொள்ளலாம்.

சற்று விளக்கமாகக் கூறுவதானால் பின்வரும் கூறுகள் வீட்டுப் பரிசோதனையில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- அத்திவாரம்.
- கூரை.
- கதவுகள், சாளரங்கள்.
- மின்சார இணைப்பு.
- நீர் விநியோகம், கழிவுநீர் போக்கு.
- தனிப்படுத்தல் (insulation).
- துணைக் கருவிகள் (appliances).
- வெப்பமாக்கியும் குளிரூட்டியும் (furnace, air conditionar).
- வெளிப்புறம் (exterior).
- வண்டிப்பாதை (driveway).
- கட்டிட இணைப்புக்கள் (porches, patio, balcony).
- முன்வளவு, பின்வளவுக்கான நிலச் சீர் (Grading).

ஒரு வீட்டுப் பரிசோதகர் மேற்குறிப்பிடப்பட்ட கூறுகள் ஒவ்வொன்றையும் முறையாக ஆராய்ந்து மதிப்பீடு செய்து அவற்றுள் சரியாக இயங்கிக் கொண்டிருப்பவை அல்லது நல்ல நிலையில் இருப்பவை எவை, இயங்காத நிலையில் அல்லது முறையற்றவகையில் பொருத்தப்பட்டிருப்பவை எவை என்பதை அறிவுறுத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பாரிய செலவுகளை ஏற்படுத்தக்கூடிய அம்சங்கள் என்ன? என்பதனை தெளிவு படுத்த வேண்டியது ஒரு வீட்டுப் பரிசோதகரின் கடமையாகும். பொதுவாக ஒரு வீட்டை முறையாகப் பரிசோதனை செய்ய 2 - 3 மணித்தியாலங்கள் வரை தேவைப்படும்.

> “ வீட்டுப்பரிசோதனை என்பது ஒரு சிறு தொகையைச் செலவு செய்து பலமடங்கு நன்மையைப் பெறவைக்கும் முக்கியமான செயற்பாடு என்பதை எவருமே மறுக்கமுடியாது. ”



**வேலா சுப்ரமணியம்**
- Certified Home Inspector -

ஒரு வீட்டுப்பரிசோதகர் கூறும் அறிவுறுத்தல் களையும், விளக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு தீர்க்கமான இறுதி முடிவை வீடு வாங்குபவர் எடுப்பதற்கு வீட்டுப் பரிசோதனை உதவுகின்றது. அத்துடன் செய்யப்படும் முதலீடு பாரிய அளவானது என்பதாலும் எடுக்கப்படும் முடிவு நீண்ட காலத்திற்கு சாதக, பாதக விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்பதாலும் வீடு வாங்கும் படிமுறைகளில் வீட்டுப்பரிசோதனை என்பது மிக மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

## உத்தரவாதத்தை உறுதி செய்யும் புதிய வீடுகளுக்கான பரிசோதனை:

கனடாவில் கட்டப்படும் புதிய வீடுகளுக்கு சட்ட ரீதியாக ஏழு வருடங்களுக்கு உத்தரவாதம் உண்டு. அவை 30 நாட்கள், ஒரு வருடம், 2 வருடங்கள், 7 வருடங்கள் எனப் பல்வேறு மட்டங்களில் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வகுக்கப்பட்டுள்ள உத்தரவாதத்தின் முழுப் பலனையும் ஒரு வீட்டு உரிமையாளர் அடைய வேண்டுமானால் அதற்குரிய வீட்டுப் பரிசோதனை செய்யப்படவேண்டியது மிக அவசியமாகும்.

பொதுவாகக் கட்டட அமைப்பாளர்கள் ஒரு வீட்டைக் கட்டும் போது பல்வேறுபட்ட வேலைகளுக்கும் பல்வேறுபட்ட உப ஒப்பந்தகாரர்களைப் பயன்படுத்துவதே வழக்கமாகும். அதனால் பல்வேறுபட்ட குழுக்களினாலும் செய்யப்படும் வேலைகளும் அதன் தரமும் முறையாக அமைவது சாத்தியப்படாது போக சந்தர்ப்பம் உண்டு. மறுபுறம் வீட்டு உரிமையாளர்களுக்கு எது? எப்படி? இருக்கவேண்டும் என்ற விளக்கமான துறைசார் அறிவு இருப்பதற்கு நியாயம் இல்லை. எனவே துறைசார் வல்லுனரான ஒரு வீட்டுப் பரிசோதகரின் உதவியோடு குறிப்பிட்ட காலக்கெடு முடிவதற்கு முன்னர் முறையான பரிசோதனை செய்து உரிய படிவங்களைக் காலம் பிந்தாது அனுப்புவதன் மூலம் அதிகபலன்களைப் பெற முடியும். அதாவது பல ஆயிரம் டொலர் பெறுமதியான வேலைகளை திருத்தமாக செய்விக்கவோ அல்லது திருப்பிச் செய்விக்கவோ சந்தர்ப்பம் உள்ளது. புதியவீடு வாங்கும் போது சராசரியாக ஆயிரம் டொலருக்கு மேல் உத்தரவாதத்திற்கு உரிய கட்டணமாக வீட்டு உரிமையாளரிடமிருந்து அறவிடப்படுகிறது. குறிப்பாக தற்போது சுமார் 500,000 டொலர்கள் பெறுமதியான வீட்டை வாங்கும் ஒருவர் தற்போதைய விதிமுறைகளின்படி $1,209.10 டொலர்களை உத்தரவாதத்திற்குரிய கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.

புதிய வீடென்றால் எல்லாம் ஒழுங்காகத்தான் இருக்கும் என்ற மனப்பாங்கில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் தான் அதிகம் அவர்களது இத்தகைய பலவீனத்தைத் தமக்கு அனுகூலமாக்கி இலாபமடையும் கட்டட அமைப்

20ம் பக்கம் பார்க்க...


**Home Inspection**

• Purchase & sale Inspection, • Problem solving Inspection, • New home – Warranty inspection

Optimal Home Inspection Services

**Vela Subramaniam**

Certified Home Inspector



416-786-0760
416-299-0700

E-Mail: homeinspectorvela@gmail.com

**Royal Shades inc.**

Interior Windows Design Solutions

ROYAL SHADES

Draperies | Blinds | Shutters | Door & Lock Systems | Crown Molding

Over 17 Years Experience

Visit Our Showroom For Variety of selection

3031 Markham Road, Unit# 23 | Scarborough M1X 1L9

Tel: 416.562.0340 | 647 347 4474

info@royalshades.com | www.royalshades.com

Satisfaction Guaranteed



Thaas Sivathason

416.562.0340

ஞானேந்திரன் நரசிங்கம்
416.937.8090

ஜூடி ஞானேந்திரன்
416.629.9797

Sales Representatives

HOMELIFE HIGHER STANDARDS






HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3, OFFICE: 416.321.6969

*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED

# என்பு முறிவுகள்

## (Bone Fractures)

**இதயம் மலர்கிறது - 28**


கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

நாம் தடக்கி அல்லது பனியில் சறுக்கி எதிர் பாராத வகையில் விழும் பொழுது நிதானம் குலைந்து எமது இரு கைகளையும் நிலத்தில் ஊன்றுவதற்குத் தவறிவிடுகிறோம். அப்பொழுது எமது உடலின் பாரத்தை ஒரு கையானது தாங்கும் பொழுது, அந்தக் கையின் மணிக்கட்டு எலும்புகளோ அன்றி முன்கையில் உள்ள ஆரை, அரந்தி எனக் கூறப்படும் எலும்புகளோ முறிவடையலாம். சில சமயங்களில் மேற்புய எலும்பு முறிவடைவதும் உண்டு. தோள் மூட்டு கழரலாம்.

### கீழ்வரும் காரணங்கள் எலும்பு முறிவின் இடத்தைத் தீர்மானிக்கலாம்:

- விழும் பொழுது ஊன்றப்படும் கையில் தாக்கும் விசையின் பருமனும் திசையும்.
- எலும்பின் கோறைத் தன்மை (Osteoporosis)
- பிஞ்சு எலும்புகள் (12 வயதின் கீழ்)
- எலும்பின் மீது நேரடியாகப் பிரயோகமாகும் விசைகள் (பொதுவாக வாகன விபத்துகளில் ஏற்படுவது)
- உயரத்தில் இருந்து விழும் போது நிதானமாக இருகைகளை ஊன்றினாலும் எலும்பின் மீது இரு கைகளிலும் பகிரப் படும் விசை கழுத்தில் உள்ள காறை எலும்புகளுக்குத் கடத்தப்பட்டு ஒன்றோ அல்லது இரண்டு காறையென்புகளும் முறிவடையலாம்.
- படிகளில் இறங்கும் பொழுது கால்தவறி 3வது, 4வது படிகளில் கால்களை வைக் கும் பொழுது உடலின் முழுப்பாரமும் மேற்கால் எலும்பின் மூட்டுப்பகுதியில் தாக்கி இடுப்பு எலும்பு மூட்டினுள் முறிவு கள் ஏற்படலாம்.
- உயரமான குதிக்கால் பாத அணிகள் அணிந்து நடக்கும் பொழுது அல்லது பாதையில் உள்ள கிடங்குகளில் கால்கள் தவறுதலாக ஊன்றப்படும் பொழுது தசை நாண்களில் விகாரம் அல்லது கணுக்கால் மூட்டில் சுழுக்கு ஏற்படலாம்.
- முதியோர் இல்லங்களில் கண்காணிப்பு இல்லாத பொழுது அவர்கள் தமக்குரிய நடைவண்டிகள் அல்லது இயந்திர வண்டிகளில் வெளியில் சென்று விபத்துக்களில் மாட்டிக் கொள்ளலாம்.
- கண்பார்வைக் குறைபாடு மற்றும் செவிப் புலன் குறைபாடு உள்ளவர்கள் பாதைகளைக் கடக்கும் பொழுது விபத்துக்குள்ளாகலாம்.
- உடல் வலுவளர்வோர் கூட இதற்கு விதி விலக்கு அல்ல.

எப்பொழுதும் அவதானம் முன்னெச்சரிக்கை என்பன அவசியம் தேவை. உடல் குறைபாடு உள்ளவர்கள் தமக்குரிய பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வது அவசியம். கனடாவில் பல சேவைகள் உண்டு. கண்பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு உதவ சேவை செய்யும் நாய்கள் (Service dogs), உடல் குறைபாடு உள்ளவர்களுக்கு உதவ மனித உதவியாளர்கள், பலவித வசதிகளையுடைய இயந்திரங்கள் என்பன நடைமுறையில் உண்டு. எல்லா வசதிகளையும் பயன்படுத்திப் பயனடைய முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக குறைபாடுகள் வராமல் பாதுகாத்துக் கொள்வதே சாலவும் பொருத்தமானது. குறைபாடு கள் என்று கூறும் பொழுது அவை பலவகைப் படும் என்பதால் இங்கு எலும்பு முறிவுகளைப் பற்றி மாத்திரம் கவனிப்போம்.

என்பு முறிவுகள் ஏற்படாத வகையில் எமது எலும்புகளைப் பலமாக வைத்திருப்பதற்குரிய எல்லா வழிகளையும் ஆராய்ந்து அறிந்து அதன்படி ஒழுகுவதன் மூலம் எலும்பு முறிவு களால் ஏற்படும் பல சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.



ஆரோக்கியமான எலும்புகள் ஊருவாகுவதற்கு கல்சியம் மாத்திரம் தான் வேண்டுமென்பதல்ல. நீங்கள் உண்ணும் உணவில் அடங்கியுள்ள வேறு சத்துக்களும் தேவைப்படுகின்றன. சில பழக்கங்களை மாற்றியமைப்பது கூட ஆரோக்கியமான எலும்புகளை உருவாக்கும். உதாரணமாக கபீன் அடங்கிய பானங்கள், உப்பு, சோடா வகைகள் மற்றும் மதுபானம் போன்ற வகைகளை மிகவும் குறைந்தளவில் பாவிப்பது நல்லது.

சுருள்கோவா, முளைக்கீரை, சுவிஸ்சாட் கீரை, தானியங்கள் என்பனவற்றில் அடங்கியுள்ள விற்றமின் ‘K’ என்கின்ற உயிர்ச்சத்துக்கூட எலும்புகள் மென்மையாவதைத் தடுக்கின்றது. கல்சியம் விற்றமின் ‘D’ பற்றி ஏற்கனவே கூறியிருந்தேன். கடந்த மாத இதழில் குறிப் பிட்டது போல் உடற்பயிற்சியும் பிரதானமானது ஓடுதல் நடத்தல், கயிறடித்தல், படிகள் ஏறுதல், யோகப்பயிற்சி என்பன என்புகளின் அடர்த்தியைப் பேணுவதற்கு உபயோகமாகின்றன. அவரவர்களின் வயது. இயலும் தன்மைகள் என்பவைற்றைப் பொறுத்துத் தமது உடற்பயிற்சிகளைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். சில நேரங்களில் அன்றாடம் செய்யும் வேலைகள் கூட உடற்பயிற்சியாக அமைந்துவிடும் பொழுது, உடற்பயிற்சிக்காகப் புறம்பாக நேரம் ஒதுக்கத் தேவையிருக்காது. உடற்பருமன் உள்ளவர்கள் தமது உயரம், வயது, ஆண், பெண், தன்மை என்பனவற்றிற்கேற்ப தமது உடல் நிறைகளைப் பேணுவது அவசியம்.

### பற்றிடுதல் (Splinting):

எலும்புகள் முறிந்தால் அவற்றிற்குத் தகுந்த முறையில் பற்றிடுதல் அவசியம். எலும்புகள் முறிவடைந்து தோலைத்துளைத்துக் கொண்டு வெளிவராமல் உள்ளே காணப்பட்டால் அதை மூடிய முறிவு (Closed Fracture) என்றும், எலும்புகள் காயங்கள் ஊடாக வெளியில் தொடர்பு பட்டிருந்தால் அல்லது தோலைத் துளைத்துக் கொண்டு வெளியே வந்தால் அவற்றை திறந்த முறிவு (Open Fracture) என்றும் வகைப்படுத்துவார்கள். இதற்கு முறையே தனிமுறிவு (Simple Fractures), கூட்டு முறிவு (Compound Fracture) என்று வேறு பெயர்களும் உண்டு.

### உடைந்த எலும்புகளை எப்படிக் கையாள்வது?

உடைந்த எலும்புகள் மீண்டும் பொருந்தக் கூடியவை. ஆனால் எலும்புகள் முறிவடைந்த இடத்தில் முறிவடைந்த எலும்புகளின் நுனிகள், அயலில் உள்ள தசைகள், நரம்புகள், இரத்தக் குழாய்களை மேலும் ஊறுசெய்யாது இருப்பது பிரதானமாகக் கவனிக்க வேண்டியவை. இங்குதான் பற்றிடுதல் (Splinting) கை கொடுக்கின்றது. ஒருவர் விழுந்த அல்லது விபத்துக்குள்ளாகிய இடத்திலேயே வைத்து இப்பற்றிடுதல் செய்தல் வேண்டும். குறிப்பிட்ட நபரை வேறு இடத்திற்கு நகர்த்தும் பொழுது முறிவடைந்த எலும்புகளின் முனைகள் அசைவாட்டத்திற்கு உள்ளாகி அயலில் உள்ள உறுப்புகளை ஊறுபடுத்தி விடுகின்றன. இதனால் நரம்புகள் அறுபட்டு உறுப்பில் செயலிழப்பு, குருதிக் குழாய் அறுந்து குருதிப் பெருக்கு ஏற்படுதல், அத்துடன் குருதி வினியோகம் ஏனைய பகுதிகளுக்குத் தடைபடுதல், தசைகளுக்கு ஊறுநிகழ்ந்து புண்கள் ஆறுவதற்குப் பலகாலம் எடுத்தல் போன்ற பல சிரமங்களை பற்றிடுதல் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.

எலும்பு முறிந்த இடத்தில் விகாரமடைந்து வீக்கமும் இருக்கும், வேதனையும் இருக்கும். அத்துடன் காயங்கள் வெளிப்புறமாகக் தெரியும். இவற்றை வைத்து எலும்பு முறிந்திருப்பதை அறிந்து கொள்ளலாம். மேலும் அந்த உறுப்பை இயக்குவது கடினமாகத் தென்படும். கைகள், கால்களாயின் அவற்றை அசைப்பதற்கு முடியாது இருக்கும். அந்த இடத்தை அமத்திப்பார்க்கும் பொழுது வேதனை அதிகரிக்கும். தொடுவதற்கு விடமாட்டார்கள். சில சமயங்களில் எலும்பும் எலும்பும் உராயும் சத்தம்கூடிக் கேட்கும். அதற்காக எலும்பை ஆட்டிப் பார்க்கக் கூடாது. அந்த நபர் எப்படி விழுந்தார் என்பதை வைத்தே நீங்கள் பல விடயங்களை ஊகித்து இவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கலாம் என்று ஐயப்படலாம்.

### எப்படிப் பற்றிடுவது?

- முதலில் எந்த இடத்தில் முறிவு ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தீர்மானியுங்கள்.
- அவ்விடத்தை மூடியுள்ள உடைகளை கத்தரிக்கோலால் வெட்டி அகற்றுங்கள்.
- முறிவு ஏற்பட்ட இடத்தில் வீக்கம், வேதனை, புண், என்பனவற்றுடன் எலும்பு முறிந்து வித்தியாசமாக இருக்கின்றதா என்பதைக் கவனிக்கவும்.
- கறுப்பு அல்லது நீலநிற அடையாளங்கள் தென்பட்டால் அவை தசைகளுக்குள் குருதி பெருகுவதைச் சுட்டும். இக்குருதியானது எலும்பு மூனையில் இருந்தோ அல்லது அறுபட்ட குருதிக் குழாயில் இருந்தோ வந்ததாக இருக்கலாம்.
- திறந்துள்ள புண்களை சுத்தமான காய்ந்த துணியால் மூடிவிடவும்.
- கைகள், கால்களாயின் அவற்றின் அந்தங்களில் குருதி ஓட்டம், உணர்ச்சி, அசைவாட்டம் என்பன உள்ளனவா என்று பரிசோதித்துக் கொள்ளுங்கள்.
- புதினத்தாள்(தாய்வீடு பத்திரிகை போன்றவை), சஞ்சிகைகள், மட்டைகள் என்பனவற்றைப் பாவித்து முறிந்த கை அல்லது கால்களில் அணைப்பை ஏற்படுத்தவும். பின்பு அதைச் சுற்றி துணிப்பட்டியால் நழுவாதவாறு பற்றிடவும். முறிவு ஏற்பட்ட இடம் மேலும் அசைவாட்டத்திற்கு உட்படாத வகையிலும், நோயாளிக்கு வேதனையைக் கூட்டாத வகையிலும் இடப்படுதல் வேண்டும்.

### மட்டைகட்டுவதால் (Splinting) என்ன நன்மைகள்?

- வேதனை குறையும்
- தசைகள், நரம்புகள், குருதிக் குழாய்கள் என்பனவற்றிற்கு ஊறுநிகழாது தடுத்தல்.
- குருதிப் பெருக்கு, வீக்கம் என்பன குறையும்
- மூடியுள்ள எலும்பு மூளை தோலைத் துளைத்துக் கொண்டு (முறிந்த இடம் அசைவாட்டத்திற்குள்ளாகும் பொழுது) வெளிவராது தடுத்தல்.

தகுந்த முதலுதவிப் பயிற்சி பெறும் பொழுது தான் சரியான முறையில் முதலுதவி செய்யக் கூடியதாக இருக்கும். இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள ஆலோசனைகள் முதலுதவி படித்திருப்பதால் பாரிய பல கிரமங்களைத் தவிர்க்கலாம் என்பதை உணர்த்தி நிற்கின் றன. ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது முதலுதவி படித்திருப்பது அவசியம்.

விபத்து ஏற்பட்ட பொழுது என்ன செய்வது என்று திகைக்காமல் உடனேயே ஆக வேண்டிய உதவிகளைச் செய்து ஒரு நபரைக் காப்பாற்றுவது எவ்வளவு சிறந்த சேவை! தர்மம்!

**பி.கு:** இக்கட்டுரையில் குறிப்பிட்டது தனிய ஒரு சில எலும்பு முறிவுகளுக்குரியவையே. எலும்பு முறிவுகளில் வேறு பல முதலுதவிகளும் உண்டு.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

**TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL**
**தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி**
**Dr. Kandiah Senthilathan**

- Standard First Aid & CPR Level "C" - 2 Days Program
- Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program
- CPR Level "A" - 4 Hours Program (Adult)
- CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant)
- CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)

647-801-9252
416-502-9252

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.



**Full-time Real Estate Agent**

# Nada G. Nadarajah B.V.Sc

Call Me @ 416 616 8751

Sales Representative

"An award-winning realtor with 14 years experiance".

HomeLife
Landmark Realty Inc.,
brokerage

5200 Finch Ave. E, Suite 106
Toronto, ON M1S 4Z4
Bus: 416 293 5093
nanadarajah@trebnet.com

# I WISH YOU ALL A HAPPY & PROSPEROUS NEW YEARS

# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

RBC Financial Group

Fax: 416 438 1612
1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

# புத்தாண்டு மாற்றங்கள்



கருணா
கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

ஆண்டாண்டு காலமாக உங்கள் தகவல் பசியினை தணித்துவரும் தாய்வீட்டின் தொடர் வாசகர்களாகிய உங்களுக்கு இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். வீடு பற்றிய தகவல்களை திரட்டி தருபவர் இன்று தலையங்கத்தில் புதுவருடம் பற்றி ஆரூடம் கூறுகிறார் என்று நீங்கள் சற்று திகைப்பது புரிகிறது. ஏன் கூறக்கூடாது என்பதுதான் இன்றைய எனது நோக்கம்.

புதுவருடம் பிறந்துவிட்டாலே ஒரே மகிழ்ச்சி. புத்தாடை அணிதல் கோவிலுக்கு போதல், பெரியோரை தரிசித்தல், உற்றார் உறவினர் நண்பர்களை காணுதல் என்று ஒரே அமர்க்களமாக இருக்கும். இது எமது வழமையான பாணியில் புதுவருடத்தினை வரவேற்பது என்பதாகும். ஏன் வழமையான முறையிலேயே நாம் சிந்திக்கின்றோம்? சற்று மாறுதலுக்காக இம்முறை சில மாற்றங்களை எண்ணுவோம் என்று தோன்றிய வேளையில்தான் இவ்வாறு ஓர் தலைப்பினை காணுவோம் என்னும் எண்ணம் தோன்றியது.

மாற்றங்கள் மட்டுமே மாறதது என்பதனை பலதடவைகள் கேட்டும் அறிந்தும் இருக்கின்றோம். ‘மாற்றங்கள் தேவை’ என்பதனை மையக் கொள்கையாக கொண்டே அதிபர் ஒபாமா தேர்தலில் வெற்றிகொண்டார். காலையில் பல்துலக்கும் முறையில் இருந்து மாலையில் படுக்கை செல்லும் முறைவரைக்கும் மாற்றங்களை ஏற்படுத்தி அனுபவ ரீதியாக நாம் புதுமைகளை காணுவதற்கு இப் புதுவருடத்தினை ஆரம்ப புள்ளியாக்குவோம். மாற்றங்கள் ஏன் தேவை? அல்லது அவை எவ்வாறு நன்மைகளை செய்யும்? என்று எண்ணத் தோன்றலாம். அரைத்த மாவினையே அரைத்துக்கொண்டிருப்பதால் என்ன பயன். எதையாவது புதிதாக சிந்தித்தால் அல்லது முயன்றால்தான், அதனால் என்ன பயன் இருக்கின்றது என்பதனை அறிந்துகொள்ள முடியும். தோல்விகள், வெற்றிகள் என்பதெல்லாம் எமது செயற்பாட்டின் விளைவுகளே. நேரிடை செயற்பாடுகள், எதிர்மறை செயற்பாடுகளைப் பொறுத்து விளைவுகள் மாறுபடலாம். உதாரணமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையான ஒருவர் அதனை நிறுத்திக் கொள்வதால் விளைவு வெற்றிப்பாதையிலும், புதிதாக குடிப்பழக்கத்தினை அறிமுகப்படுத்திக்கொள்பவரின் விளைவு தோல்விப் பாதையிலும் செல்ல வாய்ப்பிருக்கும்.

அடுத்தாக உங்களை நீங்களே ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் எவ்வாறு என்பதனை பார்ப்போம். எம்மில் அனேகர் தமது தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப கடமைகளை செய்வதனை நிறுத்தி, பிறருக்காகவும், பிற உந்துதல்களாலும் தமது அன்றாடங்களை வீணடிக்கின்றனர். உதாரணமாக அட்டவனையற்ற நேர இழப்பீடுகள் மற்றும் கணக்கு வழக்குகள் அற்ற செலவீனங்கள், தேவையற்ற களியாட்டங்கள் போன்றவற்றை கூறலாம். “உனக்கு நீதான் நீதிபதி, உனக்கு நீதான் முதலாளி” என்று கூறுவதுபோல, எமது அன்றாடங்களை மற்றவர் தீர்மானிக்க இடமளிக்காதீர்கள். உங்கள் தேவைகளின் ஆழம் உங்களுக்கு மட்டுமே தெரியும். மூன்றாவது நபர் உங்கள் வரையில் எவ்வளவுதான் அக்கறைப்பட முடியும்.

வீட்டினில் பொருட்கள் வைக்கும் ஒழுங்கில் இருந்து, வேலைக்கு செல்லுதல், ஓய்வு நேரங்களை செலவுசெய்தல், விடுமுறைகளை நிரைப்படுத்துதல், வீட்டுத்தேவைகளைப் பூர்த்திசெய்தல், கடமைகளை சரிவர செய்தல், தேவையானவற்றை மட்டும் கொள்வனவு செய்தல், தகுதிக்கு ஏற்ப செலவீனங்களை சரிப்படுத்துதல் போன்ற எம்மை நாமே கட்டுப் படுத்த வல்ல நடவடிக்கைகளை நாமாக சீர்படுத்தி அதன்வழி அமைதியும் ஆக்கமும் பெறுவதற்கு எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக எமது பழக்கவழக்கங்கள். இவ்வாறு கூறும்போது, சிறுவயது முதல் எம் அடிமனதில் பதிந்துபோன அடிமைத்தனம், அதனால் நாம் இழந்துபோன நன்மைகள், எம்மிடமுள்ள நல்ல பழக்கங்களை செயன் முறையாக்காமல் விட்டுப்போனதால் கிடைத்த நஷ்டங்கள், தீய பழக்கவழக்கங்கள் போன் றவற்றைக் குறிப்பிடலாம். ஓர் சமுதாயத்திற்கு ஒவ்வொரு குடிமகனுமே எடுத்துக்காட்டாக விளங்குகிறார். ஆகவே ஒவ்வொருவரின் தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் விருத்தியாகும் வேளைகளில் அச்சமூகமும், அவர் சாந்த சமுதாயமும் வளர்ச்சி பெறுகின்றது. ஆகவே எம்மிடம் நாம் காணும் தீய அல்லது எமக்கு ஒவ்வாத பழக்கங்களை துறந்து, புதிதாக நன்மை பயக்கவல்ல பழக்கங்களை கைகொள்ளுதல் வேண்டும். அதிலும் மிக முக்கியமாக நேரத்திற்கு மதிப்பளித்தல், அடுத்தவரின் நேரத்தினை வீண் விரயம் செய்யாதிருத்தல் அடுத்தவர் விடயங்களில் அனுமதியின்றி உங்களை நுளைத்துக் கொள்ளுதல் போன்றவையும், எமது நடை. உடை, பாவனை போன்றவற்றினையும் சிறப்பாக அமைத்துக்கொள்வது நன்று.

மேலும், இடத்திற்கு தகுந்தாற்போல் காட்சியளித்தல், மற்றவர்களுடன் பழகுகின்ற வேளைகளில் அவர்களையும் மதித்து உள் வாங்கிக் கொள்ளுதல், மற்றவரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் என்று கூறிக்கொண்டே போகலாம். அடுத்தவர் நோகா வண்ணம் கதைத்தல், பழகுதல் என்பது ஓர் கலையே. அக்கலையினை நாம் அனுபவ ரீதியாக மட்டுமே வளர்த்துக்கொள்ள முடியும். எங்கள் அடிமனதின் எண்ணங்கள் நேர்த்தியாயின் வார்த்தைகளும் நேர்த்தியாகும்.

எமது மனம் வெற்றிடமாக இருக்கும் வேளைகளில் வேண்டாத எண்ணங்கள் யாவும் எம்மை தொந்தரவு செய்யும். தீய பழக்கங்களும் வெற்றிடமான மனங்களிலிருந்தே உருவாகின்றது. உங்கள் உள்ளம் நேர்மறை எண்ணங்களால் நிரம்பியிருக்கும் வேளைகளில் சுறுசுறுப்பும் புத்துணர்ச்சியும் தானாக உங்களை தேடிவரும். அவ்வாறான பொழுதுகளில் எடுக்கும் எக்காரியமும் நிட்சயம் வெற்றிப்பாதைக்கு வழிவகுக்கும்.

> “ தனக்கு இடையூறு இல்லாமல் இருக்குமே என்பதற்காக எப்போதும் தொலைக்காட்சி முன் குழந்தைகளை பெற்றோர் விட்டுவைப்பதால், குழந்தைகளின் சிந்திக்கும் திறன் மழுங்கடிக்கப்படுகின்றது. ”

ஒவ்வொரு தனிமனிதனுக்கும், குடும்பத்திற்கும் சமுதாயத்தினை பொறுத்தவரை ஓர் கணிப்பீடு என்பது காணப்படும். ஒருவரைப் பற்றிய கணிப்பீடு அல்லது அவரது குடும்பம் சார்ந்த கணிப்பீடு என்பது அவரது நீண்டநாள் நடைமுறைகளால் வெளிக்கொணரப்படுகின்றது. அவ்வாறு எம்மைப்பற்றிய கணிப்பீடுகள் மற்றவர் மத்தியில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை அறிந்துகொள்வதன் மூலம் நமது தவறுகளையும் உணர்ந்து கொள்வதற்கு ஓர் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. “என்னைப்பற்றி மற்றவர் என்ன நினைத்தால் என்ன” என்கின்ற கலாச்சாரமும் இங்கு மலிந்து காணப்படுகின்றது என்னவோ உண்மைதான். இருப்பினும் அவரவரைப்பற்றிய கணிப்பினை அவரவரே அறிந்துகொள்ள முன்வரவில்லை என்பது வருத்தத்துக்கு உரியது அல்லவா?

இவ்வாறு நாம் யார்? எமது குடும்பத்தின் பெறுமதி என்ன? எமது சமுதாயத்தின் பெறு மதி என்ன? என்பதனை அறிந்துகொண்டு அவற்றினை மென்மேலும் வளர்த்துக் கொள்வதன் மூலம், எமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு சீரான அத்திவாரம் இன்றே அமைக்கப்படுகின்றது. சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் இலங்கை தமிழர்களை மற்றவர்கள் நோக்கிய விதமும், அவர்கள் இன்று நோக்குகின்ற விதமும் கணிசமான வளர்ச்சியினை கொண்டிருக்கின்றது. இதற்கு காரணம் எமது தனிமனித வளர்ச்சியும், சமுதாய வளர்ச்சியுமே.

எமது வருங்கால சந்ததிக்கு தகுந்த கல்வியறிவும், அதேவேளை எமது கலாச்சார ஒழுங்குகளையும் புகுத்தி வளர்த்தல் மிக அவசியம். ஒவ்வொரு நாடுகளுக்கும் நாம் புலம்பெயரும் வேளைகளிலும் ஓர் கலந்து பட்ட கலாச்சாரம் என்பது தவிர்க்கமுடியாதவொன்று. அவ்வாறு இருப்பினும் நல்லவை எங்கிருந்தால் என்ன, அவற்றை தேடியறிந்து அதன்படி ஒழுகுவதற்கு கற்றுக்கொள்ளுதல் அவசியம். சிறு வயதில் இருந்தே, பணத்தின் பெறுமதி, குடும்ப பாரம், அவசிய தேவைகள் எமது வருங்கால கனவுகள் போன்றவற்றினை கலந்து ஆலோசித்துக்கொள்வது இன்றியமையாதது.

குழந்தைகள் என்றவுடன் எம்மையறியாத ஓர் பற்றுணர்வு எம்மை ஆட்கொண்டு விடுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களை அவர்களும் இலகுவாக தமக்கு சாதகமாக்கி கொள்கின் றனர். இதனால் அவர்களை நேர் திசையில் இட்டு செல்வதற்கு பெற்றோர் பலர் அரும்பாடு படுகின்றனர். அண்மையில் வெளியான ஓர் அறிக்கையின் பிரகாரம், தனக்கு இடையூறு இல்லாமல் இருக்குமே என்பதற்காக எப்போதும் தொலைக்காட்சிமுன் குழந்தைகளை பெற்றோர் விட்டு வைப்பதால், குழந் தைகளின் சிந்திக்கும் திறன் மழுங்கடிக்கப் படுகின்றது. அதுமட்டுமின்றி அவர்கள் பெற்றோரின் அன்றாடங்களில் தம்மையும் இணைத்துக்கொள்ள கிடைக்கின்ற சந்தர்ப்பங்களும் மருகி காணப்படுவதால், தமக்கென ஓர் கற்பனை உலகில் மிதக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

இவற்றினை மாற்றி அமைப்பதற்காக அட்டவனைப்படுத்தப்பட்ட தொலைக்காட்சி நேரங்கள் என்பது நிட்சயம் அமுல்படுத்தப்பட வேண்டும். காலை உணவு மற்றும் இரவு உணவு உட்கொள்ளும் வேளைகளில் (சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம்) குடும்ப மாக குழந்தைகளுடன் நிட்சயம் இருத்தல் அவசியம். அவர்களின் வேலைகளை அவர் களே பார்த்துக்கொள்ளுமாறு பணித்தல் மிக அவசியம். அதாவது ஆடைகளை சலவை செய்தல், தெரிவு செய்தல், தமது அறையினை துப்பரவு செய்தல், மறுநாள் பாடசாலைக்கான ஒழுங்குகள் செய்தல், தாம் சாப்பிட்ட தட்டினை தாமே கழுவி வைத்தல் போன்ற அனைத்து கடமைகளையும் அவர்கள் தாமாக செய்வதன் மூலம், சிறு வயதிலேயே சுய அறிவினை அனுபவ வாயிலாக வளர்த்துக்கொள்ள குழந்தைகளுக்கு சந்தர்ப்பம் அதிகம்.

எம்மில் பலர் குடும்ப வளர்ச்சிக்காக அயராது பாடுபடுபவர்கள். இரவு பகல் பாராது தமது தூக்கம் தொலைத்து, தமது இன்ப துன்பங்கள் மறந்து செயற்படுபவர்கள். ஒரு வகையில் அதுதான் எமது வளர்ச்சிக்கு வழிகோலியதா என்பது ஒரு புறமிருக்க, இவ்வாறு இரவு பகலாக உழைக்கும் உங்கள் பணத்தினை தகுந்த முதலீடுகளில் நீங்கள் இட்டுக் கொள்வது மிகமிக அவசியமானவொன்று. அதன் ஒருபடியாக, நாம் கடந்த இதழில் பார்த்தது போன்று, ஆயுட்காப்புறுதியினையும் கூறலாம். அடுத்ததாக அனுபவம் இல்லாத தொழில்களில் முதலீடு என்பது நிட்சயம் தவிர்க்கப்பட வேண்டும்.

சிறுகச் சிறுக சேமித்த உங்கள் உழைப்பானது வீணேகரைந்து செல்வது ஜீரணிக்க முடியாதவொன்று. அதிஸ்டம் என்பது எல்லாம் ஓர் வகையில் பிரமையானதே. கடின உழைப்பு ஒன்றுதான் எமது அதிஸ்டம் என்பதில் நம்பிக்கை கொள்வது நன்று. பிற்காலத்தில் தேவைப்படும் என்பதற்காக நீங்கள் சேமிக்கும் சொத்துக்கள் தகுந்த மீளளிப்புக்கள் உள்ளவையாக இருப்பது நன்று. உதாரணமாக சிலர் தமது சேமிப்புக்களை ‘GIC’இல் சேர்த்து வைக்கும் பழக்கம் உண்டு. ‘GIC’ ஆனது ஆகக்குறைந்த வட்டியினை எமக்கு வழங்கும் அதேவேளை அதிக நம்பிக்கைவாய்ந்த வைப்பாக கணிப்பிடப்படுகின்றது. ஆனால் ‘GIC’ இனால் வழங்கப்படும் வட்டியின் அளவில் கணிப்பிட்டால் இன்று பணத்திற்கு இருக்கும் மதிப்பிற்கும் பத்து வருடம் அதே வளர்ச்சியுடன் காணப்படும் பணத்திற்கு இருக்கும் மதிப்பிலும் குறைவாகவே இருக்கும்.

“காசுதான் காசினை உருவாக்கும்” என்பார் கள். ஆகவே இப்போதே தகுந்த முதலீடுகள் மற்றும் வைப்புக்களை தேர்ந்தெடுங்கள் உங்கள் வருங்காலம் என்பது கேள்விக்குறி ஆகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

குடும்பத்தையும் சரி உங்கள் சுற்றுப்புறங்களையும் சரி உங்களுக்கு ஏற்றாற்போல் மாற்றுவதற்கு முயன்றுகொண்டே இருக்காமல், மற்றவர்களுக்காக நீங்கள் கொஞ்சம் மாறிப்பாருங்கள். உங்களை விரும்புவர்கள் பல மடங்காவதை காணலாம். இன்று முன்னணியில் இருக்கும் பலரும் தமது அனுபவத்தினை இவ்வாறு தானே கூறியிருக்கின்றார்கள்.

புதிதாக பிறந்த இப்புத்தாண்டில், தினசரி உங்களுக்காக அரைமணி நேரமாவது தனிமையில் ஒதுக்கி மன அமைதி பெறுவதோடு, உற்சாகமாக “நாளை என்பதை இன்றும் இன்று என்பதை இப்பொழுதே” நிறைவேற்றி வெற்றி காணுங்கள். வெற்றி என்பது எப்போதும் உங்கள் கைளிலே.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

**Tution Classes**

**(Morningside & Sheppard)**

கணிதம் (Math),
தரம் 8 முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.
**Puran**
**416 819 7923**

# LONDON LIFE

## With strong ratings for claims paying ability & financial strength.

## YOUR MORTGAGE PROTECTION POLICY

**Before you sign up for the Mortgage life policy you should shop around. The banks offer convenience, but individual insurance sold by life insurance companies offer portability, flexibility and a better deal.**

Freedom 55 Financial — A division of London Life Insurance Company

QUADRUS — Quadrus Investment Services Ltd.

**Offers Insurance & Banking Solutions**

***To help our clients reach their goals and dreams.***

**Jeganathan Balasundaram (Bala) B. Eng**



FINANCIAL SECURITY AND INVESTMENT REPRESENTATIVE
NATIONAL QUALITY AWARD WINNER
SERVING CANADIANS FOR THE PAST 15 YEARS

**Tel: (416) 291-0451, ext. 227**
**Cell: (416) 518-9489**
**Fax: (416) 291-3779**
Email: bala.balasundaram@freedom55financial.com
**Toll Free: 1-877-566-5433**
2075 Kennedy Road, Suite 300, Scarborough, ON M1T 3V3

**Representing London Life, Manulife & Sun life**

Freedom 55 Financial and design are trademarks of London Life Insurance Company. Quadrus Investment Services Ltd. and design are trademarks of Quadrus Investment Services Ltd. used with permission by London Life Insurance Company.

| *Questions to Ask Yourself* | *Bank Mortgage Insurance* | *London Life Insurance* |
|---|---|---|
| 1. Who owns the policy? | 1. The bank owns the insurance policy. | 1. Client owns their own Policy. |
| 2. Who controls the policy? | 2. The bank controls all the options. | 2. Insured has control of all the options. |
| 3. Can I guarantee I will always be covered? | 3. Your policy will lapse if your mortgage goes into arrears. | 3. Policy will not lapse if you miss a Mortgage payment. |
| 4. Who is my beneficiary? | 4. Your Beneficiary is the Bank. | 4. You can **name** any Beneficiary you want. |
| 5. What kind of coverage do I have? | 5. Your coverage is decreasing term with level cost. | 5. Level term coverage with fixed premiums. |
| 6. Can I be covered if I change mortgage holders? | 6. Moving the mortgage means reapplying for insurance. | 6. Your covered regardless of which institution you choose. |
| 7. How much insurance do I have? | 7. Face amount of the policy cannot exceed the value of the outstanding mortgage. | 7. Your coverage is determined by your needs and wants. |
| 8. What options do I have if I or my spouse dies? | 8. No option but to pay off the mortgage. | 8. Survivor can invest the money and use returns to pay the mortgage and still keep the capital. |
| 9. Can I convert my insurance to a permanent plan at any time? | 9. Not extendible. | 9. Your policy is renewable and convertible. |
| 10. Am I penalized for casual deposits? | 10. Penalizes casual deposits. | 10. Rewards casual deposits. |
| 11. Who guarantees that I am covered if I die? | 11. Underwriting is done at time of death and research can date back to birth. | 11. Underwriting is done at time of application and before a second premium is paid. |
| 12. Who is more expensive? | 12. Can be very expensive. | 12. We are very competitive. |





**Justin William**
Broker
**Cell: 416.803.7344**



**Ravi Raveendran**
Broker
**Cell: 416.817.8479**



**Sasi Chelvaratnam**
Sales Representative
**Cell: 416.858.4828**



இனிய
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc., Brokerage*** 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated

# காதலும் வீரமும் கோபமும் குரூரமும்



நிமால் நாகராஜா

13ம் நூற்றாண்டின் தொடக்கம் அது. அமெரிக்க கண்டம் கண்டுபிடிக்கப்படாத காலம். ஆசியாவும், ஆபிரிக்காவும், ஐரோப்பாவும் மட்டுமே உலகம் என்றிருந்த காலப்பகுதி. தென் ஆசியாவில் சோழப் பேரரசு நலிவடைந்து தனது இறுதி மூச்சை எண்ணிக் கொண்டிருந்த நேரம். இன்றைய ஈரான், துருக்கி, வடக்கு பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய Khwarezmian எனும் பேரரசு மத்திய ஆசியாவில் பலம் பெற்றிருந்த வரலாற்று பகுதி. பேரரசன் மொஹமட்டின் கீழ் பரந்திருந்த இந்த சாம்ராஜ்ஜியத்தின் போர் வீரர்கள் மட்டுமே 4 இலட்சம் பேர்கள். அத்தனை வலிமையான அரசு.

ஒருநாள் 500 வணிகர் கொண்ட குழு ஒன்று இந்த பேரரசின் கிழக்கு எல்லைக்கு வந்து சேர்கிறது. பேரரசன் மொஹமட்டுக்கு ஏராளமான தங்க, வெள்ளி, பட்டு பரிசுகளுடன் வந்திருந்த இந்த வணிகர்களை அனுப்பி வைத்தவன் மொங்கோலிய நாட்டு அரசன் ஒருவன். பேரரசன் மொஹமட்டின் பிரதேசத்தில் வாணிகம் செய்ய அனுமதி கேட்டு வந்திருந்த அவர்கள் அத்தனை பேரையும் அந்த நகர தளபதி கொலை செய்கின்றான். செய்தி மொங்கோலிய மன்னனுக்கு எட்டுகிறது. மனம் தளராத அவனோ மூன்று தூதுவர்களை நேரடியாக பேரரசனை சந்திக்க அனுப்பி வைக்கின்றான். சக்ரவர்த்தி மொஹமட்டின் முன்னால் மூன்று தூதர்களும் விநயமாக வணங்கி நிற்கின்றார்கள். தங்கள் வணிகர்களுக்கு எல்லையில் நடந்த கொடுமையை கூறி, தங்கள் நாடு பேரரசுடன் வியாபாரம் செய்ய ஆவலாக இருப்பதாய் சொல்கிறார்கள். அவர்கள் மூவரையும் புழுக்களாய் பார்க்கின்ற பேரரசன் மொஹமட், மூவருக்கும் மொட்டையடிக்க உத்தரவிடுகிறான். பின் ஒருவன் சிரச்சேதம் செய்யப்படுகிறான். அவனது தலை மற்றைய இருவரிடமும் கொடுத்தனுப்பப்படுகிறது. உலக வரலாற்றில் ஒரு மன்னன் செய்த மகாப்பெரிய தவறு இதுவாகத்தான் இருக்க முடியும்.

கொய்யப்பட்ட தலையுடன் தன் முன்னே நின்று கொண்டிருந்த இரண்டு தூதர்களையும் தன் இடுங்கிய கண்களால் உற்று நோக்குகின்றான் மொங்கோலிய மன்னன். இம்முறையும் பேரரசன் மொஹமட்டினை சந்திக்க மொங்கோலியாவிலிருந்து குழு ஒன்று புறப்படுகின்றது. ஆனால் பேச்சுவார்த்தைக்காக அல்ல, போருக்காக. படைக்கு தலைமை தாங்குபவன் மொங்கோலிய அரசன். படை வலிமை இரண்டு இலட்சம் போர்வீரர்கள். இந்த போர் பதியப்பட்ட வரலாற்றுப் பக்கங்களிலிருந்து இன்றும் குருதி வழிந்து கொண்டிருக்கும் அளவுக்கு மனித குலம் சந்தித்த மாபெரும் அழிவு அது. மூன்று முனைகளில் முன்னேறிய மொங்கோலிய படைகளின் அகோரத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. எதிர்ப்பட்ட அத்தனை பேர்களும் அழிக்கப்பட்டனர். நகரங்கள் தரை மட்டமாக்கப்பட்டன. கொய்யப்பட்ட தலைகள் கோபுரங்களாய் எழுந்தன. தனது தவறு ஒன்றினால் முழு சாம்ராஜ்ஜியமே உலக வரைபடத்திலிருந்து முற்றாக துடைத்தெடுக்கப்படுவதை பார்த்துக் கொண்டே பேரரசன் மொஹமட் பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்தான். ஓடுவதைத் தவிர அவனால் வேறு ஒன்றும் செய்திருக்க முடியாது. ஓடி, ஓடி களைத்த மொஹமட் இறுதியில் அநாதரவாக இறந்து போகின்றான். பல இலட்சம் மக்கள் கொல்லப்படுகின்றார்கள்.

இந்த பேரரசின் ஒரு அங்கமாக இருந்த இன்றைய ஈரான் தேசம் தனது பழைய மக்கள் தொகையை மீண்டும் எட்டுவதற்கு 700 ஆண்டுகள் எடுக்கும் அளவுக்கு அத்தனை அழிவு.

அந்த காலகட்டத்தில் மத்திய ஆசிய அரசுகள் அத்தனைக்கும் சிம்ம சொப்பனமாய் இருந்தவனும், ரோமர்கள் 400 வருடங்களில் சாதித்ததை வெறும் 25 வருடங்களுக்குள் சாதித்து காட்டியவனும், உலகில் இதுவரை தோன்றிய சிறந்த போர்வீரர்களின் வரிசையில் மிக இலகுவில் முதலிடத்தை பெறக்கூடியவனுமான அந்த மொங்கோலிய மன்னனின் பெயர் ஜெங்கிஸ்கான். அடிமை வாழ்க்கையிலிருந்து, அசைக்க முடியாத சக்ரவர்த்தியாய் உயர்ந்த அவனது வாழ்க்கையில் காதலும், வீரமும், கோபமும், குரூரமும் நிறைந்தே இருக்கின்றன. பெருந் தொகை மக்களால் மகா வீரனாகவும், வெற்றி கொள்ளப்பட்டவர்களினால் குரூர வில்லனாகவும், வரலாற்று ஆசிரியர்களினால் அசாத்திய ஆற்றல் உள்ளவனாகவும் சித்தரிக்கப்படுகின்ற இவனது வாழ்வில் திருப்புமுனைகள் ஏராளம். ஒரு தனிமனிதன் உலக வரலாற்றை எவ்வாறு திருப்பிப் போடலாம் என்பதற்கு இவன் மிகப்பெரும் ஒரு சாட்சி.



அந்த நேரத்தில் மொங்கோலியா என்று ஒரு நாடு கிடையாது. பரந்த புல்வெளிகளிலும், மலைப்பிரதேசங்களிலும் ஏராளமான குழுக்களாய் மக்கள் பிரிந்திருந்தனர். ஒரே மொழியை பேசியபோதும், ஒரே குணவியல்புகளை கொண்டிருந்த போதும், அந்த குழுக்களிடையே பெரும் பகைமை நிலவியது. அடிக்கடி கொலைகளும், கொள்ளைகளுமாய் அந்தக் குழுக்கள் சிதறிக் கிடந்தன. சிறுவன் ஜெங்கிஸ்கானுக்கு அப்போது ஒன்பது வயது. Temujin என்ற இயற்பெயர் கொண்ட அவனுக்கு குல வழக்கப்படி திருமண நிச்சய தார்த்தம் செய்ய வேண்டிய வயது. தந்தையார் சிறு குழுவொன்றின் தலைவன். அவனோ இன்னோர் குழுவொன்றின் பெண் ஒருத்தியை கவர்ந்து கடிமணம் செய்தவன். அதுவும் அவள் வேறு ஒருவனை திருமணம் முடித்த நாளன்று கவர்ந்தவன். அன்றிலிருந்து இந்த இரண்டு குழுக்களுக்குமிடையே பெரும் விரோதம் உண்டாயிற்று. இந்த கோபத்தை தணிப்பதற்காய், அதே குழுவிடமிருந்து தனது மகனுக்கு பெண்ணெடுக்க முடிவு செய்கிறான் தகப்பன். மணமகளை தேர்ந்தெடுப்பதற்கான பயணம் தொடங்குகிறது.

போகும் வழியில் மகன் கேட்கிறான், "தந்தையே நல்ல மனைவியை எப்படி தேர்வு செய்வது?".

இன்றுவரை உலகில் விடைதெரியாத இந்தப் பெரும் கேள்விக்கு தந்தை பதில் கூறுகிறான். "மகனே, பெரும் கண்களுடையவளை ஒரு போதும் தெரிவு செய்யாதே. பேய்களும், பிசாசுகளும் இலகுவில் அவளது கண்களுக்குள் புகுந்து விடும்."

"அது மட்டும் தானா?" தனயன் தொடர்ந்து வினாவுகிறான்.

சிறு அமைதிக்கு பின் தந்தை சொல்கிறான்.

"அவளது கால்களைப் பார். வலிமையான கால்களைக் கொண்டவள் உனக்கு நிறைய சுகங்களைத் தருவாள்."

மகன் ஒன்றும் பேசவில்லை. மாலை மங்குகிறது. அருகிலுள்ள கிராமம் ஒன்றில் இரவு கழிகின்றது. அடுத்த நாள், அதே கிராமத்தில் Borjigin எனும் துடுக்கான சிறுமி ஒருத்தி சிறுவனது மனதை கவர்கிறாள். அவளது கண்களிலோ அல்லது கால்களிலோ அவனது கவனம் லயிக்கவில்லை. காதலில் மனம் நிறைகின்றது. தான் நினைத்த குழுவிலிருந்து பெண்ணை தெரிவு செய்ய முடியாததையிட்டு வருத்தம் இருந்த போதிலும், தந்தை "நல்ல தெரிவு" என மகனை தட்டிக் கொடுக்கின்றார். மூன்று வருடத்தின் பின் திருமணம் என நிச்சயிக்கப்படுகின்றது. மகனை சிறிது காலம் அங்கேயே இருக்கச் சொல்லி விட்டு தந்தை தனது கிராமத்தை நோக்கி திரும்பிச் செல்கிறார். ஆனால் அவர் தனது கிராமத்தை சென்றடையவேயில்லை. வழியில் எதிர்க்குழு ஒன்றினால் விஷமூட்டிக் கொல்லப்படுகின்றார்.

தந்தையின் மரணத்தை அறிந்த சிறுவன் பரம்பரை வழிவரும் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்காய் தனது கிராமத்தை நோக்கிச் செல்கின்றான். அங்கே மிகச் சிறியவன் எனக் காரணம் காட்டி அவனுக்கு தலைமைப் பதவி மறுக்கப்படுகின்றது. எதிர் காலத்தில் போட்டியாக வரக்கூடும் என்ற அச்சத்தில் சிறுவனின் குடும்பம் முற்றுமுழுதாக கிராமத்திலிருந்து விரட்டியடிக்கப்படுகின்றது. சிறுவன் Temujin இன் கரடுமுரடான வாழ்க்கை ஆரம்பிக்கின்றது. பட்டினியும், துன்பமாகவும் அவர்களது வாழ்க்கை ஓடுகின்றது. இதனிடையே சிறுவன் Temujin வேறு ஒரு குழுவினால் சிறை பிடிக்கப்பட்டு அடிமையாக்கப்படுகின்றான். ஏறத்தாழ 5 வருடங்கள் அடிமை வாழ்வு. அடிமை வாழ்வின் முடிவில் தன்னுடைய காதலி தனக்காக காத்திருக்க மாட்டாளா என்ற தவிப்புடன் அவளைத் தேடி ஓடுகின்றான். இப்போது அவனுக்கு 16 வயது. அங்கே Borjigin இவனுக்காகவே காத்திருக்கிறாள். "நீ எப்படியும் வருவாய் என்பது எனக்குத் தெரியும்" என்றபடி அமைதியாய் நின்றிருக்கும் அவளை ஆரத் தழுவுகின்றான் Temujin. திருமணம் முடிகிறது. ஆனாலும் இனித்தான் Temujinஇற்கு மிகப் பெரும் அதிர்ச்சி காத்திருக்கின்றது.

Temujin இன் தந்தை எந்த குழுவிலிருந்து தனது மனைவியை கவர்ந்து வந்தாரோ அந்த குழுவினர் பழி வாங்குவதற்கான சரியான தருணம் இது. குதிரைகள் பாய்ந்து வருகின்றன. சேர்ந்து சில தினங்களே ஆன இளம் ஜோடிகள் பிரிக்கப்படுகின்றனர். Borjigin கவர்ந்து செல்லப்பட்டு இன்னொருவனுக்கு மனைவியாக்கப்படுகின்றாள். Temujin இடிந்து போகின்றான். கவரப்பட்ட மனைவியை தேடிச் செல்வது அவர்களது வழக்கமல்ல. இன்னொருத்தியை கரம் பிடித்தால் போயிற்று. ஆனால் Temujin அப்படிபட்டவன் அல்ல. தனது காதலியை, மனைவியை பிரிந்திருக்க முடியாது என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். சிறிது காலத்திற்குள் நண்பனின் உதவியுடன் பெரும் போரொன்றின் முடிவில் மனைவியை மீட்டு வருகின்றான். மீட்டெடுத்த ஒன்பது மாதத்தில் Borjigin ஆண் குழந்தை ஒன்றை பெற்றெடுக்கின்றாள். பலரும் பல விதமாக கதைத்த போதும் குழந்தை தனது மகனெனவே ஏற்றுக் கொள்கிறான். மனைவி மீதான அவன் காதல் சற்றும் குறையவில்லை. Temujin இன் அந்தபுரத்தில் பல பெண்கள் இருந்த போதிலும் அவன் மனதில் Borjigin எப்போதும் நிறைந்திருந்தாள். எப்போதுமே அவள் தான் சாம்ராஜ்ஜியத்தின் பட்ட மகிஷி.

Temujin இன் அடுத்த பயணம் தொடங்குகிறது. அத்தனை மொங்கோலியா குழுக்களையும் ஒன்றிணைக்கும் நோக்கம் அது.

*34ம் பக்கம் பார்க்க...*


**ARGENTUM LENDING DIRECT CORPORATION**
Reg # 10466


3621 Hwy 7 East, Suite # 211 Markham, ON, L3R 0G6
1193 A Brimley Rd, Unit 7, Scarborough, ON M1P 3G9



வீட்டு அடமானக் கடன் பெற்றிட உங்களுக்குத் தேவை நம்பிக்கையான ஒரு முகவர்...

OUR SERVICES:
- 1st & 2nd Mortgage
- Refinancing
- Commercial Loan
- Home Equity Mortgage
- Much more...

Are you a Temporary resident? Self Employed? Bankrupt? New Immigrant? Is Your SIN begining with 9? Not to worry
We will help you



Theven Kankesu, AMP
(Mortgage Agent)
FSCO LIC # M08008759
Direct: 416.939.8786
Fax: 647.343.0135
Email: theven.kankesu@migroup.ca

புற்றுநோய் விழிப்புணர்வு


# மார்பகப் புற்றுநோய்

சிவாஜினி
பாலராஜன்



*சென்ற மாதத் தொடர்...*

அமெரிக்காவின் உற்றா பல்கலைக் கழகம் (UTAH UNIVERSITY) பெண்களின் மார்பகம் மற்றும் கருப்பையில் உருவாகும் புற்று நோய் குறித்து ஆராய்வு செய்தது. இவ் ஆராய்வின் விளைவாக மார்பகப் புற்றுநோயுடன் சம்பந்தப்பட்ட மரபணுவான BRCA1 (breast cancer 1, early onset) என்பது 1994ம் ஆண்டு முதன் முதலில் நிறமூர்த்தம் 17ல் கண்டுபிடிக்கப் பட்டது. இதன் பின்னர் கிட்டத்தட்ட ஒரு ஆண்டின் பின்னர் நிறமூர்த்தம் 13ல் BRCA2 என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் முக்கியமான விடயம் என்னவெனில் இந்த இரண்டு நிறமூர்த்தங்களும் tumor suppressors எனப் படும். அதாவது இவை தேவையற்ற கலப் பிரிவினை அல்லது கட்டி வளர்தலை கட்டுப் படுத்தும் நிறமூர்த்தங்களாகும். அதனால் இவை ஒழுங்காக இருப்பின் தேவையற்ற கட்டிகள் உருவாவதைக் கட்டுப் படுத்தும். இவற்றில் மாறுபாடு அல்லது அசாதாரண நடைமுறை காணப்படின் இவற்றினால் தங்கள் தொழிலை ஒழுங்காகச் செய்ய முடியாது போய்விடும்




### குரோமசோம் 17இற்கும் நோய்க்கும் என்ன தொடர்பு?

பரம்பரைக் குணாதிசயங்கள் பல குரோமசோம் 17 உடன் தொடர்புடையவை. isochromosome 17q ஒரு குறிப்பிடப்பட்ட குரோமசோம் அசாதாரணத் தன்மையானது. சாதாரணமாக குரோமசோம் 17 ஒரு சிறு கரத்தினையும் ஒரு பெரும் கரத்தினையும் கொண்டிருக்கும். ஆனால் இந்த அசாதாரண குரோமசோமில் இரண்டு பெரிய கரங்கள் காணப்படும். இதன் காரணமாக இது சில பரம்பரை அலகுகளை மேலதிகமாகவும் சிலவற்றை இழந்தும் காணப்படலாம்.

பரம்பரை அலகுக்குரிய ஆராய்வினை உட்டா பல்கலைக் கழகம் மேற்கொண்ட போதிலும் அதற்குரிய நிதியுதவியினைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியது மைரியாட் ஜெனடிக்ஸ் (MYRIAD GENETICS) என்னும் தனியார் நிறுவனம் தான். பின்னர் பல்கலைக் கழகம் இந்த ஆய்வினை மைரியாட் நிறுவனத்திற்கு ஒரு பெரிய தொகைக்கு விற்றதனால் அமெரிக்காவில் இந்த நிறுவனம் மூலம் தான் இந்தப் பரிசோதனையினைச் செய்து கொள்ளலாம் என்னும் நிலை வந்தது. அதே சமயம் ஒரேயொரு நிறுவனமே இதனைக் கையாண்டதாலும் போட்டி இல்லாமல் இருந்ததாலும் மைரியாட் விதித்த தொகையே இந்தப் பரிசோதனைகளைச் செய்வதற்கான கட்டணத் தொகையாக இருந்தது. இதனால் பொருளாதார வசதியில்லாத ஏராளமான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க சிவில் உரிமை ஒன்றியம் குறிப்பிடுகிறது. மேலும், இந்த வகை நோய்களை உருவாக்கும் மரபணுக்களை ஆய்வு செய்தால்தான் இந்த நோயை தீர்க்கக்கூடிய மருந்துகளையும், நோயைத் தடுக்கும் மருந்துகளையும் கண்டு பிடிக்க முடியும். மார்பக மற்றும் கருப்பை புற்றுநோயை உருவாக்கும் BRCA1 மற்றும் BRCA2 ஆகிய இரு மரபணுக்களை அறிவுச் சொத்துரிமை என்ற பெயரில் உடமையாக்கிக் கொண்ட மிரியாட் ஜெனடிக்ஸ் நிறுவனத்தின் அனுமதியில்லாமல், இந்த நோயை குணப்படுத்தும் மருந்துகளை மற்ற நிறுவனங்கள் கண்டுபிடிக்க முடியாது. எனவே மார்பக புற்று நோய்க்கு மிரியாட் ஜெனடிக்ஸைத் தவிர வேறு எந்த நிறுவனமும் மருந்து கண்டுபிடிக்கும் ஆய்வுகளை செய்ய முடியாது. இதனால் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படும் பெண்கள் அனைவரும் மிரியாட் ஜெனடிக்ஸ் நிறுவனத்தை மட்டுமே சார்ந்து வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. அதுவும்கூட அந்த நிறுவனம் நிர்ணயம் செய்யும் விலையை கொடுத்து சிகிச்சை பெறும் வசதியுடைய பெண்களுக்குத்தான்.

கனடாவில் பல்வேறுபட்ட மாகாணங்களிலும் இவ்வாறான பரிசோதனைக்கான வசதிகள் உண்டு. இது பொதுவாக வைத்திய காப்புறுதியினாலேயே செய்யப்படுகின்றது. கனடாவில் பரம்பரை அலகு பரிசோதனை செய்வதற்கு முன்னதாக பல்வேறு பரிசோதனைகள் செய்தே இனி இல்லை என்னும் கட்டத்தில் தான் இதற்கு அனுப்பப்படும். ஏனெனில் இப் பரிசோதனையானது வேறு எந்தப் பரிசோதனையிலும் பார்க்க அதிக செலவு கூடியதாகும். மேலும் கனடாவில் MDS Laboratories என்னும் பரிசோதனைக் கூடங்களில் இந்தப் பரிசோதனை செய்வதற்கான குருதி அல்லது கூறுகள் எடுக்கப் படினும் இவை UTAHவிற்கு அனுப்பியே செய்யப் படுகின்றன. இதனால் இப் பரிசோதனை செய்வதற்கு கனடிய அரசிற்கு மிகவும் அதிக பணம் செலவாகின்றது.

ஒன்ராரியோவில் இந்த மரபணுப் பரிசோதனை அனைத்துப் பெண்களுக்கும் செய்யப்படுவதில்லை. குடும்ப வைத்தியரினால் மிகவும் உறுதியாக பரிந்துரை செய்யப்பட வேண்டும். உறுதியாக என்னும் போது கடுமையாக குடும்பத்தில் அல்லது பரம்பரையில் கருப்பை, மார்புப் புற்று நோயின் தாக்கம் அதிகமாக இருந்திருந்தால் குடும்ப வைத்தியர் இதற்குப் பரிந்துரை செய்வார். சொல்லப் போனால் ஆகக் குறைந்தது மூன்று பேருக்காவது இவ்வாறு வியாதி இருந்திருக்க வேண்டும். அதுவும் அவர்களது முதலாவது அல்லது இரண்டாவது தலைமுறை உறவாக இருக்க வேண்டும்.

பொதுவாக மனிதர்களுக்கு ஒவ்வொரு கலத்திலும் (cell) 46 குரோமசோம்கள் எனப்படும் நிறமூர்த்தங்கள் 23 சோடிகளாகக் காணப் படும். இச் சோடிகள் இரு பெற்றோரிடமிருந்தும் பெறப்படுபவையே. இந்த நிறமூர்த்தம் 17ல் முரண்பட்ட அசாதாரணமான நிலை CEP17 எனப்படும். இந்த CEP17 ஒரு உயிரியல் சுட்டியாக (biomarker) கணிக்கப் படுகின்றது. இவ் அசாதாரண நிலைமையினை வைத்தே ஒருவருக்கு எதிர்காலத்தில் புற்று நோய் வரலாமா இல்லையா என்பது மட்டுமன்றி கீமோ தெரபி போன்ற வைத்தியத்திற்கு அவரது நோய் கட்டுப்படுமா என்பதனைக் கூட கண்டு கொள்ளலாம் என பிரித்தானிய வைத்திய ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவ்வாறு இவ் இரண்டு விதமானதில் ஏதாவது ஒரு விதமான நிற மூர்த்தில் மாறுபாடு இருக்குமாயின் அப் பெண்மணிக்கு மார்பகப் புற்று நோய் அல்லது இனப்பெருக்க உறுப்புப் புற்று நோய் வருவதற்குரிய சாத்தியம் உண்டு. இவ்வாறு இந்த விதமான மரபணுக்கள் உள்ளவர்களுக்கு இளவயதிலேயே புற்று நோய் ஏற்படலாம் எனவும் அறியப்பட்டுள்ளது. பொதுவாக யூதப் பெண்மணிகளுக்கு கூடுதலாக இவ்வாறான பரம்பரை அலகுப் பிரச்சினை இருப்பதாக அறியப் பட்டுள்ளது. 40 வீதமான பெண்களுக்கு கருப்பைப் புற்றுநோயும் 15 வீதமான பெண்களுக்கு மார்புப் புற்றுநோய் இருப்பதாகவும் கண்டறியப் பட்டுள்ளது. மேலும் இந்த விதமான பரம்பரை அலகுப் பரிசோதனையானது எப்போது புற்று நோய் வரலாம் அல்லது வரும் என்பதைக் கூறுவதற்கோ கணிப்பதற்கோ உதவி செய்ய மாட்டாது. புற்று நோய் வருவதற்குரிய சாத்தியம் இருப்பதை மட்டுமே கூறும்.

### பரம்பரை அலகு பரிசோதனை செய்வதா என்பதனை எவ்வாறு நிர்ணயிப்பது அல்லது முடிவெடுப்பது:

இவ்வாறான பரிசோதனைக்கு அனுப்புமுன்னர் அந்த நோயாளிகள் Genetic counselors இடம் அனுப்பப் படுவார்கள். அங்கு அவர்களுக்கு சரியான ஆலோசனைகள் வழங்கப் படுவதுடன் பின்விளைவுகள் மற்றும் இந்தப் பரிசோதனை செய்து கொள்வதால் ஏற்படும் அசௌகரியங்கள் என்பவை விளங்க வைக்கப்படும். இந்த ஆலோசனையில் கீழ்வரும் விடயங்கள் கலந்துரையாடப்படும்.

- எவ்வாறு இந்தச் சோதனை செய்வது.
- நேர்முகமான அல்லது மறைமுக positive and negative முடிவுகளும் அதற்குரிய வழிமுறைகளும்.
- பரம்பரை அலகு மூலம் பரம்பரைக்கு கடத்தப் படுவதற்கான சாத்தியக் கூறுகள்.
- சோதனையில் இருக்கும் தொழில்நுட்ப பிரச்சினைகள்.
- சோதனைக்குத் தேவையான பணம்.
- இப் பரிசோதனையால் ஏற்படும் மனோவியல் பிரச்சினை.
- காப்புறுதி சம்பந்தமான விடயங்கள்.

### பரம்பரை அலகுகள் அதிகம் எனக் காணப்பட்டவர்களுக்கு எவ்வாறான சிகிச்சை வழங்கப்படும்:

இவ்வாறு பரம்பரை அலகுகள் சோதித்து சாத்தியக் கூறுகள் அதிகம் எனக் காணப் பட்டவர்களுக்கு எவ்வாறான சிகிச்சை வழங்கப்படும்.

- சிலருக்கு பாதுகாப்புச் சத்திர சிகிச்சையான Prophylactic Surgery என்னும் சத்திர சிகிச்சை செய்யப்படும். அதாவது இந்த வகையான சத்திர சிகிச்சையில் சந்தேகத்திற்கிடமான இழையங்கள் அகற்றப்படும். மேலும் சிலருக்கு Bilateral prophylactic mastectomy (removal of healthy breasts) ஆரோக்கியமான மார்புகளே அகற்றப்படலாம்.
- மார்பு அல்லது கருப்பை புற்றுநோய் வராது இருக்க சிலருக்கு மருந்து மாத்திரைகள் கொடுக்கப்படும்.
- சிலருக்கு ஐந்து வருடங்களுக்கு tamoxifen கொடுக்கப்படும். இது மேற்கொண்டு புற்று நோய் வராமலோ அல்லது தடை செய்யவோ பாவிக்கப்படும்.
- மேலும் இவ்வாறு மார்பகங்கள் அகற்றப் பட்டவர்களுக்கு பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மூலம் போலி மார்பகங்கள் பொருத்தப்படும்.

இவ்வாறு பலவிதமான உதவிகளை அரசாங்கம் வழங்கிய போதிலும் இந்த மரபணு பரிசோதனை செய்து கொண்டு பரம்பரை அலகுகளில் புற்று நோய்க்கான அறிகுறி இருப்பதாக கண்டு கொண்டவர்கள் கூட சிலர் பின்னர் தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ளாது இருப்பதாக புள்ளி விபரக் கணக்கு கூறுகின்றது. அரசாங்கத்தின் பணத்தினையும் செலவழித்து கடைசியில் நோய்வாய்ப்பட்டு அல்லல் படுவோரும் இருக்கின்றார்கள்.

இதனால் நாம் அனைவரும் வருமுன் காப்போம்.

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

Driving School

ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி

General Driving School (Ministry of Transportation Approved Instructor)

பேரின்பநாதன் வேந்தன்
416-731-2829

Integrity
Respect
Compassion
Accountability
Excellence

# "IT'S TIME TO Talk

## You Are Invited to Attend
### Tough Transitions: Aging, Families and Eldercare

**Wednesday, February 9, 2011**
7:00 p.m. – 9:30 p.m.
General campus, Auditorium
3050 Lawrence Avenue East

**Moderator:** Pauline Chan, Health Reporter, CTV News
**Guest Speakers:** Moji Adurogbangba, TSH Ethicist; Debbie Driver, RN(EC), TSH Nurse Practitioner; Scott Wisner, MSW, and Carol Anne Stetina, MSW, TSH Social Workers

*It's Time to Talk* is a new, free community service offered by The Scarborough Hospital, where our physicians, staff and allied healthcare workers offer expert advice on how to have difficult conversations with your loved ones. The first in this speakers' series is "Tough Transitions: Aging, Families and Eldercare." Join moderator Pauline Chan and key members from The Scarborough Hospital team as they help you:

- Find resources available in the community
- Understand what a substitute decision maker is and why you must have one
- Plan your geriatric future
- Make eldercare plans

**PLEASE RSVP TODAY AT**
416.431.8130 or epolgar@tsh.to

**Visit us online at:**
www.tsh.to
www.twitter.com/ScarboroughHosp
www.facebook.com/ScarboroughHospital

The Scarborough Hospital

**Nanthini Singarajah, AMP**
**VERICO**
MORTGAGE AGENT
License #: M08005294
THE MORTGAGE PRACTICE INC.
Brokerage #: 11156

TMP
THE MORTGAGE PRACTICE

*"Quick and easy answer to your lending needs"*

Tel: (905) 787-2027
Fax: (866) 903-4664
Cell: (416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca

30 Via Renzo Drive,
Suite 200, Richmond Hill,
ON L4S 0B8
**(Leslie/Elgin Mills)**

**HO:** 2425 Matheson Blvd E.,
8th Floor,
Mississauga,
ON L4W 5K4.

**Other Services**
- Income Tax
  - Personal
  - Business
  - Corporate
- Life Insurance
- RRSP
- RESP

**Specialize In**
- Residential Mortgage
- 1st Mortgage
- 2nd Mortgage
- Refinancing
- HELO (home equity line of credit)

Services available all over Canada

Alphaweb 416-2387222

**RAPID SECURITY**
WE PROTECT YOU
"We'll Beat any Quote"

Indoor & Outdoor Guard for
Commercial
Residential
Retail
Healthcare
Finance Institution

S101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 **Office:** (416) 321-6777 **Tel:** (416) 841-1415

**New Midwest auto collision**
**"Quality & service First"**


- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

BENTLEY
TOYOTA
CHRYSLER
DODGE
BUICK
Ford
mazda
CHEVROLET
VOLVO
HYUNDAI
DAEWOO
MITSUBISHI MOTORS

**(416) 751-9280**
**260 Midwest Rd, Unit 8,**
**Scarborough, ON, M1P 3B4**
**newmidwestauto@gmail.com**



**Contact Person:**
**Ruban or Shan**



Alphaweb 416-238 7222

## கண்கள் உங்களுக்கு உலக அழகைக் காட்டுவது போல் பற்கள் உங்கள் அழகை உலகிற்குக் காட்டுகிறது.

# Markham NS Dental

*So much begins with smile*

New Patients and Emergencies always welcome

**Dr. Nalini Sutharsan DDS**

*Family and Cosmetic Dentistry*






- Prompt emergency treatment
- Evening & Weekend hours available
- Enhance your Smile
- Free consultation & advice
- Convenient location and plenty of parking
- All aspects of dentistry practiced - including Root canal, Dentures, Crowns & Bridges

MON - SAT 10:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 2:00 PM

9293 Hwy 48, Suite 4
Markham, ON. L6E 1A3

**905-472-4111**


OPEN 7 DAYS A WEEK

drnalini@markhamNSdental.com
www.markhamNSdental.com

*Care, Comfort, Convenience, Confidence......*

## வீடோ, வியாபாரமோ?

## விசயம் தெரிந்தவர்களை நாடுங்கள்



**Homelife/Future**
Realty inc. Brokerage
*Higher Standard Agents... Higher Results!*

## Vivek Subramaniam

Sales Representative

**Direct: 416 898 4846**

7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



**We Will**

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

VERICO TMP

**Siva Ratnasingam**

*Lic: M08002133*
*Brokerage # 11156*

SENIOR MORTGAGE CONSULTANT

*2005,2006,2007,2008 Diamond Award Winner*

**416.520.1214**



# R & S AUTO SALES

TOP QUALITY USED CAR DEALER

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**34 வருட அனுபவம்**

- We Sell Bank Repossed Cars
- Accident Vehicle Repair
- Computerized Painting
- Motor Vehicle Accident
- Traffic Tickets



HONDA
TOYOTA
GM-MINI VANS

தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

**Radha**

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**
5310 Finch Ave. East, Unit 38
Scarborough, ON M1S 1T6


**416-412-3838**
**416-836-5825**



# அழகிய பூஞ்செடிகள்

# ஓக்கிட்டு (Orchid)

வீட்டுத் தோட்டம் - 35



செல்லையா சந்திரசேகரி

### அறிமுகம்:

ஓக்கிடேசியே (Orchidaceae) பலஇன ஓக்கிட்டுகள் (Orchids) அடங்கிய குடும்பமாகும். இவை ஒருவித்திலைத் தாவரமாகும். அநேக ஓக்கிட்டுக்கள் தாவரவொட்டிகளாக இருப்பவை. வேர்த்தண்டுக் கிழங்கிலிருந்து வீக்கமான தண்டு காணப்படும். இதிலிருந்து வெளியான தடித்த வேர்கள் காற்றிலிருந்து ஈரலிப்பான கனிப்பொருள்களை உறிஞ்சி வாழ்வதால் நன்கு வளர்கின்றன. இலைகள் தனித்தும் தடித்தும் நீளமானவை, இது, பூக்கும் தாவரங்களின் பெரிய குடும்பங்களில் ஒன்றாகும். விக்ரோறியா காலங்களில் பணம் படைத்தவர் வளர்க்கும் அருமையான விலையுயர்ந்த தாவரமாகும். இன்று, நிலைமை மாறிவிட்டது. தற்போதைய உலகில், இரண்டாவதாக, யாவராலும் விரும்பத்தக்க தாவரமாக நிலைத்திருக்கின்றது. இத்தாவரத்தைப் பற்றி William Cattley (வில்லியம் கற்லெயி) உட்பட சில தாவரவியலாளர்கள் நன்கு கற்றறிந்த பின்னர், இனமானது 1824ல் John Lindley (யோன் லின்ட்லெய்)இனால் Cattleya (கற்லெயா) எனப் பெயர் சூடப்பட்டது. தாவரக்தைச் சாடியில் மாற்றிடு செய்து வளர்க்கும்போது அழகியதும் நன்கு வாசனையுடையதுமான பூக்கள் கிடைத்தமையால் வில்லியம் கற்லெயியுக்குப் பின்னர், இவரது பெயர் வழங்கப்பட்டது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியாலும், இனவிருத்தியின் வேறுபட்ட முறைகளாலும் இன்று ஏறக்குறைய 110,000 வேறுபட்ட கலப்பு இனங்கள் காணப்படுகின்றன.

### வளர்ப்பின் குறிக்கோள்:

வளர்ச்சியின் வெற்றிக்கு பிரதானமாகக் கவனிக்கவேண்டியது தாவரத்தை இரட்டிப்பாக இனவிருத்தி செய்வதே. அநேக ஓக்கிட்டுகள் தாவர ஒட்டிகளாக இருப்பதால் கரடுமுரடான பட்டைகள், அல்லது வேறுபட்ட பற்றிகள் போன்றவற்றை அனுசரணையாக்கிக் கொள்ளும். தாவரம், நன்கு நிலைத்து வாழ்வதற்கு நீங்கள் கவனிக்க வேண்டியவை பின்வருவனவாகும்.

- நேரடி சூரியவொளியைத் தவிர்த்து போதிய சூரியவொளி கிடைக்கும் இடம்.
- கூடிய ஈரப்பதன்.
- வேரைச்சுற்றி கீழ்ப்படியாத காற்றோட்டம் இருக்கக்கூடாது.
- கட்டுப்பாடான இடைவேளைகளில் காய்வு.
- 50 - 85 பாகை வெப்பம்.

வெப்ப காலங்களில் ஒக்கிட்டுகளை வளர்க்கும்போது மிகவும் கவனம் எடுக்கவேண்டும். வெப்பமும் ஈரப்பதனும் பிரச்சினையைத் தரக் கூடியவை. எமது ஒக்கிட்டை வீட்டிற்கு வெளியே எடுக்கும்போது நேரடிச் சூரியவொளியைக் கருத்தில் கொள்ளவேண்டும்.



பாதிப்பு ஏற்படும்போது இலைகளில் கருமை நிறப் புள்ளிகள் ஏற்படுவதை அவதானிக்கலாம். கூடிய நீர் அவ்வேளை தேவைப்படும். அதோடு சமமான கனிப்பொருள் சார்ந்த ஒக்கிட்டுப் பசளை அளிக்க வேண்டும். திரவ நிலையில் பசளை அளிப்பது மிகவும் நல்லது.

### செழிப்பாக வளர்வதற்கு சாடியில் மீளமாற்றுதல்:

தாவரத்தை ஈடுசெய்வதற்கு திரும்பவும் சாடியில் வேறாக்கி வளர்க்க வேண்டும். ஆனால் பூக்குகின்ற வேளைகளில் தாவரத்தை ஒருபோதும் மாற்றிக் கொள்ளக்கூடாது. பூக்கள் கருகிவிட்டதும் இறந்த பூக்களையும் தண்டுகளையும், ஏனைய காய்ந்த பகுதிகளையும் தூய்மையான வெட்டிகளால் கத்தரித்து அகற்றவேண்டும். பின்னர் தாவரத்துக்குரிய விசேடமான சட்டிகளில் ஒக்கிட்டு பசளையிட்டு தாவரத்தை நடவேண்டும். மேலதிகமான நீர் போவதற்கு சட்டிகளில் வசதியாக ஓட்டைகள் இருக்கவேண்டும். துண்டுகளான (charcoal) மரக்கரி, (Pine) பயின் மரப்பட்டைகள், (styroform) ஸ்ரைறோபோம் சேர்த்து சாடியை நிரப்ப வேண்டும். மீள்மாற்றும்போது, கவனிக்கவேண்டியவை:

- பிளாஸ்ரிக் சாடியிலிருந்து தாவரத்தைக் கவனமாக எடுத்து, மேலதிகமான பாசிப் போர்வையை அகற்றிவிடவும்.
- வெள்ளை நிறமாகவும் உறுதியாகவும் செழிப்பான வேர்கள் காணப்படும், இவற்றை அவதானிக்கவும்.
- காய்ந்ததும் கறுப்புநிறமான வேர்களை நீக்கவும்.
- ஒக்கிட் பசளையினால் நிரப்பப்பட்ட விசேடசாடியில் மாற்றீடு செய்யவும்.
- ஒக்கிட்டை உறுதியான நிலையில் பதிக்கவும்.
- விரைவாக வேர்கள் தோன்றி பசளையூடாக சாடியோடு சேர்ந்துவிடும்.

### பூக்கள்:

பூக்கள் காம்பிலி எனப்படும் பூந்துணரில் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும். பூவில், புல்லிகள் 3, அல்லிகள் போன்றவை. அல்லிகள் 3, அதில் இரண்டு சாதாரணமாகவும் ஒன்று உதடு போன்றதாகவும் அமைந்திருக்கும். கேசரங்கள் சூலகத்தோடு சேர்ந்து ஒரு கம்பமாக இருக்கின்றது. கேசரத்தோடு சேர்ந்து தம்பம் இணைந்து இதுவும் ஒரு கம்பமாக காட்சி தருகின்றது.

நவீன முறைகளாலும் விஞ்ஞான வளர்ச்சிகளாலும் ஒர்க்கிட்டுகளின் பூர்வீக தோன்றல் பற்றி 'இயற்கை விஞ்ஞானம்' 15-20 மில்லியன் ஆண்டுகளுக்கு மேலான விருத்தியினை எடுத்துக் காட்டுகின்றார்கள். தேனீயின் மூலம் அயல் மகரந்தச் சேர்க்கை எந்த அளவில் பல இனங்களைச் சேர்த்திருக்கின்றன. Cattleya எனும் இனம் 1824இல் பதிவு செய்யப்பட்டது. இங்கு, சில இனங்களைப் பார்ப்போம் C.labiata, C.purpurata, C.coccinea, C.bicolor, C.sincorana. சில அபூர்வமான ஒர்க்கிட்டு இனங்களும் இருக்கின்றன. 'The Jewels of the garden', உலகின் அதி பெரிதான ஒர்க்கிட்டு 'Tiger Orchid' ஆகும்.

### கண்காணிப்பு:

ஒக்கிட்பங்கசு, சாடியில் உபயோகிக்க வேண்டும். 10-5-14 (N P K ) கலவை சிறந்தது. Dyna-Gro கூட்டு இன்னொரு கலவை. நீரோடு சேர்ந்து கசியும் கலவை உகந்ததாகும். 20-10-20 கலவை சாதாரணமாகக் கிடைக்கக் கூடியது. நன்கு இலைகள் வைத்து பூக்கும் ஒக்கிட்டுகளுக்கு கட்டாயமாகத் தவறாது இத்தகைய கலவைகளை உபயோகித்து பயன் பெறவும். பூக்கள் காய்ந்த வேளைகளில் தாவரத்திற்கு சிறிது காலம் ஆறுதல் அவசியம். இந்தக் காலத்தில் இதனது தோற்றம் மந்தமாகவே இருக்கும். பொறுத்திருந்து மீள் தெளிவதை அவதானியுங்கள். நன்றாகப் பராமரிப்பவர், நன்றான வீட்டுக்காரர் என்பது பழமொழியாகும். தாவரத்தில் இடையிடையே பழுதான இலைகள் இருக்கும், களைந்து விடுங்கள். எறும்புகள், வெண்நிற ஈக்கள், ஏப்பிட்டுகள் போன்ற பூச்சிகளின் தாக்கம் காணப்படும், கவனித்து இவ்வேளைகளில் DDT, Nicotine, Pyrethrum powder, Parthion போன்றவற்றைத் தூவி கட்டுப்படுத்த வேண்டும்.

sekari.s@thaiveedu.com

■ ■ ■



Family Fabaceae

# திருக்கொன்றை

**(Botanical name: Cassia fistula, Eng.Name: Golden Shower Tree)**

கொன்றைமரம், குடும்பம் பேபேசியேயியைச் சேர்ந்தது. இம்மரங்களின் பூக்கள், அலங்காரத் திற்காகப் பயன்படுத்தப்படும். இது மிகவும் முக்கியம் வாய்ந்த ஓர் பூக்கும் தாவரமாகும். வெப்ப மண்டலம், குறைவான வெப்ப மண்டலம் போன்ற வலையங்களில் நன்கு வளர்பவை. தெற்காசியாப் பகுதியைச் சேர்ந்தமரம் பாக்கிஸ்தான் தெற்குப் பகுதியிலிருந்து இந்தியா ஊடாக பர்மா வரை, தெற்கே இலங்கைவரை காணப்படுகின்றது. இது நடுத்தர உயரமாக 10-20 மீ உயரம் வளரக்கூடியது. இந்தியாவின் கேரளா நாட்டின் மாநிலப் பூவாகவும் தைலாந்தின் தேசிய பூவாகவும் விளங்குகின்றது. அடித்தண்டு மேலாக, நேரானது. தண்டுகள் எல்லாம் உறுதியானவை. ஏனைய கிளைகள் பரவலாகக் காணப்படும். இலைகள் மாறுவிட்டமாகத் தோன்றும். சிறைப்பிரிப்பானவை. 3-8 சோடி வரை சிற்றிலைகளை உடையவை. பூக்கள் நீளமுள்ள துணிவளர் பூந்துணர்களில் உருவாகின்றன. பூக்கள் ஒழுங்கற்றவை. பூக்கள் ஐந்து மஞ்சள் நிற புல்லிகளையுடையவை. 6-8 கேசரங்கள் காணப்படும். கொன்றைப்பூவை சிவனின் பூசைகளுக்கு உரியதாகக் கருதுகின்றனர். சிவபெருமானை 'கொன்றைப் பூவைத் தலையில் சூடியவராக' வர்ணித்திருக்கின்றனர். பழம் அவரைமாகும். நச்சுக்களையுடைய வித்துக்கள் அடங்கிய பழம், நறுமணமற்றது. வித்துக்கள் 3-10 பஞ்சுபோன்ற சதையினுள் புதைக்கப் பட்டிருக்கும்.

நீர் வடியும் நிலம், சூரியவொளி கிடைக்கும் பகுதிகளில் நன்கு வளர்பவை. வரட்சி, உப்புத்தன்மை தாங்கக்கூடியது. உறைபனிக்காலம் தாங்கமாட்டா. இலைகளில் புள்ளிகள், வேர்நோய்கள், பூந்துணர்த் தாக்கம் பொதுவாகக் காணப்படும். இம்மரத்திலிருந்து வெட்டும் பலகைகள் வைரமானதும் பாவனைக்கு சிறந்ததாகவும் கருதப்படும். மரமானது மெக்சிக்கோவில் விறகுகளாகப் பயன்படுகின்றன. பட்டைகள் தோல் பதனிடும் முறைகளுக்கு பயன்படும். மரத்தின் தூள், சாயம் ஊட்டுவதற்கு உபயோகிக்கப்படும். பழத்தின் சதை பெங்கோல் நகரில் புகையிலையின் மணத்தை மெதுகூட்டுவதற்கு உபயோகிப்பர். வேர்கள் பல விதத்தில் மருத்துவ ரீதியில் பயன்படும்.

# விக்கிலீக்ஸ்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

உள்ளது. இவர்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றம் இவர் ஒரு பெண்ணின் அனுமதியுடன் பாலுறவு கொண்டிருந்தாலும், அவர் உடலுறவு கொள்ளும்போது ஆணுறை பாவித்த முறையில் பிழை இருக்கிறது என்பதுவே. இதுவரைக்கும் இவரின் தலைமையால் வெளியான திடுக்கிடும் தகவல்களுக்கும் இந்த பிடியாணைக்கும் சம்பந்தமே இல்லை. இவருடைய நடவடிக்கைகள் சட்டத்துக்கு புறம்பானது என்று நிரூபிக்க முடியாமல் உலக மகா சக்திகள் தடுமாறி நிற்கின்றன. இவர் வெளியிட்ட தகவல்களுக்கு எதிராக இவரை குற்றம் சாட்ட முடியாமல் இருப்பது அடுத்த அசத்தல். நவம்பர் 30, 2010இல் இன்ரபோல் தேடப்படு படுவர் பட்டியலில் இவரைச் சேர்த்துக்கொண்டது. wikileaksஇன் செயற்பாடுகளை முழுமையாக அடக்குவதே இந்த அரசியல் சார்ந்த குற்றச்சாட்டு என்ற Julian Assange அவர்களின் சட்டத்தரணி கூறுகின்றார். இவர் பிறந்த அவுஸ்திரேலிய நாட்டு அதிபரைப் பற்றி அமெரிக்க அதிகாரிகள் மிக மோசமான கருத்துக்களைக் கூறிய தகவல்கள் விக்கிலீக்சில் வெளிவர இப்போது ஆஸ்திரேலிய அதிபர் 'ஜுலியனை பிழை சொல்லுவது சரியாகாது. இப்படி பாதுகாப்பில்லாமல் முக்கிய தகவல்களைப் பாதுகாக்காத அமெரிக்காவில் தான் தவறு' என்று தன் முறைக்கு நாலு வசனம் சொல்லி மன ஆறுதல் தேடியிருக்கிறார். அமெரிக்க அரசின் அழுத்தத்தினால் Paypal, Master Card, Amazan போன்ற பெரிய இணையம் சார்ந்த நிறுவனங்கள் விக்கிலீக்ஸ் இற்கு உதவுவதை இடைநிறுத்திக்கொண்டார்கள். (இதனால் ஆத்திரம் அடைந்த internet hackerகள் டிசம்பர் எட்டாம் திகதி மூன்று மணி நேரத்துக்கு மேல் மாஸ்ரர் காட், விசா, பேபால் மற்றும் வேறு சில நிறுவனங்களின் இணையத்தளங்கள் இயங்க விடாமல் தாக்குதலை நடத்தினார்கள். இந்த தாக்குதல்கள் உலக வல்லரசுகளாகிய சீனா மற்றும் ரஷ்யாவில் இருக்கும் கணினிகளிலிருந்துதான் அதிகமாக வந்ததாகக் கூறி இது வல்லரசுகளுக்கு இடையேயான போட்டியின் பிரதிபலிப்பு என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள்.

அமெரிக்க அரசு, இந்த அதி முக்கிய ரகசிய ஆவணங்கள் வெளிவந்தால் அமெரிக்க மக்களின் உயிருக்கு ஆபத்து வரலாம் என்று இது ஒரு சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடு என்று மிக கடுமையாக எல்லா வழிகளிலும் விகிலீக்ஸ்ஐ அடக்க முயற்சிக்கிறது. ஆனாலும் இவர்கள் அடங்குவதாக இல்லை ஆப்கானிஸ்தான் இந்தியா, இலங்கை என்று ஒவ்வொரு நாட்டின் மீதும் அமெரிக்கா கொண்டிருந்த உண்மையான அபிப்பிராயங்களை கொண்ட embassy cables மூலமாக வண்டவாளங்களை தண்டவாளம் ஏற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

விகிலீக்ஸ் கடுமையான முறைகளில் அடக்கப்பட்டால் தங்களிடம் இருக்கும் பல லட்ச கணக்கான ஆவணங்களை ஏற்கனவே ஒரு லட்சம் பேருக்கு Encrippted Filesஆக அனுப்பி உள்ளதாகவும் தன்னிடம் இருக்கும் Decription மென்பொருள் கடைசி நிமிடத்தில் இவர்களுக்கு கொடுக்கப்பட்டு முழு ஆவணங்களும் ஒரே அடியாக வெளியாகும் என்று இன்னும் ஒரு அதிர்ச்சி தகவலை கூறி இருகிறார் ஜுலியன்.

ஒரு காலத்தில் ஓட்டுக்கேட்டல், ஒற்றர்கள் மூலம் பல திடுக்கிடும் செய்திகளை உலகுக்கு தந்த செய்தி ஊடகம், எதிர்காலத்தில் தங்களுக்கு கிடைக்கும் செய்திகளின் உண்மை தன்மையை உறுதிப்படுத்த பத்திரிகையாளர்களே Hackerகள் ஆகவேண்டிய அவசியம் அதிகமாகி வருகின்றது.

சரி, எப்படி விக்கிலீக்ஸ் இற்கு இவ்வளவு தகவல்கள் கிடைக்கின்றன? எல்லாம் உள் வீட்டு வேலையும் வெளியில் இருந்து Hacking முறை மூலம் கிடைக்கபட்ட தகவல்களுமே.

"இதுவெல்லாம் பெரிய இடத்து விஷயம் இதை ஜாலியா பார்த்துகிட்டு இருப்போம். நமக்கென வந்தது" என்று நினைத்தால் நான் கூறப்போவதையும் ஒருதரம் கவனமாக வாசியுங்கள்.

அமெரிக்க அரசாங்கம் தனது அரச திணைக்களங்களுடனும், தூதரகங்களுடனும் தொடர்புகளை மிக பாதுகாப்பானதான, தனியான SIPR Net என்ற இன்டர்நெட் போன்ற வலை அமைப்புக்குள் பாவிக்கின்றது. (இது 'sipdis' - secret Internet Protocol Distribution என்றும் அழைக்கப்படும்.) பல தேசங்களில் வாழும் மூன்று மில்லியன்களுக்கும் அதிகமான அமெரிக்க ராணுவ வீரர்களும் இந்த வலை அமைப்பையே பாவிக்கின்றனர். இந்த வலை அமைப்புக்குள் சாதாரண இணைய வலை அமைப்பு பாவனையாளர்கள் உட்புக முடியாது. அமெரிக்க அரசாங்கத்தின் மிக அதி உயர் பாதுகாப்பு தகவல்களும் இந்த வலை அமைப்பு மூலமாகவே பகிர்ந்து கொள்ளப் படுகின்றது. இந்த மிக பாதுகாப்பான வலை அமைப்பையே ஊடுருவி (Hacking) தகவல்களை கொத்து கொத்தாக திருடிக்கொண்டு போய் விகிலீக்ஸ்க்கு பத்திரக்கோவைகளை வழங்கி இருக்கிறார்கள் அதனுடன் சம்பந்தப் பட்ட தன்னார்வ கணினி Hackerகள்.

இப்படி பல கோடி டொலர்கள் பாவித்து முழுமையான பாதுகாப்புடன் இருக்கும் என்று நமப்படும் SIPRNet இக்கே இந்த கதி என்றால் சில நூறு டொலர்கள் மட்டுமே பெறுமதியான Domestic Security Defence Grade உள்ள D-link அல்லது Linksys Routers வைத்துக் கொண்டிருக்கும் மருத்துவர்கள், சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள் போன்றோரின் அலுவலக கணினிகளில் இருக்கும் பத்திரக் கோவைகளை திருடிக்கொண்டு போக எவ்வளவு நேரம் எடுக்கும்? ரஜனி ஸ்டைலில் பதில் சொல்லவேண்டும் என்றால் "இதுவெலாம் ஜுஜுபி"

உலக ரகசியங்களை மிக பாதுகாப்பான கணினிகளில் இருந்து எடுத்துவரும் Wikileaks நமக்கு சொல்லும் பாடம் என்ன?

நமது எல்லாத் தகவல்களும் கணினிகளில் சேமிக்கப்படுகின்றன. அநேகமான கணினிகள் இணையத்துக்கு ஏதோ ஒரு வழியில் இணைக்கப்படுகின்றன. ஆகவே உங்கள் கணினியில் இருக்கும் தரவுகள் எவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறது என்பது மிக பெரிய கேள்வியாக நீங்கள் உங்களையே கேட்டுக்கொள்ள வேண்டும்.

எந்த வகையில் உங்கள் கணினியில் இருக்கும் தகவல்கள் களவாடப்படலாம் அல்லது உங்கள் கணினி ஆவணங்கள் இல்லாமல் போகலாம். 85 வீதமான Data Theft உள்வீட்டு வேலையினால் தான் நடக்கிறது. (USB, IPHONE, MP3 Players, CD/DVD Writers, தனிப்பட்ட ஈமெயில் பாவனை மூலமாகவும்) மிகுதி வெளியில் இருந்து உங்கள் கணினி வலை அமைப்பில் இருக்கும் பாதுகாப்பு அமைப்புக்களின் பலகீனங்களைப் பாவித்து ஊடுருவல் மூலமாகவும் இத்திருட்டு நடைபெறுகிறது.

இந்தக் கட்டுரையை வாசிக்கும் எத்தனை பேருக்கு தங்களுடைய கணினிகளில் என்ன என்ன மென்பொருட்கள் பதிவாகி இருக்கின்றன என்று தெரியும்? பொதுவாக இளைஞர்களும், சிறுவர்களும், கணினி விளையாட்டு, பொழுதுபோக்கு இணையதளங்கள், பாலியல் பக்கங்கள் பார்க்க பாவிக்கப்படும் கணினிகள் என்றால், அந்த கணினிகள் ஏற்கனவே பல வழிகளில் இணையத்தளத்தில் திறந்து விடப் பட்டிருக்கின்றன என்பது திண்ணம்.

பின்வரும் அடிப்படையான கேள்விகள் உங்கள் கணினி அல்லது உங்கள் அலவலக வலை அமைப்பின் பாதுகாப்பை ஓரளவுக்கு உறுதிப்படுத்த உதவும் என்று நம்புகின்றோம்.

- உங்கள் கணினிகளில் மிக அண்மையில் வெளிவந்த உங்கள் Operating System இற்கு உரிய Updateகள் பாவிக்கப்படுள்ளதா?
- உங்கள் அலுவலக கணினிகள் உங்கள் அலுவலகத்தை சேராத வேறு யாருக்கும் பாவிக்க சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டதா?
- உங்கள் அலுவலகத்தின் ஈமெயில், இணையத்தள தகவல்களை கொண்ட முக்கியமான கணினி எங்கே யார் பாதுகாப்பில் உள்ளது?
- யார் யாருக்கு Administrator Level passwords தெரிந்திருக்கிறது?
- Remote/VPN முறை மூலம் யாருக்கு உங்கள் கணினிகளை பாவிக்கும் அனுமதி இருக்கிறது?
- அலுவலக கணினிகளில் இருக்கும் ஆவணங்கள்/பத்திரக்கோவைகள் யார் யாருக்கு எந்த பகுதிகள் மட்டும் பாவிக்க அனுமதி உண்டு? (Accounting/legalDocuments/ Contacts/Customer information/Personal Information/Photos, Videos/Family matters)
- கணினிகளில் அலுவலக பாவனைக்குத் தேவை இல்லாத/ அனுமதிக்கபடாத மென் பொருட்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டிருக்கின்றனவா? (உங்கள் வர்த்தக போட்டியாளர்கள் Remote Control / Key logger போன்ற உங்களுக்கு தெரியாமேலேயே உங்கள் கணினி வேலைகளையும் தகவல்களையும் வெளியில் இருந்து குறிப்பிட்ட நிமிடங்களுக்கு ஒருமுறை பெற்றுக்கொள்ள உதவும் மென்பொருட்கள்)
- கணினியில் இருக்க வேண்டிய Users/ Groupகளின் தன்மையையும் பெயர்களையும் வருடத்துக்கு எத்தனை தடவைகள் உறுதிப்படுத்தி கொள்கிறீர்கள்?
- உங்களிடம் இருக்கும் இணையத்துடன் தொடர்பு படுத்தும் உபகரணங்களுக்கு சரியான பாதுகாப்பு முறைகள் அமல்படுத்த பட்டுள்ளதா?
- Wireless வசதிகள் செய்யப்படிருந்தால், கட்டாயம் இந்த வசதி தேவையா? தவிர்க்க முடியாத அவசியமாக இருந்தால் எந்த வகையான authentication முறை மூலம் கணினிகள் இதனுடன் தொடர்புகொள்கின்றன? SSID Broatcasing அவசியமானதா என்பதனை தீர்மானியுங்கள்.
- உங்கள் பத்திரக் கோவைகள், ஈமெயில்கள், Wireless பாவனையில் எந்த வகையான Encryption தொழில் நுட்பத்தை பாவிக்கின்றீர்கள்?
- How much your system is Fool Proof ?
- தனிப்பட்ட அல்லது அலுவலக கையடக்க (Notebooks) கணினிகள் அல்லது Smart Phoneகளில் இருக்கும் தகவல்கள் பற்றிய பாதுகாப்பு நடவடிக்கை எந்த அளவுக்கு உங்களுக்கு தெரியும்?

பாதுகாப்பை உறுதிப்பட்டுகொள்ள வேறு மென் பொருட்கள் இருந்தாலும் மேற்கூறிய பாதுகாப்பு முறைகளை உறுதிப்படுத்திக்கொண்டால் குறிப்பிட்ட அளவுக்கு உங்கள் கணினி அமைப்புக்களை பாதுகாக்க முடியும்.

கணினி மயப்படுத்தப்பட்ட எங்கள் அன்றாட வாழ்வுடன் ஒன்று சேர்ந்திருக்கும் இணைய வலை அமைப்பு.

உங்கள் கணினியில் இருக்கும் பத்திரங்கள் பத்திரம்.

வருமுன் காப்போம்!

jiffry@thaiveedu.com

■ ■ ■

# வீட்டு மதிப்பீடும்...

7ம் பக்கத் தொடர்ச்சி...

பாளர்கள் அதிஸ்டசாலிகள் தான். இது பற்றிய விழிப்புணர்வு எம்மவர் மத்தியில் ஏற்படத் தொடங்கி விட்டது என்றாலும் விகிதாசார அடிப்படையில் நோக்கினால் தமக்கே எல்லாம் தெரியும் என்ற மனப்பாங்கும், எதையும் கண்டு கொள்ளாத அசமந்தப் போக்கும், காலம் கடந்து ஞானம் பெற்றுத் தவிக்கும் தன்மையும் "ஊசி போகும் இடம் பார்ப்பார், உலக்கை போகும் இடம் பாரார்" என்ற பழக்கமும் கொண்டோர்தான் அதிகமாகக் காணப்படுகிறார்கள். மறுவார்த்தைகளில் கூறுவதானால் எமது உரிமைகளை விட்டுக்கொடுப்பதன் மூலம், கட்டட அமைப்பாளர்களை மேலும் செல்வந்தர்களாக்குவதற்கு நாம் உடந்தையாகவே இருக்கின்றோம்.

## வீடு விற்பனை செய்வோர்களுக்கான பரிசோதனை:

ஒரு வீட்டினை விற்கமுன்னர் அந்த வீட்டில் காணப்படக்கூடிய குறைபாடுகளை முன்கூட்டியே திருத்திக்கொண்டால் வீட்டைக் கூடிய விலைக்கு விற்கவும், கூடிய விரைவாக விற்கவும் வசதியாக இருக்கும். வினைத்திறன் கொண்ட திறமை மிக்க வீடுரிமையாளர்கள் வீட்டை விற்பதற்காக, வீடு விற்பனை முகவர்களிடம் கையளிக்க முன்னர் ஒரு வீட்டுப் பரிசோதகரை அழைத்து அவரின் அறிவுறுத்தல்களுக்கு அமையத் திருத்தவேலைகளைச் செய்த பின்னர் வீட்டைச் சந்தைப் படுத்துவது சாலச் சிறந்தது.

## வீட்டுப்பராமரிப்பு:

வாங்கிய வீட்டின் பெறுமதி குறையாது இருக்கவும் அதன் பெறுமதியை பன்மடங்கு அதிகரிக்கச் செய்யவும் முறையான வீட்டுப் பராமரிப்பு மிக அவசியமானது. வீட்டுப் பரிசோதனை செய்யப்படும் போதே வீட்டுப் பராமரிப்புப் பற்றிய சுருக்கமான தகவல்களை அந்த வீட்டுப் பரிசோதகர்களிடம் கேட்டு அறிந்து கொள்வது நன்மை பயக்கும்.

இவை மட்டுமன்றி வீட்டில் இருக்கக்கூடிய பிரச்சினைகளான அதிகமான குளிர், நீராவி படிதல், பூஞ்சணம் உருவாகுதல், தண்ணீர்க் கசிவு போன்றவற்றை கண்டறியவும் முறையான வீட்டுப் பராமரிப்புப் பற்றி அறிந்து கொள்ளவும் தனியான வீட்டுப் பரிசோதனைகள் செய்யப்படலாம்.

எது எப்படி இருப்பினும் வீட்டுப்பரிசோதனை என்பது ஒரு சிறு தொகையைச் செலவு செய்து பலமடங்கு நன்மையைப் பெறவைக்கும் ஒரு முக்கியமான செயற்பாடு என்பதை எவருமே மறுக்கமுடியாது.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■




கேளுங்கோ கேளுங்கோ

ஆனந்தமான அனுபவம் ! தகவல்களின் சுரங்கம்

இசையும் ஆழ்ந்த அறிவும் தமிழின் பலமே!

கலசம்

www.KALASAM.com

தமிழின் சுவைகூறும் இணையத்தள ஒலிபரப்பு

# MORTGAGE

- *1st & 2nd Mortgages*
- *New Immigrants / Self Employed*
- *Refinance*
- *Equity Line of Credit*
- *Renewal*
- *All other Financial Arrangement*

**Kethes Sivasubramaniyam**

Mortgage Agent - (Lic # M08006105)

**Cell : 416.873.5780**

Via Financial Services Inc. (Lic # 10669)



5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

Tel : 416-548-8005 Fax : 416-548-8006

Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7

## வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice




**KETVAR**

**TAX & ACCOUNTING**

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-873-5780 / 416-548-8005**
Email : ketvar@gmail.com



HOMELIFE Higher Standards


எமது வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள், உறவினர்கள்
அனைவருக்கும் எமது உளம் கனிந்த
புதுவருட தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்

**மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...**

**Ravi. Paramu**

Broker

**Direct: 416-262-4176**



**HomeLife Today Realty Ltd., Brokerage***

31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

# வாடகை வீடு




கரு கந்தையா

- வீடு விற்பனைப் முகவர் -


சென்ற இதழில் வாடகைப்பணம் கிடைக்காமல் இருப்பதைத் தவிர்க்க வாடகைக்கு விடும் போதே என்னென்ன முன்னேற்பாடான விடயங்களைச் செய்திருக்க வேண்டும் என்பதைக் கவனித்தோம். நாம் எவ்வளவு கெட்டித்தனமாகக் காரியம் ஆற்றினாலும் வாடகை விடயத்தில் எம்மையும் ஏமாற்றக்கூடிய விற்பன்னர்கள் (experts) இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் எப்படி எல்லாம் வாடகை தராமல் எமக்கு தண்ணி காட்டுவார்களென்று நடந்த சில சம்பவங்களை வைத்துப் பார்ப்போமே.

## சம்பவம் - 1

இரண்டு சிறு பிள்ளைகளுடன் வாடகைக்கு ஒரு வீட்டில் குடியேறியது ஒரு குடும்பம். முதல் + கடைசி மாத வாடகையைச் செலுத்தி விட்டனர். 2ம் மாதம் வாடகையை 1ம் திகதி தர சிரமமாக இருக்கிறது என்று வீட்டுச் சொந்தக்காரனிடம் சொல்லி 1 வாரம் சுணக்கிக் கொடுத்தனர். 3ம் மாத வாடகையையும் 2 வாரம் சுணக்கியது. 4ம் மாத வாடகையை 1 மாதம் சுணக்கியது. வீட்டுச் சொந்தக்காரனும் இளகிய மனசுடன் ஏற்றுக்கொண்டார். 5ம் மாத வாடகை 2 மாதம் சுணங்கியது. 6ம் மாதம் வாடகை கிடைக்கவே இல்லை. வீட்டுச் சொந்தக்காரன் அதே விட்டில் கீழ்ப்பகுதியில் வசித்துவந்தார் என்றாலும் அவரால் அந்த வாடகையை பெறுவதில் மிகுந்த சிரமமிருந்தது. இரண்டு வேலைக்குப் போய்வரும் அவரால் அவர்களைச் சந்தித்து வாடகையை பெறமுடியவில்லை. வீட்டில் குடியிருப்பவர்களிடம் ஒரு பெரிய தடியன் வந்து போவான். அதனால், கேட்கப்பயம் வேறு. இந்த நிலையில் என்னை அணுகி ஆலோசனைக்கு வந்தார். அவர்களை வீட்டால் எழுப்பி அனுப்ப அதன்பின் 3 மாதம் சென்றது. மொத்தத்தில் 5 மாதம் வாடகைப் பணம் அம்போ!

இவர் 2ம் மாதம் வாடகை சுணங்கிக்கிடைக்கும் போதே எச்சரிக்கையாக நடந்து கொண்டிருந்தால் இந்த அளவுக்கு நட்டப்பட்டிருக்கத் தேவையில்லை.

## தீர்வு:

உங்கள் வாடகைப்பணம் குறித்த திகதியில் கிடைக்காமல் போனால் உடனேயே நீங்கள் அதைக்குறிப்பிட்டு Notice to End a Tenancy Early for Non-payment of Rent (Form N4) வாடகைக்கு இருப்பவரிடம் கொடுக்கலாம். 14 நாட்களுக்குள் அந்தப்பணத்தை அவர் கட்டாத பட்சத்தில் அவர் வெளியேற வேண்டும் என்பதை அறிவிப்பதே அதன் நோக்கம்.

வாடகையை அந்த 14 நாட்களுக்குள் கட்டாமல், வெளியேறாமலும் இருந்தால் Rental Tribunal Boardக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். அதன்பிரகாரம் அவர்கள் உங்களுக்குத் தரவேண்டிய நிலுவை வாடகைப்பணத்தைத் தரவேண்டும். தராத பட்சத்தில் குறிப்பிட்ட திகதிக்குள் வெளியேறவேண்டும்.

வாடகைப்பணம் அடிக்கடி சுணங்கியே கிடைக்கும் வாடிக்கை இருந்தால் (Form N8) Notice to Terminate a Tenancey at the end of Term ஆரம்பத்தில் ஒப்புக்கொண்ட காலத்துடன் வெளியேறுமாறு நீங்கள் அறிவித்தல் கொடுக்கலாம். ஒப்பந்தகாலம் முடிவதற்கு 60 நாட்களுக்கு முன்னரே (மாத வாடகைக்காரர்) அறிவித்தல் கொடுத்தாக வேண்டும்.

சில வீட்டுச் சொந்தகக்காரர்கள், வாடகைக்கு இருப்பவர்கள் ஒழுங்காக 1ம் திகதியே வாடகையைக் கட்டும் பட்சத்தில் வாடகையில் ஒரு சிறு தொகை கழிவு (discount) கொடுக்கும் உத்தியைக் கையாள்கிறார்கள். அந்தக்கழிவைப் பெறுவதற்காக அவர்களும் நேரம் தவறாமல் வாடகையைச் செலுத்திவிடுகிறார்கள்.




## சிறு திருத்த வேலைகளுக்கும் அடிக்கடி அழைத்துத் தொந்தரவு செய்தால்:

வாடகைக்கு இருப்பவர்களுக்கு அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். முக்கியமாணவை: வீட்டினுள்ளே உஷ்ணம் (heating), தண்ணீர் (water).

Heatingஐப் பொருத்தவரையில் Toronto வதிவிடங்களில் குறைந்தது $21^{o}C$ ($70^{o}F$) ஆகவாவது இருக்க வேண்டும் - ஒவ்வொரு வருடமும் Sept 15இலிருந்து June 1ம் திகதி வரை இது அவசியம்.

இந்த அளவுக்கு அங்கு heating இல்லாவிட்டால் வாடகைக்கு இருப்பவர் நகரசபை (Municipality)க்கு முறைப்பாடு செய்து வெற்றி பெற வாய்ப்புண்டு. யன்னல்களை திறந்து வைத்திருந்தால் அல்லது குறைந்த அளவுக்கு Thermostatஐ set பண்ணி வைத்திருந்தால் அந்த வெற்றி கை கூடாது.

அத்தியாவசியமான திருத்த வேலைகளை அறிவித்திருந்தும் வீட்டுக்காரன் செய்துதரச் சுணங்கினால் அதை எழுத்து மூலம் திகதியும் இட்டு வீட்டுக்காரன் கையில் கொடுத்து, பிரதியை (copy) வாடகைக்கு இருப்பவர் தான் வைத்துக்கொண்டால், பின்னால் ஒரு பிரச்சினை வரும் போது அந்த பிரதி அவர்களுக்கு உதவும்.

வாடகைக்கு இருப்பபவர்கள் திருத்த வேலை செய்து தரும்படி தொந்தரவு செய்யாமல் இருப்பதற்காக வாடகை ஒப்பந்தம் (Lease agreement) எழுதும் போதே அதை எழுத்தில் போட்டுக்கொள்ளலாம் - அதாவது வாடகைக்கு இருப்பவர்களது கவனக்குறைவு (Negligence) காரணமாக திருத்தவேலை ஏற்பட்டு இருந்தால் அவர்களே அந்தத்திருத்த வேலைக்கு பொறுப்பு என்று அந்த ஒப்பந்தத்தில் போட்டு எழுதிக்கொள்வது நல்லது. இதைவிட திருத்த வேலைகள் ஏதும் இருந்தால் முதல் 50 தொடக்கம் 100 டொலர் வரை வாடகைக்கு இருப்பவர் பொறுப்பு. மீதியே சொந்தக்காரனின் பொறுப்பு என எழுதிக் கொள்வதும் நல்லது.

ஆனால் பெரிய திருத்த வேலைகள் ஏற்பட்டால் (repair – Furnace/Air condition unit, மின் உபகரணங்கள்) அது வீட்டுச் சொந்தக்காரரே திருத்திக் கொடுக்க வேண்டும் என்பதையும் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

## வீடு ஒரு முதலீடா?

வசிப்பதற்கு ஒரு இடம் வேண்டும். அது வாடகையா அல்லது சொந்தமா என்ற கேள்வி எழும்போது அவை இரண்டிலும் உள்ள நன்மை தீமைகள் தெரிந்திருக்க வேண்டியது நியாயமாகிறது.

வாடகை வீடு, சொந்தவீடு இவையிரண்டிலுமே நன்மைகளும் தீமைகளும் பொதிந்து கிடக்கின்றன. இவற்றை ஆராய்ந்து இந்தத் தருணத்தில் எது உங்களுக்கு உகந்ததென முடிவெடுப்பதிலேயே உங்கள் புத்திசாலித்தனம் தங்கியுள்ளது.

## சொந்தமாக வீடு வாங்குவதில் உள்ள நன்மைகள்:

- சொந்த வீடொன்றுக்கு mortgage கட்டிவரும்போது அங்கே ஒரு சேமிப்பு உறுதிப் படுத்தப்படுகிறது. காரணம் ஒவ்வொரு முறை நீங்கள் கட்டும் பணத்தில் ஒரு பகுதி நீங்கள் பட்ட கடனை அடைக்கச் செல்கிறது. நாளாக கடன் குறைந்து வருவதால் சேமிப்பு உயர்கிறது.
- இதைவிட சொந்தவீடு உங்களைக் கட்டாய செமிப்பை செய்ய வற்புறுத்துகிறது.
- உங்களது நம்பகத்தன்மை (Credit Profile) அதிகரிக்கிறது, அதாவது தனியான ஒரு கடன் தேவைப்பட்டால் அதை வங்கி தருவதற்கு இது உதவுகிறது.
- வீட்டின் விலையுயர்வு (Appreciation) உங்களை பணவீக்கத்தை (Inflation) வெல்ல உதவுகிறது.
- சொந்தவீடெனில் வீரும்பியபடி வீட்டை அழகுபடுத்த, அல்ல தேவைக்கேற்றபடி மாற்றி அமைக்க முடிகின்றது.

வாடகைவீட்டிற்கு செலவு செய்து மாற்றியமைப்பது, அழகுபடுத்துவது நடக்கும் காரியமல்ல. அது வீணான செலவும்கூட சொந்த வீடெனும்போது அந்தச் சுற்றாடலில் ஓர் அக்கறை ஏற்படும். அயலவருடன் ஒரு நெருக்கமும், ஈடுபாடும் ஏற்படும். அந்தச் சமூகத்தில் நீங்களும் ஒரு அக்கறையுள்ள பங்காளியாகுவீர்கள்.

இன்னுமொரு முக்கியமான விடையம் நீங்கள் வசிக்கும் வீட்டின் விலை உயரும்போது ஏற்படும் லாபத்துக்கு வருமான வரி கட்டத் தேவையில்லை.

மற்றைய முதலீடுகளுடன் ஒப்பிடும் போது, வீட்டில் முதலிடுவதால் ஏற்படும் லாபமானது நெம்புகோல் தத்துவத்தில் பெருகிக்கிடைக்கிறது. உதாரணமாக 50 ஆயிரம் முதலீடு செய்து பங்குச் சந்தையில் பங்குகளை வாங்கியவருக்கு 10% இலாபம் கிடைக்கிறது என வைப்போம். ஆக அவருக்கு 5 ஆயிரம் இலாபம் கிடைக்கிறது. இதே பணத்தை 400 ஆயிரம் பெறுமதியான வீடு வாங்க முதலிடுகிறார் என வைப்போம். இப்போ 400 ஆயிரம் பெறுமதியான வீடு அதே 10% இலாபத்தை ஈட்டனால் 40 ஆயிரம் இலாபம் கிடைக்கிறது. இதுவே நெம்புகோல் தத்துவ இலாபம்.

தேவைப்படும் போது வீட்டிலுள்ள சொத்தைக் காட்டி கடன்பெறமுடியும். அல்லது நீங்கள் ஓய்வு பெற விரும்பும்போது Reverse mortgage செய்து மாதமாதம் பணம் பெற்று உங்கள் ஒய்வுகாலத்தை பணக்கஸ்டம் இல்லாமல் கழிக்கமுடிகிறது.

## வாடகைக்கு இருப்பதிலுள்ள நன்மைகள்:

- முதலீடு (Downpayment) தேவையில்லை.
- வீடுகள் விலையிறங்கும் தருணத்தில் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.
- வாடகைக்கு இருக்கும்போது மீதப்படுத்தும் பணத்தை விரும்பியபடி முதலிடலாம் (ஆனால் தற்சமயம் இதற்கு வாய்ப்பில்லை காரணம் குறைந்த வட்டி வீதம் உங்கள் mortgageக்குக் கட்டும் வட்டிப்பணம் வாடகையிலும் பார்க்க மிகக்குறைவு).
- Mortgage வட்டிவீதம் ஏறிக் கொண்டு போனாலும் நீங்கள் கவலைப்படத் தேவை இல்லை.
- அடிக்கடி வசிப்பிடம் மாறுபவர்களுக்கு உகந்தது.
- உங்களுடைய Credit rating சரியில்லை எனில் வேறு வழியில்லை.
- உங்களுடைய குடும்பத்தின் அளவு விரைவில் மாறும் சாத்தியமிருந்தால்...?
- வீட்டுத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் பொருப்படுத்தத் தேவையில்லை.

இதுபோன்ற பல பிரச்சினைகளை இரு பகுதியினரும் அனுபவித்தாலும், இவ்வாறான பிரச்சினைகளை எவ்வாறு கையாளலாம் என்பதைப்பற்றி அல்லது இவ்வாறான பிரச்சினைகள் வராமல் எவ்வாறு தடுக்கலாம் அல்லது தவிர்க்கலாம் என்பதைப்பற்றி தொடரும் பகுதிகளில் பார்ப்போம். அதேவேளை வாசகர்களாகிய நீங்களும் பல பிரச்சினைகளைச் சந்தித்திருப்பீர்கள். அவற்றையும் எமக்குத் தெரியப்படுத்தும் பட்சத்தில் இப்பகுதியில் உங்கள் கேள்விகளுக்கான எங்கள் பதில்களாக இடம்பெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். நீங்கள் உங்கள் கேள்விகளை எமக்கு 416 849 0594 என்னும் தொலைநகல் இலக்கத்திற்கு அல்லது karu.kandiah@thaiveedu.com என்னும் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

karu.kandiah@thaiveedu.com

■ ■ ■


**Tutoring**

**Grade 1-7: English, Math, Science & Social studies. Grade 8- 11: English & Math**

**ஜீவா**

B.A (Hons), M.Sc, Ph.D

**(Kennedy & Ellesmere அருகாமையில்)**

**(647) 291 1357**


வீடு வாங்கவும், விற்கவும்.......
$685,000
Salem/Williamson
4 Bedrooms, 5 Washrooms
Over 3500 Sq.Ft, $97,000 Upgrades
$229,900
Brimley/Ellesmere
1+1 Bedrooms, 1 Washroom
Close To All Amenities
$229,900
Mississauga
2+1 Bedrooms, 2 Washrooms
Newly Renovated Nicely Finished
$709,900
14th/9th Line/407
4+1 Bedrooms, 4 Washrooms
Over 120K Upgraded
$599,900
King / Younge
5 Bedrooms, 4 Washrooms
2901 Sqft Luxury Home
$386,900
Park Lawn/Lake Shore
2 Bedrooms, 2 Washrooms
Newer Bldg Steps To Lake!
$349,900
Brimley / Lawrence
3+1 Bedrooms, 2 Washrooms
Close To All Amenities
கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அனுபவமும், பொறுமையும் உள்ள வாகன பயிற்சியாளராகவும், வீடு விற்பனை பிரதிநிதியாகவும் கடமையாற்றுகின்றேன்.
PONNIAH (JOE) BALA
Sales Representative
www.ponniahbala.com
Dir: 416-617-9370
REDCARPET.
Royal Realty Ltd.,
Bus: 416.284.5555
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON.


HomeLife Future Realty
7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8
Office: 905-201-9977
Fax: 905-201-9229
HOMELIFE
HIGHER STANDARDS
Gold Award Winner
2010
To all of my Clients,
Without your support I would not have been able to receive this recognition. I would like to thank you very much for your continuing support.
Lokan Sundaram
Real Estate/Mortgage Broker
416-450-3984
lokan.homelife@gmail.com
Lic #: M08000182
Happy
New Year!!

# உங்களுக்கான வீட்டை வாங்குவது எப்படி?

**'How to buy your Home' என்னும் 'OREA'வினால் வெளியிடப்பட்ட நூலினை மூலமாகக்கொண்டு வாசகர்களின் நன்மை கருதித் தொகுக்கப்பட்ட தொடர் இது.**

எஸ்.கே. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -



## சொந்தமாக வீடு வாங்குவதா, இல்லையா?

### நீங்கள் வாங்கும் வீட்டின் பரப்பளவு எவ்வளவாக இருக்க வேண்டும்.

உங்களுடைய நிதி நிலைமையைப் பார்த்து உங்களால் எந்த அளவு வீடு உங்களுக்கு கட்டுபடியாகும் என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். அதன் பிறகு உங்கள் தகுதிக்கேற்ற விலையில் உங்களின் வீட்டைத் தெரிவுசெய்ய வேண்டும்.

வீடு வாங்கும் அநேகருக்கு வங்கி அல்லது ஒரு நிதி கொடுப்பனவு நிறுவனத்தின் உதவியின்றி வீடு வாங்க முடியாது. எனவே எங்களில் பலருக்கு வீடு வாங்குவது என்பது எங்கள் சேமிப்புடன் விசேட கடனாகப் பெறும் ஈட்டுத் தொகை (Mortgage) யையும் உள்ள டக்கியதாகும். வீடு வாங்குவதற்காகக் கடன் படுவது ஏற்றுக்கொள்ளப்படுவது மட்டுமல்லாமல் விரும்பத்தகுந்ததும் ஆகும். வீட்டில் முதலீடு செய்யும் பணம், ஓர் நல்ல முதலீடாகும் என்பதை அனைவரும் அறிவார்கள்.

ஆரம்பத்தில் வீட்டிற்கான முற்பணமும் சட்ட வல்லுணர் கட்டணமும், வரியும் செலுத்த வேண்டியிருக்கும்.

அத்துடன் உங்கள் Mortgage பணத்தை திருப்பி செலுத்துவதும், வீட்டுக்குத் தேவையான, மின், நீர் வாயு, வரி ஆகியவற்றைச் செலுத்துவதும் ஆகும். உங்களால் திருப்பிச் செலுத்தக்கூடிய தொகையை வைத்தே உங்களுக்கு வழங்கும் அடமானக் கடன் தொகையை நிர்ணயிப்பார்கள்.

### Mortgage:

வீடு வாங்குபவருக்கும், வீடு வாங்குவதற்கு பணம் கொடுப்பவருக்கும் இடையில் செய்யப் படும் ஒப்பந்தம் இதுவாகும். நீங்கள் வாங்கும் வீடு உங்களுக்கு கடன் கொடுப்பவருக்கு ஈடாக வைக்கப்படும்.

### கட்ட வேண்டிய தொகை:

வீட்டின் பெறுமதி விலையில் இருந்து நீங்கள் கட்டிய முற்பணத்தை கழித்தால் கிடைக்கும் தொகை நீங்கள் திருப்பிச் செலுத்தும் Mortgage பணத்தின் பெரும் பகுதி நீங்கள் கட்டவேண்டிய தொகையில் இருந்து கழிக்கப் படும், மற்றப் பகுதி உங்கள் கடன் தொகைக்கு வட்டியாகக் கழிக்கப்படும். உ+ம் நீங்கள் கட்டவேண்டிய தொகை (Mortgage).

| | |
|---|---|
| Amount | $120,000 |
| கட்டிய முற்பணம் | $ 30,000 |
| செலுத்த வேண்டிய தொகை | $ 90.000 |

### கட்டுத் தொகை:

வீட்டின் விற்கும் விலைக்கும் உங்களுக்குக் கிடைக்கும் கடன் தொகைக்கும் இடைப்பட்ட தொகையே கட்டுப் பணம் ஆகும். இத்தொகையை நீங்கள் பணமாகவோ வேறு விதமாகவோ செலுத்தியிருப்பீர்கள்.

### வட்டி (Interest):

நீங்கள் வீடு வாங்குவதற்கு பெற்ற கடன் தொகைக்கு நீங்கள் கட்டும் வட்டிப் பணம். அதாவது நீங்கள் கடன் பெற்றவருக்கு கடன் திருப்பிக் கொடுக்கும் போது செலுத்தும் மேலதிகப் பணம்.

### Mortgage Payments:

நீங்கள் மாதாந்தம் திருப்பிச் செலுத்த வேண்டிய ஒரு தொகைப் பணம். இதில் முதலில் ஒருபகுதியும் வட்டியும் அடங்கும்.

### வரிகள் (Taxes):

நகர சபைக்குரிய சொத்து வரி, இது தனியாகவோ கட்டவேண்டிய Mortgage பணத்துடனோ சேர்க்கப்பட்டிருக்கும்.

### தீ காப்புறுதி (Fire Insurance):

அடைமானமாக வைக்கப்பட்ட வீட்டின் பெறுமதிக்கு ஒரு தீ காப்புறுதி (Fire Insurance) செய்யும்படி கடன் கொடுப்பவர் வீட்டின் சொந்தக்காரரை நிற்பந்திப்பார். இது கொடுக்கப்பட்ட பணத்தின் பாதுகாப்புக்காக செய்யப்படுவதாகும் 20%இற்குக் குறைவாக கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருந்தால் கடன் வாங்கியவர் மேலதிகமாக காப்புறுதிக்குரிய தவணைப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

### வீட்டைப் பராமரிக்கும் செலவு:

தொடர் மாடிக் கட்டிட உரிமையாளர்கள் (Condominium) மாதாந்தம் தங்கள் கட்டிடம் மற்றும் நில பராமரிப்புக்காக ஒரு குறிப்பிட்ட பணத் தொகையைக் கட்டுகிறார்கள், வீட்டுக்குக் கடன் கொடுப்பவர்கள் இத்தொகையை உங்களுக்கு அறிவிப்பார்கள். இத்தொகையை மாதாமாதம் உங்களால் கட்டமுடியுமா என்பதை அறிந்து கொள்ளவே அவர்கள் அப்படி செய்கிறார்கள்.

### கடன் பெற தகுதி உள்ளவர்களை எப்படி தெரிவு செய்கிறார்கள்:

உங்களுடைய Credite and Ratingஐ நீங்கள் அறிந்திருப்பது நல்லது. கடன் கொடுக்கும் நிறுவனம் உங்களிடம் ஓர் விண்ணப்பத்தை பெற்றுக் கொள்வார்கள். கடன் வாங்குபவர்களுடைய வருவாயைப் பொறுத்தே அவர்கள் கடன் கொடுப்பார்கள்.

உங்களுடைய அத்தியாவசிய செலவு உங்கள் மொத்த வருவாயின் 30% மேல் இருக்கக்கூடாது. உங்களுடைய குடும்ப வருவாய் என்பது GROSS DBT SERVICE (GDS) வீதம் கடன் கொடுப்பவர்களில் சிலர் GDSன் 35% வரை கொடுப்பதுண்டு. ஒரு தம்பதிகளின் மொத்த மாத வருமானம் $5000. இவர்களுக்கு 30 வீதப்படி மாதம் $1500 டொலருக்கு மேல் செலுத்த முடியாது. இன்னொரு வாடிக்கையாளரின் (Gross) மாதச் சம்பளம் $7200 டொலர். இந்த நபரைப் பொறுத்தளவில் $2160 டொலர் மாதாந்தம் செலுத்தக்-கூடிய வல்லமை உள்ளவர் ($7200×30%=$ 2160).

கடன் கொடுப்பவர்கள் இன்னொரு விதமாகவும் மோட்கேஜ்க்கு தகுதி பெறச் செய்கின்றனர்.

**அலகு - 2**

இந்த முறையை மொத்தக் கடன் சேவை (TDS) என அழைப்பர். கடன் கொடுப்பவர்கள் உங்களுடைய GDS மற்றும் TDS விகிதாசாரத்தை கவனிப்பார். இந்த இரண்டில் எது குறைவானதோ அந்தக் தொகையையே ஒரு வாடிக்கையாளத் தம்பதிகளின் மொத்த மாதா வருமானம் $4,500 டொலரானால், மாதம் $350 டொலர் இரண்டு வாகனங்களுக்காக கடன் செலுத்துகிறார்.

GDS முறையில் தங்கள் மாத வருமானத்தில் $1350 டொலரை Housing Costs ஆக செலுத்தலாம். ($4,500 x 30% = $1,350) இதே வாடிக்கையாளர் TDS முறையில் $1,450 டொலர் மாதம் Housing costs ஆக செலுத்தலாம். ($4,500 x 40% = $ 1,800, $350 = $1,450) Housing costsக்கான உங்க தொகையை நீங்கள் அறிந்தபிறகு. அதில் இருந்து உங்கள் மாதாந்த சொத்து வரியை கழித்து, மிகுதித் தொகையே உங்களின் மோட்கேஜ்க்கு நீங்கள் செலுத்தும் தொகையாகும்.

எனவே $1,350 டொலர் Housing Costs ஆக இருந்தால். $150 மாதாந்த சொத்து வரியாக இருந்தால் $1,350 டொலரில் இருந்து $150 டொலரை கழித்து வரும் $1,200 டொலர் மட்டுமே அவர்கள் மாதாந்த மோட்கேஜ் தொகையாகக் கட்டவேண்டி வரும்.

(தொடரும்)…

skbales@thaiveedu.com

■ ■ ■

Tution Classes
(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)
தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help).
இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.
1 to 1 or Group classes
905-554-2496, 416-522-3314


$119,900
Condo for Sale
1950 Kennedy Rd
Kennedy & Ellesmere
2 Bedrooms Condo Apartment



Canadian Home Appraisals Inc.
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S_K_Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

MY PROFESSIONAL DESIGNATIONS:
CRA (Canadian Residential Appraiser)
Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
Car: ( Certified Appraisal Reviewer)
Designation with Canadian National Association of Real Estate Appraisers.
MVA( Market Value Appraiser-Residential
Designation with The Canadian Real Estate Association
FRI (Fellow of the Real Estate Institute)
Designation with Real Estate Institute of Canada
CRES ( Certified Real Estate Specialist)
Designation with Real Estate Institute of Canada
RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21
Affiliate Realty Inc.



S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member


வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
RE/MAX
SOLD
Eglinton/Midland
$199,000
Condo Apt, Bed rooms 2+1 Washrooms 2, Approx 1075 Sq Ft, Great Layout Living/Dining Area, 2 Large Bedrooms 2 Parking Spaces
Markham/ Ellesmere
$319,000
Detached Bungalow Bed rooms 3+2, . Washrooms 2, . Bright And Beautiful Solid Brick Bungalow, New Roof Just Installed(Oct 2010). Furnace 3
Tenth Line & Hoover Park
$335,000
Townhouse 2 Storey Bed rooms 3, Washroom 3, Brand New 3 Bedroom Home Boasts 2 Car Parking, Modern Kitchen Features Brand
Bur Oak / Stonebridge
$359,000
Townhouse 2 storey , Bed rooms 3 Washrooms 3, Very Good School Boundary, Single Garage, Direct Access To House, Sta.Steel Appli-
9th Line And 14th
$419,500
Townhouse 2 storey, Bedrooms 3, Washrooms 3, Beautiful Arista Built End Unit Townhome, Close To Transit,Schools,Parks,
East Of 10th Line
$429,900
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3, Hardwood Flooring. Gas Fireplace With Upgraded, Close To Schools And Public Transit.
16th Ave / Markham By Pass
$445,000
Detached 2 Story, Bed rooms 3 Washromss 3, Bright & Spacious Floor Plan With Lots Of Quality Upgrades, Oak Staircase
Tenth Line/Forsyth Farms Rd
$464,900
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,Hardwood On Main & Staircase, Upgraded Ceramics Thru-Out Oak Cabinets,
Mccowan & Elson
$465,000
Link 2 Story, Bed rooms 4+2, Washrooms 4, Double Car Garage,New Floors, New Shingles, Finish Basement Close To Super Market
Middlefield/Denison
$469,800
Link 2 story, Bed rooms 4+2 Washrooms 4, Approx. 2050 Sq.Ft. No Separate Entrance To Basement, Close To Masjid, Church, Grocery
9th Line/14 Th Ave
$489,950
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3, 4 Year Old, Many Upgrades, Hardwood Floors On Main Floor, Gas Fireplace
Morningside/Lawrence
$499,000
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3, Only 5 Years Old!, Large Open Space In The Basement Large Kitchen
14th Ave & 9th Line
$509,000
Detached 2 Story, Bedrooms 3+1, Washrooms 5, Recently Updated With Marble Countertops, Close To Schools, Transit, Shopping, Parks
Staines/Finch
$549,900
Detached 2 Story, Bedrooms 4+2 Washrooms 4, Lovely Private & Quiet 5 Yr New Laurier Home, Newly Renovated Bsmt, Appears Brand New
Major Mackenzie/Mccowan
$595,000
Detached 2 Story, Bedrooms 4+2, Washroom 4, All Brick,Hardwood Floor On Main Floor,Lot Of Spot Lights And Lot Of Upgrades.
Main / 9th
$599,900
Detached 2 Story, Bedrooms 5, Washroom 4, Large Home Offers Over 3100 Sq.Ft Owner Has Spent Over 75K On Upgrades And Renova-
14th Ave/9th Line
$629,000
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 Double-Door At Main Entrance, Main Floor 9' Ceiling With Hardwood Floor.
14th Ave & 9th Line
$689,900
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4, 9-Ft Smooth Ceilings,Upgraded Kit-S/S Appliances,All Bdrms-Ensuites, Steps To All Amenities
Kennedy Rd/14th Ave
$1,350,000
Detached 2 Story Bed rooms 4+1, Washrooms 4, Approx. 3600 Sq. Ft.Stone Counter Tops, Finished Basement
Bovaird / Ashby Field
$389,000
Detached 2 Storey, Bed rooms 3, Washrooms 3, All Brick House Less Than 4 Yrs .Double Car Garage.Main Floor Family Room.
Audley/Taunton
$335,000
Townhouse 2 storey,. Bed rooms 3, Washrooms 3, Just 4 Years Old,Thousands In Upgrades! *Hardwood Floors *Hardwood Staircase
Sales of Business
$299,000
Restaurant Sales of Business with out property Newly Renovated
Sales of Business
$1.15million
Restaurant with a banquet hall property in Toronto for sale (Business with property
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'

# மருத்துவக் கேள்வி - பதில்



இராஜசேகர் ஆத்தியப்பன்

**டாக்டர், மாதவிடாய் இடைக்கிடை வராமல் இருக்கின்றது. இயற்கையாக இதற்கென்ன தீர்வு. எனது உடல் பருமனும் கூடிக்கொன்டு செல்கிறது.**

சந்திர கலா.

நல்ல முள்ளங்கிகளை வாங்கிக் கொள்ளுங்கள். பூண்டு, கறிவேப்பிலை, மிளகு, இஞ்சி, சீரகம், சின்ன வெங்காயம், உப்பு இவைகளை சேர்த்து சூப் வைத்து ஐந்து நாட்கள் தினமும் பருகி வந்தால், வராத மாதவிடாய் வந்துவிடும். இதனை வாரத்தில் இரண்டு நாட்கள் தவறாமல் குடித்து வந்தால் குறை யாத உடல் குறைந்துவிடும். கொலேஸ்ரோல் குறையும். இரத்தம் சுத்தமாகும். என்ன, முள்ளங்கி வாங்க புறப்பட்டு விட்டீர்களா?

**என்னபிரச்சினை என்று எனக்கு சொல்லத் தெரியவில்லை. ஆனால் அடிவயிற்றில் என்னவோ செய்கின்றது.**

அபிஷாக்.

சோற்றுக் கற்றாழை (aloevera) கடையில் விற்கின்றார்கள். வாங்கி தினமும் சாப்பிடுங்கள். பெண்களின் அடிவயிற்றில் இப்படி ஏற்படும் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிட்டும் உடல் மெலியும். மூலம் குணமாகும். தோல் வனப்புடன் மினிரும். வலி தீரும். முடி உதிருதல் குறையும். கண்களில் ஒளி உண்டாகும்.

**டாக்டர், இதய நோய்க்கான பல மருந்துகளை எடுத்து வருகின்றேன். இன்னும் பிரச்சினை அதிகமாகிக் கொண்டுதான் இருக்கின்றது. குறைந்த பாடில்லை. என்னசெய்யலாம்.**

எதிராஜ்.

கார்டியோ டிரான்ஸ்பர் என்ற மருந்து நன்கு வேலை செய்கின்றது Hawthorn, மருதம்பட்டை போன்றவை நல்ல பலனைத் தரும். பூனாவில், மையோ டிரொப்ஸ் என்ற மருந்தைக் கொடுக்கின்றார்கள். இதுவும் நல்ல பலனைத் தருகின்றது. சென்னையில் oxy med என்ற நிறுவனம் சிறந்த சிகிச்சை தருகின்றது. மற்றப்படி இதற்கான நேரடி ஆலோசனை மிகவும் அவசியம். இதில் மனது சம்பத்தப்பட்ட விடயங்களும் அடங்கியுள்ளது.

**நாற்பது வயதுக்கு மேல் எந்தவகையான உணவு ஏற்றது.**

அஷரப்.

பழங்கள் தான் எல்லா வயதினருக்கும் ஏற்றது. நீர் சுருக்கி, மோர் பெருக்கி, நெய் உருக்கி சாப்பட வேண்டும். என்று நமது முன்னோர் சொல்லியிருக்கின்றார்கள். அதாவது சுடுநீரைப் பருகி, தயிரில் நன்றாக நீர்விட்டுக் கரைத்தும். நெய்யை சூடுபடுத்தியும் சாப்பிட வேண்டும்.

**டாக்டர், ஆண்மை நீடிக்க மூலிகை மருந்து சொல்லுங்களேன்.**

தவராஜா சின்னமணி.

முருங்கைக் கீரையை 40 நாட்கள் நெய் விட்டு, வெங்காயம் போட்டு, பொரியல் செய்து நண்பகலில் உணவில் சாப்பிட ஆண்மை பெருகும். விந்து கெட்டிப்படும். உடலுறவில் இன்பம் பெறுவார்கள். புளியைக் குறைக்க வேண்டும் தவிர்க்க வேண்டும். பெண்களுக்கு வரும் சூதகவலிக்கு முருங்கை இலைச்சாறு பிழிந்து 30 மில்லி இருவேளை குடிக்க குணமாகும். அடிவயிற்றில் வலியும், மற்றும் விலக்கு தள்ளிப் போவதால் ஏற்படும் வலியும் குணமாகும்.

இலையை அடிக்கடி வறுத்துச் சாப்பிட பித்த மயக்கம், மலச்சிக்கல், கண்நோய், கபம், மந்தம் தீரும். கீரையில் சுவையான கீரையும் சத்தான கீரையும் இதுதான். இலையை ஆமணக்கெண்ணையில் வதக்கி ஒத்தடம் கொடுக்க வாத மூட்டு வலி, இடுப்பு வலி, உஷ்ணத்தால் வரும் வயிற்று வலி நீங்கும். முருங்கை இலை, தூதுவளை, பசளி, அரைக் கீரை ஒன்று சேர்த்து வெங்காயம் போட்டு வதக்கி சாப்பிட்டு வர தாது பலப்படும். ஆண்மைக் குறைவு தீரும். புளியை உணவில் நீக்க வேண்டும். எலுமிச்சம்பழச் சாறு சாப்பிடுதல் கூடாது விந்தை நீர்த்துப்போக வைக்கும்.

இதன் இலைச் சாற்றைப் பிழிந்து பத்து மி.லி. நாளும் இருவேளை பாலில் கலந்து கொடுக்க சிறுவர்களின் உடல் ஊட்டம் பெறும். சிறந்த ஊட்ட மருந்து இதுவே. உடல் தளர்ச்சி அடைந்தாலோ, உடல் வலி இருந்தாலோ முருங்கை இலை ஈர்க்குகளை மட்டும் போட்டு மிளகு ரசம் வைத்துச் சாப்பிட்டால் உடல் வலி, தளர்ச்சி குணமாகும். பூவைப் பருப்புடன் சமைத்துச் சாப்பிட்டால் பித்த வெப்பம் அகலும்.



கண் எரிச்சல், நா கசப்பு, நீர் ஊறுதல் தீரும். பூவைப் பாலில் போட்டு இரவு காச்சிக் குடித்தால் ஆண்மை மிகும், போகம் நீடிக்கும். தாதுபுஷ்டி லேகியம் தேவையில்லை.

முருங்கைப்பிஞ்சை சமைத்துச் சாப்பிட்டால் தாது நட்டத்தால் ஏற்படும் சுரம் தீரும் எலும்புருக்கி, சயம், சளி ஆகிய நோய்வாய்ப்பட்டவர்களுக்கு இது சிறந்த ஊட்டம் தரும். முருங்கைப்பட்டைத் தூள் 10 கிராம், சுக்கு, மிளகு, சீரகம் ஆகியவற்றின் பொடி 2 கிராம் போட்டு வெந்நீரில் காய்ச்சி மூன்று வேளையும் 30 மி.லி. அளவு கொடுக்க குடற்புண், இருமல், கபம் தீரும். முருங்கைப் பட்டையும் வெண் கடுகையும் அரைத்துப் பற்றுப் போட வாதவலி தீரும் வீக்கம் குறையும். இதன் பிசினையுலர்த்திப் பொடி செய்து அரை தேக்கரண்டி பாலில் காலை, மாலை குடிக்க தாது பலம் உண்டாகும். மிகுதியாகச் சிறுநீர் கழித்தல் தீரும் உடல்வனப்பு உண்டாகும்.

**கண்கள் பராமரிப்பில் - அழகுக் குறிப்புடன் உங்கள் மருத்துவ ஆலோசனையும் சொன்னால் என் போன்றோருக்கு பிரயோசனமாக இருக்கும்.**

- ஷோபனா வால்டன்.

“கண்களின் வார்த்தைகள் புரியாதா” என்று சொல்வதில் இருந்தே – கண்கள் மூலமாக நிரம்ப பேசலாம் என்பது தெரியவருகின்றது. நமது உணர்ச்சிகளை வெளிகாட்டும் முக்கிய உறுப்பாக இருக்கும் கண்களை பராமரிப்பது என்பது மிகவும் கவனமாக செய்யவேண்டிய ஒன்று. கண்களை சுற்றி இருக்கும் தோல் மிகவும் மென்மையானது. எந்த இரசாயனத்தையும் உபயோகிக்கும் முன் அது தரமானதா என்று பரிசோதித்துவிட்டு கண்களுக்கு போடுவது மிகவும் அவசியம். கண்கள் என்றதும் கருவளையம்தான் பலருக்கு பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

கண்களைச் சுற்றி கரு வளையம் ஏற்பட பல காரணங்கள் இருந்தாலும், அவற்றில் சரியான தூக்கம் இல்லாததே முழு முதற்காரணம் என்று சொல்லலாம். நல்ல தூக்கம் மிகவும் அவசியம். பகல் தூக்கத்தை விட இரவு தூக்கம் மிகவும் முக்கியம். இரவு தூக்கம் என்பது தொடர்ச்சியாக 8 மணி நேரமாவது இருக்குமாறு உங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளுங்கள். கருவளையம் போக்குவதற்கு இயற்கை மருத்துவத்தில் தயிர் பரிந்துரைக்கப்படுகிறது. தயிர், கஸ்தூரி மஞ்சள், தூய சந்தனம் கலந்து தினமும் கண்ணுக்கு அடியில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவினால் கண்ணின் கருவளையம் நீங்கும். உருளைக்கிழங்கின் சாறும் நல்ல பலன் தரும். உருளைக்கிழங்கை கண்ணிற்கு மட்டுமல்ல முகத்திற்கு தடவினாலும் கருமை நீங்கி சருமம் வெளுப்பாகும். பன்னீரை பஞ்சில் தோய்த்து இரவு படுக்கும் முன் கண்ணில் வைத்துக் கொண்டால் நாளடைவில் கருமை நீங்கி கண்கள் பளிச்சென்று இருக்கும். அதே போல் தரமான Under Eye க்ரீம்களும் நல்ல பலனை தரும். வயதானால் வரக்கூடிய கரு வளையத்திற்கும் இப்போது தரமான க்ரீம்கள் மார்க்கெட்டில் இருக்கின்றன. பிரபலமான பிராண்டுகளில் இருக்கும் க்ரீம்களாக வாங்குவது நல்லது. தரக்கட்டுப்பாடு, பரிசோதனை என்று எல்லா கட்டங்களையும் தாண்டி வருவதால் கெடுதல் விளைவிக்க வாய்ப்பில்லை.

பேஷியல் (Facial) செய்யும்போது கண்களை சுற்றி உள்ள தசைகளை மெதுவாக மசாஜ் செய்து விடுங்கள். வட்ட வடிவத்தில் மசாஜ் செய்ய வேண்டும். குளிப்பதற்கு முன்பு, சிறிது ஒலிவ் ஒயில் அல்லது பேபி ஒயில் அல்லது விளக்கெண்ணெய் கொண்டு கண்களை சுற்றி மெதுவாக மசாஜ் செய்தால் கண்களுக்கு புத்துணர்ச்சியாக இருக்கும். இப்படி செய்வதால் கண்களின் சோர்வு மற்றும் கருவளையம் நாளடைவில் மறையும். கண்களின் சோர்வு நீங்க மற்றுமொரு அருமையான இயற்கை மருந்து வெள்ளரிக்காய். இதன் சாற்றை கண்களை சுற்றி தடவி வந்தால் கண்களுக்கு குளிர்ச்சியும், புத்துணர்ச்சியும் கிடைக்கும். குமரிக் கற்றாழைப் பசை (Aloe Vera) கண்ணின் கருவளையத்திற்கு மிகவும் சிறந்த மருந்தாகும். அலோவேரா (Aloe Vera) சூரியனால் ஏற்பட்ட கருமைக்கும் தீப்புண்ணிற்கும் கூட சிக்கிச்சையளிக்க பயன்படுகிறது. தொடர்ந்து கண்ணாடி அணிவதால் ஏற்படும் கருப்பான சருமத்திற்கும் அலோவேரா (Aloe Vera) மற்றும் உருளைக்கிழங்கு நல்ல பலனை அளிக்கும்.

கண் புருவம், இமை இவைகள் அழகாக இருந்தால்தான் கண்களும் எடுப்பாக அழகாக இருக்கும். கண் புருவத்தை Threading அல்லது Waxing மூலம் Shape செய்து கொள்வது நமது கண்ணை கவர்ச்சியாக தெரிய வைக்கும். புருவத்தில் குறைந்த முடியே இருந்தாலும் லேசாக த்ரெட்டிங் செய்யும்போது நல்ல எடுப்பாக இருக்கும். கூடிய மட்டும் புருவத்திற்கு பென்சில் உபயோகிப்பதை தவிருங்கள். அது மாலைநேர பார்ட்டி மேக்கப் மற்றும் விசேடங்களுக்கு மட்டுமே நன்றாக இருக்கும். போட்டோக்களிலும் அழகாக தெரியும். ஆனால் மற்ற நேரங்களில் அது முகத்திற்கு ஒரு செயற்கையான தோற்றத்தை உருவாக்கும்.

கண் இமைகளை பொறுத்த வரை அதிக முடி மற்றும் மேல் நோக்கிய இமை முடிகள் அழகான தோற்றத்தை அளிக்கும். கண் இமைகள் குறைவாக இருப்பின் அதன் அடர்த்தியை அதிகப்படுத்திக் காட்டும் மஸ்காராக்களை உபயோகிக்கலாம். செயற்கை கண் இமை களை ஒட்டும்போது அது தரமானதா, அதற்கு உபயோகப்படும் Glue தரமானதா என்று பார்த்து வாங்குங்கள். இப்போதைய பேஷன் கண் இமைகளின் மேல் கறுப்பு Eye Liner கொண்டு வரைந்து முனைகளை பழங்கால ஸ்டைலில் சிறிது மேல் நோக்கி வளைத்து விடுவதுதான். Eye Liner போட்டு கீழேயும் மை போடுவது எல்லோருக்கும் எடுப்பாக இருக்காது. கண்ணின் கீழே அதிக சுருக்கம் இருக்கிறது என்று நினைப்பவர்கள் Eye Liner கீழ் இமையில் பென்சிலும் உபயோகித்தால் சுருக்கங்கள் தெரியாது. Eye Shade முக நிறத்திலேயோ, பிரவுன் நிறத்திலேயோ போடுவது இப்போதைய Latest Trendஜ ஷேடோவில் மூஸ், க்ரீம், ஜெல், பவுடர் என்ற பல வகைகளில் உள்ளது. அவரவர் சருமத்திற்கு தகுந்த நிறத்தை காஸ்மெட்டிக் கடையினர்ன் உதவியுடன் தேர்ந்தெடுங்கள். சிறிதாக இருக்கும் கண்களையும் மஸ்காரா, Eye Liner மூலம் கவர்ச்சியாக எடுப்பாகக் காட்ட முடியும்.

கண்களுக்கு உபயோகப்படுத்தும் Cosmetics உதாரணமாக மஸ்காரா, காஜல் பென்சில், Eye Liner போன்றவற்றை 6 மாதத்திற்கு ஒரு முறை புதிதாக வாங்குவது அவசியம். இல்லாவிட்டால் பழைய காஸ்மெட்டிக்ஸ் கண்களை பாதிக்கும். இரவு உறங்கும் முன் கண் Make Up முழுதுமாக நீக்க வேண்டும். கண் மேக்கப்பை நீக்கவென்றே Eye Make up Remover என்று கடைகளில் கிடைக்கின்றது. பேபி ஒயில் கொண்டும் கண் மேக்கப்பை நீக்கலாம். தினமும் உறங்க செல்லும் முன் முகத்தை கழுவி விட்டு செல்வது கண்களுக்கு மட்டு மல்ல முகத்திற்கும் நல்லது. அவ்வாறு இரவில் முகம் கழுவிவிட்டு படுப்பதால் கண்ணில் வரும் கட்டிகள் போன்ற பிரச்சினைகள் அறவே அண்டாது. கண்களை அழுத்தித் தேய்ப்பது, தூசு விழுந்தால் கசக்குவது போன்றவற்றை தவிர்த்து கண்களை தண்ணீர் கொண்டு கழுவுவது நல்லது. இப்படி சில அடிப்படை விஷயங்களை ஒழுங்காக கடைபிடித்தோமென்றால் நமது கண்கள் அழகாக, பளிச்சென்று இருக்கும்.

**பி.கு: மேற்கூறிய குறிப்புக்களை வைத்தியரின் ஆலேசனையுடன் பின்பற்றுவதே சிறந்தது.**

rajasekar.a@thaiveedu.com

▪ ▪ ▪

உங்கள் விழாக்களின் நிழல்ப் படங்களைப் பார்ப்பதற்கு

www.ninaivukal.com



# கேரளா ஆயுர்வேதா

1269 warden Avenue - (Manhattan)

www.ayurvetha.com/ayurvetha@gmail.com



| | |
|---|---|
| குடியை மறக்க | - மதுக்கொல்லி மருந்து |
| மூலநோய்க்கு | - மூலாமிர்தம் |
| ஈரல் நோய்க்கு | - கரிசாலைக் கற்பம் |
| தோல் நோய்க்கு | - அமிர்த சஞ்சீவி |
| சொரியாசிஸ் | - ஏகம் (இயல்பு) |
| எக்சிமா | - ஏதம் (பொன்மேனி) |
| வெண்புள்ளி | - பால் சஞ்சீவி |
| உடல் மெலிய | - மாமிசமுருக்கி |
| வாய்வுத் தொல்லைக்கு | - 8 PM |
| சர்க்கரை நோய்க்கு | - GT - மதுமேகம் |
| சலரோகம் & இரத்த அழுத்தம் | - அகஸ்திய மூலிகை |
| மீண்டும் வாலிபத்திற்கு | - ஷீலா |
| மன்மத இரவுக்கு | - நீலம் |
| உறுப்புவளர | - கோரேக்கர் |
| சிறுநீரகக் கல் | - Cystone |
| வியர்வை நாற்றத்திற்கு | - சந்தன் |
| முடி உதிர்வதற்கு | - செம்பருத்தி |
| முடிவளர | - மயிர்வளம் எண்ணெய் |
| புற்றுநோய்க்கு | - Success |
| முதுகு வலி-கை கால் வலி | - அர்தோ-ஷால்லக்கி |
| ஆஸ்துமா-அலர்ஜி | - பிராங்கோ |

**Dr. Rajasekar Athiappan. M.D.,**

**Tel: 416-995-0416 / Fax: 416-946-1638**

# நம்பிக்கை மதிப்பெண்



செந்தூரன் புனிதவேல்
காப்புறுதி முகவர் -

நம்பிக்கை மதிப்பெண் (Credit Score) ஒருவருடைய நம்பகத்தன்மையையும் நாணயத்தையும் சுட்டிக்காட்டும் எண் என்றால் தவறாகாது. இந்த எண்ணைக்கொண்டு கடன் கொடுக்கும் நிறுவனம் ஒருவருக்கு கடன் கொடுப்பதா? இல்லையா? என்பதனை நிர்னயிக்கும். உதாரணமாக வாகனக் கடன், வீட்டுக்கடன் மேலும் கனடாவில் வழங்கப்படும் கடனட்டைகள் உட்பட மற்றைய கடன்கள் இந்த எண் நன்றாக இருந்தால் மட்டுமே கடன் கொடுக்கும். அன்மைக்காலங்களில் காப்புறுதி அமைப்புகளும் தமது கட்டணத்தை நிர்னயிப்பதில் இந்த நம்பிக்கை மதிப்பெண்ணை பயன்படுத்துகிறார்கள். இதுபற்றி ‘தாய்வீடு’ பத்திரிகையில் நான் விளக்கமாக முன்பே எழுதியுள்ளேன்.

இக்கட்டுரையில் இப்படி எமது வாழ்க்கையில் பல கோணங்களில் பாதிப்பை தரும் நம்பிக்கைச்சுட்டெண்ணை நிர்ணயிற்பதற்கான ஐந்து முக்கிய காரணிகளை கவணிப்போம்.

## நம்பிக்கையின் அடிப்படை:

உங்கள் நம்பிக்கை மதிப்பெண், உங்களுடைய தனிப்பட்ட நிதி நிலைமை ஸ்திரமாக இருக்கின்றதா எனத் தெரிவிப்பதுடன் அதனை பெறுப்புடன் கையாள்கிறீர்களா என்பதனையும் தெளிவுபடுத்தும். இந்த எண் 300 முதல் 850 வரை கூடிக்குறைவதுடன், எவ்வளவுக்கு அதிகமாக உள்ளதோ அவ்வளவு சிறந்தது என தெரிவுபடுத்தும். இதனை பல நிதி நிறுவனங்கள் நிர்னயிப்பதுடன் அவ்வொன்கள் சிறு வேறுபாடுகளுடன் பெரிதும் ஒத்திருக்கும். இங்கு இதை நிர்னயிக்கும் ஐந்து பெரும் காரணிகளை கவனிப்போம்.

## 35 வீதத்தை நிர்ணகிக்கும் கடந்த கால கடன் சரித்திரம்:

இதுவே மிக முக்கிய காரணியாக கருதப்படும். ஔவைப்பாட்டி சொன்னதுபோல் “பாத்திரம் அறிந்து பிச்சை இடு”. அதாவது, கடன்கொடு என்று அறிவுறுத்தும் ‘குட்டக்குட்ட குனிபவன்போல்’ கட்டாமல் விடவிடக் கடன் கொடுப்பவன் மடையன் தானே? இந்த கடந்த கால சரித்திரத்தை நான்கு முக்கிய தகவல்கள் கொண்டு நிர்ணயிப்பார்கள்.

- உங்களுடைய கட்டனங்களை உரிய காலத்தில் தொடர்ச்சியாக கட்டியுள்ளீர்களா என்பது முக்கியம். காலம் கடந்து கட்டணங்களை செலுத்துவதால் உங்கள் நம்பகத்தன்மையை பெரிதும் குறைக்கும்.
- பிந்திக் கட்டினீர்கள் என்றால் எவ்வளவு பிந்திக் கட்டினீர்கள் என்று கவனிப்பார்கள். அதாவது 30 நாட்கள் 60 நாட்கள் அல்லது 90 நாட்களின் பின் கட்டினால் அதற்குத்தக உங்கள் நம்பகத்தன்மை குறைந்துகொண்டு செல்லும்.
- உங்கள் கடன்கள் ஏதாகிலும் கடன் மீள் பெற அமைப்புகளுக்கு அதாவது Collection Agencyக்கு தரப்பட்டுள்ளதாயின் அது உங்கள் நம்பகத்தன்மையை பெரிதும் குறைக்கும்.
- முன்னைய கடன்கள் யாதாகிலும் திரும்பப் பெறமுடியாத மீளக்கடனாக ஒதுக்கப்பட்டால், அல்லது வங்கிரோத்துவில் (Bankrupcy) சென்றால், அல்லது உங்கள் வீடு முதலில் பறிக்கப்பட்டு விற்கப்பட்டால் அன்றேல் நீங்கள் கடன் கட்டாமல் நீதிபதி ஆனைபிறப்பிக்கப்பட்டால் அது உங்கள் நம்பகத்தன்மையைப் பெரிதும் பாதிக்கும்.

## 30 வீதத்தை நிர்ணகிக்கும் உங்கள் கடன் தொகை:

உங்களுக்கு எவ்வளவு கடன் உள்ளது என்பதே இரண்டாவது முக்கிய காரணியாகும். இதில் கீழ்க்கண்ட மூன்று விடயங்கள் முக்கியமாக கவணிக்கப்படும்.

- உங்களால் பெறக்கூடிய கடனில் எவ்வளவு கடன் நீங்கள் பெற்றுள்ளீர்கள்? என்பது முக்கியம். பெறக்க கடனில் எவ்வளவு குறைய விகிதத்தை பெற்றுள்ளீர்கள் என்பது உங்கள் நம்பகத்தன்மையை கூட்டினாலும் ஒன்றுமே பெறாதிருப்பின் கடன்கொடுப்பவர் கடன்கொடுக்க அஞ்சுவார். அவர்கள் எவ்வளவு ஸ்திரமாக குறித்த காலத்தில் கடனை திருப்பித் தருவீர்கள் என்பதிலேயே கண்ணாயிருப்பர்.
- ஒவ்வொரு குறிப்பிட்ட கடனுக்கும் எவ்வளவு தவனைப் பணம் கட்டுகிறீர்கள் என்பதை அவதானிப்பார்கள். உதாரணத்திற்கு வாகனக்கடன், வீட்டுக்கடன், கடனட்டைக் கடன் என பன்முகப்பட்ட கடன்களை வல்லமையுடன் தவனை தவறாமல் கட்டுகிறீர்களா என்பது முக்கியம்.
- மொத்தமாக எவ்வளவு கடன் உங்களுக்கு உள்ளது அதைத் திருப்பிச் செலுத்தும் வல்லமை உண்டா என்ற விடயத்தையும் அவதானிப்பார்கள்.

## 15 வீதத்தை நிர்ணகிக்கும் கடந்தகால கடன் சரித்திரம்:

எவ்வளவு காலம் கடன் பெற்றுள்ளீர்கள் என்பதை அவதானிக்கும். எவ்வளவு காலம் கடன் பெற்று செயலாற்றி உள்ளீர்கள் என்பது உங்களின் மிகப் பழைய கடன் எத்தனை வருடம் என்பதுடன் உங்கள் கடன்களின் சராசரி வயது என்ன என்பதையும் கவணத்தில் எடுத்து நம்பிக்கை மதிப்பெண் கணிக்கப்படும்.

நீண்ட கால கடன்பெறும் அனுபவம் உங்களுக்கு அனுகூலமாக அமையுமெனினும் கடன் தவனை தவறாது கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருக்கவேண்டும். அதேவேளை நீண்ட பூர்வீகம் இல்லாதிருப்பினும் குறைந்த காலக் கடனை தவனை தவறாது கட்டி இருப்பது உங்களுக்கு அனுகூலமாய் அமையும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

## 10 வீதத்தை நிர்ணகிக்கும் புதுக்கடன்:

நம்பிக்கை மதிப்பெண்ணைக் கணிக்கையில் நீங்கள் எத்தனை புதுக்கணக்குகளை ஆரம்பித்துள்ளீர்கள் என்பதையும், கடைசியில் நீங்கள் எப்போது புதுக்கணக்கு ஆரம்பித்துள்ளீர்கள் என்பதனையும் கவணத்தில் எடுப்பார்கள்.

நீங்கள் அன்மையில் பல கணக்குகளை ஆரம்பித்திருந்தால் நீங்கள் கட்டமுடியாது தவனையை தவறிவிடக்கூடும். மேலும் பலர் பண இடுக்காடு வரும்வேளைகளில் புதுக் கணக்குகளை ஆரம்பித்து பழைய கடனை அடைக்கமுற்படுவார்கள்.

உதாரணத்திற்கு நீங்கள் வீட்டு அடமாணக் கடன் பெறச்செல்கையில் கடன்கொடுப்பவர் மாதாந்தம் கொடுக்கவேண்டிய தவனைக் கணக்கு எவ்வளவு என்பதனைப்பார்த்து அதற்கு மேல் எவ்வளவு பணம் கட்டமுடியும் என்ப-

30ம் பக்கம் பார்க்க...



ரீமோட்கேச் செய்ய கொடுத்து பல மாதம் ஆச்சு, இப்ப போன் பண்ணினாலும் ஆன்சர் பண்ணிறார் இல்லை



ஏலாதெண்டால் முதலே ஏலாதெண்டு சொல்லவேணும் கடைசி நேரத்தில் கொண்டு போய் மாட்டக்கூடாது




உங்கள் மோட்கேச் சம்பந்தமான அனைத்து முடிவுகளும், இதரசெலவுகளும் உடனடியாகவே உங்களுக்கு தெரிவிக்கப்படும்

"உங்கள் தொலைபேசி அழைப்புக்களுக்கு பதில் உடனே காத்திருக்கும்"

**5 YR பிக்ஸ்ட் மோட்கேச் 3.59%**

**வேரியபில் மோட்கேச் 2.10%**

CENTUM Rapid Mortgages Inc.

FSCO Brokerage Lic # 10156
211-80 Nashdene Rd, Toronto, ON, M1V 5E4
www.centumrapid.com

Call: தயா PK கந்தையா BAS, ABR®, AMP
Principal Mortgage Broker
FSCO Broker Lic # M08001083

Cell : 416-716-8707 Bus: 416-644-3555

Interest rates are subject to change without notice. Rates based on individual credit worthiness and income. Some other conditions may apply. Call for details.

# நம்பிக்கை மதிப்...

28ம் பக்கத் தொடர்ச்சி...

தை தீர்மாணித்து, அதற்குத் தக்கவிதத்தில் கடன் கொடுக்க முன்வருவார். நீங்கள் பெறுவதற்கான கணக்குகளை ஆரம்பித்து பணத்தை பெறவிட்டாலும் கூடிய சீக்கிரமே வீட்டிற்கு தளபாடம் வாங்க திட்டமிட்டுள்ளீர்கள் எனக் கணிப்பார்கள். எனவே மதிப்பெண், நீங்கள் தக்க ஒருவரா கடன் வழங்குவதற்கு என்பதை தீர்மானிக்க உதவும்.

## 10 வீதத்தை நிர்ணகிக்கும் பலதரப்பட்ட கடன்கள்:

நீங்கள் கடனட்டைகள், கடைக்கடன்கள், அடமானக்கடன்கள், வாகனக்கடன்கள், என பன்முகப்பட்ட கடன் பெற்றிருப்பதையே கடன் கொடுப்பவர் விரும்புவார். மேலும் எவ்வளவு கடன் பளு உடையவர் என்பதையும் அவதானிப்பார். ஆனால் இவற்றின் தாக்கம் நம்பிக்கை மதிப்பெண்ணில் 10% தாக்கமே செய்வதால் இதுபற்றி பெரிதும் கவலைகொள்ள வேண்டியதில்லை.

உங்களிடம் பல தரப்பட்ட கடன்கள் இல்லை என்பதற்காக அவசரப்பட்டு புதுக்கணக்குகளை ஆரபிக்கவேண்டாம்.

## நம்பிக்கை மதிப்பெண்ணைப் பாதிக்காதவை:

கீழ் தரப்படும் காரணிகள் மதிப்பெண் கணிப்பதில் பாதிப்பதில்லை என்பதை கவணத்தில் கொள்வது நலம்.

- திருமணமானவரா.
- வயது.
- அரசாங்க சலுகையில் இருப்பது.
- வருவாய்.
- செய்யும் தொழில்.
- தொழில் பழைய வரலாறு.
- வாடகை உடன்படிக்கை.
- கடன் அடைப்பதற்கு அறிவுரை பெற்றமை (Credit Councelling).

## நம்பிக்கை மதிப்பெண்ணை அதிகரிக்க உதவுபவை:

கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் நீங்கள் நல்ல நம்பிக்கை மதிப்பெண் பெறுவதற்கு உதவும்.

- பெறக்கூடிய கடனில் 15 முதல் 25% அதிகமாக பெற வேண்டாம்.
- தவனை தவறாமல் கட்டவேண்டிய கடனை கட்டுவதுடன் 30 நாட்களுக்கு மேல் பிந்தாமல் கட்டி விடுங்கள்.
- பல புதிய கணக்குகளை சிறிய கால இடைவெளியில் ஆரம்பிக்க வேண்டாம்.
- கடன் பெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாய் உங்கள் மதிப்பெண் என்ன என்று கவனியுங்கள். இது ஏதாவது தவறு, குறை இருப்பின் அதை நிவர்த்தி செய்ய உதவும்.
- உங்கள் மதிப்பெண் குறைவாகவும், குற்றமுடையதாகவும் இருப்பின் அங்கலாய்க்க வேண்டாம். எதிர் காலத்தில் நல்ல முறையில் நடந்து கொண்டீர்கள் எனின் அந்த எண் படிவம் மாற்றமடைந்து நல்ல நம்பிக்கை நாணயமானவராக வருவீர்கள்.

உங்கள் நம்பிக்கை மதிப்பெண், கடன் பெறும் நியாயமான கட்டண நீர்ணயத்திற்கும் அத்தியாவசியமானது. அதற்காக, “கட்டினால் குடும்பி வெட்டினால் மொட்டை” என்று இல்லாமல் நிதானமாய் நடந்து வாழ்வில் முன்னேறுங்கள்.

*(தமிழாக்கம்: குமார் புனிதவேல்)*

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■




N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

# தலைமைத்துவப் பாதை

மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -



இது அமெரிக்க வெளியுறவுச் செயலர் கில்லாரி கிளின்ரனின் அறிக்கையிலிருந்து...

இன்று சர்வதேச உறவுகள் முன்னெப்போதும் இல்லாத அளவு சிக்கலடைந்துள்ளன. புதிய அங்கத்தவர்கள், புதிய வல்லரசுகள், வளரும் நாடுகள், பல்தேசிய நிறுவனங்கள், பயங்கரவாத அமைப்புக்கள் என்பன செல்வாக்கினைப் பாவித்து உலக நடப்பை தம்வசம் ஈர்க்க முயல்கின்றன. இந்நிலையில் அமெரிக்காவினால் இப்போதும் உலக சமாதானத்திற்கும் செழிப்பிற்குமான தலைமைத்துவத்தை தொடர்ந்து வழங்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. எந்த விதமான சந்தேகத்திற்கும் இடமில்லாமல் 2011 ஆண்டையும் அதற்கு அப்பாலும் அமெரிக்கா கட்டாயமாக தொடர்ந்து தலைமைத்துவத்தை வழங்கும். ஆனால், தலைமைத்துவத்தின் குணாதிசயங்கள் மாற்றம் கண்டுள்ளன. நாம் பூகோளரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் சிந்தித்து, சந்திப்புக்களைச் செய்யக்கூடிய 'ஒன்று சேர்த்தல்' வழியாக தலைமைத்துவத்தைக் காட்ட வேண்டும். இது தனித்துச் செயற்படுவதற்கான வாதம் அல்ல. ஒன்றுடன் ஒன்றான தொடர்புகள் அதிகரித்துள்ள இந்தக் காலத்தில் எமது பாதுகாப்பும் செழிப்பும் எல்லோரையும் ஒரே மேசையில் ஒன்று சேர்த்து ஒவ்வொரு நாட்டுக்காகவும் அந்தந்தப் பிரதேசத்திற்காகவும் முடிவுகளை எடுக்க வேண்டும். ஒன்றாக வேலை செய்யும் போது எமது பலம் அதிகரிக்கின்றது.

அதிபர் ஒபாமாவின் தலைமைத்துவத்தின் கீழ் ஒத்தியங்கும் புதிய காலகட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. விசேடமாக முஸ்லிம்களுடன் புரிந்துணர்வை வளர்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. பொதுவாக ஒற்றுமையாக நடப்பதற்காக பொறுப்புடனும் நம்பிக்கையுடனும் கூடிய உறவுகளை வளர்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

நாம் எமது நண்பர்களுடன் பூகோளரீதியாகவும் பிரதேசரீதியாகவும் ஒற்றுமைகளையும் ஒப்பந்தங்களையும் உருவாக்குவதற்குக் கட்டமைப்புக்களையும் நிறுவனங்களையும் உருவாக்குவதன் மூலம் எல்லோரையும் பாதிக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு விடை காண்பதற்கும், எதிர்பாராமல் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக்கூடியதாகவும் பல இலக்குகளில் நாம் எல்லோரும் வேலை செய்து கொண்டு இருக்கிறோம்.

முதலாவதாக அமெரிக்கா, பல சதாப்தங்களாக இருந்த அமெரிக்காவின் நட்புக்களை, இதுவரை காலமும் உலகின் சமாதானத்திற்கும் செழிப்பிற்கும் காரணமாக இருந்த உறவுகளை, புதுப்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. ஆசியாவில் தமது நண்பர்களான யப்பான் கொரியா ஆகியவற்றுடன் தோளோடு தோள் நின்ற அங்கு நடக்கும் மாற்றங்களுக்கு முகம் கொடுக்கின்றது. 2011ல் ஜனாதிபதி ஒபாமா கிழக்கு ஆசிய நாடுகளின் உச்சிமாநாட்டில் பங்கு கொள்ளவதன் மூலம் அந்தப் பிரதேசத்திற்குரிய அமெரிக்காவின் கடமையை தெளிவுபடுத்தவுள்ளார். ஐரோப்பாவைப் பொறுத்தமட்டில் சுதந்திரத்தின், ஜனநாயகத்தின், மனித கௌரவத்தின் அடிப்படையில் கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட உறவுப் பாலங்கள் பலப்படுத்தப்படுகின்றது. ஐரோப்பிய பங்காளர்களுடன் ஒவ்வொரு பூகோளப் பிரச்சினையிலும் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றது. நேட்டோ ஒரு புதிய வேலைத்திட்டத்திற்கான கருதுகோளை 2011ல் உருவாக்க இருக்கிறது. ஐரோப்பிய ஐக்கியம் 'லிஸ்பன்' ஒப்பந்தத்தின் அடிப்படையிலிருந்து முன்னேறிச் செல்கின்றது.

அமெரிக்கா, புதிய செல்வாக்கு மையங்களாக உருவாகி வரும் சீனா, இந்தியா, பிரேசில் போன்ற நாடுகளுடனும் தொடர்புகளை ஆழப்படுத்தி வருகிறது. உலகெங்கும் இந்த நாடுகளில் அக்கறை கொண்டோர் பல வழிகளிலும் பிரதேச ரீதியாகவும் பூகோளரீதியாகவும் பங்களித்து வருகிறார்கள். 21ம் நூற்றாண்டுத் தலைமைத்துவத்திற்கு பொதுவான பிரச்சினைகளுக்கு மற்றவர்களுடன் ஒரு பங்காளராக பரிகாரம் தேடுவது முக்கியமானது.

அமெரிக்கா தனது பங்காளர்களுடன், ஒற்றுமையுடன் வேலை செய்வோர்களை ஊக்கப்படுத்தவும் இடையூறுகளை விளைவிப்போரை விலக்கி நடத்தவும் அந்த இடையூறுகளால் வரக்கூடிய பாதிப்புக்களை தவிர்க்கும் வகையிலும் அமைப்புக்களைப் பலப்படுத்துகின்றது. ஐக்கிய நாடுகள் சபை உட்பட இந்த அமைப்புக்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் பொதுவான முயற்சிகளை ஊக்குவித்து ஒவ்வொருவருடைய உரிமைகளையும் பொறுப்புக்களையும் அமல் செய்யக்கூடிய விதமாக கட்டமைக்கப்படுகின்றது. உதாரணமாக G20 நாடுகளை, உலக பொருளாதார கொள்கையை மேற்பார்வை செய்ய உலகின் முக்கிய நாடுகளை இணைத்து இவ்வமைப்பை உருவாக்கியுள்ளது. அத்துடன் புதிய வேலைத்திட்டங்களாக அணுசக்தி பாதுகாப்பு உச்சி மகாநாடு என்பனவற்றிலும் அக்கறை காட்டிவருகின்றது.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைச் சட்டமும் ஒழுங்கும் என்பன இந்த அமைப்புக்களின் அத்திவாரமாக இருக்கக்கூடியதாக கவனம் செலுத்தி வருகின்றது.

இதை உலக நாடுகள் ஆதரிக்கும் நிலை வராவிட்டால் இதைக் கட்டி எழுப்ப முடியாது என்பதை அமெரிக்கா நன்கு உணர்கின்றது. இதனால்தான் ஒபாமாவின் நிர்வாகம் அபிவிருத்தியையும் இராஜதந்திர பாதுகாப்பு நடவடிக்கையுடன் வெளிநாட்டுக் கொள்கையில் இணைத்துள்ளது. வளர்முக நாடுகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் தமது பிரச்சினைகளை தாமே தீர்த்துக் கொள்ளும் முதிரச்சியையும் பொதுவான பிரச்சினைகளில் சரியான பங்களிப்பைச் செய்யக் கூடிய நிலைக்கு நாடுகளை தாமாக வரச் செய்யவும் முயற்சிக்கின்றது.

இது ஒரு இரவில் நடந்துவிடக்கூடிய ஒரு காரியமோ அல்லது நாடுகள் தமது தனிப்பட்ட இலக்குகளை இலகுவில் கைவிட்டுவிடும் என்றோ கற்பனை செய்யமுடியாது. தமது பொதுவான கடைமைகளில் தவறும் ஈரான் வடகொரியா போன்ற நாடுகள் அதன் விளைவுக்கு முகம் கொடுக்க வேண்டி வரலாம். வன்செயலில் ஈடுபட்டு உலக சமாதானத்திற்கு இடையூறு விளைவிக்கும் தீவிர வாதிகள் தோற்கடிக்கப்படலாம். ஆனால் பலமான சர்வதேச அமைப்புக்கள் நாடுகளுக்கிடையிலான போட்டியையும் வேறுபட்ட சரித்திரத்தைக் கொண்ட நாடுகளையும் சமமில்லாத வளங்களைக் கொண்ட நாடுகளையும் குழப்பத்தையும் போரையும் தவிர்த்து நாடுகளை ஒருமித்து இணைக்க முயல்கின்றது.

அமெரிக்க தலைமைத்துவம் பொதுவான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாடுகளை ஒற்றுமைப் படுத்துவதில் திறம்பட செயலாற்றி உள்ளதெனினும், இனிவரும் புதிய வருடத்திலும் புதிய தசாப்தத்திலும் அமெரிக்க நிர்வாகம் எல்லோருக்குமான சமாதானத்திற்கும் செழிப்பிற்குமாக சிறந்த தலைமைத்துவ பாரம்பரியங்களைப் பாவித்து அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் பணியைத் தொடரும்.

இவ்வாறு அமெரிக்க வெளியுறவுச் செயலர் கில்லாரி கிளின்ரன் விடுத்த அறிக்கையிலிருந்து தெரியவருகின்றது.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■




அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# சட்டவிரோத வாகனத் தரிப்பும் தண்டப் பணமும்

## (Illegal Parking Fines)

**தகவல் தொடர் - 48**



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

கடந்த மே 09 2010!

ரொரன்ரோ நகரசபை உறுப்பினர் திரு. ஹெவார்ட் - மொஷ்கோயி (MR. Howard Moscoe) அவர்கள் சட்டவிரோத வாகன தரிப்புகளுக்கு எதிராக ரொரன்ரோ நகரில் அறவிடும் தண்டனையில் சில விதிவிலக்குகள் தொடர்பாக நகரசபை கூட்டத்தில் எழுப்பிய கேள்வி சிறு பரபரப்பான செய்தியாக “ரொரன்ரோ சன்” (Toronto Sun) பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

“சில குறிப்பிட்ட மக்கள் சில குறிப்பிட்ட சேவையில் உள்ள வாகனங்கள் மற்றும் சில குறிப்பிட்ட வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களில் வாகனத் தரிப்புச் தண்டச் சீட்டு (Parking ticket) வைத்திருந்தால் அத்தகையோர் தங்களுக்கு கிடைத்த தண்டனைச் சீட்டுக்கு பணம் செலுத்த தேவையில்லை என்ற, சுமார் 25 பக்கங்களைக் கொண்ட ரொரன்ரோ நகரசபையினால் உருவாக்கப்பட்ட சட்டப் புத்தகத்தினை (Confidential Booklet of Parking Ticket Exemption) எதற்காக மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை” இதுவே அவர் எழுப்பிய கேள்வி.

சட்டவிரோத வாகன தரிப்புகளுக்கு எதிராக உதாரணமாக ரொரன்ரோ நகரில் 2.8 மில்லியன் தண்டனைச் சீட்டுகள் வருடம் ஒன்றுக்கு சராசரியாக வழங்கப்படுகின்றது எனவும் இதில் 82% வீதமானவை அறவிடப்படுகின்றது எனவும் நகரின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மிகுதி சொற்ப பேர் மட்டும் ஏதோ வழியில் தப்பிக்கொள்கின்றனர்.

அதாவது இத்தண்டனை ரிக்கற்றுகளினால் நகரசபைக்கு வந்து குவியும் வருமானத்தினை இழக்ககூடாது என்ற நோக்கிலேயே இது பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பதனை இங்கு சில ஊடகங்கள் சுட்டிகாட்டியிருந்தது. அதனையே அங்கு நகரசபை உறுப்பினரும் கேள்வியாக எழுப்பியிருந்தார்.

பிரச்சினை நகரசபை உறுப்பினரால் எழுப்பப்பட்டு ஊடகங்களில் வெளியானதோ என்னவோ இறுதியாக ‘வாகன தரிப்பு தண்டனைச் சீட்டுக்களின் விதிவிலக்குகள்’ (Parking Ticket Exemption) என்ற ரொரன்ரோ நகரசபையின் சட்ட புத்தகத்தின் விவரங்கள் நகர சபையின் உத்தியோக இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து கடந்த யூன் 8, 2010யில் இவ்விதிவிலக்குகள் தொடர்பான முக்கிய குறிப்புகளை ரொரன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து யூன்/9/2010யில் CBC செய்தி பிரிவிலும் வெளியிட்டிருந்தனர்.

அதாவது சில வகையான வாகன தரிப்பு தண்டனை சீட்டுகளை பெற்றவர்கள் அத்தகைய தண்டனை சீட்டுகளுக்கு பணம் செலுத்தாது அதனை நகரசபையின் குறிப்பிட்ட நிர்வாக பிரிவுக்கு அறிவித்து தண்டனை சீட்டினை ரத்துச் செய்து கொள்ளலாம் என்பதே இங்கு வெளியிடப்படாது.

இவ்விதி விலக்குகள் பின்வருமாறு!

### ரத்து செய்யப்படும் வாகன தரிப்பு சீட்டுகள். (Parking Ticket Exemptions)

- உடல் அங்கவீனமாகவிருந்து வலிமையாக நடக்க முடியாத நிலையிலிருக்கும், விசேட அட்டை வைத்திருக்கும் வாகன உரிமையாளர் இன்னொரு இடத்தில் எதிர்பாராத விதமாக தண்டச் சீட்டு வாங்கினால் நகரசபையின் வாகன தரிப்பு அமுலாக்கல் பிரிவுக்கு அறிவித்து வழங்கிய சீட்டினை ரத்து செய்யலாம்.
- சுமார் 100 கி.மீற்றருக்கு அப்பால் இருந்து ரொரன்ரோ நகருக்கு வருகைதந்த ஒருவரின் வாகனத்திற்கு தரிப்பு தண்டனைச் சீட்டு வழங்கியிருந்தால், அத்தகைய நிலையில் உள்ளவர்களும் இதனை அறிவித்து ரத்து செய்யலாம்.
- ஏதாவது சமய நிகழ்வுகளுக்கு சென்றவர்கள் சென்ற இடத்தில் சட்டவிரோதமாக வாகனம் தரித்தார் என்ற குற்றச் சாட்டில் வாகன தரிப்பு தண்டனைச் சீட்டு வாங்கியிருந்தால் அச்சமய நிகழ்வின் மதபோதகரிடமிருந்தோ அல்லது சமய நிகழ்வினை நடத்திய நிறுவனத்திலிருந்தோ அத்தாட்சிபடுத்தும் கடிதம் ஒன்றினை பெற்றுக் கொடுத்து இச்சீட்டினை ரத்து செய்யலாம்.
- முதியவர் அல்லது உடல் நிலை பாதிக்கப்பட்டவர் ஒருவர் சிகிச்சைக்கு சென்ற போது வாகனம் தரித்த இடத்தில் தண்டனைச் சீட்டு வாங்கியிருந்தாலும், நிலைமையினை நிரூபித்து சீட்டினை ரத்து செய்யலாம்!
- சாப்பாடுகள், உணவுகளை விநியோகிக்கும் தொழில் செய்பவர் தொழில் நேரம் தண்டச் சீட்டு வாங்கியிருந்தாலும் அதனையும் ரத்து செய்யலாம். ஆனால் வாகனத்தில் On Delivery என்ற சைகை மாட்டியிருக்க வேண்டும். ஆனால் விநியோக நேரம் தவிர ஏனைய நேரத்தில் வேலை செய்யும் இடத்தில் நிறுத்திய வாகனத்திற்கு தண்டனைச் சீட்டு வழங்கினால் அது ரத்து செய்யப்படமாட்டாது.
- தொழில் நேரம் இயங்கிகொண்டிருக்கும் வாடகை வண்டிகள், (Taxi Cabs), உல்லாச பிரயாண பேருந்துகள் (Tour Buses) போன்ற வாகனங்களுக்கு வழங்கும் தண்டனை சீட்டுகளையும் அறிவித்து ரத்து செய்யலாம்.
- மருத்துவ நிறுவன வாகனங்கள் (Nursing Agency Vehicles) போன்றவற்றிற்கு தொழில் நேரம் வழங்கும் தண்டனைச் சீட்டுகளையும் ரத்து செய்யலாம்.
- ஒருவர் ஒரு நாளில் மூன்று மணித்தியாலத்தினுள் ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டுக்களை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் அந்த நிலையில் மேலதிகமாக பெற்ற தண்டனைச் சீட்டுக்களைக் காட்டி நிலமையைத் தெளிவாக்கும்போது மனிதாபிமான அடிப்படையில் அவற்றினை ரத்துச் செய்வார்கள்.

வாகன தரிப்பு சீட்டுக்களில் எழும் பிரச்சினைகளுக்கு ரொரன்ரோவில் தொடர்பு கொள்ள வேண்டிய நகரசபை அலுவலக முகவரி.

**The Parking Tag Operations**
**Station 1210**
**21 Floor, Metro Hall**
**55, John Street**
**Toronto, Ontario M5V 3C6**

**phone: 416 397 8247**
**Fax : 416 392 4436**

**அல்லது**
**Toronto Police Parking Enforcement**
**Customer Service Section**
**phone: 416 808 6500**

### சட்டவிரோத வாகன தரிப்பு சீட்டுகளை கனடாவில் அமல்படுத்துபவர்கள்: (Organization of Parking Enforcement in Canada)

கனடாவின் சமஷ்டி அரசியல் கட்டமைப்பில் மூன்று வகையான அரச ஆதிக்கத்தினுள் நாம் வசித்து வருகின்றோம் என்பது யாவரும் அறிந்த விடயம் ஆகும். அவையாவன பின்வருமாறு!

- கனடிய மத்திய அரசு (Federal Government of Canada)
- மாகாண அரசுகள். (Provincial Government of Canada).
- நகரசபை அரசுகள். (Municipality Government of Canada).

இங்கு மூன்றாவதாக குறிப்பிடப்பட்ட நகரசபை ஆதிக்கத்தினுள் இருக்கும் அரசுகளே தங்களின் அந்தந்த நகரசபைகளில் வாகன தரிப்புகள் தொடர்பான சட்டங்களை உருவாக்கி, அதனை அமல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு நகரசபை அரசுகளிலும் சட்டவிரோத வாகன தரிப்புகளின் தண்டனை சீட்டுக்களின் ஒழுங்கு விதிகள் என்பது ஒரே மாதிரியிருந்தாலும் அதனை அமல்படுத்துவதில் நகரசபைக்கு நகரசபை வித்தியாசமும் உண்டு.

உதாரணமாக ரொரன்ரோ நகரசபை எல்லையினுள் பின்வரும் மூன்று வகையான அமல்படுத்தும் பிரிவினர் (Parking Enforcement group in the city of Toronto) செயல்பட்டு வருகின்றனர். அவையாவன பின்வருமாறு:

### றொறன்ரோ வாகன தரிப்புகளைக் கண்காணித்து அமல்படுத்தும் உத்தியோகத்தர்கள்: (Parking Enforcement Ticketing Officers in The city of Toronto)

நகர சபையின் பெயரிடப்பட்ட வாகனத்தில் வாகன தரிப்புகளை கண்காணிப்பவர்கள் என்ற வசனத்தினை எழுதப்பட்ட வாகனத்தில் எங்கே சட்டவிரோத வாகனம் தரிக்கப்பட்டிருக்கின்றது என்பதனை தேடி நகரின் வீதிகளில் சுற்றி சுற்றி வலம் வருபவர்கள்.

தற்போது 304 உத்தியோகத்தர்கள் றொறன்ரோ நகரில் பணிபுரிகின்றார்கள்.

### நகர சபையின் சட்டங்களை கண்காணித்து அமல்படுத்தும் உத்தியோகத்தர்கள் (Municipal By Law Enforcement Officers – Mleo):

சில தனியார் நிறுவனங்களுக்கும் நகரின் சட்ட ஒழுங்கு விதிகளை கண்காணித்து அமல்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரொரன்ரோ நகரில் சுமார் 115 தனியார் முகவர் நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களில் மொத்தமாக சுமார் 2,500 உத்தியோகத்தர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

இத்தனியார் நிறுவனங்களுக்கு றொறன்ரோ நகரினுள் சட்டவிரோத முறையில் தரிப்பு செய்யப்பட்ட வாகனங்களுக்கு சீட்டினை வைக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. (உதாரணமாக “ Toronto Parking Authority Inc”யினை இங்கு குறிப்பிடலாம்). இவ் முகவர் நிறுவனங்களே சில தொடர்மாடி கட்டிடங்கள், வாகன தரிப்பு இடங்கள் போன்றவற்றில் சட்டவிரோத வாகன தரிப்பின் குற்றங்கள் என குறிப்பிட்டு தண்டனைச் சீட்டு வழங்கும் அதிகாரத்தினை பெற்றுள்ளது.

52ம் பக்கம் பார்க்க...


உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)
Office: 1 888 651 1955
Home: 416-321-0999, Cell: 416-990-4908
400, Bradwick Drive., Suite 102, Concord, ON






நிதானம், நம்பகத்தன்மை, அனுபவத்துடன் கூடிய சேவை
R M A
REAL MORTGAGE ASSOCIATES
Real Mortgage Associates
Licence No: 10464
Das Narayanasamy
Mortgage Broker
416-543-6614
Fax: 1-888-511-8960, E-mail: dasn@rmabroker.ca
Lic# M08007147




# Famous LIGHTINGS Home Decor



- CHANDELIERS
- CRYSTAL CHANDELIERS
- FLUSHMOUNTS
- TRACK LIGHTS
- ISLAND LIGHTS
- PENDANT LIGHTS
- BATHROOM VANITIES
- WALL SCONES
- TABLE LAMPS
- FLOOR LAMPS
- SHADES
- LED STRIPS
- CEILING FANS
- OUTDOOR LIGHTS
- OUTDOOR POSTS
- SPOT LIGHTS
- NUMBER SIGNS
- MAILBOXES
- MIRRORS



**Visit Our MAGNIFICANT SHOWROOM For Our First Annual**

## X-MAS SALE

**and Beautify Your Home With Our WORLDWIDE SELECTION of UNIQUE LIGHTING DECOR at UNBEATABLE PRICES**







மிகப் பெரிய காட்சி அறையுடன்
தமிழர் நிர்வாகத்தில்

9291 HIGHWAY 48, UNIT #5 (HWY 48 & 16TH)
MARKHAM, ONTARIO L6E 1A3
TEL: 905 471 7070 FAX: 905 471 6384
www.famouslightings.com EMAIL: homedecor@famouslightings.com

Bring This Coupon and Pay
NO TAX!
As Well Get 10% Off All
Crystal Fixtures
Excluding Items on Sale..
Offer starts Dec 26, 2010 and Ends Jan 15, 2011



# OPEN HOUSE




## Saturday Dec 18th - 2-5 pm

## 30 Dundalk Dr # 60

## Kennedy & Ellesmere

**3 Bedrooms, 2 Washrooms, Fully Renovated**

**Sheppard & Neilson**




3 Bedrooms, 1 Bastment Apt.
Sep. Entrance

**Neilson & McLevin**




3 Bedroom, Finished Bsmt.
**$249,900**

**Meadowvale & Sheppard**



4 Bedroom, Bsmt. Apt.
**$399,900**

**Neilson & Finch**



3 Bedroom, Finished Bsmt.
**$264,900**

**Morningside/Finch**




4 BR, 4 WR
2 BR Bsmt. Apt Sep. Entrance

**Morningside & Staines**




5 Bedroom, New House
**$429,900**

Century 21
Affiliate Realty Inc. Brokerage*

**PUNCH SOCKALINGAM**
Broker
**416-786-2463**



# மகர முதல வளர்ப்பெல்லாம்




மஞ்சுளா ராஜலிங்கம்

### வீட்டில் மீன் வளர்ப்பு கருத்தில் கொள்ள கடுகுக் குறிப்புகள்:

வீட்டில் மீன் வளர்த்தல் என்பது மனதுக்கு இதமானது, மீன் தொட்டிக்கு முன்னால் நின்று அவர்கள் ஓடிப்பிடிப்பதையும், ஒளிந்தும் துள்ளியும் விளையாடுவதை பார்த்துக் கொண்டு நின்றால் எவ்வளவு துயரங்கள் எம்முள் அடைந்துகிடந்தாலும், துயர் மறந்து ஓர் புத்துணர்வு ஏற்படுவதை உணரமுடியும். மீன் தொட்டியில் ஓடும் நீரின் அந்தச் சல சலப்பு, சத்தமின்றி கேட்க சாந்தப்படுத்தும் எம் மனதை. இவற்றை எல்லாம் எமக்குத் தரும் மீன் இனத்தை எப்படி நாம் தெரிவு செய்வது எனப் பார்ப்போம்.

1) மீனின் உடல் ஆரோக்கியத்தைப் பற்றி நிதானமாக ஆராய்ந்தறிய முற்படுங்கள். நீங்கள் ஒரு வல்லுனராக இந்த விஷயத்தில் இருந்தால், சடுதியிலேயே உள், வெளி உடல் நிலையைப் பற்றிய ஒரு மீனின் தன்மையை எடை போட்டு விடுவீர்கள். கண்ணால் பார்த்தும் மீனின் உடல் ஆரோக்கியத்தை ஓரளவு கணிக்கலாம். முதலில் ஒரு மீனின் வெளிப்புற உடல் நிலையை நன்றாக ஆராயுங்கள். செதில் களையும் செட்டைகளையும் கூர்ந்து அவதானியுங்கள். செதில்கள் மிகவும் பளபளப்பாக இருக்க வேண்டும். செட்டைகளில் வெட்டுக்களோ காயப் பிரிவுகளோ இருக்கக் கூடாது. மீனின் உடலில் எப்பகுதியிலாவது வளர்ச்சி வித்தியாசமான செறிவுகளுடன் காணப்படின், அவற்றை வாங்க முனையாதீர்கள். கண்களைச்சுற்றி ஏதாவது வித்தியாசமான வளர்ச்சிகள் உள்ளதா என அவதானிக்கவும். ஆனால் உள்ளுடலில் உள்ள நோய்கள் கண் பகுதியிற் தெரிவதரிது. கொஞ்ச நேர அவதானிப்பிலேயே மீன் எப்பொழுதும் தொட்டியின் அடிப்பாகத்திலேயே அடைந்து கிடக்கிறதா அல்லது மிகவும் உற்சாகமாக விளையாடித் திரிகிறதா என்று கணித்தல் எளிது.

2) அடுத்ததாய் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம், அந்த மீன் வாழும் நீரின் தன்மையும் அந்த மீன் வகையுடன் ஒத்துப் போகக் கூடிய மற்றைய மீன் வகைகளையும் பற்றியதாகும். மற்ற மீன்களுடன் சண்டை போடும் குணமுள்ள மீன்களை வாங்கி ஒன்றாக வளர்க்க ஆசைப்படாதீர்கள். இதனால் பல தீமைகள் அமைய வாய்ப்புண்டு. மீன்கள் தங்களைத் தாங்களே



அல்லது ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ள மிகுந்த வாய்ப்புண்டு. இம்மாதிரி சந்தர்ப்பங்களை தவிர்ப்பது உங்கள் கையில் தான் உள்ளது. இம்மாதிரி மீன்களை பராமரிப்பது மிகவும் கஷ்டமான ஒரு விடயம் மட்டுமின்றி மற்ற மாதிரி மீன்களையும் இவைகளுடன் ஒன்றாகச் சேர்த்து வளர்ப்பது மிகவும் கடினமாக இருக்கும். அத்துடன் ஒரு மீன் இனத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கும்பொழுது அவை தங்கள் சொந்த இனத்துக்குள்ளேயும் எளிதாக ஒத்துப்போகக் கூடியவையா என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள். சில மீன்கள் தன்னினத்துக்குள்ளேயே எதிரியாய் மற்ற மீன்களைப் பார்க்கும். அத்துடன் பால் இன வித்தியாசங்களை வைத்தும், ஒரே வகை மீன்கள் தத்தமக்குள்ளே ஒத்துப்போகா. இதைக் கருத்தில் இருத்திக்கொள்ளுங்கள்.

3) விற்பனையாளர்களிடம் மீனின் வளர்ச்சி எவ்வளவுதூரம் போகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இந்த இடத்தில்தான் நீங்கள் மீன் தொட்டிக்குரிய அளவையும் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியத்துக்கு தள்ளப் படுவீர்கள். ஒரு அங்குல நீளம் வளரப் போகும் மீனுக்கு அண்ணளவாக நான்கு லீட்டர் தண்ணீரைக் கொள்ளக் கூடிய நீர்த்தொட்டி அவசியமானது என்ற கணக்கில் உங்கள் தேவையை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஆனால் வாங்கும் போது மீனின் அளவு என்ன என்பதை மட்டும் கருத்தில் கொள்ளாது அது தன் வளர்ச்சியை எட்டும் அளவையும் நீங்கள் நிச்சயம் கணக்கிட்டு வைத்திருக்க வேண்டும்.

4) மீன்களின் வாழ்க்கையானதும் உடல் ஆரோக்கியமும் அவை வாழும் நீரின் தட்ப வெப்ப நிலையில் மிகையாகத் தங்கியுள்ளன. மீன்கள் வாழும் நீரின் தன்மை பல வகைப்படும். எந்த மீன் எவ்வகை நீரில் ஆரோக்கியமாக வாழும் என்பதை நிச்சயமாய் விற்பனையாளர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். இது மிகவும் முக்கியம். அல்லது மீன்கள் இறந்து போக வாய்ப்புண்டு. எப்படி மீன்கள் வாழும் நீரின் வெப்ப நிலையை சமப்படுத்துவது என்பதை அவர்களிடம் கற்றுக் கொள்ளுங்கள். அவர்களிடம் உங்களுக்கான பதில் நிச்சயம் இருக்கும். அவர்கள் எப்படி வெப்பநிலையைச் சமப்படுத்துவது என்று பொறுமையாக சொல்லித் தருவார்கள்.

5) கடைசியாக சாப்பிடும் சாப்பாட்டின் தன்மை என்ன என்பதைப் பொறுத்து மீன்களை வாங்குங்கள். பலவித மீன்களின் உணவுப் பழக்க வழக்கமானது ஒன்றுக்கொன்று மாறுபடும். எனவே இதில் கூடிய கவனம் செலுத்துங்கள். சில மீன்கள் சாப்பிடுவதற்கு ரொம்பத்தான் பிகு பண்ணிக் கொள்ளும். மீன்களுக்காக நீங்கள் வாங்கும் உணவானது, இலகுவில் எங்கும் வாங்கக் கூடியதா எனபதையும் அறிந்து கொள்ளுங்கள். அவை விலைப் பட்டியலை அல்லது உங்கள் செலவை மிஞ்சாத வகையில் உள்ளதா என்பதையும் கேட்டறிந்து கொள்ளுங்கள். விலையுயர்ந்த உணவைத் தான் மீன்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உணவை தேவையான அளவில் சேமித்து வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த ஐந்து கவனிப்புக்களையும், நீங்கள் மீன்களை வாங்கி வளர்க்க தீர்மானிக்கும் போது நினைவில் வைத்துக் கொண்டாலே போதுமானது. இதை மனதில் வைத்துக் கொண்டு மீன்களை நீங்கள் வாங்க முற்பட்டால் சரியான மீனைத் தெரிவுசெய்வதில் எந்தப் பிரச்சனையும் எழ வாய்ப்பில்லை.

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■

# காதலும் வீரமும்...

13ம் பக்கத் தொடர்ச்சி...

சரியான திட்டமிடல், சிறந்த போர் ஆளுமை, போர் வீரர்கள் அனைவருக்கும் சம உரிமை, பரம்பரையாக அன்றி தகுதியுள்ளவர்களையே தலைமைக்கு நியமிக்கும் புதுமை இவைகளே இவனின் பலங்கள். குழுக்கள் ஒன்றன் பின் ஒன்றாக இணைகின்றன. மொங்கோலியா எனும் நாடு முதன் முதலில் உருவாகுகின்றது. எழுத்து வடிவை தங்களது மொழிக்கு அறிமுகப்படுத்துகின்றான். சிறந்த சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மிகச் சிறந்த ஆட்சி. குழுக்களாய் சிதறியிருந்தவர்கள் தகைமை உள்ள தனி ஒருவனுக்கு பின்னால் மலைகளாய் எழுந்து நிற்கின்றனர். "பேரரசன்" எனும் பொருள் தரக்கூடிய ஜெங்கிஸ்கான் எனும் பெயர் பூணுகிறான் Temujin.

ஜெங்கிஸ்கானுடைய பார்வை அகலமாக விரிகின்றது. மொங்கோலிய அரசை நிர்மாணித்தாயிற்று. அவனது புஜவலிமைக்கு இது முடிவாக இருக்க முடியாது. மிகச் சிறந்த படையணிகள் உருவாகுகின்றன. ஏறத்தாழ இரண்டு இலட்சம் போர் வீரர்கள். இவர்களைப் பற்றி ஒன்றை சொல்லியாக வேண்டும். "பயம் என்ன விலை" எனக் கேட்டபடி இவர்கள் குதிரைகளில் பாய்ந்து வருவதை தடுப்பதற்கு அந்தக் காலத்தில் எவரும் இருந்திருக்க வில்லை. குதிரைகள் தங்கள் முழுவேகத்தில் பாய்ந்து கொண்டிருக்கும் போதே முன்னாலும், பின்னாலும் அம்பெய்யக்கூடிய அசாத்திய வீரர்கள். இயல்பாகவே போராற்றல் மிக்க இவர்களுக்கு புதுமையான போர் நுணுக்கங்களை கொண்ட பெருவீரன் ஜெங்கிஸ்கான் தலைமை தாங்குகிறான். விளைவு... வரலாறு விடை தருகிறது.

மொங்கோலியா எல்லையில் இரண்டு பெரும் சீனப் பேரரசுகள், Western Xia மற்றும் Jin பேரரசுகள். இவற்றில் Jin பேரரசு மிகவும் பலம் வாய்ந்தது. Xia பேரரசை முதலில் தாக்குவதாக திட்டமிடப்படுகிறது. Xia இன் உதவிக்கு Jin வந்தால் தன் நிலைமை மோசமாகி விடும் என்பது ஜெங்கிஸ்கானுக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் Jin பேரரசு உதவிக்கு போகாது என மிகச் சரியாக கணிப்பிடுகின்றான். நீண்ட போரின் பின் Xia பேரரசு மண்டியிடுகிறது. இரு வருடத்தின் பின் Jin பேரரசின் மீது படையெடுப்பு. மிகப் பெரிய போர். போர் நீள்கின்றது. ஆயினும் ஜெங்கிஸ்கானுடைய நவீன யுத்த தந்திரங்களுக்கு Jin பேரரசு இரையாகிப் போகின்றது. அவர்களது தலைநகரான Yanjing (தற்போதைய Beijing) ஜெங்கிஸ்கானுக்கு தலை வணங்குகின்றது.

மொங்கோலிய பேரரசு விரிகின்றது. சுற்றியிருந்த குட்டி, குட்டி அரசுகள் தங்கள் கோட்டைக் கதவுகளை தாங்களாகவே திறந்து விடுகின்றன. தனது பேரரசுக்குள்ளே வாணிகத்தை விருத்தி செய்யும் ஜெங்கிஸ்கான் அதன் தொடர்ச்சியாகவே Khwarezmian பேரரசுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சி செய்தான். பேரரசன் மொஹமட்டின் தவறினால் அந்த சாம்ராஜ்ஜியத்தினையே வெற்றி கொள்ளும் ஜெங்கிஸ்கானின் படைகள் இப்போது மத்திய கிழக்கு பிரதேசத்தில் நிற்கின்றன. படைகள் மீண்டும் வந்த வழியே திரும்ப ஆயத்தமாகும் போது படைத்தளபதி Subutai ஜெங்கிஸ்கானுக்கு இன்னோர் ஆலோசனையை சொல்கிறான். தன்னுடைய ஒவ்வொரு போர்வீரனுக்கும் பெருமதிப்பு கொடுப்பவனும், அவர்களின் ஒவ்வொரு கருத்தையும் அமைதியாய் செவிமடுப்பவனுமான ஜெங்கிஸ்கான் அந்த தளபதியின் கருத்தை ஏற்றுக் கொள்கிறான். படைகள் இரண்டாக பிரிக்கப்படுகின்றன. தளபதி Subutai இன் தலைமையில் 20,000 போர்வீரர்கள் வடக்கு திசையில் பயணிக்கின்றனர். ஜெங்கிஸ்தானின் தலைமையில் மற்றைய படையணி தெற்கு நோக்கி நகர்கிறது. வடக்குப் படையணி தனது வழியில் அகப்பட்ட அத்தனை அரசுகளையும் மென்று தின்கின்றது. ஆர்மேனியா, அஜர்பைஜான், ஜோர்ஜியா போன்ற அரசுகளுக்கு என்ன நடக்கிறது என தெரிய முன்பே வெற்றி கொள்ளப்படுகின்றன. ரஷ்யா நாட்டு Kiev பேரரசு தனது 80,000 படைவீரர்களுடன் போருக்கு வருகின்றது. பதுங்கு குழிகளுக்குள் தங்களை மறைத்துக் கொண்டு போருக்கு தயாராகவிருக்கும் ரஷ்ய போர்வீரர்களை நோக்கி மொங்கோலிய படையணி பாய்ந்து வருகின்றது. மிக அருகில் வந்ததும், பயந்தது போல் பாசாங்கு காட்டியபடி வெகு வேகமாக பின்வாங்குகின்றது. இங்கே தான் ரஷ்ய வீரர்கள் பெரும் தவறொன்றைச் செய்தார்கள். எதிரிகள் பயந்து ஓடிவிட்டார்கள் என நினைத்து பதுங்கு குழிகளில் இருந்து வெளியே வந்து வெற்றிக் கூச்சல் போடுகின்றார்கள். கண் மூடித் திறப்பதற்குள் மொங்கோலிய குதிரை வீரர்கள் மூன்று பக்கத்தாலும் சுற்றி வளைக்கின்றார்கள். அடுத்த சில மணித் துளிகளில் மொத்த ரஷ்ய போர் வீரர்களும் மண்ணில் வீழ்ந்தார்கள்.

வெற்றி கொண்ட Kiev அரசுக்கு அடுத்ததாக இருப்பது ஹங்கேரி அரசு. அதற்கு அடுத்தது ஐரோப்பிய தேசம். இத்தேசங்களை பற்றி அப்போது தான் கேள்விப்படும் மொங்கோலிய படைகள் அவற்றையும் வெற்றி கொள்ள தயாராகுகின்றனர். இதனிடையே ஜெங்கிஸ் கானிடமிருந்து நாடு திரும்புமாறு கட்டளை வருகின்றது. தெற்கே ஜெங்கிஸ்கானின் பெரும் படையணி ஆப்கானிஸ்தானையும், இந்தியாவின் வடக்கு பகுதிகளையும் வெற்றி கொண்டவாறு மொங்கோலியாவிற்கு திரும்புகின்றது. இரண்டு படையணிகளும் பயணித்த மொத்த தூரம் 8000 மைல்கள். இத்தனை தூரத்தை இவ்வளவு குறுகிய காலத்திற்குள் எந்தவொரு படையணியும் இன்றுவரை கடந்ததில்லை.

தனது வாழ்வின் பெரும்பகுதியை போர்முனைகளில் கழித்த ஜெங்கிஸ்கானுக்கு இப்போது வயதாகி விட்டது. ஒரு சிறு குழுவிலிருந்து தொடங்கி ஒரு பெரும் பேரரசை நிறுவியவன் விடைபெறும் காலம் வருகின்றது. பெரும் புகழுடன், தனது 65ம் வயதில் மரணமடைகின்றான். அவனது உடல் அவனது விருப்பப்படியே அடையாளம் தெரியாத கல்லறையொன்றில் புதைக்கப்படுகின்றது. எவ்வளவோ தேடியும் இன்றுவரை அவனது கல்லறை கண்டு பிடிக்கப்படவேயில்லை.


ஜெங்கிஸ்கானின் மறைவின் பின் அவனது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் மொங்கோலியப் பேரரசை இன்னும் விரிவாக்குகின்றனர். பேரனான குப்பிளாய்கான் சீன நாட்டின் யுவான் பேரரசை ஸ்தாபித்ததோடு, கொரியா நாட்டினையும் கைப்பற்றுகின்றான். சுமார் 150 ஆண்டுகாலம் மொங்கோலிய பேரரசு செல்வாக்கு செலுத்துகின்றது.

போர்களில் தன்னை எதிர்த்தவர்களுக்கு குரூரத்தின் எல்லையை காட்டிய போதும், ஜெங்கிஸ்கான் நிறைய நல்ல மாறுதல்களை மக்களுக்கு செய்திருக்கிறான். குழந்தைகளையும், பெண்களையும், படித்தவர்களையும், கைவினைஞர்களையும், மதத்தலைவர்களையும் பொதுவாகவே கொல்வதில்லை என்ற கொள்கையை பின்பற்றியவன். சரணடையும் எதிரிப்படைகளினை கொல்லாது தனது படையணிகளில் இணைத்துக் கொண்டவன். இதைவிட எல்லா வரலாற்று ஆசிரியர்களும் வியந்து கொள்வது இவனது ஆட்சியில் எல்லா மதங்களிடையேயும், இனங்களுக்கிடையேயும் மிகப் பெரிய ஒற்றுமை இருந்ததைத்தான். சகல மதங்களையும் சரிசமமாக மதித்ததோடு மட்டுமல்லாமல், எல்லா மதங்களை சேர்ந்தவர்களையும் அதிகார பொறுப்புகளில் அமர்த்தியவன். இந்த உரிமைகள் அன்றைய ஐரோப்பிய நாடுகளிலே கூட இருந்திருக்கவில்லை. இவனது ஆட்சியில் மக்களுக்கு இருந்த உரிமைகள் இன்றும் கூட பல நாடுகளில் இல்லை என்பது மிகத் துன்பமான ஓர் உண்மை.

nimal.nagaraj@thaiveedu.com

■ ■ ■


RE/MAX
Happy New Years!
Wishing Your Near and Dear Ones With New Year Wishes From the Famous!
Happiness & Success always.....
Thank you for all the support in making me the Top Producer and in recognition of outstanding sales achievement.
SUJAN/SHAN.com
Real Estate Broker 416.402.1040
REMAX Vision Realty Inc., BROKERAGE
Each Office Independently Owned and Operated
2210 Markham Road U#1 Toronto, Ontario


Atticare
atticare.com
Attic Insulation க்கான
Energy Audit Rebate
EXPIRING SOON
அரசாங்கத்தின் energy rebate விரைவில் காலாவதியாவதால் உங்கள் வீட்டின் அட்டிக்கை insulation செய்து rebate ஐ பெற்றுகொள்ள எம்மை இன்றே அழையுங்கள்.
அட்டிக் உங்கள் வீட்டில் மிகச்சரியாக இன்சுலேஷன் செய்யப்பட்டிருக்க வேண்டிய ஒரு பகுதியாகும். ஒழுங்காக இன்சுலேஷன் செய்யப்பட்ட அட்டிக் குளிர்காலத்தில் வெப்பத்தையும் வெப்பகாலத்தில் குளிரையும் வெளிவிடாது பாதுகாக்கும்
atticare.com
Hot in winter. Cool in summer
Attic Insulation
416.556.6115
உங்கள் வீட்டின் சக்தி சிக்கனத்தை தரம் உயர்த்துவதன்மூலம் உங்கள் வீட்டின் சக்திவலு கட்டணங்களை குறைப்பதுடன் வீட்டின் பெறுமதியும் அதிகரிக்கும்
உடனே அழையுங்கள்
Attic Insulation
416.556.6115
உங்கள் சக்திவலு செலவை கட்டுபடுத்துவதற்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்
உங்கள் வீடு சக்தி சிக்கனம் மிக்கதாக இருப்பதற்கு அட்டிக் இன்சுலேஷனே சிறந்தது
அட்டிக்கூடாக வெப்பம் வெளியேறுவதை குறையுங்கள் | வெப்பமாக்கும் அல்லது குளிராக்கும் செலவை குறையுங்கள் | கூரை உக்குவதையும் பூஞ்சணம் பிடிப்பதையும் தவிருங்கள்
சிறந்த அட்டிக் - சொகுசான வாழ்க்கை
Hot in winter. Cool in summer
ttsoft.ca

HOMELIFE
HIGHER STANDARDS

Happy New Year 2011

நாம் இவ்விருதுகளை பெறுவதற்கு உறுதுணையாக இருந்த
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

Thanks to all our Clients, Friends, Mortgage Brokers, Lawyers
and Home Inspectors, who helped us to achieve this
Top award in 2010, We Thank again for all your support.

HomeLife/Future Realty Inc.
2010 TOP PRODUCER & TOP PRODUCING TEAM



TNT touch - 416 451 3177

Siva Shanmuganathan, Real Estate Broker, 416-545-7482
Joy Selvanayagam, Real Estate Broker, 416-358-6928

Homelife/Future Realty Inc.,Brokerage
7 Eastvale Drive Unit 205, Markham, L3S 4N8 Tele : 416-264-0101/ 905-201-9229
www.futuregtahomes.com | www.suncityplaza.ca

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**SRI**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# மீன் தொட்டியில் மண்ணின் முக்கியத்துவம்

மீன் தொட்டியின் அடிப்பாகத்தில் மணற் படுக்கையை ஒழுங்கு படுத்துவது மிகவும் நன்மை பயக்கும். உண்மையில், கடலில் நீரின் அடிப்பரப்புக்களில், மீன்கள் இப்படித் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மீன் களுக்கு இது இயற்கையின் சூழலில் வாழ் வதான ஒரு பிரமையைத் தோற்றுவிக்கும். இப்படி நீங்களும் உங்கள் மீன்தொட்டியில் இப்படியொரு அமைப்பைத் தோற்றுவிப்பதின் மூலம், மீன்கள் தண்ணீரில் உல்லாசமாய் துள்ளிக் குதிப்பதையும், மணற் படுக்கை யில் சந்தோஷமாய் புரண்டு விளையாடு வதையும் நீங்கள் ரசிக்கலாம். மண்ணை அடிக்கடி சுத்திகரிப்பதும் அப்படியொரு கஷ்டமான ஒரு காரியம் கிடையாது. மீன் தொட்டியில் மணலை இட்டு நிரப்புவதால், இயற்கையான கடற் சூழ்நிலையின் அழகை மீன் தொட்டியில் காணக்கூடியதுடன், மீன் களுக்கும் இது நிறைந்த சந்தோஷத்தைத் தோற்றுவிக்கும்.

"உயிருள்ள மணல்" எனப்படும் இயற்கை மண்ணானது, உங்கள் தொட்டியில் வாழும் எந்த உயிரினத்துக்கும் நன்மை பயக்கும். இவ்வகை மண்ணில் சில தாவரங்களின் விதைகளும், "பக்டீரியா" போன்ற நுண் கிருமிகளும் கலக்கப்பட்டிருக்கும். இவை நீரில் இயற்கையாகப் படிந்திருக்கும் மாசு களை அகற்றுவதுடன், நீரில் இயற்கையாகப் பொருந்தியிருக்கும் இரசாயனப் படிவு களையும் மிகைப் படுத்தித் தருகின்றது. ஆனால் இம்மாதிரி மணல் மிகவும் விலை யுயர்ந்தது. ஆனால் அதே சமயம், இம் மாதிரி மணல் வகையை மீன்தொட்டியில் நிரப்பினாலும், இதை பெரிய அளவில் பராமரித்து பாதுகாக்க வேண்டிய அவசிய மில்லை. இந்த மணல் தன்னுள்ளே படியும் கழிவுகளை மட்டும் சுத்தப்படுத்துவதோடு நின்று விடாது, இது மீன்தொட்டியின் உட் புறத்தையும் தானே சுத்தப் படுத்தி விடும்.

மீன் தொட்டியில் பயன்படுத்துவதற்கென்றே பிரத்தியேகமான, பலவிதமான மணல் வகைகள், இயற்கை, செயற்கை முறையில் பதப்படுத்தப்பட்டு, கடைகளில் விற்கப் படு கின்றன. இதில் சிலவற்றை இப்பொழுது ஆராயலாம்.

### "Aragonite" மணல்

"Aragonite" மணலானது மிகவும் விலை உயர்ந்த மணல் வகையாகும். ஆகவே இம்மாதிரி மணல் வகைகளை பெரிய அள விலான மீன்தொட்டிகளுக்கு பயன் படுத்து வது புத்திசாலித்தனமல்ல. ஆனால் இரசாய னக் கலவையின் விகிதத்தை தண்ணீரில் மிதமாக வைத்திருக்கவும், நீரை தன் பாட்டி லேயே சுத்திகரிக்கவும் இந்த மணல் மிக வும் பயன்படும்.

### "Cilica" மணல்


"Cilica" மணலானது மிகவும் சாதாரணமான கடல் மணலாகும். இதை இலகுவாக எல் லாக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். இதில், மண்ணில் இயற்கையில் இருக்கக் கூடிய Cilicon Dioxide, $SiO_2$ போன்றவை கலந்திருக்கும். இம் மணல் வகை மிகவும் மென்மையாக இருக்கும். இவ்வகையான மணலை மிகவும் இலகுவாக அரித்தெடுக் கலாம். இதை சுத்திகரிப்பதும் ஒரு சாதா ரண வேலையே ஒழிய ஒரு பெரிய சவால் அல்ல என்பதை நினைவிற் கொள்க.

### Coral மணல்

Coral மணலானது "Nitrate " மற்றும் "Ph Level" போன்ற நீரின் இயற்கை இரசாயன அளவுகோலை மாற்றியமைக்கக்கூடிய ஓர் மணல் வகையாகும். இதற்கும் நீரை இயற் கையிலேயே சுத்திகரிக்கும் தன்மை அதிகம் உள்ளது.

### Black Beauty

'Black Beauty'. இது மணல் போன்ற ஒரு பதார்த்தம். ஆனால் இது ஒரு மணல் வகையே அல்ல. இது இரும்பு உலோகத் தைக் கொண்டு உருவாக்கப் பட்டது, அதா வது இரும்பைத் தூளாக்கி பதப்படுத்தப் பட்ட ஒரு கலவையேயாகும். இதை தொட்டி யில் இட்டு நிரப்பிப் பார்க்கும் போது, நீர்த் தொட்டிக்கும் மிகுதியான அழகைக் கொடுக் கும். ஆனால் இவை இரும்புத் துகள்கள் என்பதை ஒரு போதும் மறந்து விடாதீர்கள். இவற்றின் துகள்கள் மிகவும் கூர்மையாக இருக்கும். எங்களுக்கு அந்த வித்தியாசங் கள் தெரியாது. ஆனால் மீன்களின் உடம் பிற்கு அவை கூரிய ஆயுதமே. ஏனவெ இம் மாதிரி மணலை, எந்நேரமும் மணலில் படுத்துப் புரளக்கூடிய குணத்தைக் கொண்ட மீன்களை வளர்க்கும் பட்சத்தில், அம் மாதிரி மீன்தொட்டிகளில் பயன்படுத்துவதை அறவே தவிர்க்கப் பாருங்கள். மீன்களுக்கு உயிராபத்தை விளைவித்து விடாதீர்கள்.



### மணலும் சுத்திகரிப்பும்

மணலை அடிக்கடி சுத்தப்படுத்துவது மிக முக்கியம். அத்துடன் மணலை சரியான முறையில் சுத்திகரிப்பது இன்னும் அவதான மாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். இதோ, மணலை சுத்திகரிப் பதில் படிப்படியாக நீங்கள் செய்ய வேண்டி யது பின்வருமாறு:

- ஒரு வாளியில் 2 gallon மணலை நிரப் பிக் கொள்ளுங்கள்.
- ஒரு தண்ணீர்க் குழாயின் உதவியுடன், அந்தவாளியின் மிகுதி அரைவாசி வெற் றிடத்தை நீர் கொண்டு நிரப்புங்கள்.
- இப்போது, நீரை மெதுவே கொஞ்சம் கொஞ்சமாக வடிய விடுங்கள். இவை மிதக்கும் தேவையற்ற கழிவுகள், துகள் கள் போன்றவற்றையும், தூசு போன்ற மாசுகளையும் தன்னுள் கரைத்து அவற் றை வெளியே அகற்றி விடும்.
- மீண்டும் நீரை வாளியினுள் நிரப்புங்கள். இம்முறை நீரை நன்றாக மணலுடன் கலந்து கடையுங்கள்.
- நீரை மீண்டும் சிறிது சிறிதாக வெளி யேற்றுங்கள்.
- இந்த வழிமுறையை மேலும் சில தடவைகள், தண்ணீர் தெளிவடையும் வரை செய்யுங்கள்.

மணலை மீன்தொட்டிகளில் பயன் படுத்தும் போது, மீன்களுக்கும் தாம் இயற்கைச் சூழலில் வசிப்பது போன்ற ஒரு உணர்வை அந்த அமைப்பு தோற்றுவிக்கும்.

■ ■ ■


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 169 துரித காப்புறுதி இழப்பீடுகள். 39 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) .
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912
Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurance ). தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



நண்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு
மனமார்ந்த புதுவருட பொங்கல்
வாழ்த்துகள்.

## மருத்துவ ரீதியின்றி
## ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.

சக்திவேல்: 416 706 3530

நாம் அழகாய் இருக்க

# சுருளும் தலைமுடியும்

## தொடர் 12



**சசி நரேன்**
Cosmetologist & Aestheticia

### தலைமுடியைச் சுருள் செய்யும் வழிமுறைகள்:

தலைமுடியைச் சுருள் செய்யும்போது இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்தியே தலைமயிரின் கட்டமைப்பை மாற்றவேண்டியுள்ளது.

தலைமயிரை சுருட்டுவதற்குச் சிறிய அளவு நடைமுறைகளே உள்ளன. சுருட்டுவதற்கு 2 மணிநேரம் எடுக்கும். ஆனால் 6-8 வாரங்கள் வரை (புதிய மயிர் வளர்ச்சியைப் பொறுத்து) நீடித்திருக்கும். தலைமயிர் சுருட்டும் நிபுணர்களிடமும், சிகை அலங்கார நிலையங்களிலும் செலுத்தும் கட்டணத்தைப் பார்க்கிலும் வீட்டில் தனிமையில் சுருட்டும் கருவியை வாங்கிப் பயன்படுத்துவது செலவைக் குறைக்கும்.

### ரோலரைப் பயன்படுத்தி தலைமயிரை சுருட்டுதல்:

பொதுவாக ரோலரைப் பயன்படுத்தி தலை மயிரைச் சுருட்டலாம். முதிய வயதடைந்த பெண்களுக்கு மயிரானது மெல்லியதாகவும், குட்டையாகவும் இருக்கும். சில சந்தர்ப்பங்களில் தலைமயிரின் முழுமையான தோற்றத்தைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தும் ஓர் முறை. ரோலர்கள் தடிப்பம் ஆதலால் இதன் விளைவாக வரும் சுருள்கள் அலை அலையாக இருக்கும். இம்முறையினால் சுருள் செய்யும்போது பக்க விளைவுகள் தலை முடிக்கு ஏற்படாது. அதேநேரம் மிக விரைவில் சுருள்கள் கலைந்துவிடும்.

### ‘ஸ்பைரல் முறை’

நீண்ட கூந்தலுக்கு இம்முறை மிகவும் பொருத்தமானது. 1980ம் ஆண்டுகளில் இம் முறையானது மிகவும் பிரசித்தமானது. இம்முறையில் மெல்லிய கம்பிகளில் தலை மயிரைக் கீற்றாகப் பிரித்தெடுத்துச் சுற்றப் படும். எவ்வளவுக்கு கம்பிகள் சிறியதோ அவ்வளவுக்குச் சுருள்கள் இறுக்கமாய் இருக்கும். இம்முறை மூலம் தலை நிறைய திருகாணி போல் சுருள்கள் காணப்படும். எல்லாச் சுருள்களும் ஒரே மாதிரியாக தோன்றாமல் இருக்க ஒவ்வொரு கம்பியிலும் சுற்றும் விதத்தை மாற்றி அமைக்கவும்.



### ரிலாக்ஸ் முறை:

ரிலாக்ஸின் முறையில் தேவையற்ற சுருள் களை, வளைவுகளை இராசயனக் கலவையைப் பயன்படுத்தி நேர்த்தியாக்குதல். தலைமயிரை நேர்த்தியாக்குவதற்கு இரசாயனப் பதார்த்தத்தைத் தலையில் தடவி சீவுதல் (தலையில் பயன்படுத்திய இரசாயனப் பொருளில் குறிப்பிட்டுள்ள நேரம் முடியும் வரை வாருதல்) வேண்டும். இது ஆப்பிரிக்க – அமெரிக்கப் பெண்களுக்கு கூடுதலாக உள்ள சுருள் கூந்தலை முற்றாக நேர்த்தியாக்குவதற்குப் பயன்படுத்தும் வழிமுறை.

### பிரச்சினையை இனங்காணல்:

சிலருக்கு முற்று முழுதான சுருளோ அல்லது வேறு வடிவங்களோ அவசியப்படாது. அவர்களுக்கு சிறு சிறு பிரச்சினைகள் இருக்கும். அவற்றை இரசாயனப் பொருள் பயன்படுத்தி ஏனைய தலைமயிருடன் பொருத்தமாகச் செய்வது சாலச் சிறந்தது. தேவையான இடத்திற்கு இரசாயனப் பொருளைப் பயன்படுத்துதல் அவசியம். ஏனைய இடங்களில் இரசாயனப் பொருள்கள் படாமல் கவனமாக இருத்தல் வேண்டும்.

### செய்முறை:

ரோலர் முறைக்கும் ஸ்பைரல் முறைக்கும் தலைமயிரைச் சரிசமமான அளவுகளாகப் பிரித்து ரோலரிலோ, கம்பிகளிலோ சுற்றுதல் வேண்டும். ஹேர் பின்களினால் இறுக்குதல் அவசியம். பின்னர் கலவையைத் தடவி நேரத்தைக் குறிப்பிட்டுள்ளபடி கணித்தல் வேண்டும். நேரம் முடிவடைந்து அலாரம் அடிக்கும்போது சுருளானது சரியாக சுருட்டப் பட்டுவிட்டதா என கவனித்துப் பார்க்கவும். இல்லையேல் 5 நிமிடங்கள் விட்டு பின்னர் பரிசோதித்துப் பார்க்கவும். ஷாம்பு மற்றும் கண்டிஷனர் பாவித்து உடனடியாகக் கழுவவும்.

### வேவ்வேறு வகையான சுருட்டல்கள்

### Body Wave Perms

இவை மிகவும் தளர்ந்த சுருள்கள். இவ்வகை சுருள்கள், சுருள் மயிர்களைக் கொண்ட கூடுதலான தலைமயிர் உள்ளதெனக் காட்சியளிக்க விரும்பும் பெண்களுக்கு சரியாக அமையும். உங்கள் தலைமயிருக்கு இவ்வாறான தளர்த்தியான சுருள்கள் கூடுதலான அசைவைக் கொடுக்கும், நேர்த்தியான மயிருக்கு இச்சுருட்டும் முறையைப் பயன் படுத்தினால் பெரிய சுருள்களை நிறைவாகத் தரும். இயற்கையான அலை அலையான மயிருக்குச் செய்தால் இன்னும் சுருள்களை அதிகமாகக் காட்டும். இம்முறையை மிகவும் பெரிய கம்பிகளைப் பயன்படுத்திச் செய்வர்.

### Multi Textured Perms:

இம்முறையை இயற்கையாக சுருள்கள் உள்ளதுபோல் காட்சியளிக்க விரும்புவோர் பயன்படுத்துவர். பெரிய மற்றும் சிறிய கம்பி களை உபயோகித்து இயற்கைச் சுருள் எனக் காட்சியளிக்கச் செய்வர்.

### Pin curl Perms:

பின்களைப் பயன்படுத்தித் தலைமயிரின் சிலபாகங்களைச் சுருட்டுவதாகும். இதனை கொலிங் பின்கள் மற்றும் ஜெல்லைப் பாவித்துப் பெறலாம். இதற்கு இரசாயனக் கலவை எதுவும் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. இது இயற்கையானத் தோற்றத்தைக் கொடுக்கும். அத்துடன் இரசாயணப் பதார்த்தங்களினால் ஏற்படும் விளைவு களையிட்டு வருந்த வேண்டிய அவசியமில்லை.

44ம் பக்கம் பார்க்க...


# Arajen Beauty Centre





- Make Up
- Hair Style & Hair Care
- Dying & Highlighting
- Bridal Make Up & Arangetram
- Skin Care (All Kind of Facial)
- Threading & Waxing
- Skin Treatment
- Nail Art
- Dress Making (Saree & Blouse)
- Permanent Hair Removal
- Pedicure, Manicure
- Mehindi
- Bouquet, Sadainagam
- Cryotherapy
- Micro Dermabrasion

**Beauty Classes**
அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்

Certificate Courses & Seminars

அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E., Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

**Tel: 416.509.7978**
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca



Shan Thayaparan

Sales Representative




Happy New Year!!!

&

Thank You!!!

*Dir: 416-567-7675*

*Web:shan123.com, Email: shan123@rogers.com*


*Bus: 416-321-2228*

RE/MAX Above the Crowd!

RE/MAX Vision Realty Inc. 2210 Markham Road. TorontoM1B 5V6

My Team will help you to find Lawyers, Home Inspectors, Mortgages
Also We do Refinances and find Tenants for your Rental properties

*Not Intended to solicit properties currently listed or Buyers under buyers under agreement*


REALTY EXECUTIVES ®
REALTY EXECUTIVES GTA LTD.
Brokerage.
9889 Markham Rd. (Hwy 48),Suite 209 Markham ON L6E 0B7
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Wishing everyone a wonderful holiday season and a healthy, prosperous New Year.
We use advanced technology to sell your home faster and for more money.
~Try This for Property Info~
FREE RECORDED INFORMATION - 24 HOURS A DAY!
CALL 905-209-7686 Ext 2001
Nawaid Qamar*
Nisha Sidhu*
Agnelo Almeida*
Vignes Sinnadurai*
Pravisha Nagaretnam*
Kumaran Pathmanathan*
Kay Visvanathan*
Priya Jayasiri **
Rafiq Charaniya*
Tyrone Caldera*
Babu Selvarajah*
Yoga Sivagnanasundaram*
Emily Croos¹
Kaushik Verigawala*
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Each Office is Independantly Owned and Operated. Not intended to solicit buyers and sellers already under contract. *Sales Representative **Broker***Admin¹. Some conditions may apply.

# ஓய்வூதிய வயதில் மாற்றம்

**- குமார் புனிதவேல் -**

இன்று அனைவரும் 65 வயது வந்தால் ஓய்வூதியம் பெறமுடியும் என்ற நோக்கத்தில் தான் செயலாற்றுகிறார்கள். ஆனால் இந்த எதிர்பார்ப்பு நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. மாகாண நிதி அமைச்சர்கள் மகா நாட்டில் தேசிய நிதி அமைச்சர் ஜிம் பிளகட்டி ஒய்வூதியத்தில் சிறு அதிகரிப்பு செய்வதுடன் ஓய்வூதியம் பெறும் வயதை 67 ஆக கூட்டுவதற்கு முன்னடவடிக்கை செய்ய வுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்த ஓய்வூதிய வயது அதிகரிப்பானது கனடாவிற்கு மட்டுமல்ல உலகலாவியரீதியில் பல நாடுகளிலும் எதிரொலிக்கும் ஒரு கருத்து என்பது குறிப்பிடப்படவேண்டும். அன்மையில் பல ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய முன்னெடுப்பிற்கு மறுப்புத்தெரித்து பல ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டதை அறிந்திருப்பீர்கள். இத்தகைய மாற்றத்தை முன்கொண்டுவருவதற்கான காரணங்களை சற்று கவனிப்போம்.

இருபதாம் நூற்றாண்டில் ஒரு மனிதனின் ஆயுளின் எதிர்பார்ப்பிலும் பார்க்க இருபத்தொராம் நூற்றாண்டில் பெரிதும் அதிகரித்துள்ளது. இதற்கான முக்கிய கரணிகள்.

- வைத்தியத்துறையின் வளர்ச்சிகாரணமாக பல நோய்களினால் இறப்பு வீதம் குறைந்துள்ளது.

> “ சராசரி ஒருவர் 55 வயதின்பின் 13.6 வருடங்கள் ஓய்வூதியம் பெறுவதாக இருந்தார். ஆனால் 2010ம் ஆண்டில் சராசரி ஒருவர் 17.9 வருடங்கள் ஓய்வூதியம் பெறுவதாய் இருக்கின்றது. ”

- ஆரோக்கியமான உணவு உட்கொள்வது.
- முதியார்கள் பராமரிப்பில் மாற்றம். அதாவது, அவர்களுக்கு உடற்பயிற்சி தரும் விளையாட்டுகளில் ஈடுபடச்சந்தர்ப்பமும் தம் ஒத்தவயதினருடன் ஆட்டம், பொழுது போக்குகளில் பங்குகொள்ள சந்தர்ப்பம் ஆகியன தரப்படுகிறது. இத்தகைய காரணங்களால் கூடியகாலம் ஒருவர் ஓய்வு வாழ்க்கை வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
- ஒய்வூதிய வயதைக் கூட்டுவதற்கு இன்னுமொரு காரணமாயுள்ளது சனப் பெருக்கத்தில் குறைவு ஏற்பட்டுள்ளமை.

முன்னைய காலத்தில் ஒரு சராசரி குடும்பத்தில் ஐந்து அல்லது ஆறு பிள்ளைகள் இருப்பார்கள். ஆனால் இன்றே ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறுவதற்கு விரும்புவதில்லை என்பதுடன் விஞ்ஞன வளர்ச்சி காரணமாக கர்ப்பத்தடைக்கும் முடியுமானதாயுள்ளது. மேலும் பலர் பிள்ளைகள் வேண்டாம் என்று தீர்மாணித்துள்ளார்கள். இன்றைய நிலை தொடருமானால் ஒவ்வொரு ஓய்வு பெற்றவர்க்கும் இரண்டு பேர் மட்டுமே வேலை செய்பவராக 2031ம் ஆண்டில் ஏற்படும்.

Baby Boomers எனப்படும் இரண்டாம் உலக மகாயுத்த இறுதிக் காலத்தில் பிறந்த பெரும் தொகையினர் ஓய்வூதிய வயதை அடைந்தமையும் இன்னுமொரு காரணமாகும். இத்தகைய காரணிகள் உலகலாவிய வீதத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. 2009ம் ஆண்டு அவுஸ்திரேலியா, ஓய்வூதியவயதை 65இல் இருந்து 67 ஆக கூட்டியுள்ளது.

இம்மாற்றம் 2024ம் ஆண்டில் முழுமையாக நடைமுறைக்கு வரும். இந்த வருடம் பிரான்ஸ் நாடு தனது ஓய்வூதிய வயதை 65 இலிருந்து 67ஆக உயர்த்தியதுடன், குறைந்த ஓய்வூதியத்துடன் ஓய்வு பெறும் வயதை 60இல் இருந்து 62ஆக உயர்த்தியுள்ளது. இந்த மாற்றம் 2021இல் முழுமையாக நடைமுறைக்கு வரும். 1983இல் ஐக்கிய அமெரிக்காவில் இயற்றப்பட்ட சட்டம் 65இல் இருந்து 67ஆக 2025இல் செய்வதாக இருந்தது. ஆனால் ஜனனாயக கட்சியும், குடியரசுக்கட்சியும் இனைந்து ஒரு முகமாக அந்த வயதை 69ஆக உயர்த்துவதற்கு உடன்பட்டுள்ளது.

கனடா ஓய்வூதியத்தை (CPP) 1966ம் ஆண்டு அறிமுகப்படுத்தியவேளை சராசரி ஒருவர் 13.6 வருடங்கள் ஓய்வூதியம் பெறுவதாக இருந்தார். ஆனால் 2010ம் ஆண்டில் சராசரி ஒருவர் 17.9 வருடங்கள் ஓய்வூதியம் பெறுவதாய் இருக்கின்றது. ஓய்வூதிய வயதை இரண்டு வயதால் கூட்டுவதால் CPP இன் செலவை $15 பில்லியன் மீதப்படுத்த உதவுவதுடன் வருவாய் 5 பில்லியன்னால் அதிகரிக்கும்.

இந்நிலையில் ஓய்வூதியத்திற்காக வருவாயில் இருந்து ஒதுக்கும் தொகையை அதிகரிப்பதை தவிர்க்க முடியும். தொடர்ந்தும் 65 வயதை ஓய்வூதிய வயதாக வைத்திருப்பதானால் CPPஇற்கு அறவிடும் தொகையை அதிகரிப்பது தவிர்க்க முடியாதது. இன்றைய அரசியல்வதிகளுக்கு இது தவிர்க்க முடியாத ஒரு நிர்ப்பந்தம். முடிவுகள் எப்படி இருக்கும் என்பதை அடுத்த நிதிமந்திரிகள் மகாநாட்டில் எடுக்கப்படும், பொறுத்திருந்து பார்ப்போம்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■


## தட்டச்சு & மொழிபெயர்ப்பு

தமிழ், ஆங்கில தட்டச்சு ஒரு பக்கம் 2 டொலர் மட்டுமே.

தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பு 8 டொலர் மட்டுமே.

சாம் டேனியல், நாகர்கோவில், இந்தியா

011 91 93 6272 8808

asamdaniel@gmail.com

## KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE
Monte Carlo Corporate Centre
7045 Edwards Blvd., Suite 201 Mississauga, ON L5S 1X2

For sellers,
• 1% rebate on listing commission
• Feature sheet • Staging • Open houses
For buyers,
• free home warranty available for 1 year



ALAN SIVASAMBU
BROKER

OFFICE: 905 565 9200 CELL: 647 504 2536
FAX: 905 565 6677

alansivasambu@gmail.com • www.rightathomerealty.com
Facebook S T ALAN HOMES

# ஒழுங்கான பராமரிப்பே திறவுகோல்

## Home Maintenance Schedule

பிரபா
சின்னா



உங்கள் வீடுகளை ஒழுங்கான அடிப்படையில் பரிசீலித்துக் கண்காணித்துக் கொள்வதும் அதற்கேற்ற திருத்தங்களைச் செய்து கொள்வதும் உங்கள் வீட்டிற்கு நீங்கள் செலுத்திய முதலீட்டைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய சிறந்த வழியாகும். ஒரு சிலவற்றையோ அல்லது முழுவதையுமோ ஒரே நேரத்தில் செய்து கொள்ளலாம். ஆனால் இதைச் செய்வதை உங்கள் பழக்கமாகக் கொள்வதே முக்கியமானதாகும். ஒழுங்கான பராமரிப்பு அதிகளவு செலவிலான திருத்தங்களுக்கு, அவை உண்டாவதற்கு முன்பே முற்றுப்புள்ளி வைக்கும். தேவையாயின் அவ்விடங்களையோ, கருவிகளையோ புகைப்படம் எடுத்து வைத்திருந்தால் அவற்றைச் சிறந்த வல்லுனர்களிடம் காட்டி ஆலோசனை பெறவோ, காலபோக்கில் அதைக் கண்காணிக்கவோ உதவியாக இருக்கும்.

கீழே தரப்படுகின்ற தகவல்களைக் கடைப் பிடிப்பதன் மூலம் உங்கள் வீட்டினை அதாவது பாரிய மூலதனத்தைப் பாதுகாக்கவும், வீட்டைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வசிப்பதற்கு ஏற்ற இடமாகவும் மாற்றவும் முடியும். இங்கே தரப்பட்டவற்றைக் கடைப் பிடிப்பதற்கு உங்களிடம் தேவையான கருவிகளோ அல்லது உங்களால் இயலாமல் இருந்தாலோ வேறொருவரை உதவிக்கு அமர்த்திக் கொள்ளுங்கள்.

### பருவகாலப் பராமரிப்பு:

வெவ்வேறு பருவ காலத்திற்கு வெவ்வேறு பராமரிப்புகளும் திருத்த வேலைகளும் பொருத்தமானவையாக இருக்கின்றன. இலை உதிர் காலமானது உங்களுக்கு மிகவும் பிரச்சினையான குளிர்காலத்தை (Winter) எதிர்கொள்ளுகின்ற திருத்தங்களைச் செய்ய வேண்டிய காலமாக இருக்கின்றது. குளிர்கால – மாதங்களில் ஒழுங்கான பராமரிப்பும், பிழைகளைக் கண்டுபிடித்து அவற்றை உடனுக்குடன் திருத்த வேண்டியதாகவும் உள்ளது. இலை துளிர் காலத்தில் (spring) குளிர்காலத்தில் ஏற்பட்ட சேதங்களைத் திருத்த வேண்டியதாகிறது. கோடை காலத்தில் (Summer) பல உள், வெளி வேலைகளை உதாரணமாக கார்தரிப்பிடங்கள், நடைபாதைகள், வளவுகள், பெயிண்டிங் செய்தல் நிலங்கள் அவைகளின் சுவர்கள், படிகள் கழிவறைகள் திருத்தல் புகைபோக்கி, கூரை முதலியன பரிசீலித்தல். (Insulation) செய்தல் போன்றவற்றைச் செய்யலாம். எது எப்படி இருப்பினும் வருடம் பூராவும் சில திருத்த வேலைகள் செய்து கொண்டே இருக்க வேண்டும். அவையாவன:

- காற்றோட்டம் தடைப்படாது. ஒழுங்காக இயங்குகின்றதா என அவதானித்தல்.
- Hood filtersஐ மாதாந்தம் கண்காணித்துக் துப்பரவு செய்தல்.
- சிறுபிள்ளைகள் இருக்கும் வீடுகளில் plugs பாதுகாப்பாக மூடப்பட்டிருக்கிறதா என உறுதி செய்தல்.
- ஆடுகின்ற கைபிடிகள், ஊதியிருக்கின்ற அல்லது உடைந்த நிலப்பலகைகள், விழும் நிலையில் இருக்கும் Closet கதவுகள், இயங்காதிருக்கும் புகை அறிகருவி (Smoke deteator) கர்பன் மோனாக்சைட் கருவி, உடைந்திருக்கும் ceiling போன்ற ஆபத்து விளைவிக்க கூடியவற்றைக் கவனித்துத் திருத்தம் செய்தல்.
- மின் இணைப்புக்கள் சரியாக இருக்கின்றதா என்பதை test buttonஐ அமுக்கிக் கண்டு பிடித்தல்.



### குளிர்கால பராமரிப்புகள்:

குளிர்காலத்திற்குள் நுழைந்திருக்கும் இந்த வேளையிலே இப்பருவ காலத்தில் நீங்கள் எடுக்க வேண்டிய பராமரிப்புக்கள் பற்றி அறியத்தருவதே சாலச்சிறந்தாகும்.

அவையாவன:

- Furnaceஇல் உள்ள வாயுவை வடிகட்டும் தகடு (filter) மாதந்தோறும் கவனித்து துப்பரவு செய்தோ அல்லது புதிய தகட்டை மாற்றியோ வைக்க வேண்டும். Heat Recovery Ventilator இன் filters இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கவனிக்கப்படல் வேண்டும்.
- சுடுநீர் தாங்கியின் அடியில் உள்ள துப்பரவு செய்யும் valveஐத் திறந்து சிறிதளவு நீரை வெளியேற்றுவதன் மூலம் அடியில் படிந்திருக்கும் படிவுகளை வெளியேற்றி அதன் திறனைக் கூட்டலாம். இது மிகக் கவனமாகச் செய்யப்பட வேண்டிய ஒன்று. அத்தோடு Hot water tank owners manuel உடன் கலந்தாலோசித்த பின்பே செய்தல் வேண்டும்.
- Humidifierஐ குளிர்பருவத்தில் இரண்டு மூன்று முறை துப்பரவு செய்தல் வேண்டும்.
- கழிவறை fan grill, புகை அறி கருவியாலும் fire detector போன்றவை தூசியாலும் 'சிலந்திவலை'யாலும் செயல்திறன் இழந்திருக்கலாம். எனவே இவற்றை vacuum செய்தல் வேண்டும்.
- குளிர்சாதனப் பெட்டி, freezer போன்றவற்றின் பிற்பக்கத்தில் உள்ள radiator grillsஐயும் vacuum செய்தல் வேண்டும்.
- தீயணைக்கும் கருவியில் உள்ள அமுக்கத்தைக் கண்காணிப்பதுடன் அதை Recharge பண்ணி வைக்கவும்.
- தீ விபத்து ஏற்படும் சந்தர்ப்பத்தில் சுலபமாக வெளியேறுவதற்கு வசதியாக கதவு யன்னல்களின் பூட்டுக்கள் இலகுவாகத் திறபடக்கூடியதாகவும், வீட்டைச் சுற்றி மின் விளக்கு வெளிச்சம் கிடைக்கக் கூடியதா இருக்கின்றதா என்பதையும் உறுதி செய்தல்.
- நீராவிப்படிவு யன்னல்கள் கண்ணாடிகளிலோ, சுவர்களிலோ ஏற்படுகின்றதா என்பதை அவதானிக்கவும் இது காலப்போக்கில் அதோடு சுகாதாரச் சீர்கேடையும் ஏற்படுத்துமாகையால் இது உடனடியாகக் கவனித்துத் திருத்தப்படவேண்டிய ஒன்றாகும்.
- உங்கள் வீட்டு நீர்க்குழாய்களில் washer தேய்ந்து நீர் சொட்டுச் சொட்டாக ஒழுகிக் கொண்டிருந்தால் உடனடியாக அதைத் திருத்திக் கொள்ளுங்கள். துளித் துளியாக வெளியேறினாலும் கணிசமான அளவு நீர் வீண்விரயமாகின்றது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.
- அடிக்கடி பாவிக்காது விடப்பட்ட sink bathroom tub laundry tub போன்றவற்றில் போதியளவு நீரை இடைக்கிடை ஓடவிட வேண்டும்.
- Dishwasher, sink bath tubs முதலியவற்றில் உள்ள நீர்வடி குழாய்களைச் சுத்தம் செய்து அடைப்பில்லாமல் செய்தல் வேண்டும்
- Plumbing shut off valves ஒழுங்காக வேலை செய்கிறதா என்பதை உறுதி செய்து வைத்திருத்தல் வேண்டும்.
- கதவுகள், யன்னல்களில் கசிவுகள் இருக்கின்ற இடங்களைக் கண்டு பிடிக்கக்கூடிய காலம் இதுவாகையால் அந்தந்த இடங்களைக் கண்டு பிடித்துக் குறித்து வைத்துக் கொண்டால் இவை துளிர் காலத்தில் திருத்தம் செய்வதற்கு இலகுவாக இருக்கும்.
- கூரையின் அடியில் பனிப்படிவுகள் அதிக ளவில் இருந்தால் அதைத் திருத்துவதற்கு உரியவர்களோடு தொடர்பு கொண்டு திருத்தங்களைச் செய்யவும்.
- காற்று வெளியேறும் வழி நிலக்கீழ் அறை யன்னல் gas motor முதலியவை snow வினால் முடப்படாது பாதுகாக்கப்படல் வேண்டும்.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■

# சுருளும், தலை...

40ம் பக்கத் தொடர்ச்சி...

### Root Perms:

இது தலைமயிரின் வேர்களுக்கு ஒரு வளர்ச்சியைக் காண்பிப்பது போல் காட்சியளிப்பது. இது குட்டையான சிறிதளவிளான தலைமயிருக்கு மிகவும் பொருத்தமாயிருக்கும்.

### Stack Perms:

இம்முறையானது ஒரே நீளத்திற்கு தலைமயிருள்ள பெண்களுக்குப் பொருத்தமானது. இம்முறையில் வெவ்வேறு அளவுகளிலான ரோலர்களையும் அல்லது கம்பிகளையும் பயன்படுத்திப் பெறப்படும். பல உயரங்களைக் கொண்ட சுருள்களின் தோற்றத்தையும் அடர்த்தியான தோற்றத்தையும் பெறலாம்.

### Spiral Perms

சுருட்டும் நிபுணரின் கையிலும் பயன்படுத்தும் இரசாயனக் கலவையிலும் சுருட்டுவதற்குப் பயன்படும் கம்பியிலும் இச்சுருள்களின் விளைவு தங்கியுள்ளது. இம்முறையின்போது நீண்டு சுருட்டும் கம்பிகள் பாவிக்கப்படும். விளைவானது ஒரு கொத்து படிப்படியாக அமைந்த சுருள்கள் துள்ளுதலுடன் கூடிய வடிவமைப்பைக் கொண்டிருக்கும். இச்சுருள்கள் மிகவும் இறுக்கமாக அமைந்திருப்பதோடு எந்தப் பக்கத்திற்கும் அசையக் கூடிய தன்மை கொண்டது.

### Spot Perms:

இம்முறையின்போது தலைமயிரின் ஒரு பகுதியையே சுருட்ட முற்படுபவர் கம்பியின் அகலத்தைப் பொருத்து இறுக்கமான அல்லது தளர்ந்த சுருள்களைப் பெற்றுக் கொள்ளலாம். இம்முறையானது நாகரீகமாக தலை மயிரை உயர்த்திப் போடும் வடிவங்களுக்கு அழகு கொடுப்பதற்கு ஒரு பகுதி மயிருக்கு இதனைச் செய்யலாம்.

### Weave Perms:

இம்முறையிலும் ஒரு பகுதி தலைமயிருக்கு 'பெர்ம்' செய்வதற்குப் பயன்படும். அதேவேளை மற்றைய பகுதி நேரான தலைமயிரைக் கொண்டிருக்கும். இம்முறையின் மூலம், நேர்த்தியான மயிரின் சில பகுதிகளுக்கு வித்தியாசமான வடிவத்தைக் கொடுக்கும்.

### Gentle Wavy Perms:

இம்முறையின் மூலம் தலையிலிருந்த அதிகமான கட்டமைப்பையும் வடிவத்தையும் கொடுப்பதற்காக அலை அலையான சுருள்கள் உருவாக்கப்படுகிறது. பெரிய மற்றும் தளர்ந்த சுருள்களை உள்ளடக்கியிருப்பதோடு தலைமயிருக்குப் பருமனையும் கொடுக்கிறது.

### Martial Perms:

இதன் மூலம் தலைமயிரின் அடிப்பாகத்தில் மட்டும் சுருள்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்படுகிறது. மேற்பகுதி தலைமயிரானது நேர்த்தியாக இருக்கும். இம்முறை நடுத்தரமான அல்லது நீண்ட கூந்தலுக்கே பொருத்தமாயிருக்கும்.

### Volumizing Perms:

இம்முறையானது நிரந்தர சுருட்டும் முறை. இது எவ்வகையான உயரத்தைக் கொண்ட தலைமயிருக்கும் பொருந்தும். இம்முறையில் சுருட்டும்போது, தலையிலிருக்கும் உயிர்ப்பையும் அடர்த்தியையும் கொடுக்கும். தலை மயிர் ஓர் துள்ளுதலுடன் அழகாகக் காட்சி அளிக்கும்.

சிலவகைச் சுருள்கள் தளர்ந்து காணப் படும். இம்முறையில் சுருள்கள் அதிக அடர்த்தி யாகக் காட்சியளிக்க உதவுமே தவிர இறுக்கமான சுருள்களைக் கொண்ட தோற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளும். இந்தச் சுருள்களுக்குக் கவனம் செலுத்தப்படுவதில்லை. பெர்ம் முறையில் தலைமயிரைச் சுருட்டுவதற்கு வெவ்வேறு வழிகள் உண்டு. அமில முறையில் பேர்ம் செய்வது தலைமயிர் உடைவதைத் தவிர்க்கின்றது. அல்கலைன் பேர்மிஸ் முறையில் உறுதியான சுருள்களை உருவாக்கலாம். இம்முறையானது சாதாரணத் தலைமயிர் உடையவர்களுக்கு உறுதியான சுருள்கள் உடைய தோற்றம் அளிக்கலாம்.

### எக்சோதெர்பிக் பேர்ம் முறை:

இதன் மூலம் சிறிதளவு வெப்பத்தைச் செலுத்தி துள்ளும் சுருள்களை உருவாக்கலாம்.

நீங்கள் எப்போதும் தலை மயிரை பேர்ம் செய்வதற்கு சிறந்த சிகை அலங்கார நிபுணரைத் தேர்ந்தெடுத்தல் அவசியம். உங்களுடைய கூந்தல் நிபுணருடன் உங்களுக்குத் தேவையான சிகை அலங்காரத்தையும், உங்களது முடியின் தன்மையையும் பற்றிக் கலந்துரையாடவும்.

பெண்களே! உங்களை இந்த காலத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான சுருள்களைச் செய்து அழகுற, அனைவரும் பாராட்டும் வகையில் திகழுங்கள்.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■

# FINCH TAX & INSURANCE SERVICES

**Universal Life Insurance**

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி.
10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்

**Mortgage Insurance**

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.

**வயோதிபர்களுக்கான காப்புறுதி**

- மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை.
- உடனடியாக காப்புறுதித்திட்டம் அமுலாகும்.
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆயுட்காலம்வரை மாதாந்த கட்டணத்தில் மாற்றமில்லை.

**RESP**

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம் 20 - 40 வீதமான அரச மானியத்துடன் 15 வீத போனஸ்

**Critical Illness Insurance**

25 விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடிறும்

Apex Creations - 416-297-0707

*Our guarantees are written in your policy*

**• INCOME TAX •PERSONAL TAX •SMALL BUSINESS TAX**

**Keele & Finch**
**1315 Finch Ave. West,**
**Unit 407**

**Jameson & Queen**
**1474 Queen Street, West.**
**(Bala Supper Market Inside)**

**647-885-3012 | 647-379-2820**




# Kannan Kankesu

REAL ESTATE & MORTGAGE BROKER

Mortgage/Refinance

**Cell: 416 834 4200**
Bus: 416 284 5555

RED CARPET
Royal Realty Ltd., Brokerage

880 Ellesmere Road, Suit 204, Toronto, ON
kkankesu@gmail.com

**REAL ESTATE**
Residential, Commercial, Investment & Leasing

**MORTGAGE**
1st & 2nd Mortgage, Refinancing, Self Employed
Pre-Aproval & Commercial Mortgage

**EASY TRADING ACADEMY**
Stocks & Option Tutor
Most Powerful Trading Techniques
Life Time Support
Learn for Better life

# Free Seminar Stocks Option & Forex

LEARN EXACTLY WHEN TO BUY OR WHEN TO SELL

பங்கு சந்தை பற்றி தமிழில் கற்பிக்கப்படுகிறது
மிகக்குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்கலாம்

Kannan Kankesu
Knowledge is the Power
416-834-4200

# ஞாபகம் வருகிறதா?



சிவவதனி பிரபாகரன்

ஞாபகசக்தி. மனதில் தோன்றும் சிந்தனைப் புத்தகங்களைச் சேகரித்து வைக்க உதவும் நூலகம். இதனை சிறுவயது முதல் வளர்த்துக் கொண்டவர்கள் பலர் சாதனையாளர்களாகத் திகழ்வதனைக் காணலாம்.

பல பேச்சாளர்கள் மணிக்கணக்காக எண்ணற்ற விடயங்களை தம் பேச்சினூடாக எடுத்து வருவதைப் பார்த்திருப்பீர்கள். கச்சேரிப் பாடகர்கள் மணிக்கணக்காக பாட்டுக்கச்சேரிகளை செய்வதைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் அனைவரதும் ஞாபகசக்தி மிக உயர்வாக இருப்பதே அவர்களின் பலமாகும். இச்சக்தியால் அவர்களின் ஆற்றல்கள் மிளிர்கின்றன.

ஞாபகசக்தி என்பது வாழ்வின் ஆதாரமாகத் திகழ்கின்றது. அது பெருஞ்செல்வமாகப் போற்றப்பட வேண்டியது. வளர்த்துக் கொள்ள வேண்டியது.

## ஞாபக சக்தி என்றால் என்ன?

ஒருவருக்கு இருக்கக்கூடிய ஞாபகங்களை சேகரித்து வைக்கக்கூடிய ஆற்றல் அல்லது சேகரிக்கப்பதோடு அவற்றை வேண்டிய பொழுதுகளில் மீட்டுப்பார்த்தலும் ஞாபகசக்தி எனப்படும்.

சாதாரணமாகச் சொல்வதானால் ஞாபகசக்தி ஒருவரின் கெட்டித்தனத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது எனலாம்.

ஞாபகசக்தி என்பது அனைவருக்குமே அவசியமானது என்றாலும் மாணவர்களுக்கு இன்றியமையாதது. பாடங்களை, அதில் வரும் சொற்பதங்களை, அவர்கள் மனனம் செய்வது கட்டாய தேவை. ஆதலால் ஞாபகசக்தியைப் பற்றி அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருப்பது அவசியம். அவர்கள் மட்டுமன்றி பெற்றோர்கள் ஆசிரியர்களும் 'ஞாபகசக்தியை அதிகரிப்பது எப்படி?' என அறிந்திருப்பது அவர்களை சார்ந்திருக்கும் சிறாரின் ஞாபகத்திறன் வளர்ச்சிக்கு மிகவும் உதவும்.

## 3 செயன்முறைகளின் அடிப்படையில் தங்கியுள்ள ஞாபகத்திறன்:

- கற்றல் (Learning).
- ஞாபகத்தில் வைத்திருத்தல் (Retention).
- மீட்டுப் பார்த்தல் (Recall).

> "மனித மூளைக்கு அளவற்ற விடயங்களை ஞாபகத்தில் பதிவு செய்யும் ஆற்றல் உள்ளது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகை யுக்திகளைப் பயன்படுத்துவர். யுக்திகள் ஞாபகப்பதிவுத்திறனை ஊக்குவிக்கின்றன."

எம்மில் சிலருக்கு எந்த ஆண்டுகாலத்தில் என்ன நடந்தது, எப்படி நடந்தது யார் யார் ஒவ்வொரு நிகழ்விலும் பங்கேற்றார்கள் போன்ற பல விடயங்கள் அத்துப்படி. தம் வாழ்நாளில் எக்காலப்பகுதிகளில் என்னென்ன நடந்தது போன்ற மிகப் பழமையான நிகழ்வுகளைக் கூட மிகச் சிறப்பாக தவறின்றி மீட்டுரைக்க இயலுமாக இருப்பதைக் கண்டிருப்பீர்கள். அதேவேளை, வேறு பலருக்கு அன்றாட நிகழ்வுகளே இலகுவில் மறந்து போவதைப் பார்த்திருப்பீர்கள். பொருட்களை வைத்த இடத்தை மறந்து தேடுபவர்கள் எம்மில் பலர். முக்கிய ஆவணங்களைத் தொலைத்துத் தேடி அலைபவர்களைப் பார்த்திருப்போம்.

இவற்றுக்கும் காரணம் நாம் எம்மூளையைப் பயிற்றுவிக்காதமையே. பொன்னான காலத்தை 'தொலைத்தவற்றைத் தேடி அலைவதற்கு' வீணாக்கலாமா? வேலைத்தளங்களில் மேலதிகாரிகள் பணித்த வேலையை செய்ய மறப்பது, பாடசாலைகளில் பணிக்கப்பட்ட வீட்டு வேலைகளை செய்ய மறப்பது பேச்சாளர்கள் பேசிக்கொண்டிருக்கையில் பேச்சை மறப்பது, மருந்துவர்கள் சொன்ன மருத்துவக் குறிப்புகளை மறப்பது என "பாழாய்ப்போன ஞாபகமறதி எம்மைப்பாடாய் படுத்துகிறதே!" என அழாதவர்கள் எம்மில் மிகச் சிலரே.

## ஞாபக சக்தி இல்லாதவர்கள் எப்படி தம் ஞாபகத்திறனை நம்பி ஒரு காரியத்தில் இறங்கமுடியும்?

'Mnemonics' என்பது மூளையிலுள்ள பயிற்றப்பட்ட பெரும் பகுதி மூளையைக் குறிக்கும். கிரேக்க பெண் கடவுளான Mnemosyneஇன் பெயரிலிருந்து வந்த சொல்லிது. இதுவே ஞாபக மீட்டலை வளர்க்க உதவுவது. மூளையில் பதிவாகாவிட்டால் எதையும் மீட்க முடியாது. அத்தோடு சரியானமுறையில் பதிவாகா விட்டாலும் பதிவு மீட்டல் முயற்சி என்பது சாத்தியமில்லை.

கூர்மையான ஞாபக சக்தி ஒருவரை வெற்றியின் சிகரம் நோக்கி இட்டுச் செல்கின்றது. ஒருவருக்கு ஆர்வமும் முயற்சியும் ஒருவிடயத்தில் இருக்குமாயின் அவர் இலகுவாக அதுசார் விடயங்களை மனனம் செய்வார். இதனால் இத்துறையில் அவரால் வெற்றியீட்ட முடியும்.

Lucius Scipio என்பவர் ரோமாபுரியிலுள்ள அத்தனை மக்களதும் பெயர்களை ஞாபகம் வைத்திருந்தார் எனக் கூறப்படுகின்றது. நாம் எவ்வளவு விடயங்களை மனனமாக்குகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு எமது மனன சக்தி மேலும் பலமடங்காக அதிகரிக்கின்றது. ஞாபகசக்திக்கு வேண்டியது ஒருமுகச்சிந்தனையே. சாமுவல் ஜோன்சன் என்பவர் 'The true, art of memory is the art of attention' எனக்கூறியது போல் எமது ஒருமுகச் சிந்தனைத்திறனே எமது ஞாபகசக்தியை நிர்ணயிக்கின்றது. ஒருமுக சிந்தனைத்திறன் ஆர்வத்தின் வழிகோலி. ஆர்வமின்றி அவதானமின்றி கவனிக்காது விடும் எந்த விடயமுமே ஞாபகத்தில் நிலைக்கமாட்டாது. எங்கள் ஞாபக சக்தியை வளர்க்க வேண்டுமாயின் நாம் எமது சிந்தையை மனனம் செய்யப் பயில வலியுறுத்த வேண்டும்.

சிலர், ஞாபகம் வைத்திருப்பதற்காக குறிப்-

52ம் பக்கம் பார்க்க...


**$10,000 Non Medical Insurance / Funeral Expense**

| Age | Female | Male | Male Smoker |
|---|---|---|---|
| 60 | $36.00 | $44.13 | $61.00 |
| 65 | $47.00 | $60.04 | $71.00 |
| 70 | $62.00 | $82.92 | $89.00 |
| 75 | $83.00 | $116.25 | $117.00 |

Some conditions may apply

**அனைத்து ஆயுட் காப்புறுதித் தேவைகளுக்கும் பகீரதன் சகாதேவன்**



**பகீரதன் சகாதேவன்**
முழுநேர விற்பனை முகவர்
Century 21 Affiliate Realty Inc. Brokerage
Off: 416.290.1200

**Bank Sale**

**Simcoe / Colin Rd** — $275,900



4 Bedrooms, 3 Washrooms

**N Of Rutherford/S Of Major Mac** — $529,900



4+2 Bedrooms, 5 Washrooms

**CALL 416.908.6003 SAVE MONEY**

**RESP**

The Canada Learning Bond program, provides up to **$2,000** in free money to those who qualify when they open an RESP.

**Parents are not required to put any of their own money down to get the grant**

*Once they open an RESP, the government will automatically deposit $500. Future grants could total up to $1,500.*

**RESP**


SELLING-BUYING-INVESTING
2011
எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், எம்முடன் இணைந்து
பணிபுரிந்து வரும் பல்துறை சார்ந்த எமது நண்பர்களுக்கும்,
தொடர்ந்து ஆதரவு வழங்கிவரும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
உங்களுக்கான வீட்டை
0% Down Payment
இல் வாங்க வேண்டுமா?
எங்களை அழையுங்கள்
Down Town Condo இல் முதலீடு செய்ய உங்கள் தெரிவுக்கு
எங்களை அழையுங்கள்
The Station
1 Bloor
The Theatre Park Tower
Tableau
The Ocean Club
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc. Brokerage*
205-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
Mugunthan Nadarajah
Sales Representative
Direct: 416-276-8025
*Independently Owned and Operated
Thamil Suberamaniam
Sales Representative
Direct: 416-358-6200
புதிய முகவரி தேடும் உங்களுடன் முகவர்களாய் நாங்கள்

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**





**Asking 2.5million**
Well Maintained Corner Location In Downtown Lindsay,
All Brick With 20 Apartments
And 5 Main Floor Comm/Retail Tenants




**1.3 million**
Space Banquet hall ,coin laundry and
7 office units, Scarborough



**Asking 370,000**
Restaurant space with zoning
New Delhi Dr ,markham



**Asking 229,000**
Restaurant in rockwood
50,000 monthly sales



**எமது சிறப்புத் தேர்ச்சியின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் !**

# EXPERIENCE

## Specializing in
Buying, Selling & Leasing of

- Residential Homes
- Condominiums
- Duplex & Multiplex Units
- Commercial



**Logan Velumailum** (B.Sc)
Broker

Office : **416 - 497 - 9794**
Direct : **416 - 410 - 1620**
E-Mail: vlogan599@yahoo.com
Website: www.monsoonhomes.com

COLDWELL BANKER

Coldwell Banker Exceptional Real Estate Services
3107 Sheppard Ave East
Toronto, ON. M1T 3J7

# மலசல வெளியேற்றக் கட்டுப்பாட்டிழப்பும் முதுமையடைதலும்

## (Incontinence and Aging)



கந்தையா
பரநிருபசிங்கம்

முதுமையடைதலுடன் மலசலவெளியேற்றக் கட்டுப்பாட்டிழப்பின் காணப்படுநிலை கணிசமான அளவு உயர்ந்துசெல்வது உண்மையெனினும், இது முதுமையடைதலுடன் தொடர்புடைய பிரச்சினையோ அல்லது ஒரு வியாதியோவல்ல.

ஒருவருக்கு மலம் அல்லது சலம் கழிப்பதில் பிரச்சினையுண்டெனில் அது அசட்டைசெய்யக் கூடாத ஒரு நலப்பிரச்சினை. மறுபுறத்தில் தன்னிச்சையாக மலம் அல்லது சலம் வெளியேறுவற்கு இப்பொழுது பரிகாரம் காணக்கூடிய முறைகள் உண்டு. அத்துடன் இவற்றைக் குணமாக்க சில வேளைகளில் முடியும்.

சலவெளியேற்றக்கட்டுபாட்டிழப்பு எமது உடலில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஏதோவொரு மாறுதலுக்கான குணம்குறியாகவே பார்க்கப்படவேண்டும். எனவே எமது நலனில் அக்கறை கொள்ள எடுக்கும்போது வெட்கத்திற்கோ, சங்கடத்திற்கோ இடமளிக்கக்கூடாது.

சலவெளியேற்றக்கட்டுப்பாட்டிழப்பு வீங்கிய புறஸ்ரேற்றுச் சுரப்பி, ஈஸ்ரயின் இழப்பு, நலிவுற்ற இடுப்புத்தளத்தசைகள், நலிவுற்ற சிறுநீர்ப்பை இறுக்கித்தசை அல்லது சத்திரசிகிச்சையால் ஏற்பட்டவிளைவுகள் போன்ற பல காரணிகளால் ஏற்படுமாதலால், எதனால் இது ஏற்பட்டுள்ளது என்பதை அறியவேண்டும்.

கனடாவில் முப்பத்திமூன்று லட்சம் வரையிலான மக்கள் மலசல வெளியேற்க்கட்டுப்பாட்டிழப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்பின் வீச்சம் மாதத்திற்கு ஒருமுறை என்றதிலிருந்து ஒரு நாளில் பல தடவைகள் என்றவரையிலானது. இந்த வீச்சில் நீங்கள் எங்கிருந்தாலும் அது உங்கள் வாழ்க்கைத்தரத்தில் உணர்ச்சிரீதியான மறைத்தாக்கத்தை ஏற்படுத்தும். 'கனடிய மலசல வெளியேற்றக்கட்டுப்பாட்டு மைய ஆய்வின்படி இக்கட்டுப்பாடிழப்புடன் வாழ்ந்துவரும் பெண்கள் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வரும் பெண்களைவிட அதீத மனவழுத்தத்திற்கு உட்படலாம் என அறியப்பட்டுள்ளது.

மேலும் சலவெளியேற்றக்கட்டுப்பாட்டிழப்பு ஞாபகமறதி வியாதி, பக்கவாதம், போன்ற தீராத நோய்நிலைகளை உருவாக்கலாம் அது ஒருவரின் நலத்தொடர்பு அவரின் வாழ்க்கைத் தரத்தை மிகவும் ஒவ்வித முறையில் பாதிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், வயோதிபர்களை வயோதிபர்கள் இல்லங்களில் வைத்திருப்பதற்கு இந்த மலசலவெளியேற்றக் கட்டுப்பாட்டிழப்பும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

எவ்வாறயினும் நீங்கள் இந்தக்கட்டுப்பாடிழப்பை அனுபவித்து வந்தீர்களானால், இதிலிருந்து நிவாரணம்பெற நீங்கள் செய்யக்கூடிய பல வழிகள் உண்டு.

உங்களுக்கு அண்மைக்காலத்தில்த்தான் இந்த நிலை ஏற்பட்டிருந்தால், உங்கள் உடலில் என்ன நடைபெறுகின்றது என்பதைப்பற்றிக் குறித்துவைத்திருக்கவேண்டும். அதற்கு பின்வரும் கேள்விகளைக்கேட்டு அவற்றிற்கான பதில்களைப் பதிவுசெய்து வைக்கவேண்டும்.

### மலசலக் கட்டுப்பாட்டிழப்பின் மீதிறன் என்ன?

சில மருந்துகள், மலச்சிக்கல், அகச்சுரப்புக்களின் சமநிலைக்குழப்பம், யோனித்தொற்று, சிறுநீர்வழித்தொற்று, ஆகியன தற்காலிகக் கட்டுப்பாட்டிழப்பை ஏற்படுத்துவதனால் இவற்றால் கட்டுப்பாட்டிழப்பு ஏற்படவில்லை என்பதை உறுதிசெய்யவேண்டும்.

### கட்டுப்பாட்டிழப்புச் சூழ்நிலைகள் எவை?

- சிரிக்கும்போது, தும்மும்போது அல்லது ஓடும்போது கட்டுப்பாட்டிழப்பு ஏற்படுகின்றதா? சலம் வெளியேற்றவேண்டும் என்ற வலுவான உந்துதல் இருக்கும்போது சலகழிக்கமுடியாமல் இருக்கின்றதா?
- எவ்வளவு சலம் இழக்கப்படுகின்றது?
- இக்கட்டுப்பாட்டிழப்பு நீங்கள் வேலை செய்வதற்கு, விளையாடுவதற்கு அல்லது சமூகத் தொடர்புகளுக்கு குறுக்கே நிற்கின்றதா?
- நீங்கள் எவ்வளவு நீர்ப்பானம் எடுத்துக் கொள்கின்றீர்கள்? அது ஒரு நாளில் எப்பொழுது?
- நீங்கள் எப்பொழுது மலசலகூடம்சென்று வருகின்றீர்கள்?
- நீங்கள் என்னென்ன மருந்துகள் எடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? உங்கள் நலநிலை என்ன?

மேற்கூறிய தகவல்களுடன் உங்கள் குடும்ப வைத்தியரை நாடி, அவருக்கு இக்கட்டுப்பாட்டிழப்பினைப் பரிகாரம் செய்வதற்கான வசதிகள் இருக்கின்றதா எனக்கேட்கவும். அப்படி இல்லையெனில், அவரிடம் இருந்து இதுசம்பந்தமான உதவியைப்பெற்றுக்கொள்ள அத்துறை வல்லுனர்களுக்கு உங்களை அனுப்ப சிபாரிசுவைப் பெற்றுக்கொள்ளுங்கள். இவ்வகையான வல்லுனர்களின் வீச்சு தாதி, இக்கட்டுப்பாட்டிழப்பு ஆலோசகர்கள், உடற்கூறப்பியாச வல்லுனர்கள், இனப்பெருக்க சிறுநீர்தொகுதி வல்லுனர்களாக இருக்கலாம்.

மேலும், மேலதிக வைத்திய தகவல்களைப் பெற சில சோதனைகள் சிபாரிசு செய்யப் படலாம்.

உங்கள் கட்டுப்பாட்டிழப்பின் வகையும் காரணமும் நிர்ணயிக்கப்பட்டபின் அதை நிர்வகிக்க பல் தேர்வு முறைகளைக் கையாளலாம்.

அநேக சந்தர்ப்பங்களில் சிறுநீர்ப்பை மீழ்பயிற்சி, கெகெல் பயிற்சிகள் ஆகியவை இடுப்புத்தளத்தசைகளை வலுவாக்கச் செய்யப்படும். அத்துடன் எமது வாழ்க்கைமுறைய மாற்றத்தை ஏற்படுத்துவதும் கணிசமான அளவிற்கு உதவியாகவிருக்கும். மலசலகூட வழமைகள், உணவு, திரவ உட்கொள்ளல் ஆகியவற்றில் மாற்றத்தைக் கொண்டுவருதல், மற்றும் பயிற்சிகள், தூண்டல் உபகரணங்களைப்பாவித்தல் போன்றவை நல்ல பலனைக் கொடுக்கும்.

பயிற்சிகள், மின்தூண்டல் ஆகியவற்றை பாவிக்கும்போது சரியான தசைகளை இனம் கண்டு சுருங்கப்பண்ணவேண்டும்.

உணவு, திரவங்களைப்பொறுத்தமட்டு எதை எதைத் தவிர்க்கவேண்டும் என்பதை அறியவேண்டும் ஏனெனில் இவை சிறுநீர்ப்பையை உறுத்தும்.

நலத்திற்குப் பொருத்தமான உடல் நிறையைப்பேணல், புகைபிடித்தலை நிறுத்துதல் மற்றும். மதுசாரத்தின் அளவினை மட்டுப்படுத்தல் போன்றவையும் அனுகூலமாக அமையும்.

சிறுநீர்ப்பையின் பயிற்சியும், மீழ்பயிற்சியும் எவ்வாறு நீங்கள் உங்கள் மலசலகூடம் செல்லும் உந்துதலை குறைத்து சலக்கழிப்புகளுக்கிடையான நேரத்தைப் படிப்படியாக் கூட்டும். இதே தொழிலைச் செய்ய இன்று மருந்துகளும் உள்ளன. இந்த வகையில், சிறுநீர்ப்பையின் சுருக்கித்தசையை இறுக்கி அல்லது சிறுநீர்ப்பையின் முற்றாக வெளியேற்றும் தன்மையினை விருத்திசெய்ய உதவும் மருந்துகள் உண்டு. இவற்றைவிட கட்டுப்பாட்டிழப்பை நிர்வகிக்கும் உற்பத்திப் பொருட்கள், சேகரிக்கும் பொருட்கள், ஊசிபோடுதல், மற்றும் சத்திரசிகிச்சை ஆகியவை பிற சாத்தியக்கூறுகளாகும். சத்திரசிகிச்சைத் தேர்வில் பல வழிகளைப் பிண்பற்றாக் அவையாவன சிறுநீர்ப்பையின் கழுத்தை மீளிடப்படுத்தல், இடுப்பின் தளத்தசைகளைச் சரிசெய்தல், தடையை ஏற்படுத்தும் இழையங்களை அகற்றல், மற்றும் நாரி நரம்பைத்தூண்ட ஒரு உபகரணத்தை செலுத்தி வைத்தல்.

ஆண்களில் சலவெளியேற்றக் கட்டுப்பாட்டிழப்பைக் கவனிக்க புறஸ்ரேற் புற்றுநோய்ச் சத்திர சிகிச்சைக்குப்பின் செயற்கையான இறுக்கத்தசையொன்றை செலுத்தி வைத்திருத்தல் உதவியாக இருக்கும்.

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■




தாய்வீட்டிற்காக கருத்தோவியம் சிவமாமுனி ©2010

## உடலும் உள்ளமும் நலந்தானா?

# நோயின் பன்முகம்

**தொடர் - 02**

நலம் அல்லது ஆரோக்கியம் என்பது உண்மையில் என்ன? என்பதைப் பற்றி கடந்த இதழ்முதல் விளக்கமளிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அதன் தொடர்ச்சியாக உடல் நலம் என்பதன், உலக சுகாதார ஸ்தாபனத்தின் வரை விலக்கணத்தை ஏற்கனவே பார்த்தோம். இதன் அடிப்படையிலே 'மன நலம்' என்பதைப் பற்றிய அண்மைக் கால விழிப்புணர்வு மனித சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.


பல ஆண்டுகளுக்கு முதல் வெறும் உடல் தொடர்பான விடயங்களுக்கே முக்கியத்துவமும், மனித நோய்கள் எல்லாம் உண்டாகிறது என்ற எண்ணமும் மருத்துவத்தில் நிலவி வந்தது. ஆம் இன்னும் சில வேடிக்கையான தகவல்களும் உண்டு என்பதையும் மறைக்க முடியாது. முன்னொருகாலத்தில் நோய்கள் என்பது கடவுளின் சாபம், நமது முன்னோரின் பாவச் செயல்களின் விளைவு, இந்தப் பிறவியில் நாம் அனுபவிக்க வேண்டிய கர்மாவின் வினை, சாத்தான்களின் சித்துவிளையாட்டு, ஏவல், பில்லி சூன்னியம் போன்றவற்றினால் தான் வியாதிகள் வருகிறது என்ற கொள்கை இருந்தது. ஏன், இன்றும் பலர் இதன் மேல் நம்பிக்கை வைக்கத்தான் செய்கிறார்கள்.

18ம், 19ம் நூற்றாண்டுகளில் தான் பல நோய்கிருமிகள் புதிது புதிதாய் கண்டுபிடிக்கப்பட்டு, நோய்க் கிருமிகளினால் தான் பெரும்பாலான மனித நோய்கள் வருகிறது என்ற கொள்கையை மருத்துவ உலகம் ஏற்றுக் கொண்டது. அதன் பின்பு தான் நுண்ணுயிரியல் - Microbiology என்ற மருத்துவப் பிரிவும் வளர்ச்சியடைந்தது. ஆனால் அந்தக் கொள்கையும் நீண்டகாலம் நிலைக்க வில்லை. தொற்று நோய்கள் மட்டுமே இவ்வாறு கிருமிகளால் பரவுகிறது மற்றும் இன்னும் சில கிருமிகளும் உடலிலே புகுந்து, தங்கி நீண்டகாலத்திற்கு பிறகும் நோய்களை உண்டாக்குகிறது. இவையெல்லாம் மொத்த மனித நோய்களில் வெறும் ஐந்து விகிதம் தான் என்றும் பின்னர் மருத்துவ உலகம் ஏற்றுக் கொண்டது.

பின்னர் நோய்களின் காரணிகளின் கொள்கையில் பெரிய மாற்றமொன்று உண்டானது அதுதான் உயிர் இரசாயணக் கொள்கை. ஆம், உடலிலுண்டாகும் பல்வேறு வளர்சிதை மாற்றங்கள், சுரப்பிகள் மற்றும் ஹோமோன் களின் மாறுபாடு, இழையங்களிலும் இரத்தத்திலுமுள்ள இரசாயணங்களின் மாறுபாடும் வேறுபாடும், உப்புகள், அமிலங்கள், தாதுக்கள் இவற்றிலுண்டாகும் ஏற்றத்தாழ்வுகள், ஊட்டச் சத்துக்கள். விற்றமின்கள் போன்றவற்றின் குறைபாடுகள், இவற்றினால் தான் பல நோய்கள் வருகிறது என்பதும் இடைப்பட்ட காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

மேலும் இதற்கு அடுத்தபடியாக சுற்றுச்சூழல் மாசடைதல், காலநிலை மாற்றங்கள், கதிர் வீச்சுக்கள், தொழிற்சாலைகளில் உண்டாகும் புகை, கழிவுகள், நச்சுத்தன்மைகள் இவையெல்லாம் ஏதோ ஒருவகையில் மனித உடலை தாக்குகின்றன மற்றும் ஒவ்வாமையாலுண்டாகும் உடல் பாதிப்புகள் இப்படி பல காரணிகள் பல நோய்களுக்கு காரணமாக அமைகிறது என்ற கொள்கை நிலவத் தொடங்கியது. இதனை 'Environmental Factors' என்ற தலைப்பின் கீழ் ஆய்வுகள் செய்யத் தொடங்கினார்கள். இறுதியில் இதுவும் சில சதவீதம் தான் என்று முடிவு செய்யப்பட்டு அதன் பின்னர் வியாதிகள் பொதுவாக பரம் பரையாக அல்லது பாரம்பரியமாக வந்து கொண்டிருக்கிறது போன்ற கருத்து, 'மனிதனின் ஜீன்கள்' என்ற கண்டுபிடிப்புக்கு பின்னர் சற்று உறுதி செய்யப்பட்டது என்றாலும் சில வியாதிகள் சில நேரங்களில் மட்டும்தான் சந்ததிகளுக்கு கடத்தப்படுகிறது என்பதும் உண்மையான விடயமாகும். இது தொடர்பான ஆய்வுகள் மருத்துவத்தில் இன்று 'Genetic Engineering' என்ற பிரிவில் மிக விரைவாக வளர்ச்சியும் பிரபலமும் அடைந்து வருகிறது.

> ❝ ஒரு நோய் உருவாகுவதற்கு பல்வேறு பரிமாணங்களும் பல்வேறு விதமான காரணிகளும் காரணமாக இருக்கும் என்பதைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும் ❞




பிறகு நீண்டகால ஆய்வுகளுக்கு பின்பு இன்னொரு விடயம் மருத்துவத்தில் பிரபல்யமாக தொடங்கியது அது 'இம்யூனோலோஜி' என்ற நோய் எதிர்ப்பியல். ஆம் பல நோய்கள் இதன் காரணமாகவே தொடர்புபடுத்தப்பட்டு, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி ஏதோ ஒரு காரணங்களினால் குறைவு உண்டாகும் போது தான் நோய்கள் மனிதனை தாக்குகின்றது என்ற கொள்கையில் அந்த 'ஏதோ ஒன்று' என்ன என்பது தான் இன்னும் வெளிச்சமாகாமல் ஆய்வுகள் ஆழமாகச் செல்கிறது. ஆம் இதைப் பற்றி இன்னும் விளக்கமாக பிறிதொரு கட்டுரையில் உங்களோடு பகிர்ந்து கொள்வோம்.

இப்படி மனிதனின் நோய்க்கான வியாக்கியானங்களில் என்னதான் ஆய்வுகள் தொடர்ந்தாலும் அண்மைக் காலங்களில் தான் 'மன நலம்' என்ற கொள்கை வலுப்பெறத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டிற்கு பின்புதான் இதைப்பற்றி விழிப்புணர்வு மருத்துவத்தில் ஏற்பட்டு, 'Psychology and Psychiarty' க்கு தனியான மருத்துவப்பிரிவுகள் உருவாக்கப் பட்டன. அதன் பின்பு பல நோய்களுக்கு மனிதனின் மனநிலையும் ஒரு காரணி என்று பல வியாதிகள் 'மனம் சார்ந்த உடல் நோய்கள்' என்று (Psycho – Somatic Disorders) முத்திரை குத்தப்பட்டது. ஆனால் அதிலும் என்ன வேடிக்கையென்றால் காரணம் தெரியாத பல நோய்களுக்கு மருத்துவர்களே மனநலத்தை அடிப்படையாக வைத்து இந்த வருத்தத்திற்கெல்லாம் மனசுதான் காரணம் என்று சாக்குப்போக்கு சொல்லி தப்பிக்க வழியாக அமைந்துவிட்டது. இன்னொரு நல்ல விடயம் என்னவென்றால் இந்த பருஉடலை அதாவது பௌதீக உடலை (Physical Body) தவிர இன்னொன்றும் அதாவது உள்ளம், மனம் என்கிற விடயம் இருப்பது உறுதி செய்யப்பட்டது. ஏனென்றால் இதைப்பல ஆண்டுகளாக மெஞ்ஞானம் தான் ஏற்றுக் கொண்டிருந்ததே தவிர விஞ்ஞானம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இன்று இந்தத் துறையிலே ஐம்பதுக்கும் மேல் மருத்துவப் பிரிவுகள் உண்டு என்றால் ஆச்சரியப்படுவீர்கள்.

இப்படிப் பல நோக்குள்ள, கொள்கைகளை அடிப்படையாக் கொண்ட நோயியல் மற்றும் நோய்களின் காரணிகளைத் தொகுத்து உலக சுகாதாரஸ்தாபனம் பல குழப்பங்களைத் தவிர்க்க புதிய கொள்கையொன்றை வகுத்தது. அதுதான் 'Holistic Concept' அதாவது 'பன்முகப்பார்வை கொண்ட கொள்கை'. ஆம்



**போல் யோசேப்**
ஹோமியோ மருத்துவ நிபுணர்

ஒரு நோய்க்கு பல்வேறு பரிமாணங்களும், அந்த நோய் உருவாகுவதற்கு பல்வேறு விதமான காரணிகளும் காரணமாக கருத்திற் கொள்ளப்படுதல்.

ஆகவே ஒரு நோய் ஒருவருக்கு ஏற்படுவதற்கு ஒன்றிரண்டு காரணங்கள் என்ற கொள்கை பொய்பிக்கப்பட்டு, பன்முகக்காரணக் கொள்கை அல்லது 'Multi factorial causation of Diseases' என்பது இன்று ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

இதில் இன்னொரு முக்கியமான விடயமும் கருத்திற் கொள்ளப்படவேண்டியுள்ளது. அதாவது 'Risk Factors' என்ற காரணியாகும். ஒரு வியாதி உருவாகுவதற்கு, நான் முன்பு குறிப்பிட்டது போல பல்வேறு காரணங்கள் இருந்தாலும் இவற்றோடு பக்கபலமாக இருந்து வியாதியின் தன்மையையும், அதீத வளர்ச்சியினையும் தூண்டிவிடும் 'தூண்டிகள்' அதாவது ஊக்கிகள் போன்றவை மிகவும் முக்கியமானவையாகும். இவ்வாறான பக்க பலமாகவுள்ள நோய்த் தூண்டிகள் பெரும்பாலும் இரண்டு வகைகளாக பிரித்தறியப் படுகிறது. ஒன்று 'Modifiable Risk Factor' அதாவது மாற்றக் கூடிய, திருத்தக்கூடிய, அல்லது தவிர்க்கக் கூடிய காரணிகள், உதாரணமாக புகைப்பழக்கம், மதுபான உபயோகம், கொழுப்புணவுகள், உடற்பயிற்சிகள், மாசுப்பொருட்கள், நச்சுப்பொருட்கள், தொழில் சார்ந்த பிரச்சினைகள், மனவழுத்தம், உணவுப்பழக்கம் போன்ற பல விடயங்களில் மாற்றங்களை செய்து நோயின் தீவிரத்தை குறைக்கலாம் அல்லது வராமல் தடுக்கலாம்.

அதே போல் 'Unmodifiable Factors' என்ற மாற்ற முடியாத காரணிகளும் உண்டு. உதாரணமாக வயது, பாலினம், பாரம்பரியம், போன்றவையாகும். மேற்சொன்ன எல்லா விடயங்களுக்கும் உதாரணம் காட்டி ஒரு விளக்கத்தைத் தரமுயற்சி செய்கிறேன். எல லோருக்கும் தெரிந்த மாரடைப்பு, எல்லோரும் பயப்படும் இந்த இதயச் செயலிழப்பு இன்று மனித சமூகத்தை மரணபயத்திற்கு ஆளாக்கும் ஒரு நோயாகும். இந்த நோயின் அறிகுறியும் விளைவும் ஒருவருக்கு திடீரென ஏற்படலாம். ஆனால் இந்த வியாதியின் பரிமாணம் ஒருவருக்குள் நீண்டகாலத்திற்கு முன்னே பல்வேறு பன்முகக் காரணிகளால் உருவாகத் தொடங்கியிருக்கும்.

இதையே இங்குள்ள அட்டவனையின் மூலம் இலகுவாக விளங்கிக்கொள்ள இயலும். இவ்வாறான பன்முகக் காரணிகள் இதயத்தின் முடியுரு நாடிகளை எவ்வாறு பாதிக்கிறது. அதன்பின்பு மாரடைப்பு போன்ற பல விடயங்களை படத்தின் மூலம் தெரிந்து கொள்ளுங்கள்.

தொடரும்...


paul.joseph@thaiveedu.com

■ ■ ■




**எலி பூச்சித் தொல்லையா...?**

**RUBAN PEST CONTROL**



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி. பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

**KANTHAN**
**416•291•3997**










**OPEN HOUSE Sat & Sun 1 TO 5PM**
**Excellent Location in Markham, Warden & 16th Ave**
**Approx 1.66 Acres Land with large front lot.**
**Call Krish for more info at 416-895-4457**

# $925,000








Staines & Steeles
4 Bed & 4 Wash



Delaney & Church
4 Bed & 3 Wash



Mccowan & Eglinton
3 Bed & 4 Wash
Open House Sun 2-4 Pm




Neilson & Sheppard
2+1 Bed & 2 Wash



Jane & Sheppard
3 Bed & 2 Wash



Midland & Lawrence
2 Bed & 1 Wash



Finch & Keele
2 Bed & 1 Wash



Mccowan & Eglinton
3 Bed & 2 Wash



Finch & Pharmacy
4+1 Bed & 2 Wash



Ellesmere & Markham
4+2 Bed & 2 Wash



Markham & Steeles
3 Bed & 2 Wash




Meadowvale & Sheppard
3+1 Bed & 4 Wash



Finch & Middlefield
3 Bed & 3 Wash




Holland & Professor Day
4 Bed & 3 Wash



Yorkmills & 401 & Vick. Park
4+1 Bed & 2 Wash



16 th Ave & 9 th Lane
3 Bed & 3 Wash



Finch & Middlefield
2 Bed & 2 Wash



Danforth & Midland
2+1 Bed & 2 Wash



Neilson & Mclevin
2 Bed & 2 Wash

**Happy New Year 2011**
**Diamand Club Award Winner 2010**

## Krish Sivapatham
Sales Representative
**Direct : 416-895-4457**
**www.krishome.ca**

Indepently Owned and Operated, REALTOR
This is not intended to solicit properties Currently under contract/ some conditions may apply/ I Do Not Represent The Developer

HOMELIFE HIGHER STANDARDS 25th ANNIVERSARY

For Your New Dowtown Condo
www.newcondoingta.com
**HomeLife/ Future Realty Inc.,**
Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
**Bus:905-201-9977 Fax: 905-201-9229**

# சட்டவிரோத வாகனத்...

32ம் பக்கத் தொடர்ச்சி...

**வீதி ஒழுங்குகளை கண்காணிக்கும் ரொரன்ரோ நகரசபை காவல்துறை உத்தியோகத்தர்கள் (Toronoto Police Officers Working in Traffic Division)**
ரொரன்ரோ நகரின் பொலிஸ் பிரிவில் வீதி ஒழுங்குகளை கண்காணிக்கும் உத்தியோகத்தர்கள் வாகனங்கள் சட்டவிரோதமாக தரித்து நின்றால் அவ்வாகனங்களுக்கு தண்டனைச் சீட்டினை வைப்பார்கள்.

### மார்ச் 2008லிருந்து அதிகரித்த சட்டவிரோத வாகனத் தரிப்புத் தண்டம்:

- உடல் அங்கவீனமானவர்களுக்குரிய வாகன தரிப்பு இடத்தில் அதற்குரிய அடையாள அட்டையில்லாது தரிப்பு செய்தால்? (Parking in a Disabled Parking zone) $450 டொலர் வரை தண்டனைச் சீட்டு வழங்கலாம்.
- தீயணைக்கும் பகுதியினை தடைசெய்து வாகனம் நிறுத்தினால் (Parking in Fire Route) $100 - $250 வரை வழங்கப்படலாம்.
- தீயணைக்கும் தண்ணீர் குழாய்க்கு (Yellow Colour Pipe Line) அருகில் மூன்று மீற்றருக்குள் வாகனம் தரித்து இருந்தால் (Parking in Fire Hydrent) $100 டொலர் வரை வழங்கப்படலாம்.
- மூன்று மணித்தியாலம் மட்டும் வாகன தரிப்பு செய்யலாம் என்ற இடத்தில் அதனை மீறி அதிக நேரம் தரிப்பு செய்தால்? (Park longer than 3hours) $15.00 டொலர்.
- வீதியோரமாக வாகனம் நிறுத்தாது வீதி விளிம்பிலிருந்து 30 செ.மீற்றருக்கு அப்பால் நிறுத்தினால் (Park more than 30c.m from curb) $15.00 டொலர்.
- நடைபாதைகளுக்கு மேலால் அல்லது குறுக்காக வாகனம் நிறுத்தினால் (Stop on/Over side walk/ foot path) $60.00 டொலர்.
- வாகனம் தரிக்ககூடாது (Parking on “No Parking” Streets) என்ற குறிப்பிட்ட வீதியோரங்களில் வாகனம் தரித்தால் $30.00 டொலர்.
- ரொரன்ரோ நகரின் உள் வீதி ஒன்றில் ‘வாகனம் தரிக்ககூடாது’ (No Parking Signs) என்ற அறிவிப்பு எதுவுமில்லையேல் மூன்று மணித்தியாலம் வரை அந்த இடத்தில் வாகனம் தரிப்பு செய்யலாம். தொடர்ந்து மூன்று மணித்தியாலத்திற்கு மேலாக சில நேரங்களில் இரவு முழுவதும் வாகனம் தரித்து நிற்கின்றது என்பது அவதானிக்கப்பட்டுவிட்டால் அங்கு $15 டொலர் தண்டனைச் சீட்டு வைக்கப்படும்.

சில வீடுகள் உள்ள இடங்களில் வீடுகளுக்கு முன்புறம் வாகனம் தரிப்பு இடம் அவர்களுக்கு இல்லாத இடங்களில் (No Drive Way) குறிப்பாக நகரின் நெருக்கமான வீடுகள் உள்ள இடங்களில் வீதியோரமாக ஒரு பக்கம் மட்டும் ஒன்றன் பின் ஒன்றாக வாகனங்கள் தரிப்புகளுக்கு நகரசபை அனுமதி வழங்கப்பட்டிருப்பது வழமையாகும். உதாரணமாக நெருக்கமான ரொரன்ரோ நகரசபை குடியிருப்பு வீதிகளை இங்கு குறிப்பிடலாம் (Residential Area Streets in Toronto Down Town).

சில அனுமதி வழங்கப்படாத இடங்களில் அப்பகுதிகளில் வசிக்கும் உரிமையாளர்கள் கூட்டாக நகரசபைக்கு மனுச்செய்து அனுமதி பெறலாம்.

சில நேரங்களில் வீட்டு முன்பக்கம் திருத்த வேலை நடந்தால் (Drive way paved)இந்த நிலையில் வீதியோரமாக சில நாட்கள் நிறுத்த வேண்டிவந்தால்.

Parking Enforcement Unit என்னும் பிரிவுக்கு 416 808 6500 என்னும் இலக்கத்திற்கு அழைத்து முன் அனுமதி பெற்று வீதியோரமாக வாகனம் தரிப்பு செய்யலாம்.

சில நேரங்களில் தண்டனைச் சீட்டு வைத்த உத்தியோகத்தர் மீதோ அல்லது அவர் நடத்தை திருப்தியாக இல்லாவிட்டாலோ பின்வரும் முகவரிக்கு தங்கள் முறைப்பாட்டினை எடுத்துச் செல்லலாம்.

**Toronto Police Services Parking**
**40, College st**
**Toronto, Ontario M5G 2J3**

சட்டவிரோத வாகன தரிப்பு என குறிப்பிட்டு வாகனத்தினை கட்டி இழுத்து செல்பவர் (Tow Truck Operators) நடத்தையில் அதிருப்தி ஏற்பட்டால் Toronto Licensing commission தொலைபேசி: 416 392 3000 என்ற இடத்திற்கு முறைப்பாடு செய்யலாம்.

### சட்டவிரோத வாகன தரிப்பு தண்டனை (Parking Ticket) தொடர்பான நடவடிக்கைகள் எவ்வாறு முன் எடுக்கப்படும்:

தண்டனைச் சீட்டு பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்கிடையில் அதில் குறிப்பிடப்பட்ட தொகையினை சட்டவிரோதமாக வாகனம் தரித்த குற்றத்திற்காக நகரசபைக்கு செலுத்த வேண்டும் என குறிப்பிட்டு வாகனத்தில் வைக்கப்படுவது வழமை.

இப் 15 நாட்களுக்கிடையில் தண்டனை பணம் செலுத்த தவறினால் இன்நாட்களின் பின்பு வாகன உரிமையாளரின் விலாசத்திற்கு Notice Of Impending Fine என குறிப்பிட்டு ஒரு கடிதம் வரும். இக்கடிதத்தில் மீண்டும் ஒரு 15 நாட்களுக்கு இடையில் ‘தண்டனை பணத்தினை செலுத்துக’ இல்லையேல் ‘நீதிமன்ற விசாரணைக்கு மனுசெய்’ என கோரப்பட்டிருக்கும்.

இந்த ஆணையினை உதாசீனம் செய்தால் வாகன உரிமையாளரின் விலாசத்திற்கு Notice of Fine and Due Date என்ற ஆணையில் மீண்டும் ஒரு எச்சரிக்கை கடிதம் வரும். (உதாரணமாக: இவ் எச்சரிக்கை ஆணையில் $30 டொலராக இருந்த தண்டனைப் பணம், மேலும் பணம் செலுத்த தவறியதற்கு $16 டொலர் சேர்த்து $46 டொலராக அதிகரித்து குறிப்பிடப்பட்டிருக்கும்.)

இந்த நிலைமைக்கு வந்து இருந்தாலும் நீதிமன்றம் சென்று அங்குள்ள சமாதான நீதவானை (Justice of Peace) சந்தித்து வழக்கு விசாரணையினை மீள மனுசெய்யக் கோரி சந்தர்ப்பம் தருமாறு கேட்டுப் பார்க்கலாம்.

இந்த எச்சரிக்கை ஆணையினையும் உதாசீனம் செய்தால் 30 நாட்களின் பின்பு இக்குற்றச் சாட்டு பதிவு என்பது மாகாண போக்குவரத்து அமைச்சு அலுவலகத்திற்கு (Ministry of Transportation) அனுப்பி வைக்கப்படும். அங்கு அனுப்பி வைக்கப்படும் போது தண்டனை பணம் இன்னொரு $20 டொலரால் அதிகரிக்கப்படும். அதாவது, இப்போது தண்டனைப் பணம் $66 டொலருக்கு ஏறிவிடும்.

மாகாண போக்குவரத்து அமைச்சின் பதிவில் இருக்கும் போதுதான் பிரச்சினையும் ஆரம்பிக்கும். அதாவது வருடா வருடம் வாகன உரிமை பத்திரம் புதுப்பிக்கும் போதும், புதிய Vehicle License Plate Sticker எடுக்க முயற்சிக்கும்போதும் இத்தண்டத்திணைச் செலுத்தி முடிக்காமல் தொடர்ந்து புதுப்பித்து வாகனம் செலுத்தமுடியாத நிலைமை உருவாகலாம்.

சில நேரங்களில் நீங்கள் இக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்ற முடிவுக்கும் வரலாம். ஆனால் என்ன நடக்கும்..? இரு வருடங்களின் பின்பு கடன் வசூலிக்கும் முகவர் நிறுவனம் (Collection Agency) இடம் இவ்விபரங்கள் கையளிக்கப்படலாம் அவர்கள் உங்களிடமிருந்து அதனை வசூலிக்க முயல்வார்கள். அங்கும் தண்டனை பணம் செலுத்தாது உதாசீனம் செய்தால் அது பதிவில் (Recording in Credit Bureau’s History) போய்விடும் அதாவது செலுத்த வேண்டிய பணத்தினை செலுத்த தவறியவர் என்ற பதிவில் போகும்போது அது கனடாவில் கடன் பெறும் வலிமையினையும் பாதிக்கும்.

### இத்தண்டனை சீட்டில் தவறுகள் ஏதாவது இருந்தால் இலகுவாகத் தப்பிக்கொள்ளலாம்:

- எந்த வகையான வாகனம் என்பதில் தவறு (உதாரணமாக: toyota வாகனத்திற்கு பதிலாக Honda என தவறுதலாக குறிப்பிட்டிருந்தால் அதுவே தப்பிக்க போதுமானதாகும். (Make of Vehicle Incorrect).
- தண்டச் சீட்டில் குறிப்பிடவேண்டிய இடத்தில் ஏதாவது தகவல் ஒன்றினை குறிப்பிட தவறினால்! உதாரணமாக தண்டனை தொகை (Fine Amount), குற்றம் (Offence) சீட்டு வைத்த உத்தியோகத்தரின் அடையாள இலக்கம் (Officer ID), திகதி, உத்தியோகத்தரின் கையொப்பம் ஆகியவற்றினை இங்கு குறிப்பிடலாம்.
- கடந்த வருடம் உருவாக்கப்பட்ட மேலே குறிப்பிட்ட மாதிரியான விதிவிலக்குகள் (Exemptions) என்ற நிலையில் இருந்தாலும் தப்பிக்கொள்ளலாம்.

தண்டனை பணம் என சீட்டில் உள்ள தொகையினைச் செலுத்தாது நகரசபை நீதிமன்ற விசாரணைக்கு மனுச்செய்த ஏராளமான வழக்குகளை, குறிப்பாக $30 டொலர் தண்டனைக்கு உட்பட்ட வழக்குகள் பல நீதிமன்ற விசாரணைக்காக ஏராளமாக குவிந்திருந்து அங்கு விசாரணை மன்றமும், விசாரணையாளர்களும் பற்றாக்குறை காரணமாக தள்ளுபடி செய்து சிலவற்றினை மட்டும் விசாரணைக்கு எடுத்திருந்தது.

இது யூன்/21/2008 யில் ரொரன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வெளிவந்த செய்தியாகும்.

இப்படி இதே மாதிரி செய்திகள் கனடாவின் வேறு பல ஊடகங்களில் பலதடவை வெளி வந்திருக்கின்றது.

siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■

# ஞாபகம் வருகிற...

46ம் பக்கத் தொடர்ச்சி...

பெடுத்துக் கொள்வர். இதனை தவறு என்கின்றனர் சில அறிஞர்கள். அதாவது மூளையில் விடயங்களை பதியவைக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டுமானால் தாளில் குறிப்பெடுப்பதைத் தவிர்த்து உற்று அவதானித்து மூளையில் குறிப்பெடுக்க வேண்டும் என்கின்றனர்.

எந்தத் துறையில் மிளிர வேண்மொன்றாலும் அதில் ஆர்வம் இல்லாவிடில் நன்றாக வர முடியாது என்பது நாம் அனைவரும் நன்கு அறிந்ததே. இதற்குக் காரணம் துறைசார் விடயங்களை மனதில் பதிவு செய்வதற்கு அத்துறையில் ஈடுபாடு இருப்பின் மட்டுமே சாத்தியமாகும் என்பதேயாகும்.

ஞாபகத்தில் பதிய வைப்பதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகை யுக்திகளைப் பயன் படுத்துவர். யுக்திகள் ஞாபகப்பதிவுத்திறனை ஊக்குவிக்கின்றன. மனித மூளைக்கு அளவற்ற விடயங்களை ஞாபகத்தில் பதிவு செய்யும் ஆற்றல் உள்ளது. மனதிற்குள் உள்ள மனக் கண்ணிற்கு என ஒரு பார்வை உண்டு. அதன் மூலம் ஞாபகப்படுத்தியவற்றை மீட்டுப் பார்க்கும் சக்தி மனதிற்கு உண்டு. ஞாபகத்திறனை வளர்த்துக் கொள்வது பற்றி கற்பதே ஒரு தனி துறைசார் கல்வியாக உள்ளது.

இவற்றை விரித்து நோக்கின் எழுதுவதற்குப் பக்கங்கள் போதாது இங்கு. சுருங்கச் சொல்லின் எண்ணப்பதிவு, ஞாபகத்திறன் என்பது ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டிய வாழ்வாதாரமான அற்புத சக்தி. எவராலும் இச்சக்தியை வளர்த்துக் கொள்ள முடியும். உங்கள் உள்வாங்கும் ஞாபக சக்தியின் ஆற்றலால் உங்கள் வாழ்வை நீங்கள் விரும்பிய துறையில் விரும்பிய வண்ணம் வளர்த்துக் கொள்வது சாத்தியமாகும்.

எங்கள் மூளையை எண்ணற்ற விடயங்களை ஞாபகப்படுத்தப் பழக்கினோமோயானால் அது இயல்பாகவே எதையும் எல்லாவற்றையும் எம் சிந்தனைக்குவிவின் உதவியின்றியே பதிவெடுக்கப் பழகிவிடும்.

எத்தகைய பெரிய அறிவாளியாக இருந்தாலும் மூளையின் ஞாபகசக்தி குறைவாக இருந்தால் அல்லது ஞாபகத்திறன் சற்றேனும் இல்லாதிருந்தால் அவரின் அறிவாற்றலால் அவருக்கோ பிறருக்கோ பயனேதும் இல்லாது போய்விடும். எனவே எம் ஞாபகசக்தியை வளர்த்துக் கொள்வதை எங்கள் முதன்மைக் கடன் என உணர்ந்து செயலாற்ற நாம் மறவாதிருப்போமாக.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■



# அந்திமகால சேவைக்கு யார் கட்டுவது மணி?

ஆயிரத்து தொளாயிரத்து எழுபதுகளில் ஆரம்பித்து இருந்தாலும் எண்பதுகளின் பின் தான் பெருமளவில் நாம் அகதிகளாக வந்து சேர்ந்தோம். எம்மை அரவணைத்து அகதியாக ஏற்றுக்கொண்ட பிற நாடுகளில் கனடா எண்ணிக்கை அளவில் முன்னுரிமை வகிக்கின்றது. இங்குள்ள சட்ட திட்டங்கள் மற்றும் குடிவரவாளர்களுக்கான சலுகைகள் எமது வளர்ச்சிக்கு வழிகோலியது. ஆதலால், நாம் பெரும் எண்ணிக்கையில் குடிபெயர்ந்து எமது தேவைகளை நிறைவுசெய்து வாழ்ந்து வருகின்றோம்.

இவ்வாறு பல துறைகளிலும் எமது தேவைகள், சேவைகள் பூர்த்தியான போதும், அந்திம கால சடங்குகள், தேவைகள் எமது மனதுக்கு திருப்தியாக செய்யப்படுகின்றதா? இதற்கான காரணம், இதனை முன்னெடுத்து நடைமுறைப்படுத்துவதற்கு யாரும் உறுதியாக முன்வராதது மட்டுமன்றி, இம்மரணச் சடங்குகள் பற்றிய போதிய அறிவும் அனுபவமும் எம்மிடம் இல்லாததுமே. சுமார் மூன்று இலட்சம் இலங்கை தமிழர் வசிக்கும் இந்நாட்டில் எமக்கென பிரத்தியேகமாக ஓர் இல்லம் இல்லாதது வருத்தத்துக்கு உரியது.

ஒரு வீட்டினைப் பொறுத்தவரை மரணம் சம்பவித்துவிட்டால் அவர்கள் செய்வதறியாது திகைத்து நிற்பதுவும், துக்கத்தின் உச்சியில் தமை மறந்து காணப்படுவதுவும் இயல்பு. மரணங்கள் பொதுவாக எதிர்பாராத வேளைகளில் ஏற்படும் இழப்பாக காணப்படுவதால் அனேகர் இதற்கான முன்னேற்பாடுகளை நிறைவேற்றுவது இல்லை. இவ்வாறான இக்கட்டான தருணங்களில் அவர்களுக்காக உறவினர், நண்பர்கள் உதவ வருவது இயல்பு, இருப்பினும் அவர்கள் கூட இவ் ஒழுங்குகளில் தேர்ச்சி பெற்றவராக இருப்பாரா என்பது கேள்விக்குறியே. எமது வாழ்நாளில் ஒரு தடவையே வரும் இச் சம்பவத்திற்காக நாம் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. ஆதலால் சம்பவத்தின் பின்னர் பலவாறு அலைந்து இறுதியில் அண்மையில் யாராவது ஒருவரின் மரணச் சடங்கிற்கு நாம் போய்வந்திருந்த மரணச்சடங்கு இல்லத்தில் போய் நிற்கின்றோம். அங்கு அவர்கள் கூறுவதற்கெல்லாம் 'இறந்தவருக்குச் செய்யும் கடமை இதில்



பேரம்பேசுதல் கூடாது' என்று தலையாட்டி விட்டு, கடமைகளை முடித்த திருப்தியில் வீடு வருகின்றோம்.

ஒரு குடும்பத்தில் ஒருவரின் இழப்பு என்பது ஈடுசெய்ய முடியாதது. அதுவே அவர் அக் குடும்ப தலைவராகவோ அன்றி பொருளாதார துணைவராகவோ காணப்படுகின்ற பட்சத்தில் இவ் இழப்பு என்பது எஞ்சியுள்ள குடும்ப அங்கத்தவர்களை பெரிதும் பாதிக்கின்றது. இருப்பினும், எமது குடும்ப உறவின் இறுதி அஞ்சலியினை திறம்பட செய்யவேண்டும் என்கின்ற எண்ணம், 'எமது பலவீனம் மற்றவர்களுக்கு பலம்' என்பது போல இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைகள் மற்றவர்களால் சாதகமாக்கப்பட்டுகின்றது என்பதனை நாம் நினைவில் வைத்திருத்தல் அவசியம்.

இதன் முதற்கட்டமாக, சம்பவம் நடந்த வீட்டிற்காக இவ் ஒழுங்குகளை மேற்கொள்ள முன் வருபவர்கள், பல இல்லங்களை அழைத்து விபரங்களையும் விலையினையும் அறிந்து பேரம் பேசுதல் அவசியம்.

மரணச் சடங்குகள் உணர்வுபூர்வமானவை. இங்கு வியாபாரம் என்பது முன்னிலை பெறக் கூடாது. மனிதரின் உணர்வுகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். நியாயவிலை அல்லது குறித்த விலை என்பது எதுவும் இச்சேவைகளுக்கு இல்லை. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும். அவ் எதிர்கடைகளை நாம் அணுகுவதால் மட்டுமே நுகர்வோராகிய நாம் தரமான சேவையினைப் பெறக்கூடியவாய்ப்பு இருக்கின்றது.

மரணச் சடங்குகள் சம்பந்தமாக நாம் செலவிடும் பணத்திற்கு உரிய சேவைகளை நாம் உண்மையில் பெற்றுக் கொள்ளுகின்றோமா என்பது அவசியம். உதாரணமாக Coscade (பெட்டி) தெரிவு செய்யும் வேளைகளில் சற்று தர உயர்வாக இருக்க வேண்டும் என்பதற்காக விலை அதிகம் கொடுத்து பெற்றுக் கொள்ளுகின்றோம். பெருந்தொகை பணத்தை தன்னகத்தே எடுத்துக்கொள்ளும் இப் Coscade (பெட்டி) இவ்வாறு கொடுக்கப்படுகின்ற தொகையிலும் மிக குறைந்த, கிட்டத்தட்ட பாதி விலையில் வெளிவியாபார நிலையங்களில் நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் உண்டு. இதுபோன்று பல பணச்செலவுகளை மீதப்படுத்த முடியும்.

ஓர் உறவை இழந்து, அவர் மூலம் பராமரிக்கப்பட்ட குடும்பம் அவரின் உழைப்பை இழந்துநிற்கும் இந்நேரத்தில்தான், செலவைக் குறைத்து தரமான சேவையை எப்படிப் பெறமுடியுமா என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும்.

நிட்சயமாக பெருந்தொகையான பணத்தை மீதப்படுத்தலாம்.

Pre-Planning என்று சொல்லக்கூடிய முன்கூட்டியே ஒழுங்குகளை செய்துவைப்பவர்கள் மற்றும் காப்புறுதிப் பணத்தில் இறுதி நிகழ்வுகளை மேற்கொள்பவர்கள் அளவுக்கு அதிகமான செலவுகளை அறியாமல் செய்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு. உங்கள் சார்பாக செலவிடப்படும் ஒவ்வொரு டொலர் களுக்கும் உரிய சேவையினை அறிந்து பெற்றுக் கொள்ளுவது நன்று.

எம்மவர்களிற் பலர் தகவல் பரிமாற்றம் அல்லது தகவல் தட்டுப்பாடு காரணமோ என்னவோ அனேகர் ஒரே மாதிரியான தொழில்களில் குதிப்பது சாதாரணமாக பார்க்க கூடிய தாகவுள்ளது. இதனால் கேள்வி குறைகின்ற நிலையில் இலாபம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. இன்னமும் எத்தனையோ துறைகள் எமக்காக தேவைப்பட்ட வேளையிலும் நாம் பாராமுகமாக இருப்பது தான் வருத்தத்திற்குரியது. அந்த வகையில் சேவை சார்துறையில் அந்திமகால சேவைகளை ஒருங்கமைத்து கொடுப்பதற்கு முன்வாருங்கள்

■ ■ ■




# மனிதரிடையே தோன்றியுள்ள புதிய மிருகத்தனம்

**இச்சிந்தனைக்கட்டுரை இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல ஆங்கில மெய்யியலாளரான Bertron Busellஇன் unpopular Eassays உள்ள இத்தேடுதலுக்குப் பொருத்தமான ஒரு ஆங்கிலக்கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. சிந்தனையில், மனிதரிடையே இன்று தோன்றியுள்ள மிருகத்தனம் பற்றிய அவரது சிந்தனைக் கருத்துக்களையும் அக்கருத்துக்கள் எவ்வாறு இப்போது எம்மக்களிடையே தோன்றியுள்ள புதிய மிருகத்தனை வெற்றி கொள்ள அல்லது எதிர்கொள்ள விடாமுயற்சியுடன் (Never give up persistence/peseverence) பயன் படுத்தலாம் என்பதையும் அடிப்படைத் தேடுதல் முயற்சியாகக் கொண்டமைந்தது**



ஆ.க. ஆனந்தநாதன்

## மனிதரிடையே தோன்றியுள்ள புதிய மிருகத்தனம். இதனை வெற்றி கொள்வது எவ்வாறு” (persistence/peseverence)

கனடாவிலும் எமது தமிழ் சமுதாயத்தின் தனிமனித நிலையிலும் பொது நிலையிலும் தோன்றியுள்ள புதிய மிருகத்தனம் பற்றிய மன ஆதங்கத்தில் பலர் மிக வேதனைப்பட்டு வெளியிட்ட கருத்துக்களின் உணர்வுந்துதலின் வெளிப்பாடே இச்சிறிய சிந்தனைக் கட்டுரை யாகும்.

உலகில் இப்போது மலிந்து கிடக்கும் பாவத்தையும் துன்பங்களையும் துயரங்களையும் பார்த்தால் உள்ளம் பகீர் என்று திகைக்கின்றது. உலகம் சாந்தி அல்லது அமைதியடைந்து தரும நெறியைப் பின்பற்றுமென்று எண்ணிய எண்ணமெல்லாம் பொய்யாயிற்று. முன்பிருந்த மிருகத்தன்மையையும் காட்டுமிராண்டித் தனத்தையும் தோற்கடிக்கும்படியான புதிய மிருகத்தனமும் காட்டிமிராண்டித்தனமும் இன்று தோன்றியிருக்கிறது. கொலையும், கருணையற்ற மனோபாவமுமே மனிதரிடையே மேலோங்கி நிற்கின்றன. நேர்மையாக வாழ் பவர்களின் உள்ளத்தில் இனி ஆசைக்கு இடமேது? உலகம் வரவர இவ்வாறு கெட்டுப் போவதாக இருந்தால், எதற்காகப் பிள்ளைகளைப் பெற்றுக் கஸ்டப்பட்டு வளர்க்க வேண்டும். இனவெறியும், இனச்துவேசமும், கொலை, கொள்ளை, பொய்யும், புரட்டும், பஞ்சமாபாதகங்களும் மலிந்து கிடக்கும் இவ்வுலகத்தில் அவர்கள் வாழவேண்டுமா? இவ்வுலகத்திற்குக் கதிமோட்சமோ, விமோசனமோ இல்லைப்போல் தோன்றுகிறது!.

இவ்வாறு மலை போல் வளர்ந்து நிற்கும் இன்றைய அதர்மத்தையும் அநீதிகளையும் பார்த்து இவ்வாறு எண்ணுவது இயற்கையே. என்றாலும், நாம் எமது தைரியத்தைக் கைவிடக்கூடாது என்கிறார் பேட்ரன் இரஸல். ஒவ்வொரு மனிதனும் இத்தகைய பாவங்களையும் அநீதிகளையும், தடுக்க ஓரளவு செயல் வடிவில் வேலை செய்யலாம். ஒரு மனிதனால் என்ன செய்யமுடியும்? முழு உலகமே கெட்டுப்போயிருக்கையில் ஓரிருவரால் என்ன செய்துவிட இயலும்? என்று எண்ணி ஏங்கி நாம் விடாமுயற்சியைக் கை விடலாகாது. Perseverance never give up / ஒவ்வொருவராகப் பலர் செய்த செயல்களே உலகின் இந்நிலைக்குக் காரணமெனலாம். பாராளுமன்றத் தேர்தலொன்றில் ஒவ்வொரு வாக்குச் சீட்டுக்கும் பெறுமதியுள்ளதல்லவா? மொத்த எல்லாவாக்குச் சீட்டுக்களும் சேர்ந்தே ஒரு பொதுத்தேர்தலின் இறுதி முடிவை நிர்ணயிப்பதால் ஒவ்வொரு வாக்குச்சீட்டிற்கும் பெறுமதியுள்ளதல்லவா? இவ்வாறே உலகத்தின் பாவக்குவியலை நீக்கி அறவாழ்வு உண்டாக்குவதில் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பங்குண்டு. அதற்குப்பயனும் உண்டு. ஒவ்வொருவரும் தான் செய்யவேண்டிய கடமையைச் செய்தால் மொத்தத்தில் பயன் கிடைக்காமல் போகாது. அவர் அவர் தொழில் துறையில், சுற்றுப்புறத்தில், கோபத்திற்கும், வெறுப்புக்கும், இனத்துவேசத்திற்கும் ஆளாகாமல் அன்பு மனப்பான்மையோடு கோபம் உண்டாக்கும் ஆவேச வேகங்களால் தள்ளாடி விழாமல், விவேகத்தையும் தியாகத்தையும் ஆதாரமாகக் கொண்ட சிந்தனையின் பேரில் நடப்பதற்கு அவரவருடன் தொடர்பு கொண்ட மக்களிடையே அவரவரும் வழிக்காட்டலாம். ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவு மூடத்தனத்தையும் பாவத்தையும் எதிர்த்து விவேகத்தையும் நீதி, நியாயம் தர்மத்தையும் வளர்த்து வந்தால், உலகத்தில் துக்கம், துயரம், துன்பம் போய்ச் சுகமும் அமைதியும் உண்டாகும். தனிப்பட்டமக்கள் செய்து வரும் விடா முயற்சியின் தொகையே உலகின் இந்நிலைக்குக் காரணம். செல்வமும் செல்வாக்கும் படைத்தவர்களும், அரச ஆட்சியிலும், அதிகாரமுறைமைகளில் பங்கு பெற்றவர்களும் அதிகமாகச் செய்யலாம். சாதாரண மனிதன் செய்யக் கூடியது குறைவாகவே இருக்கலாம். நேரம் (அவகாசம்) அதிகம் உடையவர்கள் அதிகமாகச் செய்யலாம். ஆயினும் எல்லோருமே ஒரளவு செய்ய முடியுமென்பதை உணர வேண்டும்.

> “ *உயிரோட்டமும் துடிப்பும் உணர்ச்சியும் படைத்திருக்கும் தனித்தனி மனிதன் சமுதாயத்தில் செய்யும் செயலும் நடத்தும் நல்ல முன்மாதிரியான இலட்சிய வாழ்க்கையுமே இந்த உலகின் நிலையை உண்டாக்கிறது.* ”

இதெல்லாம் என்ன வீண்/வெறும் பேச்சு. ஒருவன்/ஒரு தனிமனிதன் என்ன செய்யமுடியும்? பெரிய இனத்துவேசப்பிரவாகம் புரண்டு ஒடுவதை ஒருவனால் ஒரு தனிமனிதனால் எவ்வாறு தடுக்கமுடியும்? என்று சொல்ல வேண்டாம். இவ்வுலகில் நல்லதாயினும் பொல்லாதாயினும் ஒவ்வொருவராகப் பலர் செய்ததேதான் உலகப் பிரவாகமாகயிற்று. தீமைக்குப் பலம் அதிகம் என்று எண்ணாதே, ஒருவனால் மட்டும் இவ்வுலகைக் கெடுக்கவும் முடியாது. விடுவிக்கவும் முடியாது. ஒவ்வொருவரும் செய்ததெல்லாம் சேர்ந்தே இவ்வுலகத்தில் காணும் இனத்துவேசமும், அநிநியாயயும், அதர்மமும் உண்டாயின. அப்படியே அதற்கு மாற்றமும். ஒவ்வொருவராக எல்லோரும் சேர்ந்தே செய்யலாம். சமுதாயத்திலுள்ள சாதாரண பொது மக்கள் ஆண் பெண் ஒவ்வொருவரும் என்ன செய்கிறார்களே அதுவே ஓட்டு மொத்த நன்மையையும், தீமையையும் உண்டாக்கும். இவ்வுலகில் அதர்மம்/அநீதி நீங்கி தர்மமும் நியாயயுமும் சுகமும் நிலைபெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் தன்னம்பிகையுடனும் விடாமுயற்சியுடனும் முயலவேண்டும். முயற்சி இல்லாமல் முடியாது. அநியாயம் அட்டூளியம், பொய், அக்கிரமம் இவற்றை எதிர்க்க வேண்டும். இவற்றை சும்மா வெறும் வாய்ப் பேச்சில் மட்டுமல்ல செயல் வடிவில் எதிர்க்க வேண்டும். எம்முடைய நல்லெண்ணங்கள் தைரியமான செயல்களில் உருக் கொள்ள வேண்டும்.

உலகத்திலிருக்கும் / நடைபெறும் பெரும் அநீதிகளைப் பார்த்துப் பிரமித்துப் போய் உலகத்தில் நல்லவர்களும் இருக்கிறார்களென்பதை மறந்து விடலாகாது. மலை போன்ற பெருந் தீமைக்குவியலோடு, பெரும் நன்மைகளும் இருக்கின்றன. எம்முடைய அறிவை விசாலப்படுத்திக் கொண்டு உலகத்திலிருக்கும் மங்கலப் பொருள்களை யெல்லாம் பார்த்து மகிழ வேண்டும். அறிவுப் பெருக்கம் சந்தோசத்தைத் தரும். நன்மையும் தீமையும் சமமாகக் கலந்து நிற்கும் இவ்வுலகத்தின் இரகசியத்தை யார் அறிவார்? “ஒன்றும் பயனில்லை” என்று நிராசைப் படுவதும் தவறு. “எல்லாம் தாமாகவே உலகில் சீர்ப்பட்டுவிடும்” என்றிருப்பதும் தவறு.

கொலையும், தீண்டாமையும், பாவமும் பஞ்சமாபாதகங்களும் இருக்கின்றன. ஆனால், அன்பும், அநுதாபமும், எழுத்தும், உரையாடல்களும், கலையும் (Dialogues), சமூக சேவையும் மிகுந்த அளவிலேயே இருக்கின்றன. நோய்வாய்ப்பட்ட மக்களின் நோயை நீக்க வேண்டும் என்கின்ற ஆசையும், நன் முயற்சியையும், வியப்பைத்தரும் வீரத்தனத்தையும், உலக இரகசியங்களை யெல்லாம் சோதித்து வெற்றி பெறும் அறிவு ஆராய்ச்சியையும் காண்கிறொமில்லையா? பேரறிவினால் உண்மையுலகத்தின் கம்பீரத்தையும், விஸ்தாரத்தையும் தற்காலிகமான நிகழ்ச்சி களின் அற்பத்தையும் உணர்ந்தோம். இன்று நிகழும் நிகழ்ச்சிகளும் சம்பவங்களும் பெருங் கடலில் சிறு அலைகளைப் போல் நடைபெறுகின்றன. இவற்றைக் கண்டு நாம் தயங்க வேண்டியதில்லை. மனித உள்ளத்தில் தைரியமும் மனத்திடமும் இருக்கிறது. கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் உள்ளத்தில் வீரம் இருக்கின்றது எவ்வளவு பேர் எவ்வளவு ஆபத்துக்களுக் கிடையில் எவ்வளவோ துறைகளில் தயங்காது தீரத்துடன் வேலை செய்து வருகிறார்கள். இதையெல் லாம் பார்க்கும் நாம் உலகத்துக்கு விமோசனம் இல்லையென்று ஏன் எண்ண வேண்டும்?

உலக வரலாற்றின் நல்லகட்டங்களும் உண்டு. துக்கமான (எமது இனத்திற்கேற்பட்டது போல) கட்டங்களுமுண்டு. இப்போது தமிழராகிய நாம் ஒருவிதமான துக்கக்கட்டத்தில் இருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் எம்முடைய கடமையையும் Positive Attitude யோடு மனதில் வைத்து அறிவிலிகளின் வீண்வார்த்தைகளுக்கு அஞ்சாமல் நடந்து கொண்டோமானால் இந்தத் துக்கக் கட்டம் / எமது இனத்தில் உள்ளநிலை) விரைவாகத் தீரும்.

இவ்வுலகம் தானாகவே ஒரு நல்ல நிலையை அடையாது. உயிரோட்டமும் துடிப்பும் உணர்ச்சியும் படைத்திருக்கும் தனித்தனி மனிதன் சமுதாயத்தில் செய்யும் செயலும் நடத்தும் நல்ல முன்மாதிரியான இலட்சிய வாழ்க்கையுமே இந்த உலகின் நிலையை உண்டாக்கிறது. இவ்விதமான விடாமுயற்சியில் கஸ்டங்களுண்டு, ஆயினும் அத்தகையை விடாமுயற்சிகளுக்கு பயனும் உண்டென்பதை உலகவரலாற்றில் நாம் கண்டோம்.

*தேடிச்சோறு நிதந்தின்று*
*பல சின்னஞ்சிறு கதைகள் பேசி*
*மனம் வாடித்துன்ப மிகவுழன்று*
*பிறர் வாடப் பல செயல்கள் செய்து*
*நரை கூடிக்கிழப்பருவமெய்தி*
*கொடுங்கூற்றுக்கிரையெனப் பின்மாயும்*
*பல வேடிக்கை மனிதரைப் போலே*
*நான் வீழ்வேனென்று நினைத்தாயோ?*

*மகாகவி சுப்பிரமணிய பாரதியார்*

இப்புத்தாண்டில் இலட்சிய நோக்கில் மனத் தைரியத்தை இழக்காமல் எம்முடையை கடமைகளைச் செய்வோமாக.

உசாத்துணை:
*Unpopular Essay By Bertron – Rusell – 2oth Century English Philosotheri*

ananthan.nk@thaiveedu.com

■ ■ ■




Formula Honda
Where You're Treated like Family
Rajah Tharmalingam
Dir: 647-833-4998
All are HONDA Certified Used Vehicles
2240 Markham Road (at Finch), Scarborough
www.formulahonda.com
Email: rajah@formulahonda.com
2006 ACURA MDX $24,995
2007 BMW 3 Series $24,500
2007 BMW 3 Series $24,000
2006 HONDA CIVIC EX $12,995
2006 HONDA CIVIC LX $13,995
2006 HONDA CIVIC LX $13,995
2006 HONDA ODYSSEY EX $18,995
2007 HONDA ACCORD EX-L $19,995
2007 HONDA ACCORD SE $17,995
2007 HONDA ACCORD SE $12,300
2007 HONDA ACCORD SE $18,995
2007 HONDA ACCORD SE $15,400
2007 HONDA CIVIC 4dr $14,995
2007 HONDA CIVIC 4dr $14,995
2007 HONDA CIVIC 4dr $13,995
2007 HONDA CIVIC 4dr $14,995
2007 HONDA CIVIC 4dr $12,995
2007 HONDA CIVIC EX $14,995
2007 HONDA CIVIC LX $15,995
2007 HONDA CIVIC LX $13,995
2007 HONDA CIVIC LX $13,995
2007 HONDA CR-V EX-L $23,995
2007 HONDA CR-V EX-L $22,995
2007 HONDA CR-V EX $22,995
2007 HONDA CR-V EX $20,995
Call for more details : Rajah 647-833-4998

# 2010 President Club Award




We Wish You All a Happy New Year

From

NAANO COMPUTERS

&

NANO HOMES



RAJ (NAGENDRARAJAH) NADARAJAH
*Sales Representative*

**Direct: 416-333-6115**

Office: (905)-201-9977
FAX: (905)-201-9229

E-mail: nanohomes@gmail.com

7 Eastvale Dr., Unit 205, Markham, ON, L3S 4N8

**Independently Owned and Operated, REALTOR®*

# Season's Greetings

## and Our Best Wishes for 2011

Happy Holidays


உங்களின் சுதந்திரமான முடிவுக்கு...
RBC
RBC Royal Bank
Mayuran Ketheeswaran
Mobile Mortgage Specialist
Royal Bank of Canada
Cell : 416 823 4479
Fax : 416 444 4433
mayuran.ketheeswaran@rbc.com


TIRED OF LOOKING? HAVING TROUBLE GETTING IT SOLD?
Give Me a Call & SEE THE DIFFERENCE!
Woodbine/16th
5 Bedrooms, 4 Washrooms
Call for the Price
Mccowan/Bur Oak
5 Bedrooms, 3 Washrooms
$ 618,000
Bloor/Jarvis
2 Bedrooms, 2 Washrooms
$ 499,999
St. Clair Ave E/Birchmount Ave
3+1 Bedrooms, 2 Washrooms
Call for the Price
Taunton/Thickson
4 Bedrooms, 4 Washrooms
$ 459,900
Guildwood/Livingston
4 Bedrooms, 2 Washrooms
$ 429,800
East Ave./Lawrence
3 Bedrooms, 3 Washrooms
$ 339,900
Brimley / Hwy 401
2 Bedrooms, 2 Washrooms
$ 318,000
Bitchmount / Finch
4+2 Bedrooms, 3 Washrooms
$ 298,000
Mccowan / Alton Towers
2 Bedrooms, 2 Washrooms
$ 229,000
RE/MAX®
Crossroads Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Not intended to solicit buyers/ sellers under representation agreement
Yathavann Selvarajah
Sales Representative
Dir : 416-992-4474
Office : 416-491-4002
Apex Creations - 416-297-0707
www.universalagent.ca


Happy Holidays to All Our Customers and Friends!
ICC CRICKET WORLD CUP 2011
Match Schedule Chart - Sri Lanka
Feb17th to Mar 6th, 2011 16 Days 5Matches
Match Schedule Chart
Feb 20 - Sri Lanka Vs Canada.
Feb 26 - Sri Lanka Vs Pakistan.
Mar 1 - Sri Lanka Vs Kenya.
Mar 3 - Canada Vs Pakistan.
Mar 5 - Sri Lanka Vs Australia.
Mar 10th to Mar 30th, 2011 19 Days 4 Matches
Match Schedule Chart
Mar 14 - Pakistan Vs Zimbabwe.
Mar 19 - Pakistan Vs Australia.
Mar 26 - Quarter Finals
Mar 29 - Semi Finals. Colombo
TOUR INCLUDES- AIRFARE, ACCOMMODATIONS, A/C TRANSPORTATION FROM TIME OF ARRIVAL UNTIL DEPARTURE, ALL LOCAL TAXES AND SERVICE CHARGES. PLEASE CALL FOR PRICE
Toronto -Washigton-Doha-Colombo $850+Tax
Toronto -London-Colombo $1260+Tax
Toronto -Brussels-Chennai $899+Tax
Toronto -Abudhabi-Chennai $749+Tax
Toronto -London-Bahrain-Colombo $849+Tax
Toronto -London-Bahrain-Chennai $950+Tax
PRICES APPLICABLE ON LOW SEASON
Serandib Travel
Your satisfaction is our success
2075 Lawrence Ave, E, Suite 202,
Toronto, ON (Warden & Lawrence)
416 750 0009
New Location - 7 Eastvale Drive,
Unit 207 Markham,ON (Markham & Steeles)
905 201 6660
Montreal : 514-448-1389, Calgary: 403-770-9647, Ottawa: 613-482-6590
Vancouver: 604-625-0495, Mississauga: 905-564-7564
*Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of the seats. Taxes vary from $210 - $465.
www.serandibtravel.com

# சிலிர்க்க வைக்கும் Seychelles



திரு மகேசன்

2010ஆம் ஆண்டு ஓடியே போய்விட்டது. வந்தது போல் இருந்தது ஆனால் வந்த இடமே தெரியவில்லை என்று சொல்வீர்களே; அதுபோல்தான், 2010ம் ஆண்டும் வந்ததும் தெரியவில்லை போனதும் தெரியவில்லை.

2010இல் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் என்பது மற்றைய ஆண்டுகளைவிட அதிகம் என்றே சொல்ல வேண்டும். ஏதோ ஒரு சலிப்பை எல்லோர் மனதிலும் இட்டுவிட்டுத்தான் செல்கிறது. சில ஆண்டுகள் நமக்கு ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றன. சில ஆண்டுகள் பிரச்சினைகள், சிக்கல்கள், சோக நிகழ்வுகளை தாங்கி தாண்டிச் சென்றன. ஆனால் என்னவோ 2010 மட்டும் உப்புச் சப்பில்லாத ஒரு ஆண்டாக போய்விட்டதே என்பதே பலரது மிகப் பெரிய குற்றச்சாட்டு.

தவறுகள், தப்புக்கள் நம்மிடம் இருக்கிறதா அல்லது இந்த ஆண்டில் இருந்ததா என்று பட்டிமன்றமே நடத்திவிடலாம். நம் பக்கத் தவறுகளை, தெளிவான முடிவெடுக்காத தடுமாற்றமான சிந்தனைகள் இவற்றை எல்லாம் புறம்தள்ளிவிட்டு ஏதோ இந்த 2010இல் தான் எல்லாமே கவிழ்த்து கொட்டிவிட்டது என்று புலம்பி என்னத்தை காணப்போகின்றோம்.

போவது 2010ஆம் ஆண்டு போவதாகவே இருக்கட்டும். வரப்போகும் 2011ம் ஆண்டை வரவேற்கத் தயாராகுவோம் என்று கூறி மன மகிழ்ச்சியோடு எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை வளர்ப்போம். உல்லாசப் பிரயாணத்துறையில் கூட 2010இல் மிகப்பெரிய பின்னடைவு ஏற்பட்டது. நமது மக்கள் கூட 2010இல் உலகின் பல பாகங்களுக்கும் பறந்து திரிந்து அனுபவித்ததை நாம் அறிவோம். என்னதான் இடர்பாடுகள் இருந்தாலும் ஒரு ஆறுதலுக்காக சிறிது காலம் வெளியில் பறந்துவிட்டு வந்தாலே Extra Energy கிடைப்பதை நாம் அனுபவபூர்வமாக உணர்ந்தவர்கள். ஆனாலும் 2010இல் நம்மவர் பலரும் தாயக மண்ணை தரிசிக்க பறந்ததுதான் மனதிற்கு இதமூட்டும் ஒரு மகிழ்வான நிகழ்வு. அப்படியே வரும் வழியில் நின்று சில நாடுகளையும் தரிசிக்கத் தவறவில்லை.

2011இல் எங்கே போவது என்று மற்றைய சமூகத்தவர்கள் இப்போதே தமது Bookingஐ தொடங்கிவிடுவார்கள். எந்த நாட்டிற்கு, எப்படி போவது, எவ்வளவு செலவழிப்பது என்று வருடத் தொடக்கத்திலேயே பட்டியல் போட்டு விடுவார்கள். நாமும் அப்படி ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் அதனால் பல மடங்கு பணச் செலவைக் குறைப்பதோடு எந்தவித இடர்பாடுகளும் இன்றி பயணத்தை சௌகரிகமாக கழிக்கலாம்.

இம்முறை அப்படி பட்டியல் போடுவதாக இருந்தால் நிச்சயமாக உங்கள் பட்டியலில் இடம்பெற வேண்டிய ஒரு அழகிய நாடுதான் Seychelles. காதில் கேள்விப்பட்ட இடமாக இருக்கின்றதே என்று எண்ணாதீர்கள். 80களில் நம்மவர்களின் பலர் Seychellesல் தமது திறமைகளையும் பெருமைகளையும் நிலை நாட்டி இருக்கின்றார்கள். மடகஸ்காருக்கு மிக அண்மையில் காணப்படும் Seychelles தீவானது நான் காண்டு இரசித்த இயற்கை கொட்டிக்கிடக்கும் இடங்களில் முதலாவது என்று தான் சொல்ல வேண்டும். இயற்கை அழகை இன்னமும் மாசுபடாமல் வைத்திருப்பதில் இவர்களுக்கு ஒரு தடவை நாம் "ஓ" போடலாம். இன்றைக்கு உலகில் இயற்கை வளங்கள் சிரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பச்சைப் பசேலென்று காட்சியளிக்கும் Seychellesஐ காண பூர்வஜென்ம புண்ணிய பலன் நிச்சயமாக இருக்கத்தான் வேண்டும்.

ஒரு இலட்சமளவு மக்கள் தொகையைக் கொண்ட ஒரு ஆபிரிக்க பிரதேசமே Seychelles. போத்துக்கீச அட்மிரல் வாஸ்கொடகாமா இந்த இடத்திற்கு Islands of Admiral என்றே பெயர் சூட்டினார். 1502இல் அரபிய நாட்டு வியாபாரிகள் தமது பயணத்தில் தங்குமிடமாக Seychellesஐ பாவித்தனர். ஆக மொத்தத்தில் இது ஒரு 'Transit point' ஆகவே பயன்படுத்தப்பட்டது. ஆபிரிக்க, ஆசிய நாடுகளுக்கிடையே வியாபாரம் கொடிகட்டிப்பறந்த காலங்களில் கடற் கொள்ளையர்கள் (Pirates) வியாபாரிகளை கொள்ளை அடிக்க தமது பதுங்கு இடமாக Seychellesஐ பாவித்தனர். பிரித்தானியர்கள் தமது கட்டுப்பாட்டில் Seychellesஐ வைத்திருப்பதற்கு 1794 தொடக்கம் 1810 வரை கடும் பிரயத்தனம் புரிந்தனர். யுத்தத்தின் முடிவில் பிரிட்டிஸ்சாரின் கட்டுப் பாட்டுக்குள் Seychelles வந்தது. 1966இலும் 1970இலும் நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து 1976இல் Commen Welthஇன் கீழ் சுதந்திர பிரகடனம் செய்யப்பட்டது. Seychelles இன் பாராளுமன்றத்தில் 34 ஆசனங்கள் மட்டுமே உண்டு. இதில் 25 பேர் மக்கள் விருப்ப வாக்கினாலும், மிகுதி 9பேர் பெரும்பான்மை பலம் பெற்ற வாக்கிலும் தெரிவு செய்யப்படுவர்.

மனித உரிமைகள் பாதுகாப்பு, மக்களின் சுதந்திரம் இவற்றில் எல்லாம் மிகக் குறிப்பிடும்படியாக முதலிடத்திலிருக்கின்றது. 19ம் நூற்றாண்டில் எந்தவித கல்வி வளர்ச்சியும் இல்லாத ஒரு வாழ்க்கையை Seychelles மக்கள் வாழ்ந்தார்கள். 1851இல் ரோமன் கத்தோலிக்கர்களும், அங்கிலிக்கன் திருச்சபையும் Mission பாடசாலைகளை திறந்தனர். 1970ம் ஆண்டளவிலேயே முதலாவது தொழில் நுட்பக் கல்லூரி Seychellesஇல் திறந்து வைக்கப்பட்டது.





விமானத்தை விட்டு இறங்கி வீதியில் பயணித்தபோது கண்ட அழகிய காட்சி நெஞ்சை விட்டகலாதது. செவ்விளநீர் குவியல் குவியலாக வைக்கப்பட்டு வியாபாத்தில் ஈடுபடுவதை கண்டதும் வாகனத்தை நிறுத்தி அந்த இளநீரை அருந்திய போது அப்பாடா என்ன ருசி. பழ வகைகளை குவித்து வைத்து வியாபாரம் செய்வதை காணும்போது மனதிற்கு மகிழ்ச்சியாக இருந்தது.

சென்ற இடமெல்லாம் கமகமவென காற்றில் கறுவா வாசனை படர்வதை உணரமுடிந்தது. கறுவாப் பட்டையை ஏற்றுமதி தரத்திற்கு துப்பரவு செய்து மூட்டை மூட்டையாக கட்டி வைத்திருந்தார்கள். கறுவா, Vanilla, கொப்பரா போன்றவை Seychellesஇல் முக்கிய ஏற்றுமதி மட்டுமன்றி அந்நிய செலவாணியை அள்ளிக் கொட்டும் பொருட்கள் என்றபோது ஆச்சரியமாக இருந்தது. ஆபிரிக்கர்கள், பிரெஞ்சுகாரார்கள், இந்தியர்கள், சீனர்கள் இவர்களே இந்த நாட்டின் வளர்ச்சியின் முதுகெலும்புகள். பெரும்பான்மை மதத்தவர்களாக கிறிஸ்தவர்களே இருக்கின்றார்கள்.

மிக முக்கியமான செய்தியாக சொல்லியது மட்டுமன்றி என்னைத் திகைப்பில் ஆழ்த்திய செய்தி என்றால் அது கறுப்புக் கிளிதான். Black Parrot தான் Seychellesஇன் தேசிய பறவையாகும். மிகவும் அழியும் நிலையில் இருந்த இந்த கறுப்புக் கிளிகளை மிகுந்த அக்கறையோடும் புரிந்துணர்வோடும் பாதுகாக்கின்றார்கள். அதுமட்டுமின்றி 75 வகையான தாவர இனங்கள் உலகில் இல்லாத அரியவகைகள் என்று சொல்லப்பட்டு இங்கே அழிந்துவிடாமல் பாதுகாக்கப்படுகின்றன. குறிப்பிடும்படியாக CoCo-De-Mer எனப்படும் ஒரு வகை Palmtreeஐ கண்ணுக்குள் பொத்தி வைத்திருப்பது போல் காவல் காத்து பாதுகாக்கின்றனர். இது மட்டுமன்றி Jellyfish Tree உலகில் இங்கே மட்டுமே காணப்படுகிறது. இவையெல்லாம் கண்ணால் காணக் கிடைத்ததைவிட இவைகளைக் காண அலைந்து சென்ற பாதை என்னை 'Avataar' எனப்படும் மிகப் பிரமாண்ட தயாரிப்பான திரைப்படத்தை இங்கே தயாரித்திருக்கலாமே என்று எண்ணத் தோன்றியது. என்னைப் போன்ற 2 மடங்கு பெரியதொரு சிவப்பு பூவை காண்டதும் என்னை அருகில் செல்ல வேண்டாம் என்று எச்சரித்தனர். மனிதரை மூடக்கூடிய மிகப் பிரமாண்டமான தாவர வகைகளை புத்தகத்திலும் படங்களிலும் பார்த்த எனக்கு நேரில் கண்டபோது உடல் சிலிர்த்தது. உலகின் மிக ஆச்சரியமான Orchids மலர்கள் இந்தத் தீவில் வகை வகையான நிறங்களில் காணப்படுகின்றன. உலகில் பல பாகங்களுக்கு இந்த Orchids மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலவாணியை சம்பாதித்து கொடுக்கிறது.

சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர்கள் லட்சக்கணக்கில் வருடந்தோறும் இங்கே படையெடுக்கின்றார்கள். மிகப் பிரதானமாக Coral Gardens என்று அழைக்கப்படும் கடல் வகை உயிரினங்களின் அழிவு Seychelles தான் முற்று முழுதாக தடுக்கப்படுகின்றது. பல வெளிநாட்டவர்கள் இங்கயே வருடக்கணக்கில் தங்கி வகை வகையான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். முக்கியமாக The Aldabra எனப்படும் ஆமை வகையை உலகில் வேறு எங்கும் காண முடியாது. Aldabra ஆமை வகைகளின் கூட்டுத்தொகை Seychelles தான் உலகில் பெருமளவில் காணப்படுகின்றது. உலகின் மிகப் பிரமாண்டமான ஆமையும் இங்கே தான் பாதுகாக்கபடுகின்றது.

நமது குடும்பங்கள் ஈழத்தில் எப்படி வாழ்ந்தார்களோ அதே நடைமுறையில் தான் இங்கேயும் வாழ்க்கையை வாழ்கின்றார்கள். அதனால் தாய்மார்கள் தான் குழந்தைகள் வளர்ப்பில் முக்கிய பங்களிப்பை செய்கின்றார்கள். கணவர்மார்கள் வெளியே சென்று பணம் சம்பாதித்து கொண்டு வந்து வீட்டாரை பராமரிப்பதோடு வயது முதிர்ந்த பெற்றோரையும் கூடவே வைத்து பராமரித்து பாதுகாப்பது நெஞ்சை தொட்டது. எதை இழந்தோமே அதை Seychelles வந்து பார்க்க வேண்டுமென்பது என்ன தலைவிதியா? அன்று பண்ணைக் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் படகுகளை கண்வெட்டாது சிறுவயதில் நின்று பார்த்தது இன்னமும் ஞாபகம் இருக்கின்றது. அதேபோல் தான் Seychellesஇலும் மீன்பிடிப் படகுகள் புறப்டும் போது இந்தியப் பாணியில் ஓசை எழுப்பி பாடியபடி புறப்படுகின்றார்கள். பின்னர் திரும்பி வரும் போது களைப்பை மறந்து படகிலிருந்து பாடியபடி இறங்கி வந்த காட்சி இனிமையானது. இரவு நேரங்களில் கடற்கரைகளில் நெருப்பு மூட்டி பாடல்களைப் பாடி மகிழுகின்றனர். "ஏலோ ஏலேலோ" பாணி பாடல்களை ஸ்பானிஸ் மொழி இசையில் பாடிவருவதோடு இந்திய Hindi பாடல்களின் இசைகளையும் இசைத்து எம்மை மகிழ்விக் கின்றனர்.

Tree House Villaக்களையே உல்லாசப் பயணிகள் விரும்பி வாடகைக்கு எடுக்கின்றனர். காடுகளின் மத்தியில் கறுவா மணத்திற்கு மத்தியில் உறங்குவது உடல் சுகாதாரத்திற்கு நல்ல பயன் கொடுக்கும் என்பதால் பலரும் விரும்பி இந்த Tree House Villaகளையே தமக்காக ஒதுக்குகின்றனர். அது மட்டுமின்றி Seychelles இயற்கையை ரசனையுடன் அனுபவிக்க வேண்டிய இடமானதால் இங்கே தங்குமிடம் ரசனையுடன் அமைத்துத் தருவதில் Seychelles மக்கள் விருப்புடன் பாடுபடுகின்றனர். உல்லாசப் பிரயாணத்துறையில் முன்னணி வகிக்கும் இடங்களில் Seychelles சிறப்பு இடம் பெறுவதால் அவர்களும் தமது திறமையை தக்க வைத்துக் கொள்ள உல்லாசப் பிரயாணிகளை தமது வீட்டு விருந்தினர்களை உபசரிப்பது போல் பராமரிக்கின்றனர். தமது தேனிலவை களிக்க வரும் புதுமணத் தம்பதிகளை கூட்டம் கூட்டமாக காணக் கூடியதாக இருக்கின்றது.

தைப்பூசத்தன்று நடைபெறும் காவடி Festval பார்க்க கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கிறது. அழகிய பல வண்ணக் காவடிகளில் ஆடியபடி அருள்மிகு நவசக்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் இத்தைப்பூசத் திருவிழாவைக் காண எல்லா மதத்தினரும் வருவதுதான் ஆச்சரியமும் பெருமையான விடயமும். கிறிஸ்தவ மதத்தினர் பெரும்பான்மையாக வாழும் இந்த நாட்டில் அவர்கள் இந்து மதத்துக்கு கொடுக்கும் மதிப்பும் மரியாதையும் நம் நாட்டினர் கண்டிப்பாகப் பார்த்துக் படிக்கவேண்டிய ஒரு பாடம். என்னை நானே கிள்ளிப் பார்த்தேன்.

இவர்களின் உணவு வகைகளின் இந்திய, சீன, பிரெஞ், ஆபிரிக்க வாசனைகள் அடிக்கின்றன. Dause எனப்படும் உணவு ரசித்து உண்ணமுடிகிறது. தேங்காய் பாலும், மிளகாயும் தாராளமாகவே உணவு வகைகளில் பாவனையில் உள்ளது. மிகப் பிரதானமாக இங்கே வழங்கப்படும் தேனீரில் உலகில் எங்கேயும் சுவைக்காத ஏதோ ஒரு வகை சுவை மிளிர்கிறது.

இன்றைய சூழ்நிலையில் Seychelles உல்லாசப் பிராயாணிகள் வருகையில் அதிகரித்து வருவதால் காலப்போக்கில் நிச்சயமாக இங்கே வருவதென்பது மிக அதிக பணச்செலவை ஏற்படுத்தும் என்பது கண்கூடு. எனவே இன்றைய சூழ்நிலையில் தமது இவ்வாண்டு விடுமுறையில் நிச்சயம் Seychellesஐ சேர்த்து விட்டால் நிச்சயமாக இயற்கை கொட்டிக்கிடக்கும் சொர்க்கத்தை அப்பாடா வாழ்நாளில் ஒரு முறை பார்த்துவிட்டோமே என்ற சிலிர்ப்புடன் வாழும் வரை நினைவு கூர்ந்தபடி சந்தோசமாக வாழ்ந்துவிடலாம். தேனிலவுக்குப் போகும் தம்பதிகளே உங்களின் சொர்க்கம் Seychellesஇல் காத்திருக்கிறது.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

# செவிப்புலனற்ற மற்றும் குறைபாடுடைய பிள்ளைகள்

## (Deaf and hard of hearing children)

**தொடர் - 10**



ஜீவா திசைராஜா


### அமெரிக்க சைகை மொழி (ASL) அல்லது பேச்சுமொழி சிகிச்சை (AVT):

இதனைவிட உங்கள் பிள்ளையின் செவிப்புலனை பரிசோதிக்கும் உங்கள் வைத்தியர்கள் உங்கள் பிள்ளையின் மொழித் தொடர்பாடல் விருத்திக்கு எத்தகைய சேவைகள் காணப்படுகின்றன என கூறுவர். அவையாக, அமெரிக்க சைகை மொழி (American Sign Language –ASL), வாய்மொழி மூலமான சிகிச்சை (Auditory Verbal Therapy – AVT) என்பன காணப்படுகின்றது. இது செவிப்புலன் அற்ற மற்றும் குறைபாடுடைய பிள்ளைகட்கு (Deaf or Hard of Hearing) கேட்பதற்கும் கதைப்பதற்கும் உதவும் அணுகுமுறையாகும்.

இதனைப் போன்ற பல சேவைகள் பிள்ளையின் பேச்சுத் திறனை வளர்ப்பதற்காக சமூகத்தில் உள்ளன. சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட சேவை வழங்குனர்கள், பேச்சு மொழி சிகிச்சை வழங்குபவர்கள், ASL மற்றும் பேச்சு, எழுத்தறிவு தொடர்பான ஆலோசகர்கள் தொடர்ந்தேர்ச்சியான மொழிவிருத்தி சேவைகள் மற்றும் ஆதரவை வழங்குவர்.

அமெரிக்க சைகை மொழி ஆலோசகர்கள், சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட செவிப்புலனற்ற வளர்ந்தோர் ஆவர். இவர்கள் அமெரிக்க சைகை மொழியை தமது தொடர்பாடல் முறையாக கொண்ட குடும்பங்கட்கு அறிவுறுத்துவார். செவிப்புலன் மற்றும் வாய்மொழி மூலமான சிகிச்சையானது ஓர் காது கேட்காத அல்லது செவிப்புலன் குறைந்த பிள்ளைக்கு செவிமடுக்கவும் கதைப்பதற்கும் கற்பிக்க உதவுகின்றது. இந்த சேவையை வழங்குபவர், பேச்சுமொழி சிகிச்சையாளர் (Speech Language Pathologist) காதுகேட்டல் தொடர்பான சிகிச்சையாளர் அல்லது செவிப் புலனற்ற மற்றும் செவிப்புலன் குறைந்த பிள்ளைகட்கு கற்பிப்பதில் பயிற்சி பெற்றவராக இருப்பார். இவர் மொழிவளர்ச்சி பின் தங்கிய அல்லது குறைபாடுடைய பிள்ளைகளுடனும் அவர்களது குடும்பங்களுடனும் இணைந்து பணியாற்றுவார். காதுகேட்டல் குறைபாடுடைய பிள்ளைகளின் மொழி வளர்ச்சி பின்தங்கியதாக இருப்பதால், பேச்சு மொழி சிகிச்சையாளர்கள், பிள்ளைகள் மொழியை கற்பதற்கு அவர்களது குடும்பங்கட்கு உதவுவர். பிள்ளைகளின் தொடர்பாடல் அபிவிருத்தியை வளர்ப்பதற்கு இவர்கள் குடும்பத்திற்கு உதவியாக இருப்பர்.

பிள்ளை வளரும்போது செவிப்புலன் அற்ற மற்றும் குறைபாடுடைய பிள்ளைகட்கு கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்கள் உங்கள் குடும்பத்திற்கு உதவியாக இருப்பர். உங்கள் பிள்ளை வளர்ந்து வரும்போது, சிசு காது கேட்டல் நிகழ்ச்சித் திட்ட நிபுணர்கள் (Infant Hearing Program Professional) தொடர்ந்து பிள்ளைகளின் மொழி விருத்தியை மதிப்பிடுவதுடன் கண்காணிப்பர். அத்துடன் சேவை எவ்வாறு வழங்கப்படும் என்பதற்கும் உதவுவர். பிள்ளையின் மொழி வளர்ச்சிக்கு வெவ்வேறு அணுகுமுறைகளை பெற்றோர் பயன்படுத்திய போதிலும் வயதுக்கு பொருத்தமான மொழி




வளர்ச்சியை பிள்ளை பாடசாலைக்கு செல்லும் போது பெற்றிருக்க வேண்டும்.

### அமெரிக்க சைகை மொழி (American Sign Language)

அமெரிக்க சைகைமொழியை தமது முதல் மொழியாக பயன்படுத்தும் குழந்தைகள் ஏனைய மொழிகளை தாய்மொழியாக கொண்டுள்ள பிள்ளைகளைப் போலவே அதே கட்டங்களைத் தாண்டிச் செல்ல வேண்டும்.

### அமெரிக்க சைகைமொழி கட்டங்கள்:

#### பிறப்பில் இருந்து 6 மாதம் வரை:

சுற்றியுள்ள சூழலை சுறுசுறுப்பாக நோக்குவர். எந்த ஒரு மனிதரின் அசைவாலும் பிள்ளை கவரப்படுவதுடன் அவர்களின் முகத்தை கவனமாக உற்றுநோக்குவர். அவர்கள் புன்னகைக்கும்போது தாமும் புன்னகைப்பதுடன் அணைப்பதையும், தூக்குவதையும் விரும்புவர். இக்காலத்தின்போது, பிள்ளைக்கு உணவூட்டும்போதும், குளிக்க வார்க்கும் போதும், உடையணிவிக்கும்போதும் பிள்ளையுடன் சைகைமொழியில் பேச முயலுங்கள். பிள்ளையுடன் விளையாடும்போது கை அசைவுகளுடன் அதிகளவிலான முக பாவனைகளை வெளிப்படுத்துங்கள். பிள்ளையின் அறையில் ASL வர்ணப் படங்களையும் விரல்களால் சைகைப்படுத்தப்படும் அடிப்படை எழுத்துக்களையும் (Alphabets) வைப்பதுடன் பிள்ளையின் அறையில் ஓர் கண்ணாடியை வைப்பதன் மூலம் நீங்கள் அறையினுள் வருவதையும், வெளியேறுவதையும் பிள்ளை பார்க்கக்கூடியதாக இருக்கும். பிள்ளை துள்ளும்போதும் ஆடும்போதும் பிள்ளையை பிடித்துக் கொள்ளுங்கள். படப்புத்தகங்களை காட்டி சைகை மொழியில் உரையாடுங்கள்.

#### 6 தொடக்கம் 9 மாதம் வரை:

கைகளைத் திறந்து மூடும் செய்கையை பிள்ளை விரும்புவதுடன் அசையும் பொருட்களை நோக்கி தலையைத் திருப்புவதுடன் தொடர்பாடலுக்கு பயன்படுத்தப்படும் சைகை அசைவுகளை அவதானிக்கும். அமெரிக்க சைகைமொழி மூலம் பொருட்களையும் குடும்ப அங்கத்தவர்களை பெயரிடும்போது அவற்றை நோக்கி பார்க்கும் எளிமையான அமெரிக்க சைகை மொழி (ASL) சொற்களை விளங்கிக் கொள்ளும். இவற்றை நீங்கள் ஊக்குவிப்பதுடன் பிள்ளையுடன் சேர்ந்து சைகைமொழியிலான பிள்ளைகளின் ஒளிநாடாக்களை (Video tapes) அவதானியுங்கள். புத்தகத்தை பார்த்து படங்களை காட்டி அவற்றை ASL மூலம் பெயரிடுவர். பிள்ளை செய்யும் சைகைகளில் நீங்கள் ஆர்வம் காட்டுவதுடன் அவற்றை திரும்பவும் செய்து காட்டுங்கள்.

9-12 மாதமளவில் என்னுடையது, இன்னும் (More), பால், அம்மா என்ற வார்த்தைகள் எளிமையான கையசைவுகளைக் கொண்டு செய்வர். 10 சைகைகளையாவது இக்காலகட்டத்தில் அறிந்திருப்பர். 1-1/2 வயதில் முக பாவங்களையும் சைகைமொழியுடன் சேர்த்துச் செய்யக் கற்றுக்கொள்வர். 2 வயதளவில் கிட்டத்தட்ட 200இற்கு மேற்பட்ட சொற்களின் சைகைமொழிகளைக் கற்றுக்கொள்வர். இதேபோல பேச்சுப் பயிற்சி கொடுக்கப்படும் பிள்ளைகளும் படிப்படியாக ஒவ்வொரு வயதுக் கட்டங்களில் மொழியைப் பேசக் கற்றுக்கொள்வர்.

பிள்ளைகளுக்கும் உங்களுக்குமான சைகை மொழியைக் கற்றுக்கொள்வதற்கு ஒன்ராறியோவில் பல இடங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று Canadian Hearing Society ஆகும். இதன் தொடர்பு முகவரி:

**271 Spadina Road**
**Toronto, ON**
**MSR 2V3**

| | |
|---|---|
| தொலைபேசி: | 416 928 2504 |
| TTY: | 416 964 0023 |
| தொலைநகல்: | 416 928 2523 |
| இணையத்தளம்: | http://www.chs.ca |

தொடரும்...

**உசாத்துணை:**

www.raisingdeafkids.org/hearingloss/testing/nhs.php
www.ericdigests.org/1998-2/inclusion.htm
www.infanthearing.org
www.children.gov.on.ca/htdocs/English/topics/earlychildhood/hearing/brochure_services.aspx

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

ENERGY AUDIT
Gerard Ratnarajah, P. Eng.
Tel: 647-206-4494
Green Innovations For Living

www.enerecon.com

# ATTIC INSULATION

**A Well Insulated Attic In The House Will:**

- Reduce Heat Loss Through Attic
- Save on Heating & Cooling Costs
- Prevent Roof Rot and Mold
- Get Government Grants



வீட்டின் நன்கு உள்ளீடு செய்யப்பட்ட பத்தி (ATTIC):



- பத்தி (ATTIC) ஊடான வெப்ப இழப்பை குறைக்கும்.
- வெப்பமாக்கும் அல்லது குளிராக்கும் செலவீனத்தை குறைக்கும்.
- கூரை உக்குததலிருந்தும், பூஞ்சணம் பிடிப்பதிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும்.
- அரச மானியம் பெற்றுத் தரும்

There are over 1 million homes with not enough

## Attic Insulation!

***Is your home one of them?***

**Call for more information and free quotation:**

மேலதிக விபரங்கட்கும், இலவச மதிப்பீட்டிற்கும் அழையுங்கள்:

**ENERecon Inc.**

Tel: **416-847-7171**

Cell: 416-939-9353 Fax: 416-847-7181 info@enerecon.com

Stay warm in winter. Be cool in summer

# சிங்களவர்கள் ஆரியர்களா?



முருகேசு
பாக்கியநாதன்

## சிங்களம் ஆரியமொழியா? சிங்களவர்கள் ஆரியர்களா? சிங்களவர்கள்தானா இலங்கையின் ஆதிக்குடிகள்?

சிங்களவர்கள் ஆரியவம்சத் தொடர்புடையவர்களா? அப்படியாயின் அதற்கான ஐயம்திரிபற நிறுவப்பட்ட ஆதாரங்கள் யாவை எனக்கேட்டால், அதன் ஆதாரமாக புனைந்து எழுதப்பட்ட மகாவமசத்தினை மட்டுமே சுட்டிக்காட்டுவர்.

ஆதிகாலத்திலே நிலத் தொடர்புள்ளதான இடங்களிலேயே இனக்குழுமங்கள் வாழ்ந்து வந்தன. இதனை விடுத்து நிலத்தொடர்பற்ற ஒரு நாட்டிலே 2000 மைல்களுக்கப்பால் வாழ்ந்த ஆரியர்கள் அரசியல் நோக்கங்களுக்காகவோ அன்றி சமய நோக்கங்களுக்காகவோ அல்லது வாணிப நோக்கங்களுக்காகவே ஒரு நாட்டில் ஒரு மிகச் சிறிய தொகையினராக வேறொரு நாட்டில் வந்து தங்கி அந்த நாட்டு மக்களோடு கலக்கும் போது ஏற்கனவே அங்கு வாழ்ந்த மக்கள் எவ்வாறாக அங்கு வந்து குடியேறிய மக்களின் இனமாக மாறமுடியும். இவ்வாறாகவே 600 பேருடன் குடியேறிய வங்காளத்தின் கலிங்கத்தின் (இன்றைய ஒரிசா) இனத்தவர்கள் மகாவம்சத்தினால் ஆரியர்கள் என்று கற்பிதம் செய்யப்பட்டு அந்தச் சிறு குழுவின் வழிவந்தவர்களே சிங்களர் என்று கூறத்தலைப்பட்டனர். இப்டியாக வந்து குடியேறிய விஜயனின் வழி வந்த வங்காளிகள் யாவரும் வடதிராவிடர்கயோகும் இவர்களை இனப்பாகுபாட்டில் இனவியலாளர்கள் மொங்கொலெயிட் திராவிடர்கள் (Mongoloid Dravidians) என அழைத்தனர். சிங்களத்தில் புத்தசமயம் பரப்பப்பட்டதனால் கௌதம புத்தரையோ அன்றி அவர் சார்ந்த இனமாகிய நேபாளிகளையோ அவர்கள் ஆரியர் அல்லாதவர்கள் என்று சாதாரண ஒரு சிங்கள குடிமகன்கூட ஏற்றுக்கொள்ளமாட்டான். ஏனெலில் அந்த அளவிற்கு அவர்கள் ஆரியமாயையில் திளைக்க வைக்கப்பட்டுள்ளார்கள். கௌதம புத்தரே ஆரியர் பரம்பரையில் வந்தவரல்லர். அதனை விடுத்து மற்றையோர் பூரணமாகவும் உறுதியாகவும் எற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்கள் ஏதும் இல்லாமல் பாளிமொழியில் புனையப்பட்ட கற்பனைப் பாத்திரங்களையும் கற்பனை வரலாறுகளையும் உருவகப்படுத்திச் சொல்லும் மகாவம்சக் கதைகளை நம்பி அவர்கள் ஆரியர் என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. அரசியல் அதிகாரம் உள்ளவன் வகுப்பதே ஒரு நாட்டின் வரலாறாகவும் அவர்களால் பெற்று சமர்ப்பிகப்படும் தொல்பொருள் ஆதாரங்களே அந்த நாட்டின் சரித்திர ஆதாரமாகின்றது. இப்படியாக அரசினால் தெரிவிகப்பட்டு அதுவே பிற்காலத்தே உலகநாடுகளால் ஏற்கப்படும் சரித்திரமாக மாறுகின்றது. இவ்வகையாகவே இலங்கையில் தமிழர்களின் சரித்திரம் மறைக்கப்பட்டு தமிழர்களது தொல் பொருட் சான்றுகள் மறைக்கப்பட்டு சிங்களவர்களின் சரித்திரமே அங்கு மேலோங்க வைக்கப்பட்டுள்ளது. கதிர்காமத்தினையண்டிய பகுதிகளில் முன்பு அகழ்வாராச்சி செய்தபோது அங்கு கிடைக்கப்பெற்ற புதைபொருட்களில் நிறையவே மீன்சின்னங்கள் பொறிக்கப்பட்ட பாண்டியச் சின்னங்கள் காணப்பட்டததை அப்படியே கபளீகரம் செய்யப்பட்டு மறைக்கப்பட்டுவிட்டது. மிக அண்மையில் வெளிவந்த புதிய என்சைக்குளொப்பீடியா ஒன்றில் இலங்கைபற்றி அதில் கூறப்படும்போது அது சிங்களவர்களின் நாடென்றும் தமிழர்கள் அங்கு தென்னிந்தியாவின் வந்தேறுகுடிகள் என்றும் குறிபிடப்பட்டுள்ளது. இது அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் கொடுக்கப்பட்டதாகும். இலங்கை அரசு எப்படிச் செயற்படும் என்பது சொல்லித் தெரியவேண்டுமென்பதல்ல. ஆனால், அண்மைய யுத்தமும் அதன்பிந்திய அவர்களது நடவடிக்கைகளும் அவர்களின் நம்பகத் தன்மையினையும் வெளிப்படைத் தன்மையினையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. தமிழர் வரலாறுகள் மறைக்கப்பட்டது பற்றி முந்திய கட்டுரைகளில் ஆதாரத்தோடு தந்திருந்தேன்.

வங்காளிகள் யாவரும் ஆரியர்கள் அல்ல என்பதும் அவர்கள் திராவிடர்கள் வழிவந்தவர்கள் என்பதும் மகாநாமாவிற்குத் தெரியவில்லைப் போலும். அதனால்தான் அவர் வேறு பல இலங்கையின் இனவெறியர்களின் நோக்கங்களைப் பூர்த்திசெய்ய சிங்களரை ஆரியர் என்றழைதனர். சிங்கள பேராசிரியர்களுக்கும், தொல்லியலாளர்களுக்கும் மற்றும் வரலாற்றாசிரியர்களுக்கும் ஒரு பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றேன். அதாவது யுனெஸ்கோ நிறுவனத்தினது அனுசரணையுடன் ஒரு சிங்களவனையும் ஒரு ஒரியனையும் ஒரு தமிழனையும் மரபணுச் சோதனைக்கு (DNA) ஆளாக்கினால் இதிலிருந்து தெளிவான உண்மை வெளிவரும். இப்படியாக யுனெஸ்கோவினால் அவுஸ்திரேலிய ஆதிக்குடிகளின் மரபணு சோதிக்கப்பட்டு பல உண்மைகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. அதனைச் செய்ய இலங்கை அரசு தயாரா? இதனை இன்றைய தமிழ் உணர்வாளர்கள் செய்வார்களா?

இதனை ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட அமைப்பு செய்யமுடியும்.

## சிங்கள இனம் எப்போது தோன்றியது?

சிங்கள இனமோ அன்றி மொழியே தோன்றியதொன்றல்ல. மாறாக, தமிழ் மொழியிலிருந்து வளர்ச்சியடைந்த ஒரு கிளை மொழியேயாகும். ஆரம்பத்தே சிங்கள இனம் தமிழினாமாவே இருந்தது பின்பு தெற்கே வாழ்ந்த தமிழர்களே புத்தசமயத்தினைப் பின்பற்றினார்கள். அவர்களது மொழியானது தமிழ், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் கலந்த ஒரு தனிக் குழுமப் பேச்சாகப் பரிணமித்ததனாலும் அவர்கள் தங்களை ஒரு வேற்று இனமாகவும் கருதியதாலேயே தமக்கென வேற்றொரு மொழியினையும் தோற்றுவிக்கத் தலைப்பட்டனர். கி.பி 6ஆம் நூற்றாண்டுவரை சிங்களமொழி என்கின்ற ஒரு மொழியே இருந்ததில்லை. இதனாலேயே பாளி மொழியில் மகாவம்வம் மகாநாம என்ற தேரர் அழைக்கப்பட்டு அவரிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. மகாநாம தேரரால் பாளி மொழியில் மகாவம்சம் எழுதப்படும்வரை சிங்கள இனம் என்றதொரு கருதுகோளே இருந்ததில்லை. விஜயன் என்றதொரு புனையப்பட்ட பாத்திரம் படைக்கப்பட்டே மகாவம்சத்தின் வரலாறு ஆரம்பமாகின்றது. புத்த சமயம் இலங்கையில் பரவியபின்பு விஜயன் என்ற கற்பனைப் பாத்திரம் தொடக்கம் புத்த சமயத்தினைத் தழுவியவர்கள் யாவரும் ஆரியர்களாகவும் இந்தியாவிலிருந்து வந்த வங்காளிகளாகவும் உருவகிக்கப்படுகிறார்கள். ஆனால் விஜயனுடன் வங்காளத்திலிருந்து வந்தவர்கள் 600 பேர் மட்டுமே. அந்த வங்காளிகள் யாவரும் ஆரியர்கள் அல்ல என்பதும் அவர்கள் திராவிடர்கள் வழிவந்தவர்கள் என்பதும் மகாநாமாவிற்குத் தெரியவில்லைப் போலும். சிங்களவர்கள்தான் புத்தசமயிகளெனில் எப்படியாக தமிழர்கள் இன்றும் பெரும்பான்மையாக தமிழர்கள் வாழும்பகுதியிலேயே புத்தர்பெருமான் நாகதீபத்திற்கு வந்துபோயுள்ளது மகாவம்சத்திலேயே கூறப்படுகின்றது. அதன்பின்பு அங்கு நடைபெற்ற இரு அரசர்களின் சண்டையினைத் தடுத்து புத்தர்பெருமான் அந்தச் சண்டைக்குக் காரணமான சிம்மாசனத்தினைப் பாதுகாக்க கல்யாணியின் தமிழ் நாக அரசனானான மகாதீர்தனிடம் ஒப்டைத்ததாக மகாவம்வம் கூறுகிறது. அடுத்து, கந்தரோடையில் பல சிறிய சிறிய தாதுகோபங்கள் இன்றும் காணப்படுகின்றது. இதனைச் சில தமிழ் ஆய்வாளர்கள் புத்தசயம் சார்ந்த தமிழர்கள் அடக்கம் செய்யப்பட்ட சமாதிகள் என்றும் குறிபிடுகின்றார்கள். அத்தோடு சங்கமித்தை வெள்ளரசுக் கிளையினைக் கொண்டுவந்து இறங்கிய மாதல் கடற்கரைப் பிரதேசமாகும். இங்கு தற்போது இராணுவத்தினரது துணையோடு பாரிய ‘பன்சலை’ கட்டப்பட்டுள்ளது. அடுத்ததாக விஜயன் வந்திறங்கியது தம்பப்பண்ணை என்று சொல்லப்படும் மன்னாருக்கும் சிலாபத்திற்கும் இடைப்பட்ட பிரதேசமாகும் இங்கு தமிழர்களே முழுக்க முழுக்க வசித்த பிரதேசமாகும்.

தொடர்தல் 64ம் பக்கம்

**“ எந்த மொழியும் மற்றைய மொழிகளிடம் இருந்து சொற்களைக் கடன் பெறாதவையல்ல. ஆனால், ஆறிற்கு மேற்பட்ட மொழிகளின் சொற்களைப் பெற்று ஒரு கூட்டு மொழியினை அமைத்துவிட்டு அதனை எவ்வாறு ஆரிய மொழிக்குடும்பத்துள் அடக்க முடியும். ”**

## கண்டெடுத்த தமிழ் பிராமி எழுத்துக்கள் கொண்ட தாழி மறைக்கப்பட்டது:



திசமாறகமவில் 2007ஆம் ஆண்டு கண்டெடுத்த தமிழ் பிராமி எழுத்துக்கள் கொண்ட தாழி.

திசமாறகமமையில் 2007ஆம் ஆண்டு இந்த தமிழ் பிராமி பதித்த மண் பாணடம் ஜேர்மன் புதைபொருள் ஆராச்சியாளரால் கண்டு பிடிக்கப்பட்டு அரசாங்க புதைபொருள் திணைக் களத்திற்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. ஆனால் கடந்த ஒக்டோபர் மாத 27ஆம் திகதிய செய்திப்படி மேற்படி தமிழ் பிராமி பதித்த மட்பாண்டம் காணமல் போய்விட்டதாகச் செய்தி வந்துள்ளது. இதுவே இலங்கையின் வரலாற்றுச் சாபக்கேடாகும். இப்பகுதியெல்லாம் தமிழர்கள்தான் வாழ்ந்தார்கள் என்பதற்கான ஆதாரம் மீண்டும் கிடைக்காதவாறு அழிக்கப்பட்டுவிட்டது.

**SP Electronics**

நண்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு
மனமார்ந்த புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள்.

TV, VCR, DVD, Players-Telephone-Computers
உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்
416 264 6400
2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)

HomeLife Future Realty*

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229



## Gold Award Winner 2010

To all of my Clients,

Without your support I would not have been able to receive this recognition. I would like to thank you very much for your continuing support.

Kathir Kandiah
Real Estate/Mortgage Broker
416-230-6462
kkathir@trebnet.com
Lic #: M08009958

Happy New Year!!

*Independently Owned and Operated



கவிஞர் கந்தவனம் அவர்களின்
'நாடக அனுபவங்கள்'

## நூல் வெளியிட்டு விழா

### ஜனவரி 8 சனிக்கிழமை

மாலை 5.30 மணி

மேற்படி நூல் வெளியிட்டு நிகழ்விற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

416 286 0457, 647 449 1271

**Agincourt Community Center**
**31 Glen watford Drive**
**(Midland & Sheppard)**



## தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

inayam



- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

**inayam.net** மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே **inayam.net**இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது. இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே **www.inayam.net** முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

**www.inayam.net**

info@inayam.net 416.400.6.406

# சிங்களவர்கள்...

62ம் பக்கத் தொடர்ச்சி...

அடுத்து புத்தர் விஜயம் செய்த மற்ற இரண்டு இடங்கள் ஒன்று கல்யாணி (இது இன்றைய களனி) அடுத்தது ஆதிவேடர்கள் வாழ்ந்த மகியங்கனை என்பதாகும். இங்கு புத்தர் தங்கியிருந்த போது கல்யாணி அரசன் மகாதீர்த்த நாகன் புத்தபெருமானைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்று புத்தசமயத்தினைத் தழுவிக் கொண்டான் இதனைப் பின்பற்றி அங்கிருந்த இயக்கர்களும் இராட்சதர்களும் புத்தசமயத்தினைப் பின்பற்றியதாவே மகா வம்சம் கூறுகின்றது. இந்த இயக்கர்கள் ஆதித் தமிழர்களின் ஒருகுழுவினரேயாகும் இராட்சதர் என்போர் நாகர்களையே குறிக்கும். மகா பாரதம் கம்பராமாயணம் ஆகிய காப்பியங்களின் தென்னாட்டுத் திராவிடர்களையே இராட்சதர் என்று குறிப்பிடுகின்றார்கள் அதே சொல்லைப்பாவித்து மகாநாமா மகாவம்சத்தினை எழுதியதில் வியப்பேதும் இல்லை. ஆகவே புத்தபெருமான் ஆரம்பகாலத்தே தமிழரசர்கள் ஆண்ட பிரதேசங்களுக்கே சென்று தமிழர்களிடமே புத்தசமயப் பொறுப்பு கொடுக்கப்பட்டது என்பது புத்தர் விஜயம் செய்த நாகதீபம், கல்யாணி, மகியங்கனை ஆகிய இடங்களின் மூலமும் அங்கு வாழ்ந்த நாகரின் வழிவந்த தமிழரசர்களிடமே பொறுப்புக் கொடுக்கப்பட்டதாகும் ஆகவே இதன் பொருட்டு அறியக்கிடக்கப் பெறுவது புத்தர் இலங்கைக்கு விஜயம்செய்த காலத்தே சிங்கள இனமோ அல்லது மொழியோ இருந்ததில்லை என்பதாகும்.

சென்ற மாதக்கட்டுரையில் சிங்களமொழி எங்கிருந்து தனது மொழி வரிவடிவத்தினைப் பெற்று சிங்கள் எழுத்தனை அமைத்தது என்பதனை பல்வித கோணங்களில் ஆய்ந்தோம் இதிலிருந்து ஆரிய மொழியின் ஒரு வரிவடிவமாகிய கிரந்தத்திலிருந்தா? அன்றி தமிழில் இருந்தா என்பதனை நோக்கும் போது இரண்டு எழுத்து வரிவடிவங்களும் பாவிக்கப்பட்டே சிங்கள வரிவடிவம் அமைக்கப்பட்டுள்ளது. ஆதில் தமிழுக்கு இல்லாததும் கிரந்தத்தில் உள்ளதுமான ஷ,ஹ,ஸ,ஜ,ஸ்ரீ ஆகியன்வும் சிங்களத்திற்கேயுரியதான சில விஷேட உச்சரிபுக்களுக்கான வரிவடிவம் பிற்காலத்தே சேர்க்கப்பட்டது சிங்கள மொழியின் ஒரு விஷேட அம்சமாகும். கிரந்தம் என்பதே தமிழ் வரிவடிவினை அடிப்படையாக வைத்து சமஸ்கிருத உச்சரிப்போடு தென்னாட்டில் வடமொழியினைப் புகுத்துவதற்காகப் உருவாக்கப்பட்ட ஒரு வரிவடிவமாகும் இவ்வகையான கிரந்த வரிவடிவத்திலேயே தமிழ்ச் செல்வாக்கு மேவிநிற்கும் போது தமிழில் இருந்தும் கிரந்தத்திலிருந்தும் பெற்ற வடிவங்களைக் கொண்டும் தமிழ், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளின் சொற்களினால் ஆன சிங்கள மொழியினை எவ்வாறாக ஆரிய பாஷை என்றோ, அந்த இனத்தினை ஆரிய இன வழிவந்தவர்களன்று கூறமுடியும்.

தொடர்ந்து பார்க்கும்போது தமிழ் பாளி சமஸ்கிருத சொற்களே பேச்சு வளக்கில் பயன் படுத்தப்பட்டன. ஆனால் பிற்காலத்தே டச்சுச், போத்துக்கீச், ஆங்கிலம் மற்றும் மலே சொற்கள் ஆகியவற்றை மிகத்தாராளமாக இரவல் பெற்றே தமது மொழியினை வளம் செய்து கொண்டு இருக்கிறார்கள் முன்பு சுவாமி ஞானப்பிரகாசர் ஆராய்ந்ததில் 4000 தமிழ் சொற்கள் இருந்ததாகப்பார்த்தோம் மேலும் ஆராயின் இன்னும் பல்லாயிக்கணக்கான திரிபுற்ற சொற்களைக்கூடக் கண்டறிய முடியும். பாளி மொழிச் சொற்கள் கூடுதலாக சமயம் சார்ந்தும் சமயப்பிரசங்கங்கள் சார்ந்தும் புத்த துறவிகளின் பெயர்கள் சார்ந்தும் வருகின்றன. சமஸ்கிருதம் என்பது தமிழில் இல்லாத சில பொருட்களை, நாள், மாதம், கிழமை, எனணுக்கணக்குக்கள் மற்றும் சில சொற்களும் பாவனையில் உள்ளன. அடுத்ததாக ஐரோப்பியர் வருகையின் பின்பு போத்துக்கீஸ், டச்சு, ஆங்கிலச் சொற்கள் சிங்களமொழியில் பாரியளவில் ஆதிக்கம் செலுத்தியுள்ளதென்றால் அதில் மிகையேதும் இல்லை.

உலகில் எந்த மொழியும் மற்றைய மொழிகளிடம் கடன் பெறாதனவல்ல. ஆங்கிலம் ஒவ்வொரு வருடமும் ஏறத்தாள 2000 புதியதுமானதும் வேற்றுமொழிச் சொற்களையும் கடன் வாங்கித் தனது அகராதியினை விருத்தி செய்து கொண்டு போகின்றது. இதேவகையாக தமிழிலும் நாளாந்தப் பாவனைக்கான சொற்களை அங்கிலத்திலிருந்து பெற்றுப்பாவிக்கின்றோம் அதேபோல் போத்துக்கீசிலிருந்தும் டச்சுமொழியிலிருந்தும் பெற்று பாவனையில் உள்ளது. இதனைத் தவறென்று மொழியிலில் கூறப்படுவதில்லை. ஆனால் ஏறத்தாள ஆறிற்கு மேற்பட்ட மொழிகளின் சொற்களைப் பெற்று ஒரு மொழியினை அமைத்துவிட்டு அதனை எவ்வாறு ஆரிய மொழிக்குடும்பத்துள் அடக்க முடியும். இதனை மொழியலாளர்கள் எவ்வாறு ஏற்றுக்கொண்டனர். அரசு செலுத்தும் ஆதிக்கமே அதற்குரிய காரணமாகும்.

சிங்களத்திற்கான இலக்கணமாகிய சித்த சங்கராவ கி.பி 11ம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியம் என்ற தமிழ் இலக்கண நூலைப் பின்பற்றியே எழுதப்பட்டதாக கலாநிதி சி.ஈ.கொடகும்பர என்கின்ற சிங்களப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். இப்படியாக தமிழ் மொழி சார்பாகவோ அன்றி தமிழர் வரலாறு சம்பந்தமான கருத்துக்களைக் கூறும் தமிழர்களின் தொல்லியல் ஆதாரங்கள், பிராமி எழுத்துக்கள் பற்றி தமிழ் சார்ந்தோ அன்றி தமிழர் சார்ந்தோ அறிகைகளோ ஆய்வுக் கட்டுரைகள் சிங்களப் பேராசிரியர்களால் விடப்பட்டால் அவர்கள் பலவிதத்திலும் தண்டிக்கப்படுகின்றார்கள். அவர்களது மேற் படிப்பு, அவர்களது முன்னேற்றம் தடுக்கப் படுகின்றது. பேராசிரியர் பதிவிகள்கூட அவர்களுக்கு இல்லாமல் செய்ப்பட்ட வரலாறுகள் உண்டு இதன் பயம் காரணமாகவே உண்மை தெரிந்த பண்பான சிங்கள பேராசிரியர்கள் மௌனமாகிவிட்டதுடன் பல பேராசிரியர்கள் பொய்மையினை உரைக்கும் இனவாத விஷம் கக்கும் பேராசிரியர்கள் ஆகிவிட்டனர். மாறாக தமது நன்மைக்கும் தமது சொந்த முன்னேற்றத்திற்கும் பேராசிரியர் கதிரைக்குமாக தமிழரின் உண்மைகளை மறைத்தும் திரித்தும் எழுதி வாதிட்ட சில தமிழ் ஆய்வாளர்களும் பேரா சிரியர்களும் உண்டென்பது யாவரும் அறிந்த ஒரு ரகசியம். தற்போதைய தமிழனின் அவலம் அவர்களை வாட்டி, தான் செய்த தவறுகளுக்காக வருந்துவதாகக் கூறுவது காலம் கடந்த ஞானமாகும். கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்வதில் பயனேதும் இல்லை.

சிம்ஹல என்ற பதம் கி.பி 5ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தீபவம்சத்தில் ஒரு முறையே குறிப்பிடப்படுகின்றது. மகாவம்சத்தில் சிம்ஹல என்ற பதம் இரண்டுமுறை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. கி.மு. 5ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இராமாயணத்தில் லம்க் என்று குறிப்பிடப்படுகின்றது. ஆனால் 3ஆம் நூற்றாண்டில் இருந்த கடைச்சங்க காலத்தே இருந்த சங்ககாலப் புலவர் உருத்திரங்கண்ணனார் அவர்கள் இயற்றிய பட்டினப்பாலை 191, 192 பாடல்வரிகளில் *'ஈழத்து உணவும், காளகத்து ஆக்கமும் அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி'.* என்ற ஒரு பாடல்வரி காணப் படுகின்றது. இதிலிருந்து ஈழத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு உணவுப்பொருள் ஏற்றுமதி யாகிய செய்தி கிடைக்கின்றது. ஆகவே ஈழம் என்ற பாவனை கி.மு 3ஆம் நூற்றாண்டிற்கு முன்பே பாவனையில் இருந்துள்ள செய்தி இங்கிருந்து கிடைக்கின்றது. ஆகவே ஈழம் என்ற சொல்லின் திரிபாகிய ஹெல இங்கிருந்தே திரிபுபடுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

குடும்ப உறவுகளை அழைத்தல் முழுக்க முழுக்க அவர்கள் தமிழ்இனமாக இருந்தபோது பாவித்த அதே உறவுகளையே இன்றும் பாவித்தது மிக்கவொரு இறுக்கமான தொடர்பாகக் கொள்ளமுடியும். அம்மா – அம்மா, அம்மே என்றும். அப்பா – தாத்தா (தாத்தா என்பது தமிழில் தகப்பனின் தந்தையினை அழைப்பதாகும், மாமா – மாமா என்றும், அக்கா – அக்கா என்றும். தங்கை – நங்கி இது மருவி நாளடைவில் தங்கி என்பதாகி நங்கியாக மாற்றம் அடைந்திருக்கலாம். இதுபோல அப்பா என்ற தாத்தாவை தாத்தி என்றும் அழைப்பர். சிங்களர் தமிழர்களாக ஒரே இனமாக இருந்ததற்கு ஒரு கனதியான ஆதாரமாகும்.

மேலே காட்டப்பட்டதும் கடந்து மூன்று பகுதிகளாகத் தரப்பட்டதுமான பல ஆதாரங்களும் தரவுகளும் சிங்களவர்கள் ஆரிய இனத்தின் வாரிசுகள் இல்லையென்றும், அவர் மொழி ஆரிய மொழியல்லவென்றும் மாறாக திராவிட மொழிக்குடும்பத்திலிந்து பிறந்த மொழியாகும் என்ற முடிவுக்கு வரக்கூடியதாகவுள்ளது. அத்தோடு முலாவது கட்டுரையில் காட்டப்பட்ட இலங்கைக்கான ஆதிகாலப் பெயர்கள் மற்றும் ஆரம்பகாலத்தேயிருந்து திராவிடர்களின் மூதாதையாகளாகிய நாகார்கள் பற்றி மகாவம்சமே கூறுகின்றது. அத்தோடு ஆரம்ப கால அரசர்கள் பலர் தமிழ் பெயர்களைக் கொண்ட அரசர்களாகவே இருந்துள்ளார்கள். ஆகவே இது ஆதிகாலத்திலிருந்தே தமிழர்கள் ஆண்ட பூமி. ஆதித் தமிழர்களே படிப்படியாக சிங்களராக மாறினார்களேயொழிய சிங்களவர்களுக்கென தனியான அடையாளம் பிற்காலத்தே, கி.பி 6ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே வருகின்றது.

தொடரும்...

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

### சிங்களம் பெற்ற இரவற்சொற்களின் பட்டியல்: தமிழ் சொற்கள் சிங்களத்தில்

| தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் | சிங்களம் |
|---|---|---|---|---|---|
| அப்பா | அப்பா | கோன் | கோன் | பிள்ளை | புள்ளே |
| அண்ணா | ஐயா | கோவணம் | கோனம | சல்லி | சல்லி |
| அக்கா | அக்கா | கொண்டை | கொண்டய | சந்தை | சன்டுவ |
| மாமா | மாமா | கோயில | கோவில | தக்காளி | தக்காளி |
| அப்பம் | ஆப்ப | கூடை | கூடே | தபால | தபால் |
| சண்டியன் | சண்டியா | கூடு | கூடுவ | தரம் | தரம |
| சிட்டை | சிட்டைய | குளல் | குளல | தட்டை | தட்ட |
| ஆலரி | அலரிய | குளப்பம் | குளப்பம | தட்டு | தட்டுகரன |
| ஏதிரி | எதிரிய | நாடகம் | நாடகம | உடுக்கு | உடுக்கய |
| கற்கண்டு | கல்கண்டுவ | கூலி | கூலிய | சுழுக்கு | சுழுக்குவ |
| இடம் | இடம | குலம் | குலம | சுருட்டு | சுருட்டுவ |
| இரட்டை | இரட்ட | மலை | மலைய | ஊழியம் | ஊழியம |
| இளவு | இளவுவ | மாலை | மாலைய | உதவி | உதவுவ |
| குடை | கடைய | மரக்கலம் | மரக்கலய | உரிமை | உருமைய |
| கடினம் | கடினம | மைச்சான் | மசினா | வெடி | வெடிதியன்ன |
| கலவை | கலவம | முதல் | முதலய | வெறி | வெரி |
| காலம் | காலய | முதலாளி | முதலாளி | மனிதன் | மினிசு |
| காந்தம் | காந்தம | முருங்கை | முரிம்கா | காசு | காசிய |
| கம்பி | கம்பிய | குளம் | குளம | குலம் | குலய |
| காப்பு | காப்புவ | நங்கை | நங்கி | கோயில் | கோவில |
| கப்பம் | கப்பம | வேணும் | ஓண | குடை | குடெ |

### போத்துக்கீஸ் சொற்கள்

| போத்துகீஸ் | சிங்களம் | tamil/english | போர்துக்கீஸ் | சிங்களம் | தமிழ் |
|---|---|---|---|---|---|
| Senil | செனில் | Senile | Kalkoen | கலுக்குமா | |
| Sereia | சேரய | Mermaid | kalaveran | கலாவரை | கலாவரை |
| Cidade | சிதாசிய | City | Kapot | கப்போதி | |
| Ciment | சிமெந்தி | சீமேந்து | Kerkhof | கர்கோப்புவ | |
| cizeiro | சின்சொருவ | Ashtray | Molen | மோளய | |
| Cinto | சிந்டுவ | Belt | Notaris | நொர்தாரிஸ் | |
| senhor | சிஞ்ஞோ | சிஞ்ஞோரே | prop | புறோப்புய | புறோப் |
| citacao | சித்தாசி | சித்தாரிப்பு | vrouw | பூறு | |
| acucar | அக்குறு | Sugar | theepot | தேபோச்சிய | |
| Tabor | தம்போருவ | Drum | Testement | தெஸ்தமெந்துவ | |
| Taverna | தபாரும | தவறணை | tolk | தொலுக்கய | |
| Tapa | தப | slap | Tompu | தோம்புவ | தோம்பு |
| Tombo | தோம்புவ | தோம்பு | Lorry | லொறிய | லொறி |
| Toalha | துவாய | துவாய் | Machine | மெசிம | மெசின் |
| Veludo | வில்லுதா | வெல்வெற் | Meeting | மீட்டிம | |
| Vinagre | வினாக்கரி | வினாக்கிரி | Note | நோட்டுவ | |
| vidro | வீதுறுவ | Glass | Office | ஒப்பிசய | |



RBC Insurance

# நிறுவனத்தின் காப்புறுதி இப்பொழுது மிகக் குறைந்த கட்டணத்தில் கிடைக்கிறது!!!

## $11[25]

30 years femail non smoker good health and prefered rate for $250,000

| Monthly Rates for 10 Year Term Insurance | | | |
|---|---|---|---|
| Age | $250,000 | $500,000 | $1,000,000 |
| 30 | $11.25 | $15.39 | $25.20 |
| 35 | $10.35 | $15.84 | $25.56 |
| 40 | $13.23 | $19.35 | $33.48 |
| 45 | $16.29 | $24.21 | $42.30 |
| 50 | $23.58 | $37.89 | $68.58 |

Female Non Smoker Good Health and Prefered Rate

**Diabetic, Heart attack, Stroke, High blood pressure, cholesterol or decline from other companies**

## NO PROBLEM

| Age 40 Female | $20,000 |
|---|---|
| Company A | $23.42 |
| Company B | $39.71 |

**We will shop around and find the best Price**

## Choice is yours

- Rates are based on non-smoker status and may vary depending on health
- Also available 15-year, 20-year and 30-year term to 100, joint last survivor, tax-advantaged life and critical illness insurance
- Rates are guaranteed for the term period selected convertible and guaranteed renewable.



RB Royal Brokers Corporation

# Siva Kandiah

CEO & Managing General Agent

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life™
Assumption Life
Industrial Alliance Insurance and Financial Services Inc.

# இன்றைய நோக்கில் பண்டைய தமிழிலக்கியங்கள்

## பகுதி - 02

- நா. சுப்பிரமணியன் -

தமிழின் பண்டைய இலக்கியங்கள் பற்றிய இத்தொடரிலே முன்னைய கட்டுரையில் ‘சங்ககாலச் சான்றோர் சூழல்’ பற்றிய ஒரு குறிப்பை முன்வைத்து அத்தொடர்பிலே ‘சான்றோர் எனப்படுவோர் யார்?’ என்ற வினாவை எழுப்பியிருந்தோம். அதன் விளக்கம் இங்கு தொடர்கிறது.

‘சான்றோர்’ என்பதன் பொருள் ‘சால்பு உடையோர்’ என்பதாகும். சால்பு என்பது ‘நற்பண்புகள் பலவும் ஒன்றிணைந்த நிலை’யாகும். சங்க காலத்தில் சான்றோர் என்ற சொல்லானது சமூதாயத்தின் உயர் பண்பாளர்களையும் போர் வீரர்களையும் சுட்டும் வகையில் வழங்கப்பட்டுவந்துளது. அன்புடைமை, அறவுணர்வு மற்றும் தியாக மனப்பாங்கு எனபவற்றால் சமூகத்துக்குப் பயன்பட்டு நின்றோரே பொதுவாகச் சான்றோர் எனக்கருதப்பட்டனர். சமுதாயத்துக்காக - நாட்டுக்காக - தம் உயிரைப் பலிகொடுக்கத் துணிந்துநின்ற உயர் தியாகப்பண்பு காரணமாக போர்வீரர்களும் அக்காலகட்டத்தில் சான்றோர் என்று குறிப்பிடப்படலாயினர் என்பதை உணரமுடிகிறது. இக்கட்டுரையில் மேற்சுட்டிய அன்புடைமை முதலிய பண்புகளால் நிறையப்பெற்ற சான்றோர் பற்றிய செய்திகளே கவனத்துக்கு வருகின்றன.

இவ்வாறான சான்றோர்கள் தம்மைச் சார்ந்துள்ள குடும்பநிலைகளிலும் சூழவுள்ள சமூகம் மற்றும் அரசு என்பன சார்ந்த தொடர்புகளிலும் இயங்கிநின்ற முறைமைகளை உணர்த்தும் வகையில் சில வாழ்வியற் செய்திகளைப் புறநானூறு முதலிய சங்கநூல்களிலே பெற்றுக் கொள்ள முடிகின்றது. இவ்வகையில் அந்நூலின் இரு பாடல்கள் தரும் செய்திகள் இங்கு நமது கவனத்துக்குரியன. ஒன்று, கடலுள் மாய்ந்த பெருவழுதி என்ற பாண்டியவேந்தனாற் பாடப்பெற்ற “உண்டாலம்ம இவ்வுலகம்...” எனத்தொடங்கும் (*புறநானூறு:182*) பாடல். மற்றது, பெருஞ்சித்திரனார் என்ற புலவருடைய, “நின்னயந் துறைநர்க்கும்...” (*புறநானூறு: 163*) என்ற பாடலாகும்.

மேற்சுட்டிய பாண்டிய வேந்தனுடைய பாடல், ‘இந்த உலகம் சிறப்புடன் திகழ்வதற்கான காரணத்தை எடுத்துரைக்கும் முறைமையில் அக்காலச் சான்றோர்களின் சமூக இயங்கு நிலைகளை விரித்துரைப்பதாகும். அப்பாடல்:

*உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்*
*அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்*
*தமியர் உண்டலும் இலரே முனிவிலர்*
*துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்*
*புகழ் எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்*
*அன்ன மாட்சி அனையராகித்*
*தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முயலுநர் உண்மையானே.*

**இப்பாடலின் பொருள்:**

தமக்காக மட்டும் வாழாமல் பிறருக்காக முழு ஊக்கமுடன் செயற்பட்டு நிற்பவர்கள் இவ்வுலகத்தில் (இன்னமும்) உள்ளனர். இவர்கள் இந்திரன் முதலிய தேவர்களுக்குரிய ‘அமிர்தம்’ போன்ற கிடைத்தற்கரிய பொருள்கள் கிடைத்தாற்கூடத் தாம் மட்டுமே தனியாக அவற்றை அநுபவிப்பவர்களல்லர். (அவற்றைப் பிறருக்கும் பகிர்ந்தளிப்பதில் மனநிறைவு கொள்பவர்கள் அவர்கள்). எத்தகு சூழ்நிலையிலும் இவர்கள் கோபம் கொள்வதில்லை. எதற்கும் சோர்வடைவதும் இல்லை. பிறர் அஞ்சும் விடயங்களுக்கு - குறிப்பாகத் தீயவற்றுக்கு - இவர்களும் அஞ்சுவர். புகழ் வரும் என்றால் இவர்கள் தமது உயிரைக்கூட அதற்கு விலையாகத் தரக்கூடியவர்கள். அதேவேளை உலகின் செல்வத்தை முழுவதுமாகக் கொடுத்தாலும் அதற்காகப் பழியான செயல்களை இவர்கள் செய்யமாட்டார்கள். மேலும் இவர்கள் எதனாலும் மனக்கவலை அடையாமல் துணிவுடன் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு நிற்பவர்களுமாவர். இத்தகு மாண்புடையோரைத் தன்னகத்தே கொண்டுள்ளதனால் தான் இந்தஉலகம் இன்னமும் சிறப்புடையதாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது.

“உலகில் எத்தனையோ அநியாயங்களும் கொடுமைகளும் நிகழ்கின்றன. அப்படியிருந்தும் இந்த உலகம் இன்னும் சிறப்புடையதாக திகழ்கிறதே அதற்கான காரணம் யாது” என யாரோ ஒருவர் வினா எழுப்பியிருக்ககவேண்டும். அதற்கு விடையளிப்பதான உணர்வுநிலையில் இப்பாடல் அமைந்துள்ளமை தெரிகிறது. “உலகம் இன்னமும் வாழக்கூடிய சிறப்புடையதாகத் திகழ்ந்துகொண்டிருப்பதற்கு மனிதநேயம் சார்ந்த பல்வேறு உயர்பண்புகளுடைய சான்றோரே காரணராவர்”. இதுவே இப்பாடலின் தொனிப்பொருள்.

உலகம் சிறப்புடன் திகழ்வதற்கான காரணத்தைப் பேசுவதாக அமைந்துள்ள இப்பாடலானது மேலே தொடக்கத்தில் “சான்றோர் எனப்படுவோர் யார்?” என எழுபபப்பட்ட வினாவுக்கான விடையாகப் பொருட்பொருத்தத்துடன் திகழ்கின்றமையை உய்த்துணரலாம்.

பெருஞ்சித்திரனாரின் ‘நின்னயந்துறைநர்க்கும்...’ என்ற பாடல் அவரையே ஒரு சான்றோராக எம்முன் காட்சிப்படுத்தி நிற்பதாகும். ஒரு குடும்பத் தலைவர் என்ற நிலையில் அவர் புலப்படுத்திநின்ற சான்றாண்மை சார்ந்த உணர்வோட்டங்களின் முக்கிய பதிவாக அமையும் பாடல் இது. வள்ளல் ஒருவரிடம் (குமணனிடம்) பரிசாகப் பெற்றுவந்த செல்வத்தைத் தன்னுடைய சூழலிலுள்ள பலருக்கும் பகிர்ந்தளிக்க விரும்பிய மனிதநேயப் பண்பினை இது வெளிப்படுத்திநிற்கிறது. பரிசுப் பொருட்களை மனைவியிடம் கையளித்த அவர் அதனை அவள் எவ்வாறெல்லாம் பகிர்ந்தளிக்கலாம் என்பதற்கான ஆலோசனையை வழங்கும்பாங்கில் இப்பாடல் அமைந்துளது. இவ்வயில் பயனாளிகளாக குடும்ப உறவுச் சூழலிலுள்ள பல நிலையினரை அவர் பட்டியலிடுகிறார்

மனைவியிடம் நட்புடன் பழகும் உறவுநிலையினர் ஒருசாரார். மனைவியால் நட்புப் பாராட்டி அணுகப்படும் நிலையினர் இன்னொருசாரார். உறவினர்களாக உள்ளவர்களில் மதித்தற்குரிய முதியநிலையினர் மற்றொரு சாரார். இவர்களைத் தவிர, ‘முன்னர் வறுமையுற்றிருந்தவேளை கேட்கும்போதெல்லாம் கடன் தந்தவர்கள் வேறொரு சாரார். இவ்வாறாக உறவுச் சூழலின் பலநிலையினரையும் இங்கு நினைவுக்கு இட்டுவருகிறார் பெருஞ்சித்திரனார். (இங்கு உறவுநிலையினர் எனச் சுட்டப்படுவோர் மகளிர் என்பதே மேற்படி பாடலின் உரையாசிரியர்களின் கருத்தாகும்)

இவர்கள் அனைவருக்கும் மேற்படி பரிசுச் செல்வம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என மனைவியிடம் கூறும் அவர் அத்தொடர்பில் மூன்று முக்கிய நிபந்தனைகளையும் முன்வைக்கின்றார்.

- ‘பகிர்ந்து கொடுக்கும் போது யாருக்குக் கொடுப்பது? மற்றும் யாருக்கு மறுப்பது? என்ற வரையறை வேண்டாம் என்பது.
- ‘கொடுப்பது தொடர்பில் மனைவி கணவனாகிய தன்னிடம் ஆலோசனைகளை மேற்கொள்ளவேண்டியதில்லை’ என்பது. (இதன்மூலம் மனைவிக்கு சுயமாக முடிவெடுக்கும் சுதந்திரத்தை அவர் வழங்கி விடுகிறார்).
- ‘இச்செல்வத்தைப் பேணிவைத்து வளமுடன் வாழலாம் என அவள் கருதக் கூடாது’ என்பது.

இனி அப்பாடலைப் பார்ப்போம்.

*‘நின்நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்*
*பன் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்*
*கடும்பின் கடும்பசி தீர யாழ நின்*
*நெடுங்குறி யெதிர்ப்பை நல்கியோர்க்கும்*
*இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி – மனைகிழவோயே*
*பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்*
*திருந்துவேற் குமணன் நல்கிய வளனே’*

இதிலே இறுதி இரு அடிகள் வள்ளலாகிய குமணனின் ஆட்சிப்புலமாகிய முதிரமலையின் சிறப்பையும் அவனது வீரத்தையும் பேசுவன.

இவ்வாறு செல்வத்தைப் பகிர்ந்தளிக்க விரும்பும் பெருஞ்சித்திரனார் வசதிபடைத்த ஒருவரன்று. வறுமையில் வாடிநின்ற ஒரு குடும்பத்தின் தலைவர் அவர். வள்ளல்களைச் சார்ந்து பாடிப் பரிசில் பெற்று அதில் அன்றாட வாழ்க்கையை நடத்தும் ஒரு சராசரி ஏழைப் புலவரே அவர். அவரின் இத்தகு நிலைமையை மேற்படி புறநானூறு என்ற நூலிலுள்ள அவருடைய பிற பாடல்கள்(158-162,207,208,237,238) தெளிவாகவே உணர்த்திநிற்பன. மேலே குறித்த இப்பாடலில் இடம்பெற்றுள்ள ‘கடும்பின் கடும் பசி தீர யாழ நின் நெடுங்குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்’ எனவரும் தொடர்மூலம் அவருடைய குடும்பமச் சுற்றம் அண்மைக்காலம்வரை பசியால் வாடியது என்பதும் அப்பசிப்பிணி தீர்வதற்கு அயலில் உள்ளோரிடம் கடன்பெறவேண்டிய நிலையில் இருந்தது என்பதை உணர்த்திநிற்பதும் வெளிப்படை.

இந்நிலையில், பெருஞ்செல்வம் கிடைக்கும் போது அவர் என்ன செய்திருக்க வேண்டும்? எதிர்கால நோக்கில் அதனைச் சேமித்து வைத்துத் தனது குடும்பத்தின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொள்வதற்கு அவர் திட்டமிட்டிருக்கவேண்டும். ‘உடைமையுணர்வு’ மற்றும் ‘பொருளியல் தன்னிறைவுணர்வு’ ஆகிய வற்றால் கட்டமைக்கப்பட்ட நமது மனப்பாங்கு இப்படித்தான் சிந்திக்கும். ஆனால் பெருஞ்சித்திரனார் என்ன சொல்கிறார்?

“இச்செல்வத்தைப் பேணிவைத்து வளமுடன் வாழலாம் எனக் கருதக்கூடாது”

என்கிறார். நமது நோக்கிலே இது குடும்பத் தலைவரொருவரின் பொறுப்புணர்வற்றதும் புத்திசாலித்தனமற்றதுமான செயற்பாங்காகவே புலப்படும். ஆனால் இங்கு புலப்படுவது பொறுப்புணர்வின்மை என்றோ அல்லது புத்திசாலித்தனமின்மை என்றோ நாம் உடனடியான முடிவுகளுக்கு வரவேண்டியதில்லை. பண்டுதொட்டுத்தொடரும் ‘பகுத்துண்டு வாழ்தல்’ பண்பின் வெளிப்பாடாக அதனைத் தரிசிப்பதே பொருத்தமாக அமையும். இதனைத் தெளிந்து கொள்வதற்குச் சமூக - பண்பாட்டுவரலாறு சார்ந்த சில அடிப்படைகளை இங்கு சிந்தனைக்கு இட்டுவருவது அவசியமாகிறது.

தொல்பழஞ் சமுதாயத்தில் - அதாவது குடும்பம் என்ற நிறுவனம் தோற்றங்கொள்வதற்கு முற்பட்ட பண்டைய இனக்குழுநிலைச் சமுதாயத்திலே - ‘கிடைக்கும் பொருளை அனைவரும் பகிர்ந்து அநுபவித்தல்’ என்பதான பரந்த மனப்பாங்கு நிலவிவந்தது. குடும்ப நிறுவனம் தோற்றம் பெற்ற நிலையில் மேற் சுட்டியவாறான பரந்த மனப்பாங்கு சுருங்கத் தொடங்கிவிட்டது. உடைமையுணர்வும் பொருளியல்சார் வரையறைகளுக்குள் நின்று சிந்திக்கும் மனப்பாங்கும் உருவாகிவிட்டது. இவ்வாறாக, ‘பரந்த மனப்பாங்கு சுருங்கத் தொடங்கிவிட்ட’ போதுங்கூட பண்டைய சமூகத்தின் ‘பகிர்ந்து அநுபவித்தல்’ என்ற மனிதநேயப்பண்பும் பலரிடம் பல நிலைகளில் தொடர்ந்தது. இதுவே நாளடைவில் ‘அன்பு’ மற்றும் ‘அறம்’ ஆகிய பண்புகளை உள்ளடக்கிய ‘சான்றாண்மை’யாகக் ‘கருத்தியல்வளர்ச்சி’யை எய்தியது. இது வரலாறு.

தமிழின் தொல்லிலக்கியங்களான சங்கநூல்கள் காட்டும் சமுதாயமானது புராதன இனக் குழுநிலையிலிருந்து தனியுடைமையுணர்வு உருவாகி, பல நிலைகளில் மாற்றமடைந்து கொண்டிருந்த ஒரு ‘நிலைமாறு கட்ட சமுதாயம்’ என்பதே வரலாற்றியலார் தரும் செய்தியாகும். இவ்வாறான ‘நிலைமாறு காலகட்ட’ச் சமூகமனிதர்களுள் ஒருவராகவே மேற்சுட்டிய பெருஞ்சித்திரனார் என்ற குடும்பத் தலைவர் நமது தரிசனத்துக்கு வருகிறார் என்பதும் அன்றைய சான்றாண்மையின் ஒரு இயங்குநிலையையே அவர் நமக்குக் காட்சிப் படுத்தி நிற்கிறார் என்பதுமே மேற்படி பாடல் தொடர்பில் நமது சிந்தனைக்குரிய முக்கிய அம்சங்களாகும்.

*(சிந்தனை தொடரும்).*



subramanian.n@thaiveedu.com

> “ உலகம் இன்னமும் வாழக்கூடிய
> சிறப்புடையதாகத் திகழ்ந்துகொண்டிருப்பதற்கு
> மனிதநேயம் சார்ந்த
> பல்வேறு உயர்பண்புகளுடைய
> சான்றோரே காரணராவர் ”

**Tutoring & Homework Help**

**French** / For grade 4 to grade 12 or IB program By a native French speaking teacher from France **Math** / For grade 5 to grade 12 or IB program In English or French medium Intersection

**Mr. Shanthakumar**

**(Victoria Park & Ellesmere) 647 262 9430**

# JRS College

"Committed to provide Quality Training"

# Scarborough Campus

## Computer Basic Class

Starts on Jan.9th@10.00Am-12Pm(Sunday)



## Food Handler Training

On Dec.4th@10Am-4Pm(Satuday)



## English Class(Business Communication)

Starts on Jan. 23rd@9.00AM-12.00PM(Sunday)



# DIPLOMA PROGRAMS

Accounting and Payroll Administration

Health Office Administrator (HOA)



Computerized Accounting

Office Assistant

## CERTIFICATE COURSES

- MS Office
- Business Communication
- Payroll
- QuickBooks
- Bank Teller
- Cashier
- Food Handling
- Simply Accounting
- Accpac

Some Courses are not available in Etobicoke Campus

(Registered and Approved as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

| SCARBOROUGH CAMPUS | ETOBICOKE CAMPUS |
|---|---|
| (Midland & Finch) | (Kipling & Dundas) |
| 330-4168 Finch Ave East | 300-5359 Dundas St West |
| Scarborough, ON M1S 5H6 | Etobicoke, ON M9B 1B1 |
| 416-292-2455 | 416-207-9975 |



# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!

## FIREMAN STEINMETZ

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

## MOTOR VEHICLE ACCIDENT

FRACTURES - SPINAL CORD INJURY - BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT - INTERNAL INJURIES OR DEATH



**Jack J. Fireman Q.C. LLM.**

Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer"catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**Harry F. Steinmetz**

Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

## உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**

- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

## OVER 50 YEARS COMBINED EXPERIENCE

even if you are:

unemployed - employed - passenger - pedestrian
cyclist - traveling in public transit - student - housewife

You may be eligible for benefits to THOUSANDS of dollars

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S-per week வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

## தீபன்

24 Hours Direct Line
(416) 505 - 9804
(416) 624 - 4751

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)
www.thipaninjuryclaim.com
thiparanjan@gmail.com

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

TORONTO | SCARBOROUGH | MISSISSAUGA


# இந்திய மீனவர் அத்துமீறல் தொடரும் அவலங்கள்

நீண்ட காலமாக இருப்பதும், இடைக்காலத்தில் மறைக்கப்பட்டு வெளித்தெரியாமல் இருந்-ததும். தெரிந்தவர்கள் சிலபேர் கூட மறந்திருந்ததுமான இந்த மீனவர் அவலத்தின் உண்மைய நிலையை வெளிக்கொணருவதே இக்கட்டுரையின் நோக்கம். இது தொடர்பான அறிவு, முன்னனுபவம் மற்றும் ஆர்வம் உள்ளோர் எண்ணங்களை வெளிப்படுத்தினால் இந்த மீனவர் அவலத்தின் தீர்வு நோக்கி முன்செல்ல உதவும் என்று நம்புகின்றோம்.

இத்தகைய ஒரு தலைப்பு பலருக்கு ஆச்ச-ரியமானதாகவும், இது என்ன புதிய கதை என்று கேள்விக்குரியதாகவும் இருக்கலாம். ஆனால் எழுபதுகளில் இருந்தே பெரும் சொத்து இழப்புகளையும் தொழில் பாதிப்-பையும் வன்முறைத் தாக்குதல்களையும் கூட இலங்கையின் வடபுலத் தமிழ் மீனவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைதான், குறிப்பாக மன்னார் குடாப்பகுதி யாழ் குடாநாட்டின் தீவுப்பகுதிகள் மற்றும் யாழ் குடா நாட்டின் வடகரை ஆகிய கடல்பகுதியில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் அனுபவித்த அவலம்தான். இலங்கைத் தமிழரில் பலபே-ருக்குத் தெரியாததும் சில பேருக்கு மறந்த-துமான விடயம் இது.

கடற்தொழிலாளர் சங்கங்களைத் தவிர மற்ற-வர்கள் யாரும் அன்று இந்த விடயத்தில் அக்கறை கொள்ளவோ தீர்வுக்கான முன் முயற்சிகள் எடுக்கவோ முன்வந்ததில்லை. கடற்தொழிலாளர் சங்கங்கள் மாத்திரம் மகஜர்கள் அனுப்புவதும். இந்திய மீனவர்க-ளால் வெட்டி எறியப்பட்ட வலைகளைத் தேடுவதும், தென் தமிழக மீனவ சங்கங்க-ளுடன் தொடர்பு கொண்டு வேண்டுகோள் விடுவதுமாக அன்றைய நாட்களில் முயற்சிகள் மேற்கொண்டிருந்தன.

எண்பதுகளில் உக்கிரம் பெற்ற யுத்த சூழ்-நிலைகள் கடற்படையினரின் தாக்குதல், கடல்




வலயப் பாதுகாப்பு, மீன்பிடித்தடை என்பவற் றால் ஆழ்கடல் மீன்பிடி முற்றாகவே கைவி-டப்பட்ட நிலைக்குப் போய்விட்டது. இந்த நிலையில் இந்திய மீனவர்கள் ஏகபோக-மாக எமது கடல் வளம் வாரினர். இதனால் இந்திய மீனவருக்கும் இலங்கைக் கடற்-படைக்கும் இடையிலான ஒரு விடயமாகவே இந்தப் பிரச்சினை எல்லோராலும் கருதப் பட்டது.

உண்மையில் இந்திய மீனவர்களின் பிரவேசம் எங்கு வரை பரவியிருக்கிறது என்பதைக் கவனித்துப் பார்த்தால் அது எத்தகைய அத்து மீறல் என்பது புரியும்.

கச்சதீவைக் கடந்து உள்ளே வந்து மன்னார் தீவின் கரைப்பகுதிகள் இரணைதீவு, கற்கட தீவு கடல்பகுதிகள், நெடுந்தீவு, நயினாதீவு அனலைதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் புறக்கடல் பகுதிகள் மற்றும் மாதகல் சேந்தாங்குளம் கடல் பகுதிகளிலும் கூட இவர்கள் தரிசனம் கிடைக்கும். நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு மூன்றிற்கும் இடைப் பட்ட கடல் பகுதிக்கு வந்து நெடுந்தீவைச் சுற்றிச் செல்வதுகூட அந்தப் பகுதி மக்கள் அடிக்கடி காணும் காட்சிதான். இவையொன்-றும் தெளிவற்ற வரையறை செய்யப்படாத இந்திய இலங்கை கடல் எல்லைப் பகுதிக-ளல்ல தெளிவான ஆயினும் வரையறை செய்யவேண்டிய அவசியமேயற்ற இலங்கைக் கடற்பிராந்தியம். இங்கு வரும் இந்திய மீன-வர்கள் தென்தமிழக கிழக்குக் கரைப்பகுதியில் வடக்கே ஏறத்தாழ நாகபட்டினத்திலிருந்து தெற்கே தனுஷ்கோடி வரை உள்ளவர்கள். இவர்களில் சிலருக்கு தாங்கள் பாடு வைக்கும் நேரத்தைவிட ஒடிக்கடந்த நேரம் பல மடங்-காக இருக்கும்.

இவ்வாறு இவர்கள் வருவதற்கான காரணம் இந்தப் பகுதிகள், மிகுந்த கடல்வளம் கொண்ட பகுதிகள் என்பதேயாகும். 'றோலர்' எனப்படும் இழுவைப் படகுகள் பாரிய 'பை' போன்ற 'மடிவலை' எனப்படும் வலையை ஆழ்கடலில் இறக்கி இழுத்துக் கொண்டு செல்லும். அதிக அளவில் அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் இறால் பிடிப்பதற்கே இது உபயோகப்படுத்தப் படுகிறது. இந்த வகை வலை இழுத்துச் செல்லப்படும் போது இறால் மட்டுமன்றி அகப்படும் அனைத்தையும் வாரி வழித்துக் கொண்டு செல்லும் தன்மை கொண்டது. இவர்கள் பிரவேசிக்கும் எமது பகுதிகள் வளம் மிக்கவை என்பதால் அத்து மீறுவதே இவர்களுக்கு அன்றாடத் தொழில் ஆகிவிட்டது. நித்தமும் வாரி வழிப்பதால் வளம் விளையும் வாய்ப்பே பறிக்கப்படுகிறது.

இங்கே இவர்கள் இதைச் செய்யும் போது தமிழகக் கடல் வளத்தைப் பாதுகாப்பதற்காக மீன்களின் இனப்பெருக்கக் காலம் என்று ஒன்றரை மாதமளவில் பாரிய மீன்பிடிகள் தடைசெய்யப்பட்டு மீனவர்களுக்கு மானியம் வழங்குவது தமிழகத்தில் ஆண்டு தோறும் நடைபெறுகிறது.

எமது பகுதிகளில் றோலர் தொழில் தமிழ-கத்தில் தொடங்கிய ஒரு பத்து ஆண்டுகளின் பின் அறிமுகமாகத் தொடங்கினாலும் இந்திய மீனவர்கள் உபயோகிக்கின்றவை போன்ற சக்தி கூடிய இயந்திரப் படகுகளோ பெரிய வலைகளோ உபயோகிக்கவில்லை. அதை-விட மற்றயவை பாரம்பரிய முறைகளிலேயே நாம் மீன்பிடித்தொழில் செய்கிறோம். ஆழ் கடல் மீன்பிடித் தொழிலைப் பொறுத்து படுப்பு வலை, வழிச்சல் வலை, தூண்டில் வலை போன்ற பலமுறைகளை கையாளுகின்றோம். இந்த வலைகள் மிக நீண்டவையாகவும் இரவுப் பொழுது முழுதும் கடலில் இறக்கிவிட்டிருந்து அதிகாலையில் கிளப்புவதாகவோ அல்லது முதல் நாள் கடலில் விரித்துவிட்டு வந்து மறுநாள் சென்று கிளப்புவதாகவோ இருக்கும். இந்த நிலையில் மடிகளை இழுத்துக் கொண்டு 'றோலர்கள்' கூட்டமாகவோ தனியாகவோ பிரவேசிக்கும் போது நாம் கடலில் விரித்-திருக்கும் வலைகளின் கதி முடிந்துவிடும். தனியாக வந்தாலே நியாயம் கேட்கமுடியாது. மண்டாக்கத்தியைத் தான் தூக்குவார்கள் கூட்டமாக வந்தால் வலைகளை இழுத்து ஏற்றவும் அவகாசமில்லாமல் கடலில் விட்டு விட்டு ஓடித்தப்ப வேண்டியதுதான்.

கடலில் நமது வலையில் மற்றவரது வலை சிக்கி விட்டால் கழற்றிவிட முடியாத நிலை இருப்பின் வலையை வெட்டிப்பிரித்து விட்டு வெட்டிய இரு கரைகளையும் முடிந்துவிட்டுப் போவது தான் தொழில் முறை ஒழுங்கு. குறிப்பிட்ட பகுதியில் அதே பகுதியினரே தொழில் செய்வார்கள் என்பதனால் தவறு செய்தால் வெளியில் தெரியவரும், ஊர்க் கண்டனத்திற்கு ஆளாகநேரிடும், என்ற அச்சம் காரணமாகவும் தவறிழைப்பது அபூர்வம்.

ஆனால் எங்கிருந்தோ வந்து வாரி வழித்துச் செல்பவர்கள் வலைசிக்கினால் இறங்கி எடுத்து முடித்துவிட்டுக் கொண்டா இருப்பார்கள். வெட்டிவிட்டுப் போய்க்கொண்டேயிருப்பார்-கள்.

சூடை வலைத் தொழில் கரை மங்காத தூரத்தில் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் இறக்கிக் கிளப்பிவிடும் தொழில். பகல் பொழுதுகளை விட அதிகாலைப் பொழுது பாடு நன்றாயிருக்கும். அந்த வலைகளைக்கூட அறுக்கக் கொடுத்துவிட்டு பாடு பெரிதாய் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று பகல் தொழில் செய்த காலமும் இருந்தது.

நாம் இவ்வாறு இந்திய மீனவர்களிடம் அவலப் பட்டாலும் அவர்களது ஊர்களில் கரையி-லிருந்து குறிப்பிட்ட தூரத்திற்கும் றோலர் மடி இறக்கக் கூடாது. சின்ன சின்ன வலைத் தொழில் செய்பவர்கள் எந்தெந்த இடங்களில் எந்தெந்த நாட்களில் தொழில் செய்யலாம் என்று பஞ்சாயத்து உத்தரவுகள் ஊர்க்கட்-டுப்பாடுகள் என்றெல்லாம் உண்டு. அதை மீறினால் அவர்கள் அங்கு குடியிருக்க முடி யாமலே போய்விடும். அவர்களுக்கு அவர்-களிடமே பாதுகாப்பு உண்டு. நமக்குத்தான் அவர்களிடமிருந்தே பாதுகாப்பில்லை.

- சி. சண்முகநாதன் -

sanmuganathan.s@thaiveedu.com

■ ■ ■

Law Office

T. JEGATHEESAN

(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

தி. ஜெகதீசன்

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: 416 • 266 • 6154

Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

# முதுபெரும் தமிழ் அறிஞர்


**- த. சிவபாலு -**

### தமிழே தன்வாழ்வாகக் கொண்ட முதுபெரும் அறிஞர் ஈழத்துப்பூராடனார்:

மீன்பாடும் தேன்நாடாம் மட்டுநகர் தந்த அறிஞர் வரிசையில் மங்காப்புகழொடு விளங்கும், விபுலாநந்தரின் வழியில் தனது வாழ்வை ஆக்கிக்கொண்டு தமிழே உலகம் என வாழ்ந்து காட்டிய ஒரு பெரியார் செல்வராஜகோபால் எனப் பெயர் கொண்ட ஈழத்துப் புராடனார். ஈழத்துப் பூதந்தேவனார் வரிசையில் தமிழரின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டிய பெருமை அவருக்கு உண்டு. தமிழாகித் தேனாகி தானாகி நின்ற சான்றோன் ஈழம் தந்த பூராடனார். மாணவனாக இருக்கும் பராயந்தொட்டே கல்வியிலும், ஆய்வுப் பரப்பிலும் அகலக்கால் வைத்தவர் அவர். அவரின் தந்தையார் செட்டிபாளையத்தில் வாழ்ந்த நாகமுத்து சாமுவேல் கதிர்காமத்தம்பியாவார். தாயார் வள்ளியம்மை அம்மாள்.

அவரது தந்தை வழிப்பாட்டனார் புலவர் இ.வ.கணபதிப்பிள்ளை, பெரிய தந்தையார் வரகவி சின்னவப் புலவர். கல்வியில் நிலை கொண்ட குடும்பப்பின்னணியைக் கொண்டு பிறந்தவர் மட்டுமன்றி புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் அருட்கடாட்சம் கிடைக்கப்பெற்றவர். தமிழ் உணர்வைத் தட்டிக் கொடுத்ததோடு மட்டுமன்றி இவரை எழுது வதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தர் முனைவர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். அவர்களிடம் தமிழறிவைச் சுவைத்துக் கற்றுக்கொண்டார். 1945இல் மாணவப் பருவத்திலேயே வீரகேசரி நாழிதழுக்கு கவிதை எழுதியதைக் கண்டுகொண்ட பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த திறனைத் தட்டிக் கொடுத்து மேலும் எழுத ஊக்குவித்தார்.

1958இல் அவர் எழுதிய வேடர்குலம் பற்றிய ஆக்கம் அரசாங்கத்தின் வெறுப்புக்கும், கோபத்திற்கும் ஆளாக்கியது. சிங்கள இனம் வந்தேறு குடிகள் என்பதனை நிலைநாட்டிய அவர் நீதி மன்றில் நிறுத்தப்பட்டாராயினும் தக்க சான்றுகளோடு விடுதலைபெற்றார்.



அவரது தமிழ் புலமைக்கு அவரது ஆக்கங்கள் சான்று பகர்கின்றன. நூற்றுக்கு மேற்பட்ட ஆக்க இலக்கியங்களை அச்சுப்பதிப்பித்த பெருமை அவரைச் சாரும். தனது ஆக்கத்திற்காக ஒரு அச்சகத்தையே தனது வீட்டில் ஆரம்பித்திருந்தார்.

1985இல் கனடாவிற்குப் புலம்பெயர்ந்த இவர் கணினியில் தமிழ்நூல்களை ஆக்கும் பணியில் ஈடுபட்டு அதற்கான வழிகாட்டியாக அமைந்தமை அனைவராலும் பாராட்டப்பட்டது. அவர் எழுதிய கூத்தர் வெண்பா, கூத்தர் அகவல், நாடகத்தமிழ், மணிமேகலை, சிலப்பதிகாரம், கனடாக் கறவஞ்சி நாம், கிழக்கு ஈழமரபுவழி கூத்துக்கலை ஆய்வுக்கான தகவல் திரட்டு போன்ற ஆக்கங்களைத் தந்துள்ளார். இத்தோடு அவரது தமிழ் அழகி என்னும் காப்பியம், தமிழரின் மொழி, கலை, பண்பாடு, இனம், வரலாறு, இலக்கியம் பற்றிய விபரங்களை உள்ளடக்கி எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேளிநாட்டார் தமிழ் மொழியில் உள்ள நூல்களை மொழி பெயர்த்தது போன்று இவரது பணியும் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் ஆங்கில நூல்களைத் தமிழிலும் பெயர்த்து அரும்பெரும் சாதனையை ஏற்படுத்தியுள்ளார். அவரது படைப்புக்கள் மிக சிலரின் கைகளுக்கே கிடைத்திருந்தது. அதனை உலகறியச்செய்வதற்கு அவரது வாரிசுகள் முனைப்புடன் செயற்பட முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இவரது தமிழ்ப் புலமை சேவையைக் கருத்திற்கொண்டு கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம் முனைவர் பட்டத்தைத் தந்து கௌரவித்துள்ளது. தன்னலங்கருதாத அவரது இலக்கியப் பணியைப் பாராட்டிய பல்வேறு நிறுவனங்களும் அவரைக் கௌரவித்து விருதுகளை வழங்கியுள்ளன. இந்து பண்பாட்டு அமைச்சு, மட்டக்கப்பு கலை பண்பாட்டு அவை, மொரீசியஸில் பணியாற்றியமைக்காக இவருக்க தமிழ் நெறிப்புலவர் விருது போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றுக்கொண்டு அமைதியாகப் பணியாற்றிய ஒரு சான்றோனாக அவர் என்றும் தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்ந்துகொண்டே இருப்பார் என்பதற்கு அவரது ஆக்கங்கள் சான்றாகஉள்ளன.

இலக்கியப் பணியோடு மட்டும் நின்றுவிடாது சமய, சமூகத்துறைகளிலும் அவர் கால்பதித்துள்ளார். உரையாசிரியராக அவர் பல நூல்களுக்கு உரை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். யாரிந்த வேடர், ஈழத்தின் வரலாறு, வித்துவான் பூபாலபிள்ளையின் சீமந்த புராணம், மற்றும் இ.வ. கணபதிப்பிள்ளையின் கதிர்காம சதகம் முதலிய நூல்களுக்கு உரை எழுதியும் உள்ளார்.

எழுத்துத்துறையில் உள்ளவர்களை ஊக்குவித்தும், அவர்களை எழுத வைத்தும் வந்துள்ளார். உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் கனடாக் கிளையின் தலைவராகவும், பாதுகாவலராகவும் பணியாற்றியுள்ளதோடு அவர் தகுந்த ஆலோசனைகளைளும் வழங்கித் தமிழுக்காக வாழ்ந்த ஒரு மகானாக அவரைக் காணராம்.

sivapalu@thaiveedu.com

■ ■ ■




"Wish you all a very Happy New Year 2011 and Happy Pongal"

Call me for all Real Estate Needs, updates and reviews on Housing and Mortgage interest rates for 2011

"FREE MARKET EVALUATION"

Tammy Surendran
(Broker)
tammy.surendran@gmail.com

வீடு வாங்குவதற்கு, விற்பதற்கு அல்லது குத்தகைக்கு அழையுங்கள்.

HOMELIFE HIGHER STANDARDS

Direct Line: 416-410-9301

Home Life GTA Realty Inc., Brokerage
1711 McCowan Road, Suite 206
Toronto, ON. M1S 3Y3

# அரசன் அன்று கொல்வான் உறவுகள் நின்று கொல்லும்



குரு அரவிந்தன்

துப்பாக்கிக் குண்டுகள் துளைக்க முடியாத ஆடையோடு அவர் நீதிமன்றத்திற்கு வந்தாலும் அவரது மனசும், உடம்பும் நடுங்கிக் கொண்டேயிருந்தது. அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்பதை அவரோ அல்லது அவரைச் சேர்ந்தவர்களோ அன்று அறிந்திருக்கவில்லை. அப்படி அறிந்திருந்தாலும் அன்று தங்கள் கையில்தான் ஆட்சி இருக்கிறது என்ற மமதையில் அலட்சியமாக இருந்த அவர்களுக்கு இன்று இப்படியான ஒரு நிலை வரும் என்று நினைத்துப் பார்க்கவும் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. தெய்வம் தண்டிக்காவிட்டாலும் பாதிக்கப்பட்டவர்களின் சொந்தங்கள், உறவுகள் குற்றவாளிகளைத் தண்டிக்கும்வரை ஓயமாட்டார்கள் என்பது நீதி மன்றத்திற்கு வெளியே நின்ற மனித உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் உணர்ச்சி வசப்பட்டு ‘கொலைக்காரன் கொலைக்காரன்’ என்று சத்தம் போட்டதிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. இதன் காரணமாக கூச்சல் அடங்கும்வரை நீதிபதியால் விசாரணை நடத்த முடியாமல் போய்விட்டது. எத்தனை வருடங்கள் சென்றாலும் இப்படியான குற்றவாளிகள் நீதியின் பிடியில் இருந்து தப்பமுடியாது என்பதற்கு அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பே சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தது.

பாதிக்கப்பட்டவர்களின் வலி எத்தனை காலம் சென்றாலும் மறைவதில்லை என்பதனால்தான் அவர்கள் என்றோ நடந்ததை நினைவில் நிறுத்தி அவரைக் கூண்டுக்குள் கொண்டுவந்து நிறுத்தினார்கள். எத்தனையோ தடைகள் குறுக்கே வந்தாலும் மனம் தளர்ந்து போகாமல் எடுத்த கருமத்தைச் செவ்வனே செய்து முடிப்பதில் கவனமாக இருந்தார்கள். பாதிக்கப்பட்டவர்களில் பத்திரிகையாளர்கள், வர்த்தக சங்க அங்கத்தவர்கள், இடதுசாரிகள், மாணவ இயக்கங்கள், போராளிகள் என்று பல தரப்பினரும் அடங்குவர். குற்றவாளிக் கூண்டில் நின்றவர்மீது போர்க்குற்றங்களுக்கான கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இதைப் படிக்கும்போது உங்களுக்கும் சமீபத்தில் நடந்த பல அனர்த்தங்கள் நினைவிற்கு வரலாம். ஆனால் இது 1976ம் ஆண்டு பங்குனி மாதம் நடந்த இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து ஆஜன்ரைனாவில் (Argentine) இராணுவ ஆட்சி ஏற்பட்ட போது நடந்த சம்பவம் பற்றியது. அக்காலகட்டத்தில் ஏழு கொலைகள், 31 சித்திரவதைகள், 42 சட்டத்திற்கு முரனாக சிறையில் வைத்திருந்தமை போன்ற குற்றங்கள் இவர்மேல் சாட்டப்பட்டிருந்தன. இவரைப் போல 1422பேர் போர்க்குற்றங்கள் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டாலும் 75 பேர்தான் இது வரை தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள். இராணுவ ஆட்சிக் காலத்தில் மட்டும் 30,000இற்கு மேற்பட்டோர் காணாமல் போனதாகத் தெரியவருகின்றது. அழுக்குச்சண்டை (Dirty War) என்று இக்காலத்தில் ஆஜன்ரைனாவில் நடந்த உள்நாட்டுப் பிரச்சினையை சர்வதேசமே வர்ணித்தது. எந்த ஒரு காரணம் கொண்டும் குற்றவாளிகள் தப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது என்பதில் மனித உரிமைக்கான இயக்கங்கள் இன்றும் விடாப்பிடியாக நிற்கின்றன. காலம் காலமாய் காத்திருந்து காத்திருந்து நீதி கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் சற்றும் ஓய்ந்து போய்விடவில்லை. ஏனெனில் இவர்களைத் தப்பிக்கவிட்டால் இனி வருங்காலங்களில் இப்படியான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை ஊக்குவிப்பதற்கு தாங்களே வழிவகுத்துக் கொடுப்பது போலாகும் என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

இராணுவ ஆட்சியின்போது இந்தப் போர்க்குற்றம் புரிந்தவர்களுக்கும் ஆஜன்ரைனா கத்தோலிக்க தேவாலயத்திற்கும் தொடர்பு இருந்ததைச் சமீபத்தில் வேபிற்ஸ்கி (Verbitsky) என்ற ஒரு பத்திரிகை ஆசிரியர் ‘த சைலன்ஸ்’ (The Silence) என்ற தனது நூலில் ஆவணப் பதிவாகக் குறிப்பிட்டிருந்தார். 1976ம் ஆண்டு தொடக்கம் 1983ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற இந்தக் குற்றங்கள் தெரிந்தே செய்யப்பட்டன என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.



லூா பிளாட்டா என்ற இடத்தில் இருந்து ஒரு பெண்மணி சாட்சியம் அளித்திருந்தார். இவரது கணவரைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்து கொலை செய்ததாகக் குற்றம் சாட்டினார். வொன் வேனிஷ் (Von Wernich) என்ற தேவாலயப் பிரதிநிதி இதற்கு உடந்தையாக இருந்ததாகவும் அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். தடுப்பு முகாம்களுக்கு வொன் வேனிஷ் சென்று பலரைக் காட்டிக் கொடுத்ததாகவும், 375 பேர் காணமற்போனதற்கு இவர்தான் கரரணமென்றும் குற்றம் சாட்டினார். 1999ம் ஆண்டு அவர்மீதான குற்றச்சாட்டு வலுக்கவே, குற்றச்சாட்டில் இருந்து தப்பிப்பதற்காக அவர் சிலி நாட்டிற்கு மாற்றல் எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றார். இந்த உலகில் எங்கே ஓடி ஒளிந்தாலும் விடமாட்டோம் என்ற பிடிவாதத்தோடு பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் எல்லாம் ஒன்றுபட்டுத் தேடினார்கள். கடைசியில் எல் குயிஸ்கோ என்ற இடத்தில் உள்ள தேவாலயத்தில் பெயர் மாற்றம் செய்து கொண்டு 30 வருடங்களாக மறைந்திருந்த அவரை 2003ம் ஆண்டு கண்டு பிடித்து நீதியின் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். 2003ம் ஆண்டு ஆஜன்ரைனாவின் 54வது ஜனாதிபதியாக ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட நெஸ்ரர் காலோ கிர்ச்னர் (Nestor Kirchner) இது பற்றிக் குறிப்பிட்டபோது தேவாலயத்திற்கு, அப்பாவி மக்களுக்கு, மனிதநேயத்திற்கு இவர்களது இவ்விழிய செயல் மூலம் அவமானத்தைத் தேடித்தந்து விட்டார்கள் என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

19977ம் ஆண்டு மாயோ இராணுவ முகாமிற்குப் பொறுப்பதிகாரயாக இருந்த 82 வயதான ரெனால்ட்டோ பிக்னோனி (Reynaldo Bignone) சித்திரவதை, சட்டத்திற்கு முரனான ஆட்தடுப்பு, கொலைகள் போன்ற போர்க் குற்றங்கள் புரிந்ததற்காக 25வருட சிறைத் தண்டனை பெற்றார். சுமார் 4000 சிறைக் கைதிகள் வரை இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகின்றது. இந்தத் தடுப்பு முகாம்போல நாடுமுழுவதும் 340 தடுப்பு முகாம்கள் இருந்தன. இந்த முகாமிலிருந்தவர்களில் சுமார் 56 பேர்வரையில் இவரால் பாதிக்கப்பட்டனர் என்பது விசாரணையின்போது தெரியவந்தது. இராணுவப் புரட்சி நடந்த இரண்டு நாட்களுக்குள் இவரது கட்டளைப்படி மருத்துவமனையில் பணிபுரிந்த 36 பேர் காணாமற்போயிருந்தனர். 1928ம் ஆண்டு பிறந்த இவர் 1982 - 1983வரை ஆஜன்ரைனாவில் இராணுவத் தளபதியாக இருந்தவர்.


மன்டோஸா போன்ற பகுதிகளில் உள்ள போர்க் குற்றவாளிகளுக்குச் சாதகமாச் சிலர் சட்டத்துறைக்குள் இருப்பதால் அப்பகுதிப் போர்க் குற்றவாளிகள் இன்னமும் தண்டிக்கப் படாமல் இருப்பதாக நியூயோர்கில் உள்ள மனித உரிமைச் சங்கம் குற்றம் சாட்டியிருக்கிறது. போர்க் குற்றவாளிகள் மீது உள்ள வழக்குகளை உடனே நீதிமன்றத்திற்குக் கொண்டுவராமல் காலம் தாழ்த்துவதால் போர்க் குற்றவாளிகளோ அல்லது சாட்சிகளோ இயற்கை மரணம் அடைந்துவிடுவார்கள் என அவர்கள் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

9.11 என்று சொல்லப்படுகின்ற காலகட்டத்திற்குமுன் ஆஜன்ரைனாவில் நடந்த இச்சம்பவங்கள் இதுவரை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் விடுபட்டதற்குக் காரணம் குற்றவாளிகளுக்கு ஆதரவான சிலர் ஆட்சியிலும், நீதித்துறையிலும் தொடர்ந்தும் உயர் பதவிகளில் இருந்ததேயாகும். மனித உரிமை ஆர்வலர்கள் ஒவ்வொரு தடவையும் இப்பிரச்சினையை முன் எடுத்தபோது ஏதாவது காரணங்களைச் சொல்லிப் பின்தள்ளிக் கொண்டே வந்தார்கள். ஆனால் 9.11இன் பின் எங்கே இப்படியான போர்க்குற்றங்கள் நடந்தாலும் அவை பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வைக்குள் முடக்கப்பட்டுவிடுகின்றன. மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால், மொழியின் பெயரால் உலகெல்லாம் ஏதாவது காரணங்களை முன்வைத்துப் போராட்டங்கள் நடக்கவே செய்கின்றன. அப்பாவி மனிதர்களைக் கொன்று குவிப்பதும் அதற்கு ஒரு காரணம் சொல்லித் தப்பிக் கொள்வதும் இப்போதெல்லாம் சாதாரண நிகழ்வாய்ப் போய் விட்டது. குறிப்பாக இப்படியான சந்தர்ப்பங்களில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண்களும் குழந்தைகளும் வயோதிபர்களுமே அதிகம் பாதிக்கப் படுகின்றார்கள். இதை இப்படியே விட்டுவிடக்கூடாது, எய்தவன் இருக்க அம்பை நோகலாமா என்பது போல, நேரடியாகப் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மட்டுமல்ல, அவர்களுக்குப் பின்னணியில் உடந்தையாக இருந்தவர்களும் இனங்காணப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும் என்பதில் மனிதஉரிமைக்குக் குரல் கொடுப்பவர்கள் மிகவும் கவனமாகச் செயற்படுகின்றார்கள். எனவேதான் உலகத்தில் எந்தப் பகுதியிலும் மனித உரிமைகள் மீறப்படும் போது, ஆஜன்ரைனா மக்கள் வெகுண்டெழுந்தது போல மனிதபிமானத்தை மனதில் கொண்டு, ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு மௌனமாக இருக்காமல், மக்கள் ஒற்றுமையாக வெகுண்டெழுந்தால் காலம் கடந்தாலும் நிச்சயமாகப் பாதிக்கப்பட்வர்களுக்கு நீதி கிடைக்கும். மனிதநேயம் இன்னும் இறந்துபோகவில்லை என்பதற்கு ஆஜன்ரைனா நீதிமன்றங்கள் கொடுத்த தீர்ப்புக்களே சிறந்த உதாரணமாய்ச், சட்டத்தின் பிடியில் இருந்து குற்றவாளிகள் யாரும் இலகுவில் தப்பிக்க முடியாது என்பதையே கட்டியம் கூறி நிற்கின்றன.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
**Raphael Maharaja**
**Barrister & Solicitor**

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com



# CREDIT **RECOVERY** CANADA

- வங்கிக்கடனில் 25% மட்டும் செலுத்தி உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடல்!
- COLLECTION AGENCY களின் தொலைபேசித் தொல்லைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துதல்!
- சம்பளப்பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்த்தல்!
- உங்கள் RRSP, RESP மற்றும் வீடு வாகனங்களை பாதுகாத்தல்!
- சிறிய மாதாந்த கட்டுப்பணத்தின் மூலம் BANKRUPTCY செல்வதை தடுத்தல்!

## கடன் சுமையிலிருந்து உடனடியாக மீளுங்கள்..!



**Suren Sornalingam**
*Certified Credit Counsellor*

இலவச ஆலோசனைகள்

**CALL: (416) 264 1272**

55 TOWN CENTRE COURT SUITE 700 - SCARBOROUGH, ONTARIO
INFO@CREDITRECOVERYCANADA.COM - WWW.CREDITRECOVERYCANADA.COM

STSADS 416 985 7379

# விதிக்கப்பட்ட வாழ்க்கையும் வீழ்ந்து சென்ற நம்பிக்கைகளும்

## - தேவகாந்தனின் 'விதி' நாவல் பற்றிய சில அனுபவங்கள் -

அருண்மொழிவர்மன்

விதி என்றால் விதிக்கப்பட்டது என்று எமக்கும் பத்தாம் ஆண்டில் படிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதே பத்தாம் ஆண்டில் தான் 'நாடென்ப நாடா வளத்த, நாடல்ல நாட வளம் தரும் நாடு' என்பதும் படிப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் தேவகாந்தன் தனது விதி நாவலில், நாடியும் வளம் தந்து விடாத நாடொன்றில் பிறந்து வளர்ந்தவர்களின் கதையைச் சொல்லுவதன் மூலம் புதிய விதி பற்றிச் சொல்லுகின்றார்.

'ஒரு காலத்தில் கடவுளால் படைக்கப்பட்டது விதி என்ற ஒரு கருத்து இருந்தது. பிறகு ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் செய்கிற செயல்களின் மூலம் தங்கள் விதியைத் தீர்மானிக்கிறதான ஒரு கருத்து இருந்தது... ஆனால் புதிய விதியோ இந்தச் சமுதாயத்தின் நிலைமை, அமைப்பு, அதன் தத்துவம், நடைமுறை, மரபு போன்றவற்றின் மூலமாக வருவது' *(பக்கம் 300)*

என்று இந்த நாவலில் வருகின்றது. இதில் கடவுள் அமைத்த விதி தவிர மற்றைய இரண்டு விதிகள் பற்றிய கருத்துக்கள் இன்னும் செறிவாகவும் ஆழமாகவும் பார்க்கப்படும் போது சார்த்தர் - ஃபூக்கோ சொன்ன கருத்துக்களை வந்தடைகின்றன. இதுதான் தேவகாந்தனின் உத்தி. தனது வாசிப்பை, தனது எழுத்துத் திறனுடன் கலந்து தரும்போது நாவலில் அது புனைவொன்றின் ஊடாக நிறைய உரையாடல்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருகின்றது. இந்த நாவலை கதிர்வேல், தெய்வானையின் கதையாக சொல்லிச் செல்லும்போதே அவர்கள் வைத்திருந்த நம்பிக்கைகளின், வாழ்வு பற்றிய ஆசைகளின், அவர்கள் வாழ்ந்த சமூகத்தின், அவர்கள் வாழ்ந்த காலத்தின் வீழ்ச்சியை எந்தத் திணித்தலும் இல்லாமல், போதிக்கும் தொனியும் இல்லாமல் சொல்லிச் செல்கின்றார். அதனால், இது எம்மில் பலருக்கு அதிகம் தெரிந்திராத காந்தீயம் குடியிருப்பு பற்றியும், காந்தீயத்தில் இருந்து இந்தியாவுக்கு சென்றவர்களின் வாழ்க்கை பற்றியும் நல்லதோர் பதிவாகவும் ஆகிவிடுகின்றது. எனக்கு தெரிந்தவரையில் தமிழ் இலக்கியப் பரப்பில் காந்தியக் குடியிருப்புகள் பற்றிய ஒரே பதிவும் இதுவே.

ஈழத்தில் இனமுரண்பாடுகள் வெடித்தபோது எல்லாத் தரப்பினராலும் பாதிக்கப்பட்ட, தத்தம் தேவைகளுக்காக மாத்திரமே அரசியல் ரீதியில் உபயோகிக்கப்பட்ட, எல்லாத் தரப்பினராலும் உரிமைகள் நிராகரிக்கப்பட்ட சிறுபான்மை இனத்தவர்களான மலையகமக்கள் இனப்பிரச்சினையினாலும் வேலை நிமித்தமும் மலையகத்தை விட்டு வெளியேறி 'காந்தியம்' என்ற பெயரில் அரசு சாரா நிறுவனம் ஒன்றால் அமைக்கப்பட்ட குடியேற்றம் ஒன்றில் வசித்து வந்தனர். இது வவுனியாவை அண்டிய பிரதேசத்தில் அமைந்திருக்கவேண்டும். இந்த நாவலின் பதிப்புரையில் சொல்லப்படுவது போலவே இந்தக் குடியேற்றம் அழிக்கப்பட்டதற்கு அரசியல் ரீதியில் வலுவான காரணங்கள் இருந்திருந்தாலும் அவை இன்றுவரை பேசப்படவில்லை. மலையகத்தில் இருந்து கலவரத்தால் பாதிக்கப்பட்டு இந்த காந்தீயக் குடியேற்றத்தில் வசித்துவந்தவர்கள் மெல்ல மெல்ல போரினால் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாமல் அல்லது எதிர்கொள்ளும் ஒரு உபாயமாக மெல்ல மெல்ல இந்தியாவை நோக்கிப் போகின்றனர். இந்த சூழலை வைத்துப் பின்னப்பட்ட இந்த நாவல் போரினதும் போராட்டத்தினதும் பல்வேறு கூறுகளை தொட்டு அலசுகின்றது. நாவலை படிப்பவர்களுக்கு வரக்கூடிய வாசிப்பனுபவத்தை விமர்சனம் என்ற பெயரில் தீர்ப்பெழுதி கூறு செய்யாமல், என் வாசிப்பில் நான் அவதானித்தவற்றைப் பற்றிய கருத்துப் பகிர்தல்களின் தொகுப்பாகவே தொடரலாம் என்று நினைக்கின்றேன்.

கொள்கைக்காக வாழ்தல் என்பது பற்றிய கேள்விகளும் வாதங்களும் இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. எடுத்த கொள்கை ஒன்றை எல்லாக் காலத்திலும் பின்பற்றுவது எவ்வளவு கடினமோ அது போலவே வாழ்வுடன் ஆடிய பகடையாட்டத்தில் தோற்றுப்போய் கொள்கைகளுடன் சமரசம் செய்யும் ஒருவன் அதன் பின்னர் தான் முன்னர் பழகிய சமுதாயத்தை எதிர்கொள்வதில் உணரும் அவமானமும் எதிர்கொள்ளக் கடினமானதே, நாட்டை விட்டு வெளியேறி இந்தியா செல்பவர்களை எல்லாம் ஏளனம் செய்யும் கதிர்வேலின் பின்னால் பதுளை - வன்னி - இந்தியா என்று பழிப்புக் காட்டியபடியே துரத்தி வருகின்றது காலம். தன் மனைவியிடமே தயக்கத்துடன் தான் இந்தியா செல்வதாக தான் எடுத்த முடிவை




கதிர்வேலால் சொல்ல முடிகின்றது. கதிர்வேலிற்கும், தெய்வானைக்கும் நடக்கும் இந்த உரையாடலை இன்றும் கூட நாட்டை விட்டு புறப்பட முடிவெடுத்தவர்கள் எல்லாருமே பிறந்த நாட்டை விட்டு வெளியேற விரும்பாத தமக்கு நெருக்கமானவர்களுடன் நிகழ்த்திக்கொண்டே இருக்கின்றனர்.

“ம்ம் நல்லாத்தான் பேசிற, நான் கொள்கை பேசினப்போ நீ நடைமுறையைப் பற்றி பேசின, நான் நடைமுறையைப் பற்றி பேசிறப்போ நீ கொள்கை பற்றிப் பேசிற” *(பக்கம் 86)* என்று சொல்லும் போது தம் கொள்கைகளை தாமே துறக்கின்றபோது அது பற்றிக் கேள்வி கேட்டால் இப்பத்திய நடைமுறை இதுவென்றும், காலத்தின் கட்டாயம் இதுவென்றும் சொல்லும் அதிகார வர்க்கத்தின் குரலே மீண்டும் கேட்கின்றது. கதிர்வேல் தெய்வானையிடம் இந்தியா செல்வது பற்றிய பேச்சினை எடுக்கின்றபோதே ஒரு தகவலாகத்தான் அவளுக்கு அதனை அறியத்தருகின்றானே அன்றி அது பற்றி அவளிடம் கலந்து கதைத்து முடிவெடுப்போம் என்று அவன் துளிகூட எண்ணவில்லை. இந்தப் பேச்சின் முடிவில் தெய்வானையை சமாதானப் படுத்த “நிரந்தரமாகவே விட்டிட்டுப் போகப் போறமா? காலம் சீர்படுகிற வரைக்கும்தானே?” என்று கதிர்வேல் சமாளித்தது போல எம்மில் பலரும் ஏதோ ஒரு காலப்பகுதியில் சமாளித்துத்தானே இருக்கின்றோம். பிறிதொரு நாட்டில் குடிஉரிமை பெறவே மாட்டோம் என்ற கொள்கையைத் தூக்கி அப்படியே லேக் ஒன்ராறியோவில் வீசிவிட்டு கனடிய தேர்தல்களில் வாக்களிப்பது பற்றி கவலைப்படவும் கனடிய அரசியலில் ஒரு கனடியராக அக்கறை கொள்ளவும் காலம் தானே எம்மைப் படிப்படியாக நகர்த்தி வந்திருக்கின்றது. தான் எடுத்த இந்த முடிவால் கதிர்வேலுவிற்கு தன் மீதே ஒரு தப்பபிப்பிராயம் இருக்கின்றது. அந்த தப்பபிப்பிராயமே அவனை தான் நாடு விட்டு செல்வதாக எடுத்த முடிவினை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள விடாமல் தடுக்கின்றது. நாட்டை விட்டு வெளியேறுபவர்களுக்கு அவ்வளவு எதிர்ப்பு காட்டியவன் அவன். ஆனால் உயிருக்கு எந்த உத்தரவாதமும் இல்லாத ஒரு நாட்டில் இருந்து வெளியேறுபவர்களைப் பார்த்து அவர்களை கொள்கையின் பேரால் மறுபடி தூக்கிலேற்றுவதன் பின்னால் எவ்வளவுக்கு நியாயம் இருக்கின்றது என்பதையும் பார்க்கவேண்டியே இருக்கின்றது.

இந்தியாவில் கதிர்வேல் சந்திக்கின்ற திருநீலன் என்பவர் ஒரு உண்மையான பாத்திரமாக இருப்பின் அவர் எழுதிய கட்டுரைகளை படித்துப் பார்க்கவேண்டும் என்ற ஆசையை கதிர்வேலிற்கும் திருநீலனிற்கும் இடையில் நடக்கின்ற உரையாடல் ஏற்படுத்தி இருக்கின்றது. தனது தொழிற்சங்க நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கி, கடத்தல் தொழில்களில் ஈடுபட்டு, படோடமான வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு இருக்கின்ற ஒரு சூழலில் கதிர்வேல் சொல்கிறான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், ஜனநாயக் தொழிலாளர் காங்கிரஸும் தோட்டத் தொழிலாளிகள் நலனுக்காக உழைக்கவில்லை என்பதாலேயே தொழிற்சங்க நடவடிக்கைகளில் இருந்து தான் ஒதுங்கியதாயும், அதன் பின்னர் வடக்கில் இருந்த இனவாத அரசியலே தான் வடக்கை விட்டு வெளியேற காரணம் என்றும் கூறுகிறான். இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸும் தோட்ட தொழிலாளிகள் நலனில் அக்கறை காட்டவில்லை என்பதையும் வடக்கில் அதுவும் நாவலில் பிறிதொரு அத்தியாயத்தில் சொல்லப்படுவது போல யாழ்ப்பாணத்தவர்கள் இனவாதமும், பிரதேசவாதமும் பார்த்தார்கள் என்றும் இன்றுவரை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் முழுமையாக ஒப்புக்கொள்ளும் அதே நேரம் மார்க்சியமே சர்வரோக நிவாரணி என்பதை இன்றுவரை ஆணித்தரமாக நம்புகின்ற மார்க்ஸியவாதிகள் (அண்மையில் கூட ஒரு லெனினிய மார்க்ஸீயவாதி மார்க்சியமே உலகின் பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரே தீர்வென்பது விஞ்ஞான முறையில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என்று நான் இதை எழுதிக் கொண்டிருக்கும் அதே ரொறன்ரோவிலே திரும்ப திரும்ப மேடையில் பேசியிருந்தார்), கம்யூனிஸ்டுகள் தமது சர்வரோக நிவாரணத்தை அந்தப் பிரதேசங்களில் பாவிக்காமல் வெளியேறுவது மருத்துவர்கள், இந்த பிரதேசத்தில் நோயாளிகள் அதிகம் இருக்கின்றனர் எனவே நான் இந்த ஊரில் வைத்தியம் பார்க்க மாட்டேன் என்று சொல்லி வெளியேறுவதைப் போல ஆகாதா? என்ற சந்தேகமே எழுகின்றது. ஈழப்போராட்டத்தில் சென்ற ஆண்டில் ஏற்பட்ட பேரழிவுகளின் பின்னர் மார்க்ஸியம், கம்யூனிசம் பற்றிய கதையாடல்களும் பிரச்சாரங்களும் பலமடங்கு அதிகரித்துள்ளன. மார்க்ஸியமும் தனக்கான சந்தையைப் பார்த்து கடை விரிக்கின்ற முதலாளித்துவ கூறிற்கு பலியாகிவிட்டதோ என்று கவலையாக உள்ளது. அண்மையில் ஈழத்தில் இருக்கும் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கையில் அவர் சொன்னார் 'இப்ப இவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்றால் எல்லாரும் வீட்டில் இருந்து ஆளுக்கொரு விறகுக் கட்டையை எடுத்துக் கொண்டு வீதியில் இறங்கி அரசாங்கத்துக்கு எதிராக போராடவேண்டும் என்று'. நான் மார்க்ஸியத்தை முற்று முழுதாக நிராகரித்துப் பேசவில்லை, ஆனால் மார்க்ஸியத்தை ஒரு மதம் போல ஆக்கிக்கொண்டு, அதில் எந்த மாற்றத்தையும் சேர்த்துக்கொள்ள விடாமலும், தாம் வாழும் காலத்துக்கும், தாம் வாழும் இடத்திற்கும் 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில், நிலப்பிரபுத்துவ முறை கொடிகட்டிப்பறந்த காலத்தில் எழுதப்பட்ட மார்க்ஸியக் கருத்துக்கள் எவ்வளவு தூரம் பொருந்தும் என்றும் கிஞ்சித்தும் அக்கறைப் படாமல் பேசுபவர்களை நினைக்க பயமாக இருக்கின்றது. இந்த நாவலில் புரட்சி, பொதுவுடமை, மக்கள் போராட்டம் என்றெல்லாம் பேசுவோரைப் பார்த்து திருநீலன் சொல்லும் கருத்துக்கள் முக்கியமானவை. எடுத்ததெற்கெல்லாம் இரஸ்யப் புரட்சி, என்றும் பிரெஞ்சுப் புரட்சி என்று கதைக்கத் தொடங்குபவர்களில் பலர் புரட்சிகள் பற்றிய அடிப்படையான புரிதலே இல்லாமல் புரட்சி என்பது ஏதோ ஒரு கணத்தில் தோன்றுவது என்பது போன்ற பாவனையுடனேயே பேசத் தலைப்படுகின்றனர். விதி நாவலில் திருநீலன் இந்த வழக்கத்தை கிண்டல் செய்வதுடன் ஈழத்தில் அப்போது இயங்கிக்கொண்டிருந்த இயக்கங்களின் போதாமை பற்றியும் மெள்ள விமர்சிக்கிறார்.

“புரட்சியா? பொதுவுடமையா? மக்கள் போராட்டமா? என்ன தம்பி சொல்கிறீர்? பல இயக்கங்களுக்கு அந்தச் சொல்லுகளைத் தவிர வேறொன்றும் தெரியாதே!... தம்பி

*73ம் பக்கம் பார்க்க...*

புரட்சி எண்டது சும்மா திடீரென்று ஏற்படுற விஷயமில்லை. இப்ப பாரும், அடுப்புப் புகட்டில் ஒரு மரத்துண்டு இருக்கிறதாய் வைச்சுக் கொள்ளுவம். அந்த மரத்துண்டு என்ன மாதிரி வெப்பத்தில வெந்து வெந்து, தன் முழு ஈரப்பதனையும் இழந்து, தன்ர மரமெண்ட உடல் தாதுவையும் இழந்து கருகி, எண்டைக்கோ ஒரு நாள் பொறி பட்டு பக்கென்று நெருப்புப் பிடிச்சு எரியுமோ, அது மாதிரியானதுதான் மக்கள் போராட்டம் - புரட்சி என்பதும். வேதனைப்பட்டு வேதனைப்பட்டு, இனி மேல் பொறுக்க ஏலாதெண்ட நிலைமையில் ஏற்படுகிற கொந்தளிப்பு மட்டும்தான் அப்படியொரு புரட்சியாய் இருக்க முடியும். அப்பப்ப ஏற்படுகிற அடிதடி, வெட்டுக்குத்து, மானபங்கம் எல்லாம் புரட்சியை ஏற்படுத்தாது. அதுக்காக போன ஜுலையில நடந்த கொடுமையை நான் குறைவா மதிப்பிடேல்ல. எண்டாலும் புரட்சிக்கு - மக்கள் போராட்டத்துக்கு - அது போதாது. காலகாலமான அநீதி, கொடுமை வேணும். அந்த உத்தரிப்பில மக்கள் எல்லாரும் இனமத மொழி பேதம் கடந்து அமைப்பு ரீதியாய் ஒண்டுபடவேண்டும். அதுக்கு பிறகு தான் புரட்சி ஏற்பட முடியும், வெற்றி பெற முடியும்”

> “ அடுப்புப் புகட்டில் இருக்கிற மரத்துண்டு
> தன் முழு ஈரப்பதனையும் இழந்து,
> மரமெண்ட உடல் தாதுவையும் இழந்து,
> எண்டைக்கோ ஒரு நாள் பொறி பட்டு
> பக்கென்று நெருப்புப்பிடிச்சு எரியுமோ
> அது மாதிரியானதுதான் மக்கள் போராட்டம். ”

அதே நேரம், எல்லா இன மத மொழி பேதம் கடந்து மக்கள் எல்லாம் ஒன்றிணைந்து போராடவேண்டும் என்று சொல்லும் போது உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள் என்ற கோஷத்தின் சாயல் கேட்கவே செய்கின்றது. ஈழத்தின் இன்றைய நிலையை வைத்துப் பார்க்கின்ற எமது தலைமுறையினருக்கு இது போன்ற நம்பிக்கைகள் வருவதற்கான சாத்தியங்கள் பூஜ்ஜியத்துக்கு மிக அருகாகவே இருக்கின்றன.

கற்பு என்ற பெயரில் மிகைப்படுத்தபட்ட ஒரு சிந்தனையை இன்னமும், இத்தனைகால போராட்ட அனுபவங்களின் பின்னரும் சுமந்து கொண்டிருப்பது தமிழ் சமூகத்தின் அவலங்களில் ஒன்று. பாலியல் பலாத்காரம் ஒன்றுக்கு உட்படுத்தப்பட்ட தெய்வானையை, தன் பொறுப்பில்லாத்தனமும், கையாலாகாத்தனமும் ஒன்று கூடிய நேரம் ஒன்றில் கதிர்வேல், அந்த சம்பவத்தை சுட்டிக்காட்டி கேலி செய்கிறான். அண்மையில் வெளியாகிய அங்காடித்தெரு திரைப்படத்தில் வந்த வசனம் போலவே தெய்வானை அப்போதே இறந்துவிடுகிறாள், அதன் பின்னர் அவள் உடல் மட்டுமே உயிர் வாழுகின்றது. ஆனால் நாவலில் கதிர்வேல் இந்தச் சம்பவமும், அதனால் படிந்த கடக்க முடியாத நினைவுகளுமே தான் தெய்வானை கருவுற்றிருந்தபோது பொறுப்பில்லாமல் திரிந்ததற்கும், அவள் குழந்தை இறந்து பிறந்தபோது மகிழ்ந்ததற்கும், இந்தியா வந்து சேர்ந்ததற்கும், அதிகமாக குடிக்க தொடங்கியதற்கும் காரணம் என்று நியாயப்படுத்துகிறான். நாவலில் வரும் பாத்திரம் செய்கின்ற வாதம் இதுவென்றாலும், இது போன்ற நாயக தியாகங்களை அதிகம் திரைப்படங்கள் பார்த்து வளர்ந்த எம்மில் ஒரு சிலர் அப்பப்பா என்ன தியாகம் என்று உச்சுக் கெட்டவும் கூடும். தான் எடுக்கும் முடிவுகளிற்கும், தவறுகளிற்கும் பொறுப்பேற்காத அயோக்கியத்தனத்தையே இது வெளிப்படுத்துகின்றது. துரதிஸ்டவசமாக இந்தக் கதிர்வேல் மாத்திரம் இல்லாமல் எம் தலைமுறையில் நிறையப்பேரும் இது போன்ற நியாயப்படுத்தலின் வழியேதான் பிழைத்துக் கொண்டிருக்கிறோம்.

80களில், கெட்டாலும் ஆண் மக்கள் என்று பாலகுமாரன் ஒரு சிறுகதை எழுதினார். அதில், திருமணத்திற்கு புறம்பாக தன்னிலும் வயது மிகக் குறைவான ஒரு இளைஞனுடன் ஒரு பெண் உறவு வைத்திருக்கின்றாள். இது அந்தப் பெண்ணின் கணவனுக்குத் தெரிந்துவிடுகிறது. முதலில் கோபம் கொள்ளும் கணவன் அவளை அடித்து விடுகின்றான். பின்னர் அவளை மன்னித்துவிடுகிறான். ஆனால் அவளோ தன் வயற்றில் வளரும் கருவை கலைக்க முயன்று அதன் தொடர்ச்சியாக இறந்தும்விடுகிறாள். கருக்கலைக்க அவள் சொல்லும் காரணம் “அந்தப் பையன் கறுப்பு” என்பது. அவளின் கணவன் அந்தப் பையனின் எதிர்காலம் கருதி அவன் இந்த விடயத்தை மறைத்துவிடுகின்றான். இறுதியில் அவன் மனைவியை நோக்கி இப்படி சொல்லுவான்,

“ஒரு வேளை நல்ல ஆண் மனசுதான் தன்னைச் சுருக்கிக்கொள்ளாமல் வளருமோ, வெட்டு விழுந்த பின்னும் துளிர்க்குமோ, சகதியில் விழுந்து, புரண்டு க்ஷணத்தில் தன்னைச் சரியாக்கிக் கொள்ளுமோ. சியாமளி, அடுத்த ஜென்மத்தில் ஆணாய்ப் பிற, ஆண் பிள்ளை குணத்தோடு பிற”

இந்த நாவலில் வரும் கதிர்வேலும் இன்னுமொரு கெட்டாலும் ஆண் மக்கள் சுவாமிநாதனின் வார்ப்பாகவே தெரிகின்றான். (இந்த நாவல் வெளிவந்த தொகுப்பிற்கு முன்னுரை எழுதிய கமலஹாசன் இதை நேர்மையாகவே சுட்டிக் காட்டி, “மனைவி தவறு செய்தாள் என்பதற்காக புருஷனை பாராட்டுவது உத்தமமாகாது. பெண்ணுக்கு உண்டான நடைமுறை நிர்ப்பந்தங்களைப் புறக்கணித்து விட்டு ஆணைத் தட்டிக்கொடுப்பது சரியில்லை. பாலகுமாரன் ஆணாக இருப்பதால் இது நேர்ந்து விட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்” என்று எழுதி இருந்தார். அது போலவே ஜெயகாந்தனும் இது பற்றி கடுமையான கருத்துக்களை தெரிவித்ததாக பாலகுமாரன் அவர் எழுதிய முன்கதைச்சுருக்கத்தில் குறிப்பிட்டு இருக்கின்றார்.)

சென்ற ஆண்டு வெளியான காலம் இதழில் இளங்கோ எழுதிய ஹேமாக்கா என்றொரு கதை வெளியாகி இருந்தது. பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட ஒரு பெண்ணிடம் திருமணமான பின்னர், அவளது கணவன் “இந்தியன் ஆமி உம்மளைக் கெடுத்தது பற்றி இதுவரை ஏன் என்னட்டை சொல்லேலை என்டு மட்டுந்தான் கேட்டனான் வேறொன்றுமே கேட்கவில்லை. ஒன்டுமே பேசாமல் இருந்தவா இப்படிச் செய்வா என்டு நான் கனவிலையும் நினைத்துப் பார்க்கவில்லை” இந்த நாவலில் கதிர்வேல் தெய்வானையைப் பார்த்து “அன்னிக்கு அவங்கள் செய்ததெல்லாத்தையும் அனுபவிச்சியா” என்கிறான். எல்லாப் போராட்டங்களிலும் ஆணுக்கு ஏணியையும் பெண்ணுக்கு பாம்பையும் மட்டுமே சமுதாயம் பரிசளித்திருக்கின்றது.

தேவகாந்தனின் கதாகாலம் பற்றி முன்னர் ஒரு பதிவெழுதி இருந்தேன். அப்போது நிறையப் பேர் அந்தப் புத்தகத்தை வாசிக்கவேண்டும் என்ற தங்கள் விருப்பத்தை தெரிவித்திருந்த போதும் தமக்கு புத்தகம் கிடைக்கவில்லை என்றார்கள். இந்த விதி நாவலும் கூட நீண்ட காலமாக விற்பனைக்கில்லாமல் இருந்து இப்போதுதான் புதிய பதிப்பு வெளிவந்திருக்கிறது. இது போல ஈழத்து எழுத்தாளர்களின் முக்கிய புத்தகங்கள் மீண்டும் பதிப்பிக்கப்பட்டு, பரவலாக வாசகர்களை சென்றடையும் ஒரு சூழல் உருவாகவேண்டும். இடையில் ஏற்பட்ட சிறிய தேக்கத்தில் இருந்து மீண்டு, புதிய படைப்புகளையும் பதிப்புகளையும் வெளியிடும் ‘வடலி’, புதிதாக செயற்பட ஆரம்பித்திருக்கும் ‘இலக்கு’ (இவர்கள் தொடர்ந்து புத்தகங்களை வெளியிட உள்ளதாக அறிகிறேன்), தொடர்ந்து இயங்கிவரும் காலம் வெளியீடுகள் மற்றும் ஏனைய ஈழத்தமிழரின் புத்தகங்களை வெளியிடும் பதிப்பகங்கள் இந்தப் பணியை செய்யும் என்று நம்புகின்றேன்.

arunmozhivarman@thaiveedu.com

■ ■ ■



# புலம் பெயர்வும் அலைந்துழல்வும்

**தில்லித் தமிழ்ச் சங்கம் நடத்திய 'தமிழ் 2010' கருத்தரங்கத்தில் கவிஞர் சேரன் ஆற்றிய உரை.**

சேரன்

தமிழ் மரபில் புலம் பெயர்ந்து செல்வதும் புகலிடம் தேடித் தப்பி ஓடுவதும் இருப்பிழந்து போய் அலைந்து உழல்வதும் புதிதன்று. பெயர்தல், திரிதல், அலைதல் என்பன மானுடத்தின் தவிர்க்க முடியாத வரலாற்றுக் கூறாக அமைந்துவிட்டது. நாடோடிகளாக இருப்பதும் நமக்குப் பிடித்த இடங்களுக்கு நாம் நினைத்த போதெல்லாம் செல்லமுடியும் என்பதும் நமது அடிப்படை உரிமை என்பதை நாம் மனங்கொள்ளவேண்டும்.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்னும் கணியன் பூங்குன்றனின் கவி வரிகள் இதனைத் தான் நாடோடிச் சமூகங்களுக்கு அலைவுதான் வாழ்க்கையாகவும் வரலாறாகவும் இருந்தது. எனினும் மானுட வரலாற்றில் நிலையான சமூகங்களும், பயிர்ச்செய்கையும் அவற்றோடு கூடவே தனிச்சொத்துரிமை, உபரி என்பனவும் உருவானபிற்பாடு நாடோடிச் சமூகங்களும் நிலையான, வேர்கொண்ட சமூகங்களும் தமக்கிடையே முரண்படத் துவங்கின. நிலையான சமூகங்கள் ஊர், நாடு, அரசு என்பவற்றை மெல்ல மெல்ல உருவாக்கிவிட்டன. அரசியல் சமூகங்கள், குடியுரிமை என்பன பின்னர் ஆட்சி பெற்றவையாக மேலெழுந்தன. ஒரே நேரத்தில் ஒருவர் ஒரு அரசுக்கு அல்லது ஒரு நாட்டுக்கு மட்டுமே உயிர்ப்புடன் விசுவாசமாக இருக்கவேண்டும் என்ற அரசியல், சமூக மனோநிலை கட்டமைக்கப்பட்டு விட்டது. இந்தப் பின்னணியிலேயே நாடற்றவர்களும் வீடிழந்தவர்களும் அகதிகளும் அரசியல் தஞ்சம் கோரி பல்வேறு நாடுகளிலும் அலைந்து உழல்பவர்களும் அரசுகளாலும் தேசியவாதிகளாலும் மிகுந்த ஐயத்துடனும் கசப்புணர்வுடனும் நோக்கப்படுகிறார்கள்.

தாமாகத் தமது சொந்த விருப்பின் பேரில், "பொருள்வயின் பிரிந்து" செல்பவர்களை நாம் விரும்பிப் புலம் பெயர்ந்தோர் என அழைக்க முடியும். தமது சொந்த விருப்பில் அன்றி, இனப்படுகொலை, இனத்துவச் சுத்தீகரிப்பு, போர் என்பனவற்றின் காரணமாக வலிந்த/வலி கொண்ட பெயர்வுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்களை நாம் புலம் பெயர்க்கப்பட்டவர்கள் என வழங்கலாம்.

புலம் பெயர்க்கப்பட்டவர்களின் உலகம், கொதிப்பிலும் கொந்தளிப்பிலும் விளைந்தது; வன்முறையில் காயம்பட்ட உடலுடனும் மனத்துடனும் அலைவது; இழப்பின் இருப்பையும் இருப்பின் இழப்பையும் எதிர்ப்பின் உயிர்ப்பையும் ஒன்றாகக் கிளர்த்துவது. இந்த இரு வகையான பெயர்தல்களையும் நாம் ஒரே பார்வையில் அணுகமுடியாது. இவையிரண்டுக்கும் ஒருசில தளங்களில் பொதுமைப்பாடு இருந்தபோதும் அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. வலிந்து புலம் பெயர்க்கப்பட்டவர்களை 'வலசை மாந்தர்' என்று பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மற்ற வகையினரைப் 'புலம் பெயர் மாக்கள்' என அவை சுட்டுகின்றன.

சமூகவியல், மானுடவியல், அரசியல், அலை வியல் அல்லது அலைந்துழல்வியல் (diaspora Studies) போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்கள் சிலர், புலம் பெயர் நிலையை இவ்வாறு இருவகைப்பட்டதாக அணுகமுடியாது எனவும் எல்லாப் புலப்பெயர்வுகளுக்குப் பின்னாலும் நேரடியாகவோ அல்லது உள்ளார்ந்தோ பொருளியல் காரணங்கள் இருக்கின்றன எனவும் வாதிடுகிறார்கள். எனினும் இத்தகைய பிரிப்பு, கோட்பாடு சார்ந்தும் அரசியல் சார்ந்தும் நமது கவனிப்புக்கு உரியது என நான் கருதுகிறேன். குறிப்-பாகப் பல்வேறுபட்ட தமிழர்கள் பல்வேறு காரணங்களுக்காகப் புலம் பெயர்கிற போதிலும் ஈழத் தமிழர்களின் வலி சுமந்த அலைந்துழல்வு தனியான கவனத்தை வேண்டி நிற்கிறது.

> "தமது சொந்த விருப்பில் அன்றி, இனப்படுகொலை, இனத்துவச் சுத்தீகரிப்பு, போர் என்பனவற்றின் காரணமாக வலிந்த / வலி கொண்ட பெயர்வுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்களை புலம் பெயர்க்கப்பட்டவர்கள் என வழங்கலாம்."

புலம் பெயர்வும் புலம் பெயர்ப்பும் அலைந்துழல்வும் தமிழர்களுக்கு ஒரு புதிய திணையை உருவாக்கி விட்டுள்ளது என்பதுபற்றி நான் முன்னரே எழுதியிருக்கின்றேன். தமிழ் மரபில் திணையியலின் முக்கியத்துவம் நாம் ஏலவே அறிந்த ஒன்றுதான். இலக்கியத்தையும் வாழ்க்கையையும் இயற்கையையும் நிலக்காட்சியையும் நாம் பிரிக்கமுடியாது. நமது வாழ்விலும் இலக்கியத்திலும் காலமும், வெளியும் ஏற்படுத்துகிற தாக்கமும் மாற்றமும் யாவை என்பதே திணையியலின் சிறப்புக் கூறாக நாம் கொள்ளமுடியும்.

திணை என்பதற்குத் தமிழ் தரும் அர்த்தம் பலவகைப்பட்டது: இடம், பகுதி, தளம், பாகுபாடு, பிரிப்பு, நிலக்காட்சி, பண்பு, குலம், ஒழுக்கம், நிலம் என்பன அவற்றுட்சில.

இலக்கியம், திறனாய்வு என்பன சார்ந்து மட்டுமே திணையியல் முக்கியத்துவம் பெறுவதில்லை. மாறாக, நமது வாழ்க்கை முறை, வாழ்வியல், தமிழ் அடையாளங்களைப் புரிந்து கொள்ள உதவுதல், நிலக்காட்சிக்கும் நமது அடையாளங்களுக்கும் இருக்கக்கூடிய இணக்கத்தைச் சுட்டுதல், பன்முகப்பாடு போன்ற பல நுண்தளங்களில் திணையியல் எமது சிந்தனைகளுக்கும் படிமங்களுக்கும் புரிந்துணர்வுக்கும் வழிவகுக்கக்கூடும்.

நமக்கு ஏலவே இருக்கிற ஐந்திணைகளும் தமிழ்ச் சமூகங்களின் பலவேறுபட்ட வளர்ச்சிப்படி நிலைகளைச் சுட்டுகிற அதேவேளை பன்மைப்பாடான அடையாளங்களையும் காட்டுகின்றன. சமூகங்களினதும் வாழ்வியலினதும் பன்முகப்பாட்டை ஒன்றிணைப்பதாகத் தமிழ் மொழி அமைந்தது. மொழி என்பது உணர்வொருமைப்பாடாக அமைந்தது என்று நாம் சொல்ல முடியும். திணைக்கோட்பாடு அல்லது திணையியல் என்பது தமிழ், உலக நாகரிகத்துக்கும் இலக்கிய மரபிற்கும் வழங்கிய செழுமையான கொடையாகும்.

புலம் பெயர்வும் அலைந்துழல்வும் உருவாக்குகிற புதிய திணை – ஆறாம் திணை – புதிய உறவுகளையும் புதிய அனுபவங்களையும் புதிய வாழ்நிலைகளையும் தமிழுக்கும் தமிழ் வழிக்கும் கொண்டு வந்து சேர்க்கிறது. புதிய இயற்கைச் சூழலை நாம் எதிர்கொள்கிறோம். பனித்தூவல், பனிச்சகதி, பனித்திணை, பனிவயல் போன்ற புதிய சொற்களை எதிர்கொள்கிறோம்.

நகரம், பட்டினம் என்பன நமது புதிய திணையின் நிலக்காட்சிகளாக உருவம் பெறுகின்றன. ஒரே நிலப்பரப்பில், கோடை, இலையுதிர்காலம், வசந்தம், பனிக்காலம் என நிலக்காட்சிகள் பெரும்பொழுதாகவும் சிறு பொழுதாகவும் மாறி மாறித் தோன்றுகின்றன. மயக்கமும் முரணும் திணை மயக்கங்களும் பெருகுகின்றன. 'தூய்மை'யா அல்லது 'கலப்பு' என்பதா நமது தேவை என்ற கேள்வியில் தமிழ் அடையாளம் தத்தளிக்கிறது. இங்குமற்று, அங்குமற்ற அந்தர நிலையில் அடையாளத் தவிப்பு மேலோங்குகிறது.

இவற்றின் இலக்கிய வெளிப்பாடுகள் யாவை? இவை கிளர்த்தும் சமூகவியல், இலக்கிய, அறிவியல் கேள்விகள் யாவை? நாம் எங்கே வேர்கொள்வது? நிலப்பரப்பிலா? மொழியிலா? இனத்துவத்திலா? உணர்விலா? உணர்வொருமைப்பாட்டிலா? நிலக்காட்சியிலா? கலப்பிலா? கழிவிரக்கத்திலா? கற்பனையிலா?

புலம் பெயர்வும் அலைந்துழல்வும் இந்தக் கேள்விகளை நம் முன்னே எறிகின்றன. "வடவேங்கடம் முதல் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகு" என்பது இன்று நாடு கடந்தும் எல்லை கடந்தும் பரந்து விரிந்து விட்டது. தமிழையும் தமிழரையும் தமிழ் இலக்கியத்தையும் பழைய சட்டகங்களுக்குள் வைத்து இனி நாம் ஆய்வு செய்யவோ புரிந்து கொள்ளவோ முடியாது. நமக்குத் தேவையானவை: புதிய பார்வை, புதிய திணைகள். புதிய படிமங்கள்.

■ ■ ■

# தில்லியில் வெளியிடப்பட்ட தமிழ் இனப்படுகொலை தொடர்பான நூல்

சென்ற ஆண்டின் தமிழ் இனப்படுகொலை தொடர்பாக கவிஞர்கள் சேரன், ஜெயபாலன், அ.யேசுராசா, லதா (சிங்கப்பூர்), ரவிக்குமார் ஆகியோர் எழுதிய கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் ஒன்றை தில்லியிலுள்ள நவயானா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. Waking is Another Dream என்னும் தலைப்பில் வெளியாகியிருக்கும் இந்த நூலின் கவிதைகளை மீனா கந்தசாமி, ரவி சங்கர் ஆகியோர் மொழிபெயர்த்துள்ளனர். ஈழத் தமிழர் இனப் படுகொலை தொடர்பில் நீண்ட முன்னுரையொன்றை ரவிக்குமார் எழுதியுள்ளார்.



நாகார்ஜுனன், மங்களேஷ் டப்ரால், கவிஞர் சேரன், கே. சச்சிதானந்தன்.



நூலின் வெளியீட்டு விழா டிசம்பர் எட்டாம் தேதியன்று தில்லியில் இடம்பெற்றது. நவயானா பதிப்பகத்தின் முதல்வர் ஆனந்த்தின் துவக்க உரை முதலில் இடம் பெற்றது. புகழ் பெற்ற மலையாளக் கவிஞரும் இந்திய சாகித்திய அக்கடமியின் முன்னாள் செயலாளருமான கே. சச்சிதானந்தன் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில், இந்திமொழிக் கவிஞர்களான அனாமிகா, மங்களேஷ் டப்ரால், கன்னடக் கவிஞர் எச்.எஸ். சிவப்பிரகாஷ், அம்னெஸ்டி இன்ரர் நஷனல் அமைப்பின் தென்னாசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான ஆய்வாளரும் தமிழ் எழுத்தாளருமான ரமேஷ் கோபாலகிருஷ்ணன் (நாகார்ஜுனன்) ஆகியோர் ஈழத்தமிழர் இனப்படுகொலை தொடர்பாகவும் கவிதை பற்றியும் உரை யாற்றினர்.தமிழிலும் ஆங்கிலத்திலும் தனது கவிதைகள் சிலவற்றைக் கவிஞர் சேரன் நிகழ்த்தினார். கலந்து கொண்ட பார்வையாளர்களும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

■ ■ ■


வீடு வாங்க... விற்க...
உங்கள் முகவராக...
இதோ...
HOMELIFE
HIGHER STANDARDS
நாணயம் * நேர்மை * நம்பிக்கை
என்னிடம் நீங்கள் வீடு
வாங்கினால் உங்களுடைய
"Lawyer Fees" மற்றும்
"Moving Charges"
இலவசம்!**
VALLIKKANNAN MARUTHAPPAN,
Sales Representative.
Direct: 416-880-6051 / 416-623-4989
** Conditions Apply.
HomeLife Today Realty Ltd., Brokerage*
* Independently Owned and Operated - Not intend to solicit buyers or sellers currently under contract
www.mvkhome.ca Business: 416-298-3200
HomeLife Today Realty நிறுவனத்தின் 2010ஆம் ஆண்டின் விழா கடந்த டிசம்பர் 4, 2010ஆம் தேதியன்று நடைபெற்றது. அன்று நிறுவனத்தின் முகவர்களுக்கு வழங்கப்படும் உயர் விருதான "Gold Member Award" மற்றும் "Rookie of the Year" ஆகிய இரண்டு விருதுகளையும் HomeLife நிறுவனத்தின் நிறுவனர் திரு.ஆன்ரு சிம்மேர்மன் அவர்கள் திரு.வள்ளிக்கண்ணன் மருதப்பன் அவர்களுக்கு வழங்கி கௌரவித்தார்.


S.P. IMPORTERS FURNITURE INC.
Importers & Distributers of High Quality Furniture & Mattresses
விடுமுறைகால மலிவு விற்பனை
CASH & CARRY
$149
Reg. $249
Futon Frame and Mattress
3 pc Leather Sofa Set
$1079
Reg. $1499
5 pc Glass Top Dining Set
$199
CASH & CARRY
3 pc Leather Sofa Set
$1599
Reg. $1999
8 pc Queen Bedroom Set
$1899
Reg. $2499
9 pc Dining Room Set
$1799
Reg. $2299
Single / Double Bedroom Set
$1599
Reg. $2499
3 pc Sofa Set with 5 Recliners
$1299
Reg. $1699
Black or Chocolate Leather
Over 15,000 sq. ft Showroom MORE than 2,000 items to choose...
Wooden Bunkbed with Mattress
$449
Reg. $599
CASH & CARRY
Sectional Sofa with ottaman
Micro fabric / PU
$899
Reg. $1199
9 pc High Pub Set
$599
Reg. $999
CASH & CARRY
Hwy. 401
Ellesmere Rd.
Lawrence Ave.
Midland
Brimely
We Are Here!
Authorized Sealy & Ashley Dealer
We sell ALL kinds & sizes of mattresses, including Orthopedic, Sealy Posturepedic and Memory Foam!
Sealy
ASHLEY FURNITURE HomeStore
2861 Lawrence Ave. East
@ Brimely, Scarborough
416-266-3077


சுவை–தரம்–புத்துணர்வு
Hattan Tips
Pure Ceylon Tea
Ceylon Black Tea
Hattan Tips Tea
416-548-8020
Quality & taste....
அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்


இது பண்டிகைக் காலம்!
ஒரு சிறிய
அன்பளிப்புக்கூட
உங்கள்
உறவுக்கு பெரியது!
Ervamatin
POWER
SHAMPOO
OPIBRA
SKIN CLEAR
HAIR LOTION
BODY SOAP
210 ml
AMAZONIA
Natural Hair Lotion
Happy
Holidays!!
for your healtheir gift ideas ....
visit us www.amazonhealthcare.com
SABONA
& Gift
Amazon
Health Care
2602 Eglinton Ave. East, Scarborough, ON Tel: 416•264•8787 www.amazonhealthcare.com
PALAR

Season's Greetings

*Wishing you and your family*
*all the best*
*and*
*Prosperous New Year*
**2011**

புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

2010
Chairman Club Award
Sales Person of the year



SILVER AWARD WINNER
04-05

PLATINUM CLUB
06-09

**HomeLife/Future Realty**
205-7 Eastvale Drive
Markham, ON
L3S 4N8
Off: 905.201.9977
Dir:416.624.5044

email:homelifesathy@gmail.com
www.homelifesathy.com

**Sathy Sivasubramaniam**
Sales Representative

HOMELIFE
HIGHER STANDARDS

# குடும்பம்

## குமார் புனிதவேல் பக்கம்

வாசலில் ஹான் சத்தம் கேட்டவுடன் சுந்தரம் அவசரம் அவசரமாக லோங்ஸ்ஜ போட்டுக் கொண்டு படிகளில் இறங்கி வந்தான். அவன் ரெலிபோனில் அழைத்த டக்சிதான் வாசலில் வந்திருக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

காற்சட்டைக்குள் சேட்டை அழுத்திக் கொண்டு "சாந்தி என்னுடைய பார்ஸை கொண்டு வாரும்" என்று சொன்னான். "உங்களுடைய பார்ஸ் எனக்கு எப்படி தெரியும் நீங்கள் வைத்த இடத்தில் தான் இருக்கும் போய் எடுங்கோ" என்று நீட்டி முழங்கினாள்.

சப்பாத்துக்குள் காலைவிட்டப்படி வாசலில் நின்ற ரக்சிக்கு கை காட்டிவிட்டு, நீர் தான் எடுக்கிறனீர் என்னுடைய சட்டைப் பையில் காணவில்லை. "எனக்காப் போய் பாரும். எங்க வைத்தநீர் ?"என்றான் சுந்தரம்.

"பார்ஸ் இருக்கட்டும் முதலில் உங்கடை காற்சட்டை சிப்பைபை இழுத்து மூடுங்கோ. ஊருக்கெல்லாம் காட்டினது போதும்" என்றாள் சாந்தி. முகத்தில் அசடு கலந்த கோபத்துடன் சிப்பை இழுத்து மூடிய சுந்தரம் "ரக்சிக்காரன் கத்தப்போறான் ஓடிப்போய் வைத்த இடத்தில் பார்த்து எடுத்து வாரும்" என்று சொன்னார். இருவருமே வாசலில் நின்று கதைத்தால் வெளியில் அது ஒரு குறுந்திரை நாடகம் பார்ப்பது போல் ரக்சி டிரைவர் பார்த்துக் கொண்டிருந்தான் (கேட்டுக் கொண்டும்). "எனக்கு எப்படி தெரியும். நான் உங்கள் பார்சை இன்றைக்கு தொடவுமில்லை, கண்ணால் காணவுமில்லை" என்று கூறிவிட்டு எனக்கு ஒளித்து வைத்த நீர், தேடி எடும் என்பது போல் சாந்தி நின்றிருந்தாள்.

"விடியக்காலமையே மனுஷருக்கு விசர் ஏத்தாமல் போய் பாருமப்பா நீர் தான் அந்த இந்த சாமான் வாங்க என்று எடுத்திருப்பீர்" என்றான் சுந்தரம். "இஞ்சாருங்கோ நான் உங்கட பேர்ஸ் எடுப்பதென்றால் வீட்டுக்கு சாமான் வாங்க மட்டும் தான். என்னுடைய பேரில் காசு சேர்க்கவுமில்லை எங்கட அம்மா அப்பாவுக்கு அனுப்பவுமில்லை. அப்படியும் காசு செலவழிக்காமல் இருக்க வேண்டுமென்றால் கல்யானமும் முடிக்காமல், பிள்ளையும் பெறாமல் பிள்ளையாரைப்போல இருக்க வேண்டியது தானே" என்று முடித்தாள் சாந்தி. தெருச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி தானே. டிரைவரும் சண்டையை சுவரஸ்யமாக கவணிக்கத்துவங்கினான். ஆரம்பத்தில் அரைக் கண்ணால் பார்த்தவன் இப்போ தியேட்டரில் பார்ப்பதுபோல் நேராகவே பார்த்தான்.

"நான் அறைக் கட்டிலில் கதைப்புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கையில் எனது லோங்ஸசில் இருந்து பார்ஸ் எடுத்துக் கொண்டு போனீர் ஞாபகமாயிருக்கிறது" என்று சுந்தரம் தன் பங்குக்கு சொன்னார்.

கதை கட்டில் வரைக்கும் போய்விட்டால் சுவரஸ்யம் தானே. அருகில் வீட்டுக் கூரையில் வேலை செய்து கொண்டிருந்தவன் வேலியடியில் வந்து "மடம் நீங்கள் காலை நூறு டொலர் மாற்ற முடியுமா என்று கேட்டீர்கள் மறந்து விட்டீர்களா? என்று கதைக்கு ஒரு சுவரஸ்யமான திருப்பு முனையை உண்டு பண்ணினார்.

உடனே எங்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பேட்டியில் அரசியல் ஆய்வாளர் குறிப்பிடுவதுபோல் சாந்தி வேறு திசைக்கு காய் நகர்த்தலை செய்தாள். அது நேற்று பிள்ளை பள்ளிக்கூட "பீஸ்" கட்டுவதற்கு அவர் தந்தது. இன்று நான் 'பேர்ஸ்' தொடவில்லை என்று அடித்துச்சொன்னாள்.

இதற்கிடையில் வாசலில் ரக்சி நின்று கொண்டிருப்பதை கவனித்த சுந்தரம் வேறு யுத்தக் களத்திற்கு தன்படையை நகர்த்துவோம் என்ற நினைவுடன் மகள் சசியிடம் "நீ ஏதாவது பார்ஸ் எடுத்தாயா?" என்று கேட்டார்.

ஒரு குண்டு எறிந்தால் ஒன்பது குண்டு எதிர் முனைக்கு எறியும் சீனாபோல் இனி என்னட்டை வரவேண்டாம். தான் வைத்துவிட்டு யாரையாவது பழிபோடும் வேலையை வைத்துக் கொள்ளவேண்டாம்" என்று பொரிந்து தள்ளினாள்.

எதிரியின் பலவீனத்தை கவணித்து அதில் அடிப்பது போல் சாந்தி சந்தர்ப்பத்தை பயன் படுத்தி "இந்த மனுஷன் இப்படித்தான் பிள்ளை எங்கையாவது சாமான்களை வைப்பது, பிறகு யாரையாவது குறை சொல்வது. நீங்கள் வைத்த இடத்தில் தேடிப்பாருங்கள்" என்று சொல்லி முடித்தாள் சாந்தி

எதிரியின் கூட்டணி வலுப்பதை கவணித்த சுந்தரம் வெள்ளைக் கொடியை தூக்குவது தான் தப்பிப்பதற்கு ஒரே வழி என்று "சரி சரி, யாரோ மாறி வைத்திருக்க வேண்டும் வேண்டுமென்று வைத்திருக்க மாட்டார்கள் வருங்கள். நானே தவறி வைத்திருக்கலாம் எல்லாருமாக தேடுவோம் என்று சொல்லிக் கொண்டு மாட்டிய சப்பாத்தை கழட்டி வைத்து விட்டு தேட ஆயத்தமானார் சுந்தரம்.

வெள்ளைக்கொடி தூக்கியவனை சுட்டு விழுத்தும் சிறீலங்கா படைபோல் சாந்தி எனக்கு முன்னமே தெரியும் நீங்கள்தான் வைத்துவிட்டு எங்களை சாட்டுகிறீர்கள் என்று உடனே அருகில் இருந்த சசியும் சிரித்து சுந்தரத்தின் கோபத்தை அதிகப்படுத்தினாள். வெளியில் நின்ற ரக்சி காரனுக்கு கையை காட்டிவிட்டு உள்ளே சென்றார் சுந்தரம் பார்ஸ் தேடுவதற்கு.

தொடர் கதையில் அடுத்த அத்தியாயம் எப்படி இருக்கும் என்ற ஆவலுடன் டக்சி டிரைவர் நின்றிருந்தான். அடுத்தவீட்டு கூரை வேய்பவனும் அதே ஆவலுடன் வேலையை நிறுத்தி விட்டு வேலியில் நின்றிருந்தான்.

அங்கும் இங்குமாக கட்டில் தலையனை, கட்டிலுக்குக் கீழ், மற்ற காற்கட்டைப்பை என்று தேடிய சுந்தரம் தனது எழுத்துமேசை லாச்சியை கையில் இருந்த சாவியால் அரை மனத்துடன் திறந்தார். சித்திரை மாத வட்ட நிலாபோல் அவரது பார்ஸ் அவரைப்பார்த்து சிரித்தது.

இராவணன் இலங்கை திரும்பியதுபோல் தலையைக் கீழேபோட்டுக்கொண்டு "இங்கே இருக்கிறது பார்ஸ்" என்று சுந்தரம் உலகிற்கு எடுத்துரைத்தார் தனது மறதியின் கொடுமையை. A.K 47 போல் சரமாரியாக சாந்தி பொழியத்துவங்கினாள் சொற்சன்னங்களை. அந்த தாக்குதலிலிருந்து தப்புவதற்காகவும், ரக்சி டிரைவர் அரை மணித்தியாலம் காக்க வைத்ததையும் மனதில் கொண்டு வெற்றிகரமாக பின்வாங்கி வெளியில் ரக்சி நோக்கி வந்தார். நடந்த யுத்தம் எப்படி முடியும் என்பதற்கு பந்தயம் கட்டாத குறையாக டிரைவரும் பக்கத்து வீட்டில் வேலை செய்பவரும் சுந்தரத்தை இறைச்சிக் கடையைப் பார்க்கும் நாய்போல் பார்த்தார்கள்.

ஏற்கனவே நெடுநேரம் சென்று விட்டதால் பயனத்தை பிற்போட்டுவிட்டு "அதிகம் நேரம் நிற்பாட்டி வைத்துவிட்டேன். நான் வேறு நாள் பேகிறேன் இப்போ எவ்வளவு தரவேண்டும்" என்று கேட்டார்.

"நீங்கள் ஒன்றும் தரவேண்டாம். ஆனால் பார்ஸ் யார் எங்கு வைத்திருந்தார் என்று சொன்னால் போதும்" என்று ஒரு உடன் படிக்கையை நீட்டினார் டிரைவர். எப்பவோ தோல்வியை ஒப்புக்கொண்ட சுந்தரம் "என்னுடைய பிழைதான். நான் எனது மேசை லாச்சியில் வைத்து பூட்டி விட்டேன்" என்று பதில் சொன்னார்.




"Sorry Sir நான் நினைத்தேன் மடம்தான் எடுத்திருப்பார் என்று சில சமயங்களில் இப்படி நடப்பதுண்டு" என்று டிரைவர் சொல்ல 'Blue Jeys' விசிரி தொல்வியின் பின் திரும்புவது போல் கூரை வேலைகாரனும் திரும்பினான்.

அப்போது புராணக்கதையில் கேக்கும் அசரீதி போல் மகள் சசி குரல் "அப்பா, அது அம்மா தான் எடுத்தவ" என்று சொன்னாள். கதை மீண்டும் ஒரு திருப்பு முனை அடைவதை கண்ட டிரைவரும் வேலைகாரனும் சுவரஸ்யமாக திரும்பிப்பார்த்தார்கள். மகளின் கதையை தட்டிக்கழிப்பதாக சுந்தரம் "இருக்க முடியாது அது என்னுடைய லாச்சியில் இருந்தது. அம்மா போட்டிருக்க முடியாது" என்று சொன்னார். ஆனால் சசியோ விட்டுக்கொடுக்காமல்" இல்லையப்பா. நான் தான் அம்மாவின் பைக்குள் உங்கள் பார்ஸ் இருப்பதைப் பார்த்து விட்டு எடுத்து உங்கள் லாச்சியில் போட்டேன்" என்று ஒரு குண்டை தூக்கி போட்டாள்.


இரசிகர்களுக்கு படுகுஷி. அடுத்தது என்ன வீரப்பா எம்.ஜீ.ஆர் "லாஸ்ட் பைட்" தானே என்று பார்த்தார்கள். ஆனால் சுந்தரம் "நீ பொய் சொல்லுகிறாய் நீ அதைப்போட்டிருக்க முடியாது. ஏன் என்றால் அதன் சாவி என் சங்கிலி கொத்தில்தான் இருக்கிறது. அதை நீ எடுத்திருக்கமுடியாது. மேலதிக சாவி இல்லாத லாச்சி அது" என்று சொல்லி எதிர் வாதம் இல்லாது செய்துவிட்டார். சுந்தரம் சிந்திக்கத்தவறியது சசி சாந்தியின் மகள் என்பதை. யுத்தக்களத்தில் காய் நகர்த்துபவர்கள் எல்லாப் பக்கமும் பார்க்கவேண்டும். கனடிய ஊடக அரசியல் ஆய்வளர்களை காணும் வேளை கேட்டுப்பாருங்கள் அழகாக வெற்றி நமதே என்று நல்ல விளக்கங்களுடன் விபரிப்பார்கள். அடுத்தவாரம் ஏன் தோல்வி என்பதற்கும் நல்ல விளக்கம் தருவார்கள் இனி கதைக்கு வருவோம்.

சசி சொன்னாள் "அப்பா என்னிடம் ஒரு சாவி பேஸ்மன்ட் இல் கண்டெடுத்தனான் போன வருடம், இந்தா இருக்கிறது" என்று கட்டினாள் சாவியை. வேலைகாரனும் டிரைவரும் முனு முனுத்துக் கொண்டு வெளியேறினார்கள். நீங்களும் முனுமுனுப்பது கேக்கிறது. இனி ஏதும் எழுதினால் நினைக்கவே பயமாயிருக்கிறது.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com
Team Leadership • Expert Testimony • Zoning Changes • Building Permits • Municipal Planning • Project Management • Contract Administration • Construction Technology • Plan Review • Public Relations • Development Planning • Specifications Review • Industrial Reuse Strategies


Tamils' Business Connections
www.tamilbizcard.com
உலகெங்கும் வாழும்
தமிழ் வர்த்தகர்களுக்கும்
புதிய முயற்சியாளர்களுக்கும்
2011
புதுவருட வாழ்த்துக்கள்
வரும் புதுவருடம் வளமாய்ப் பிறக்க
பெரும்புய லெனப் புறப்படு தமிழா
ஒருவிதி செய்துநம் வளங்களைப் பெருக்கி
பெருநிதி படைத்து உயர்வோம் எழுவாய் !
Promoting Prosperity and Co-operation
Google
You Tube
Have Your Business Connected Globally…?
To Subscribe Contact 416 272 8543

# சூழலும் சக்தியும்


- பொன் குலேந்திரன் -

பெரும் வெடிப்பு (Big Bang) தத்துவம் பிரபஞ்சத்தின் பிறப்பையும், காலத்தின் தோற்றத்தையும் விளக்கும் விஞ்ஞான கோட்பாடாகும். வெடிப்பு ஏற்படுவதற்கு முன்னர் தனிச்சிறப்பு நிலையில் (State of Singularity) பிரபஞ்சம் இருந்தது. இந்த நிலையில் திண்மங்களும் சக்திகளும் ஒரு புள்ளியில் குவிந்திருந்தன. பிரபஞ்சத்தில் உள்ள கருந்துளையில் (Black Hole) இந்நிலையுண்டு. பிரபஞ்சத்தினை ஒரு கோளத்தின் மேற்பரப்பாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இப் பிரபஞ்ச கோள வடிவத்தினுள்ளும் வெளியேயும் ஒன்றுமில்லை. வேதகால ரிஷிகள் பிரபஞ்சத்தை ஒரு முட்டை வடிவமாகக் கருதினர். சக்தி அதிகரிப்பாலும், திண்ம அணுக்களுக்கிடையே உள்ளான தள்ளு விசைகளாலும் (Repulsive forces) வெடிப்பு தோன்றி பிரபஞ்ச சக்தி வெளியேறியது. $E=MC^2$ என்ற சக்தி E, திண்மம் M, ஒளியின் வேகம் C ஆகிய வற்றை இணைக்கும் அயன்ஸ்தீனின் சமன்பாட்டின்படி சக்தியில் இருந்து திண்மத்திற்கும், திண்மத்தில் இருந்து சக்திக்கும் மாற்றலாம். இந்த மாற்றத்தால் ஒளி பிறக்கிறது. இக்கோட்பாடே அணுசக்தியின் வலுவை மனிதன் அறிய உதவியது. பல்லாயிரம் உயிர்களை அழித்தது. பிரபஞ்சத்தில் சக்தி வெளியேற்றத்தால் ஒளிதோன்றியது. காலம் ஆரம்பித்தது. காலத்தின் ஆரம்பம் 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் என்பது ஒரு கணிப்பு பிரபஞ்சத்தின் முன்னைய நிலையை காலத்தின் தோற்றத்தின் போது கணக்கில் இங்கு எடுக்கவில்லை. வான் வெளியில் பல கோடி நட்சத்திரங்கள், கிரகங்கள் தோன்றின. இதில் நாம் வாழும் பூமி சூரியனின் நட்சத்திரக் குடும்பத்தில் ஒரு சிறு அங்கத்தினராக இயங்குகிறது. எமது சூரிய குடும்பத்தை விட பெரிய குடும்பங்களும் பிரபஞ்சத்தில் உண்டு. அங்கும் உயிரினங்கள் அந்த சூழலுக்கு ஏற்ற தோற்றத்துடன் எம்மைவிட புத்திசாலிகளாக வாழலாம். இதை நாம் கற்பனையில், சினிமாவில் பார்த்துள் ளோம். இது போன்று பிரபஞ்சத்தில் ஆயிரக் கணக்கான நட்சத்திரக் குடும்பங்கள் உண்டு.

பெரும் வெடிப்பினால் தோன்றிய பூமியின் சுற்றுப்புறச் சூழல் (Environment), அதில் வாழும் எல்லா உயிரினங்கள் கண்ணுக்கு புலப்படாத பிரபஞ்ச சக்தியையே நம்பி வாழ்கின்றன. பூமியைச் சுற்றியுள்ள வளி மண்டலத்தின் வெப்ப நிலை, பரிசுத்தமான நிலம், நீர், மனித இனம் வாழ உதவுகின் றன. இதனால் தான் இந்து மதம் ஐம்பூதங் களான காற்று, நீர், நெருப்பு, நிலம், வளி மண்டலத்தை கடவுளாக பாவித்து இந்து மதச் சடங்குகளில் அவைக்கு மரியாதை கொடுத்து கிரிகைகள் நடத்துகிறது. அது மட்டுமல்ல சக்தியானது இயற்கையில் எங்கும் பரவி இருப்தனால் இந்து மதத்தில் வேம்பு. ஆலமரம், மாமரம், வில்வமரம், துளசி, சந்தணமரம், பலா போன்ற மரங்களை தல விருட்சங்களாக வணங்குகிறார்கள். அவ்வாறே பசு, எருது, சிங்கம், புலி, நாய் போன்ற மிருகங்களையும், பாம்பு போன்ற ஊர்வனகளையும் வழிபடுகின்றனர். இவ்வழிபாடு சக்தியை குறிக்கோளாகக் கொண்டது.

சக்திக்கும் இயற்கையல் உள்ள மலை. நதி, கடல், நிலம், மரங்களுக்கு என்ன தொடர்பு? சக்தி இருந்தால் தான் இயங்க முடியும். பௌதிகத்தில் இயக்கச் சக்தி (Kinetic Energy) நிலைச் சக்தி (Potenila Energy)என்பதை பற்றி நாம் படித்திருக் கிறோம். இவைற்றை விட இரசாயன சக்தி, சூரிய சக்தி, இயந்திர சக்தி, அணு சக்தி, பொன்றசக்தியின் பலவடிவங்களை இயற் கையில் இருந்து மனிதன் பெற்று, அவற்றை தனது பாவனைக்கு உபயோகித்துள்ளான். அச்சக்திகள் மூலம் தொழிற்சாலைகளை இயங்கவைத்து கழிவுப்பொருட்களை திரும் பவும் சூழலை மாசுபடுத்த வெளியேற்றியுள் ளான். எத்தகைய சுயநலவாதியாகிறான் மனிதன்.

பல நாடுகளின் பூர்வ குடிமக்கள் இயற்கை வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கி றார்கள். இதில் தென்னிந்தியர்களை முக் கியமாக குறிப்பிடவேண்டும். நிலமம் மரங் களும் அவர்கள் வணங்கும் தெய்வம். அரிஸ்டோட்டல் போன்ற தத்துவ ஞானிகள் கூட பஞ்ச பூதங்களை பற்றி குறிப்பிட்டுள்ளார். மரங்கள் வளர்ந்து, மலர்ந்து. காயப்பதற்கு அதனுள் இருக்கும் சக்தி துணை போகிறது. மனித உடலுக்கு ஆன்மா எப்படி யோ மரங்களுக்கு அதன் சக்தி முக்கியம். மலைகளுககுகள் சக்தி முடங்கி கிடக்கிறது. தக்க தருணத்தில் எரிமலையாக வெடித்து வெளியேறுகிறது. நதிகள், மழை காரணமாக கரை புரண்டு ஓடும் போது அதன் சக்தி வெளி வருகிறது. அதே போல் கடல் அலை களும், பூகம்பத்தாலும் காற்றாலும் தனது சக்தியின் வலுவை எடுத்துக் காட்டுகிறது. நிலத்துக்கடியே வெப்ப நிலை உயர்வதினாலும் நிலத் தட்டுகள் ஒன்றுடன் ஒன்று உராய்வதினாலும் சக்திவாயந்த பூகம்பம் தொன்றுகிறது. வான்வெளியில் பருவ நிலையில் ஏற்படும் மாற்றம் காரணமாக சூறாவளி தோன்றுகிறது. இவை ஒன்றின் தோற்றத்தால் மற்ற பஞ்ச பூதங்களும் இயங்கத் தொடங்கி தமது சக்தியினை வெளிக்காட்டுகிறது. இவையல்லாம் ஒரே பூதக் குடும்பமல்லவா?



சுற்றுப்புறச் சூழல், சக்தியினை பிரபஞ் சத்தில் இருந்து பெற்று உயிரினங்களை வாழவைக்கிறது, சூரியனிடம் இருந்து பூமி பெறும் சக்தி சூழலையும் உயிரினங்களை யும் வாழ வைக்கிறது. அதனால் தான் பண்டைய காலத்தில் இந்தியா, ஜப்பான், எகிப்து, தென்அமெரிக்கா, கிரேக்கம் போன்ற நாடுகளில் ஆதவனை தெய்வமாக வணங்கி வந்தனர். தாய் குழந்தைக்கு பால் ஊட்டுவது போல ஆதவன் பூமிக்கு சக்தியை கொடுக்கிறான். விவசாயத்தை வளர்த்து மானிடர்களுக்கு உணவை கொடுக்கிறான். காலத்தோடு சூழலானது படிப்படியாக மாற்றங்கள் அடைந்துள்ளன. மலைகள், நதிகள், குளங்கள், கடல்கள், காடுகள், மேகங்கள், நிலம் ஆகியவை சூழலின் அங்கங்கள். ஐம்பூதங்கள் என அழைக்கிறது. "புல்லாகிப் பூண்டாய் புழுவாய் மரமாகி... என திருவாசகத்தில் சூழிலில் வாழும் உயிரியனங்களை மாணிக்க வாசகர் குறிப்பிட்டுள்ளார். இவை காலத்துக் காலம் ஏற்படும் மாற்றங்களை குறிக்கும். மறுபிறவியினையும் எடுத்துக் காட்டுகிறது.. நிலப்பரப்பு உருமாற்றம் அடைகிறது. பனி மலைகள் பருவ நிலைக்கு ஏற்ப மாற்றமடைகின்றன. கடல் மட்டம் உயர்கிறது. வாவிகள், புது நதிகள் பல தோன்றுகின்றன. சில நதிகள் மறைந்துவிடுகின்றன. மனிதன் மாற்றத்தால் பயன் அடைகிறான்.

தமிழ் இலக்கியத்தில், காலத்தை ஆறு பகுதி களாகவும் நிலத்தை ஐந்து பகுதிகளாகவும் வகுத்துள்ளார்கள் நமது மூதாதையர்கள். காலத்தின் பகுப்பு பருவகால வெப்பநிலையையும் சுற்றுப்புறச் சுழலைப் பொறுத்தது. காலத்தை முன்பனி. பின்பனி, இளவேணில், முதுவேணில், கார்காலம், குளிர்காலம் என வகுத்தனர். இதில் வெப்பஅதிகமான காலமாகிய ஆனி ஆடி காலங்களின் வசந்தகாலமே "முதுவேனில்" காலமாகும். நிலத்தை பொறுத்தமட்டில் மருதம், குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை ஆகிய ஐந்து விதமான நிலப்பரப்புகளாக, சூழலுக்கும், செய்யும் தொழிலுக்கும் ஏற்ப நிலங்களை வகுத்துள்ளனர்.

இரு புள்ளிகளுக்கிடையேளான குறுகிய இடை வெளியை தூரம் என்கிறோம். அதே போன்று இரு சம்பவங்கள் நடந்த இடை வெளியினை நேரம் என்கிறோம். காலம் அல்லது நேரம் மாற்றத்துடன் அல்லது இயக்கத்துடன் சம்பந்தப்பட்டது. பிரபஞ்சம் இயங்காதிருப்பின் நேரம் அல்லது காலம் என்ற தத்துவத்திற்கு இடமில்லை. இங்குதான் பெரும் வெடிப்பு என்ற தத்துவம் காலத்ததோடு இணைகிறது. பிரபஞ்சம் சிறுமுட்டை வடிவில் இருந்து வெடித்து, விரிவடைந்து. சுருங்கி மறைந்து, பின்னர் திரும்பவும் வெடித்து விரிவடைந்து சுருங்கி ஒரு சுழற்சி முறையில் இயங்குகிறது. இதைத்தான் இந்துமதம் படைத்தல். காத்தல் அழித்தல் என்ற தொழிலுக்கு பிரம்மன். விஸ்ணு, சிவன் ஆகியோரை உருவாக்கி காலத்தை செயல்படவைக்கிறது. ஆகையால் பிரபஞ்ச இயக்கம் காலத்தோடு தொடர்பு கொண்டது. எப்போது பிரபஞ்சம் இயங்கத் தொடங்கியதோ அப்போது காலம் பிறந்தது என்பார்கள் சில விஞ்ஞானிகள். எப்போது காலம் பிறந்தது என்பதற்கு சரியான விடைதெரியாது விஞ்ஞானிகள் தவிக்கிறார்கள். ஆனால் பிரபஞ்சத்தில ஏற்பட்ட பெரும் வெடிப்பு 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டது என்கிறார்கள் விஞ்ஞானிகள். ஆதற்கு முன்னர் பிரபஞ்சம் இருண்டு இருந்ததா?

இயற்கையில் இருந்து மனிதன் கற்க வேண்டியவை பல. அறிவியலின் கண்டு பிடிப்புகள் பல இயற்கையில் நடப்பவையை அவதானித்து கண்டு பிடிக்கப்பட்டவை. பறவையைக் கண்டு விமானம் படைத்தான் என்றார் கவிஞர் கண்ணதாசன், மரத்தில் இருந்து அப்பிள் கிழே விழுவதைக் கண்டு புவியீர்ப்புசக்தியின் விதிகளை கண்டுபிடித் தான் நியூட்டன். மின்னலை பார்த்து மின்சாரத்தை கண்டுபிடித்தான். தேன் கூட்டின் அமைப்பினை பார்த்து, இரசித்து பெரும் கட்டடிங்களின் உருவங்களை அமைத்தான். வண்ணத்துப் பூச்சிகளின் வர்ண அமைப்பை பார்த்து ஓவியங்களை அழகுபடுத்தினான். வரிசையாக செயலாற்றுவதினால் திறமையாக செயலாற்ற முடியும் என்ற பாடத்தை எறும்புகளிடம் இருந்து கற்று ஒழுங்காக கியூவில் நிற்க கற்றுக்கொண்டான். மிருகங்களின் உருமறைப்பினைக் கண்டு தானும் அந்த தந்திரத்தை போர் யுக்திக்குப் பயன்படுத்தினான். இப்படி இயற்கையில் காணக்கூடிய அவதானிப்புகள் எத்தனையோ. இரகசியங்கள் எத்தனையோ. இவையெல்லாம் வருங்காலத்தில் விஞ்ஞான கண்டுபிடிப்புகளாக தோன்றலாம்.

மனிதன் தான் செய்யும் தவறான செயல் களாலோ அல்லது எடுக்கும் முடிவுகளி னாலோ வாழக்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள் அல்லது தோல்விகளுக்கு காலத்தை குறை சொல்வது வழமை. நல்லது அல்லது கெட்டது நடந்தால் அதற்கு நல்லகாலம், கெட்டகாலம் என முத்திரை குத்தி விடுவார்கள். சென்ற காலத்தில் நடந்ததை மறந்து விடு, வருங்காலத்தில் நடக்கப்போவதையிட்டு கற்பனை காணாதே. நிகழ்காலத்தில் நடப்பதை எவ்வாறு சந்திக்க வேண்டும் என்பதை பற்றி சிந்தி என்கிறார் ஆன்மீகவாதி. இதற்கு காரணம் நடந்தவை திரும்பவும் நடக்கப் போவதில்லை, அதை நினைத்து காலத்தை விணடிக்காதே. வருங்காலத்தில் நடக்கப்போவதை நினைத்து கற்பனைகள் பல செய்து உன் நேரத்தை விரையம் செய்யாதே ஏன் என்றால் வருங்காலத்தில் நடக்கப்போவதை உண்ணால் ஊகிக்க முடியாது. ஆதனால் தற்போது நடக்கப்போவதை பற்றி சிந்தித்து செயலாற்று. இது மனித வாழ்வில் காலத்தின் இன்னொரு ஒரு கோலம்.

அயன்ஸ்தீனது சார்புக்கொள்கையும் கால மும் என்ற தத்துவம் ஒரு புரட்சியை உண்டு பண்ணிவிட்டது எனலாம். காலமும் ஒளியின் வேகமும் அறிவியலில் விளங்கிக்கொள்வது மிகக் கடினமான விடையங்களாகும். ஒளியின் வேகம் பிரபஞ்சத்தின் வயதையும் மற்றைய நட்சத்திரகளின் தூரத்தையும் கணிக்க உதவு கின்றன. ஒரு வினாடியில் 1,86,000 மைல்கள் ஒளி பயணம் செய்யுமாகில் ஒரு வருடத்தில் $365x24x60x60x60x186,000=5.87x10^{12}$ மைல்கள் பயணம் செய்யும். இதனை ஒளி வருடம்(A Light Year) என்பர் வானசாஸ்திரிகள். நட்சத்திரங்களின் தூரத்தை இந்த அளவு கோலை வைத்து கணிப்பார்கள். Alpha Centuari என்ற பூமிக்கு அன்மையில் உள்ள நட்சத்திரமானது 4.2 ஒளி வருட தூரத்தில் அமைந்துள்ளது.

Time Dilation என்பது ஒளியின் வேகத்துக்கு அருகே நாம் பயணம் செய்வதால் ஏற்படும் விளைவுகளை கணிப்பதாகும். பிரபஞ்சத்தில் நிகழ்வுகளுக்கு சில வழிமுறைகள் உண்டு. ஒரு நிகழ்வு ஏற்படின் அதை தொடர்ந்து இன்னொரு நிகழ்வு ஏற்படுகிறது. இந்நிகழ்வுகளின் தொடரின் முடிவே சூழலின் தற்போதைய நிலை. இந்நிகழ்வுகள் தொடர்ந்து போனால் இன்னும் பல்லாயிரம் ஆண்டுக ளுக்குபின் பூமியின் நிலை என்ன என்பதை எம்மால் ஊகிப்பது கடினம். ஆனால் மனித னால், இந்நிகழ்வுகளில் மாற்றம் ஏற்படுகிறது என்பது நிட்சயம். சூழலை மனிதன் மாற்று கிறான். எதற்காக? தனது சுயநலம் நிறைந்த பொருளாதார வளர்ச்சிக்கும் சொகுசான வாழ்வுக்கும் தான்.

இயற்கையிலிருந்து சக்திகளை பல வழிகளில் பெறலாம். ஐம்பூதங்கள் அதற்கு வழி காட்டுகிறது. சூரியசக்தியானது ( Solar Energy) விலையுயர்ந்த மின்சக்தியின் விரையத்தை குறைக்க வழிகாட்டுகிறது. நிலத்திற்கு அடியில் உள்ள எரிபொருள் விரையமாகாமல் செய்ய உதவும். வீட்டிற்கு வேண்டிய மின் சகத்தியனை சூரியசக்தி மூலம் பெறலாம். காற்றில் இருந்து பெறக்கூடிய சக்தியும் அவ்வாறே. சூழலின் சக்தியை மதித்து நடவுங்கள். சக்திகளை விரயமாக்காதீகள். ஊதாரணத்துக்கு பூமிக்கு அடியில் உள்ள விலை மதிக்க முடியாத எரிபொருள் தீர்ந்துவிட்டால் போக்குவரத்துக்கு மனிதன் என் செய்வான்? ஒரு சக்தி தீர்ந்துவிட்டால் இயற்கையில் இன்னும் பல சக்திகள் உண்டு. ஆனால் இயற்கையை மாசுப்படுத்தி அதன் சீற்றத்தை தூண்டி மனித இனத்தின் அழிவைத் தேடிக் கொள்ளாதீர். பூமியை பாலைவனமாக்கி விடாதீர்.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

Cell Tel Mobility

# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

# WINTER SPECIAL !!!

**We sell new & used cellphones, Pagers and accessories for:**

**ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY**
**VIRGIN MOBILE, KOODO MOBILE, SOLO MOBILE, MOBILICITY,**
**PUBLIC MOBILE, WIND MOBILE, CHATR WIRELESS.**



*Winter Sale*

**Geunine Leather Case**

From **50¢**

Reg. $19.99

Selected items only, while quantities last.
This offer only available at Markham locaton.



*Winter Sale*

**Hands free**

From **50¢**

Reg. $29.99

Selected items only, while quantities last.
This offer only available at Markham locaton.



*Winter Sale*

**Smart car charger**

From **50¢**

Reg. $39.99

Selected items only, while quantities last.
This offer only available at Markham locaton.





- -Car charger
- -Leather case
- -Head sets
- -Home charger
- -Clear case
- -Bluetooth headset
- -Bluetooth dongle
- -Data cables
- -Batteries
- -Belt clip/Holder
- -Antenna booster
- -Flashing antenna
- -Flashing light




**Call Toll free:- 1.877.312.5123** ***SHOP ONLINE*** @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE.

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***




**49 - 45 Karachi Dr**
**Markham Rd / 14 th Avenue**
**905.201.4859**



# வாழந்த தமிழரும் தாழ்ந்த தமிழரும்

**பேச்சுப் பல்லக்கு 5**



சி.சண்முகநாதன்

தாத்தா வைத்திருந்த கொம்பன் யானையை நாம் கற்பனையில் தடவிப் பார்த்துக் கொண்டிருக்க மற்றவர்கள் நம்மைப் பார்த்து ‘கூரை ஏறிக் கோழி பிடிக்க மாட்டாதவன் வானம் ஏறி வைகுந்தம் போறானாம்’ என்று சொல்லிக் கொண்டு போகிறார்கள். அது நம் காதில் விழுந்தால்தானே.

தொழிற்துறை உற்பத்திகள் பெருகாத நில-உடைமை உற்பத்தி முறை இருந்தகாலத்தில் நாடுகளுக்கிடையிலான பண்டமாற்று வர்த்தகம் இருந்தது. முழுமையாக என்று சொல்லும் அளவிற்கு கடல் வழிப் பயணமே வணிகத்தின் வழியாக இருந்தது. வணிகர்கள் அரசர்க்கு அடுத்தபடியான உயர் சமுகமாக விளங்கினர் தமிழ் மன்னர்கள் காலத்தில் தமிழ் வணிகர்களும் கிழக்கிலும் மேற்கிலும் திரைகடலோடித் திரவியம் சேர்த்தனர். பின்னர் வாணிபம் அராபியர்களதும் ஐரேபாப்பியரதும் ஆதிக்கத்திற்குள்ளாகியது.

புதிய தொழிற்துறை உற்பத்தி முறைகள் (தொழிற்புரட்சி) ஏற்பட்டதன் பின்னர் தொழிற்துறைப் பெருக்கமும் அபரிமிதமான உற்பத்தியும் ஐரோப்பியர்களை உலகம் முழுவதும் புதிய சந்தைகளைத் தேடி ஓட வைத்தது. நிலவுடைமைப் பொருளாதார உற்பத்தி முறைகளிலிருந்து நாம் மாறுவதற்கு முன்னேயே எமது நாடுகள் ஆக்கிரமிக்கப்பட்டு நாடு பிடிப்போரின் (குடியேற்றவாத) சந்தைகளாக மாற்றப்பட்டன. புதிய தொழிற்துறை அபிவிருத்தி அறிமுகப்படுத்தப்படாமலே கிராமியப் பொருளாதாரக் கட்டமைப்பு சீரழிக்கப்பட்டது. அன்னியர் ஆக்கிரமிப்பின் போது அரசுகள் வீழ்ந்தாலும் அரசகுடும்பங்கள் விழவில்லை நேரடியாக அரசுப் பொறுப்பை வகித்த சிலர் எதிர்த்துப் போராடியிருக்கிறார்கள். அவர்கள் தேசிய சுதந்திரந்திற்கான முன்னோடி வீரர்களாகக் கௌரவிக்கப்படுகிறார்கள். எங்கள் பகுதியிலும் சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்றோர் இந்த வரிசையில் வருகிறார்கள். விரல் விட்டு எண்ணப்படும் இவர்களை விட்டால் மற்றவர்களும் இவர்களின் வாரிசுகளும் கூட மன்னர் பட்டங்களோடும் பவிசுகளோடும் மானியங்களும் பெற்றார்கள். சூழவிருந்தோர் சமஸ்தானாதிபதிகளாகவும் ஜமீன்களாகவும் மிட்டா மிராசுகளாகவும் தொடர்ந்து நிலவுடமையாளர்களாகவே இருந்து வந்தனர். வணிகர்களும் நாடுகள் பரந்து தமிழராய்க் கடைபோட்டவர்களும் தமிழருக்குக் கடை போட்டவர்களுமாய் ஆகியதோடு புதிய நாடுகளில் தோட்டம் துரவுகள் வாங்கி கூலிகளை அடிமை கொண்டவர்களுமாய் மாறினர் ‘பாவப்பட்ட தமிழர்களுக்காக’ இலங்கை மலேசியா சிங்கப்பூர் பர்மா என்று கோவில்களும் கட்டிவைத்தனர்.

கந்தசாமி செட்டியாரும் வேலாயுதபிள்ளையும் முத்தகுடி முருகனையும் வள்ளியையும் மூலஸ்தானத்தில் சிறைவைத்துக் காவல்காக்க கந்தனும் வேலனும் கடவையில் நின்றனர்.

மொத்தத்தில் ஆண்ட பரம்பரையினர் வாழும் தமிழராய்ப்போக ஆளப்பட்ட பரம்பரையினர் மேலும் தாழ்ந்த தமிழராகி கூலிகளாய் ஓடும் தமிழராயும் ஒட்டாண்டித்தமிழராயும் ஆகினர்.

எப்போதும் கூறப்பட்ட, கூறப்படும் ‘தாய்த் தமிழகத்திலிருந்து’ நாம் வாழ்ந்த இலங்கைத் தீவுக்கும் தமிழர்கள் கூலிகளாய் வந்தனர் நாங்கள் இந்தக் கூலித்தமிழரை ‘வடக்கத்தையார்’ என்றோம். ஆண்ட பரம்பரைத் தமிழன் அப்பால் போய்விட்டான். கூலித்தமிழன் என்றதும் தொப்பூழ் கொடி உறவே தூரமாகிவிட்டது பாருங்கள். வந்தவர் ‘வடக்கத்தையார்’ இருந்தவர் ‘இழிசாதி’ இவ்வாறு பொருள் இல்லாதவர் வரலாறும் இல்லாதவர்களாய்ப் போயினர். நிலஉடைமையாளர்களே வசதி-படைத்தவராய் இருந்ததால் அன்னியர் ஆட்சிக் காலத்தில் இருந்த கல்வி அதன் மூலமான வேலை வாய்ப்பு மற்றும் வணிகம் போன்றவையும் அவர்களது கைகளிலேயே தங்கிக் கொண்டது. எமது ஈழத்தமிழ் மன்னர்கள் ‘இராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜகம்பீர’ விலாசத்திற்குள் வராததால் அவர்களும் பரிவட்டங்களும் இங்கே நில உடைமையாளர்கள் என்பதற்குள்ளேயே கரைந்து போய் விட்டார்கள். அன்னியர் ஆட்சிக்காலங்களில் உடையார், முதலியார் மணியகாரன் இவ்வாறான பல வடிவங்களில் ஆட்சியாளர்களின் முகவர்களாக நிலஉடைமையாளர்கள் இருந்தாலும் நடைமுறையில் நேரடி ஆட்சியாளர் போன்றே செயற்பட்டனர். காலம் காலமாக அடிமைக் குடிமைகளாகக் கொள்ளப்பட்டு வந்தோர் மற்றும் நிலமற்ற வறிய உயர்சாதியினர் முன்னொரு காலத்தில் நிலஉடைமையாளர்களாக இருந்து பல்வேறு காரணங்களால் நிலமிழந்து போனோர் என்று பலதரப்பட்ட வறிய வகையினரும் பல்வேறு வடிவங்களில் துன்புறுத்தப்பட்டனர். போராட்டங்களும் தொடர்ந்தது. தொடர்கிறது. எனவே தமிழர் என்று பேச வரும்போதெல்லாம் இந்த இரண்டு தமிழர் வேறுபாடு தொடரவே செய்யும்.

பூர்வீகத் திராவிட நாகரிகக் கட்டமைப்புகளாகக் கருதப்படுவறிலும் இடைக்காலத் தமிழ் அரசர்களின் ஆட்சிக்காலக்கட்டமைப்புகளிலும் சாலைகள், நகர அமைப்புகள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டுமாணங்கள் என்பன சிறப்புற்றிருந்தன. அந்தந்தக் காலங்களில் இருந்ததாக அறியப்பட்ட உலக நகரிகங்களோடு ஒப்பிடுகையில் தமிழர் நீர்ப்பாசன முறைகள் குறிப்பிடத்தக்கதென பலராலும் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. ஆண்ட பரம்பரைக்கு உரிமை கோருபவர்கள் இத்தகைய பெருமைகள் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. குட்டி வைத்தான் குனிய வைத்தான் என்று சொல்லியே அவர்கள் கூட்டம் சேர்த்து விடுவார்கள்.

“ நமது வீட்டுப்பிள்ளை இயக்கத்திற்குப் போனபோது முகாம் வாசலில் போய் தலைவிரிகோலமாய் நின்றதையும், அடுத்த வீட்டுப்பிள்ளை போனபோது ‘தம்பி வந்து சாப்பிட்டுவிட்டுப் போ’ என்று அழைத்து விருந்து வைத்ததையும் ஒருமுறை நினைத்துப்பாருங்கள். ”

காமராஜர் அவர்கள் தமிழ் நாட்டில் முதலமைச்சராக இருந்த காலத்தில் நடந்ததாக ஒரு சம்பவத்தைச் சொல்வார்கள். ஒருமுறை பொறியாளர் குழு ஒன்று சாலை அமைப்புப் பற்றிமேலதிகமாகக் கற்றுக்கொள்ள மேற்கு நாடொன்றுக்குப் பயணமாக விருந்தது. காமராஜர் அவர்களை அழைத்து மதுரை நகரின் வரைபடம் ஒன்றைக் கொடுத்து “இதை நன்றாகக் கவனித்து தரை வழியாகவும் ஹெலிகொப்டர் வழியாகவும் நன்றாகச் சுற்றிப் பார்த்து விட்டு உங்கள் பயணத்தைத் தொடருங்கள் இதைவிடப் பெரிதாக நீங்கள் அங்கு கற்றுக்கொள்ள எதுவுமிருக்காது என்கிறேன்” என்றாராம்.

இத்தனைக்கும் காமராஜர் ‘கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி’ என்று பேசுகின்ற வகையறாவைச் சேர்ந்தவரில்லை. ஆனால் அப்படிப் பேசுகின்ற உடன்பிறப்புகளும், இரத்தத்தின் ரத்தங்களும், போர்வாள்களும், தளபதிகளும் என்றால் என்ன செய்திருப்பார்கள் என்று எண்ணிப்பாருங்கள். தாங்களும் பரிவாரங்கள் புடைசூழ அரசுப் பயணம் மேற்கொண்டுவிட்டு வந்து அமெரிக்காவைப் பார் ஐக்கிய இராச்சியத்தைப் பார் என்று கூட்டம் போட்டுப் பேசியிருப்பார்கள். மேற்கு நாட்டவர் என்பதனை மேலை நாட்டவர் என்று அழகு தமிழில் பேசுகிறோம் என்று சொல்லிக்கொண்டு சாதாரண மக்களை, மேற்கு நாட்டவர்களை மேலான நாட்டவர்கள் என்று எண்ணவும் ஏங்கவும் வைத்தவர்கள் இவர்கள்.

வாரிசுகள் நாம் மட்டும் என்ன குறைந்தா போய் விட்டோம்? எதற்கெடுத்தாலும் அமெரிக்காவிடம் சொல்கிறோம், ஐக்கிய இராச்சியத்திடம் சொல்கிறோம் ஐ.நா விடம் சொல்கிறோம். பான்-கீ-மூன் அவர்களுக்குக் கேட்காவிட்டால் பக்கத்திலேயே கூட்டம் போட்டுச் சொல்கிறோம் என்றுதானே இசைத்துக் கொண்டிருக்கிறோம்.

உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? இந்த பாடல்.

“பாரத்த சாரதி – உன்
பாதமே கதி……………”

நம்மிடம் நன்றாகப் பதிந்து போன ஒரு பழக்கம் இருக்கிறது அரிசியும் ஆகவேண்டும். யாராவது குத்தியும் தரவேண்டும். நமது வீட்டுப் பிள்ளை இயக்கத்திற்குப் போனபோது முகாம் வாசலில் போய் தலைவிரி கோலமாய் நின்றதையும் அடுத்த வீட்டுப் பிள்ளை போன போது ‘தம்பி வந்து சாப்பிட்டுவிட்டுப் போ’ என்று அழைத்து விருந்து வைத்ததையும் ஒரு முறை நினைத்துப் பாருங்கள். அரிசி நமக்கில்லாவிட்டாலும் கூட பழக்கம் நம்மை விடுவதில்லை.

ஒரு நாள் கடலில் பிடிபட்ட ஆமை ஒன்றைக் கரையில் போட்டு விட்டு வெட்டிப் பங்கு போடுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் வேலையிலிருக்க ஆமை மெதுவாக தலை கால்களை வெளியே நீட்டி கடலை நோக்கி ஊர்ந்தது. திரும்பவும் தூக்கி வந்து கரையில் போட்டார்கள். ஆமை உள்ளிளுத்தபடியே கிடந்தது. வெட்டுபவர் வரத் தாமதமாகிக் கொண்டிருந்தது. ஆமை ஊர்வதும் அவர்கள் தூக்கிக் கொண்டிருந்தது... ஊர்வதும் அவர்கள் பிடித்துப் போடுவதுமாக தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. முழு நேரமாக இதை ஒருவர் கவனித்துக் கொண்டிருந்தார். ஆமையைப் பிடித்தால் மல்லத்திப் போடவேண்டும். அப்போது தான் அது போட்ட இடத்தில் கிடக்கும் என்று அவருக்குத் தெரியும். அவரோ ஆமைக்கறி சாப்பிடுபவரல்ல. ஆமை பூனை போன்றவற்றைக் கொன்றால் பாவம் பல மடங்கு என்று பலரும் சொல்லக் கேட்டிருப்பதும் அடிக்கடி நினைவுக்கு வந்தது. நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க எரிச்சலாகவும் இருந்தது. சொல்லவும் முடியவில்லை சொல்லாமலிருக்கவும் முடியவில்லை. எழும்பிப் புறப்பட்டார் போகும் போது.

“ஆமை பிடிப்பார் மல்லாத்துவார்
நாமது சொன்னால் பாவம்”

தனக்குத்தானே சொல்வது போலச் சொல்லிக் கொண்டு போனார். எல்லோருக்கும் கேட்கும் படியாக.

*பல்லக்குப் போகும்.*

sanmuganathan.s@thaiveedu.com


■ ■ ■


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# CTR தகவல் பலகை

**MARKHAM & LAWRENCE**
2 Bed room walk out – Basement
Pramela – 416 481 4730

**MARKHAM & DENISION**
Basement – 1 room for rent
Mrs. Siva : 905 201 990/416 648 1987

**KENNEDY & LAWRENCE**
2 Bed room – Basement – தனிவழி
Near Kennedy subway
Amalan – 416 288 1862, 647 856 1862

**VICTORIA PARK & ELLESMERE**
Basement – 1 Bedroom for rent
Laundry/Parking
Daycare Services
Jeya : 416 439 5405, 647 456 9830

**MORNINGSIDE & MORNINGVIEW**
1 Bedroom Basement –for rent
From:Jan.1, 2011
Palani : 416 283 2738

**MCCOWAN/STEEL**
2 Bedroom Basement –for rent –Walkout
From : Jan.1, 2011
Selvakumar: 905 472 6866

**MORNINGSIDE& OLD FINCH**
1 Bedroom Basement –for rent - Walkout
Vasuky: 416 427 9727, 416 284 2650

**GOLF CLUB & LAWRENCE**
1 Bedroom Basement –for rent
Raja: 647 284 8494, 416 439 4489

**BRAMPTON**
1 Bedroom Walkout Basement –for rent
OR Up level room (for ladies)
647 404 4525

**MARKHAM & 14th AVENUE**
2 Bedroom Basement –for rent
Kannan : 647 308 6673/905 201 6673

**FINCH & BATHURST**
Condo – 1 Room for Rent (For ladies)
Mathy : 416 826 8811

**NEAR SQUARE ONE**
3500 House – 1 Room for rent
Mrs Thurairajah : 905 949 1075

**MORNINGSIDE & SHEPPARD**
1 room fo rent Near U of T
Ann: 416 724 7392

**BELLAMY & ELLESMERE**
2 Bedroom Basement –for rent
Das: 416 289 6914 Cell; 647 7640555

**STEEL & STANS**
Walkout Basement for Bachelors
separate entrance, carpet
Raji: 416 567 6264

**VICTORIA PARK & YORK MILLS**
2 Bedroom Basement –for rent
647 456 9830

**WESTON & FINCH**
1 Room up, 1 room basement
Raji: 647 700 4657, 416 741 8170

**MCCOWAN & STEEL**
2 Bedroom walkout Basement for rent
Shanmugarajah: 905 472 6866

**MORNINGSIDE & ELLESMERE**
3 Bedroom எல்லா வசதிகளுடன்
Loga : 416 804 3520

**PHARMACY/ELLESMERE**
3 Bedroom Basement எல்லா வசதிகளுடன்
Loga : 416 804 3520

**9TH LANE & 14TH AVE.**
2 Bed room basement -
From Feb.1, 2011
Theeban: 905554 0849, 416 219 6555

**MIDLAND & LAWRENCE**
1 Bedroom
Mrs.Nathan: 416 751 5584, 416 417 9027

**NEILSON & MCLEVAN**
1 Room for rent for ladies
Vanaja: 416 818 2019

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom Basement for rent
Bala: 416 292 5334

**MONTREAL PARLCE/WESTRAG**
1 Bedroom apartment for rent
$400.00
Bala: 514 735 6394

**சாவகச்சேரி**
சாவகச்சேரியில் 7 பரப்புக் காணி இந்துக் கல்லூரிக்கு அண்மையில் விற்பனைக்கு
ரூபன்: 416 624 1814

**A9 & 55**
பரந்தனுக்கு இடையில் கடை தேவை
தர்மா: 416 498 6734

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**வவுனியா காணி, வீடு விற்பனை**
வவுனியாவில் 7 பரப்புக் காணியில் 4 அறை வீடு விற்பனைக்கு
சிவம்: 416 574 7482, 905 497 9435

**கொடிகாமம்**
கொடிகாமத்தில் 3 அறை வீடு 23 பரப்புக் காணி விற்பனைக்கு
சசி: 416 754 8947

**A9 & 55**
பரந்தனுக்கு இடையில் கடை தேவை
தர்மா: 416 498 6734

**தையல் மெசின்**
விற்பனைக்கு
மதி: 416 551 2432

**மிருதங்கம் 24”**
விற்பனைக்கு
சுகுமார் : 416 939 7032

**முதியோர் வகுப்புகள்**
1160 Birchmount Rd.
Library/Computer/Yoga
9.00 AM. to 5.00 PM.
Chandran: 416 757 4209

**VAN SERVICE PICK UP/DROP OFF, FLYERS**
Kumar: 647 287 0731

**தையல் வேலைகள், தையல் வகுப்புக்கள்**
Siva: 416 281 5143

# துயர் பகிர்வோம்




## திரு. சுப்பையா பெருமையினார்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வன்னேரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பெருமையினார் அவர்கள் 18.12.2010 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பையா அன்னப்பிள்ளை இணையரின் புதல்வனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை குஞ்சாச்சிப்பிள்ளை இணையரின் மருமகனும், காலஞ்சென்ற காமாட்சி அவர்களின் கணவரும், காலஞ்சென்றவர்களான செங்கமலம், சோமசுந்தரம், கற்பகம், மற்றும் பார்பதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காலஞ் சென்றவர்களான அன்னப்பிள்ளை, கற்பகம், செங்கமலம் குமாரசாமி, இரகுநாதன், பராசக்தி, மற்றும் இராமலிங்கம், குணநாயகம் ஆகியோரின் மைத்துனரும், கனகரத்தினம், கோசலை, நேமிநாதன், பத்மநாதன், யோகேஸ்வரி, இராசேஸ்வரி, தட்சணாமூர்த்தி, சிவபாலன் ஆகியோரின் தந்தையும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பசுபதி, மகேஸ்வரி, றஞ்சிதம், நடராசா, கனகராஜா, உபநினவி, ஜமுனாதேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

| | | |
|---|---|---|
| கனகரட்ணம் | இலங்கை | 9424 324 2396 |
| நேமிநாதன் | கனடா | 1705 252 3237 |
| இராஜேஸ்வரி (சந்திரா) | கனடா | 1705 792 9294 |
| பத்மநாதன் (இராசா) | கனடா | 1705 730 5607 |
| தட்சணாமூர்த்தி, சிவபாலன் | கனடா | 1705 818 4487 |



## டாக்டர் வேலுப்பிள்ளை கணபதி

டாக்டர் வேலுப்பிள்ளை கணபதி அவர்கள் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி மெல்பேர்ணில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி பரமு (கிச்சியர்) வேலுப்பிள்ளை – பார்வதிப்பிள்ளை (நோனா) இணையரின் அன்பு மகனும், அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும், சாந்தா, ஆனந்தா ஆகியோரின் தந்தையாரும், டாக்டர் ராமகிருஷ்ணன் (மெல்பேர்ண்), காலஞ்சென்ற கனகரட்ணம் (மலேசியா), டாக்டர் நடராஜா (மலேசியா), திருமதி பரமேஸ்வரி கணேசபிள்ளை, திருமதி மகாலட்சுமி விஸ்வலிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு டிசம்பர் 23, 2010 அன்று மெல்பேர்ண்இல் நடைபெற்றது.

சக்திவேல் 416 706 3530

# துயர் பகிர்வோம்



## திருமதி சொர்ணம்மா நடராஜா

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணம்மா நடராஜா அவர்கள் டிசம்பர் 19, 2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை நடராஜா (ஓய்வு பெற்ற விவசாயத் திணைக்கள அதிகாரி, கேகாலை - நெலுந்தெனிய எஸ்டேட் பங்குதாரர்) அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை - கனகமணி அம்மாள் இணையரின் மருமகளும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் - ஆச்சிமுத்து இணையரின் மகளும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் (சிறாப்பர் - Mercantile Bank), இராசம்மா ஆகியோரின் சகோதரியும் சரஸ்வதியின் மைத்துனியும் சுரேந்திரன், உமாதேவி, இந்திராதேவி, உருத்திராதேவி, ஜெகனேந்திரன், இரவீந்திரன்(ஜீவா), கிருபாவதி, மலர்விழி(அஞ்சி), அகிலா(ரூபா) ஆகியோரின் தாயாரும் பத்மாவதியின் சிறிய தாயாரும் நேசேந்திரன், ஸ்ரீசெல்வஸ்கந்தராஜா, செல்வராஜா, மோகனராஜா, இன்பராணி, காயத்ரி, வைத்தியநாதன், சற்பவானந்தன், அசோகன் ஆகியோரின் மாமியாரும் பிரஷாந்தன், துஷ்யந்தி, துஷ்யந்தன், கவிதா,பிரேந்திரா, பிரதீப், சஞ்சீவ், சமேதா, ஜெனராஜ், ஜெனித்தா, ஜெனனி, ஜெனகன், ஆர்த்தி, அஞ்சனா,தனூஷன், கேசி, வைஷ்ணா, பிரேமி, பிரவீன், மதுஷா, அரவீன், தாமரை என்றழைக்கப்படும் மாதுமை ஆகியோரின் பேத்தியும் பிரியங்கா, பிரபாஜினி, நவீனன், முகிலன், மாதங்கி, அனிஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு டிசம்பர் 22, 2010 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| ரூபா | 416 832 2979 |
| ஜீவா | 416 505 1282 |
| அஞ்சி | 416 299 6979 |



## திரு. அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் பரந்தனில் வசித்து வந்தவருமான அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்கள் 13-12-2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணமணியின் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு, திருமதி ஞானப்பிரகாசம் இணையரின் மகனும் காலஞ்சென்றவர்களான திரு,திருமதி கந்தையா இணையரின் மருமகனும் இலங்கையில் வசிப்பவர்களான பரஞ்சோதி, சந்திரா, புஸ்பராணி (மணி), மகேந்திரம், சின்னக்கிளி, சின்னத்தம்பி, கலா, ஞானமலர், (மலர் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசையா (பூத்தம்பி றோபேட் - பரிஸ்) காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் றீரா (அதிபர் - பரந்தன்) தர்மராசா, ரஞ்சினிதேவி (சுகாதாரத் திணைக்களம்) சத்தியானந்தன், அமலதாஸ் (அமலன்-கனடா) ஆகியோரின் மாமனாரும்.

அகிலன் (கனடா), யசோதா, கண்ணன் (மாவீரர்) மேகலா, ரஜீந், டிலோஜிகா (சுகாதாரத் திணைக்களம்) சபிஞ்சன், ஜீனோ, ஜிந்து, தர்சினி, மற்றும் சுலக்ஸனா, தனுசியன், பவீனா, கோசிகன், மஜிதா, கயானி, சாருஜன், நித்தியா, நிசாற், றொசாந், ஜெய்சன் றஜிந் (கனடா) ஆகியோரின் பேரனும், கஜானன், சச்சிந்தன், சஞ்சயன், மேனுஜா ஆகியோரின் பூட்டனும். மேரிஜோசப்பின் கண்மணி, புலோமினா (கனடா), காலஞ்சென்றவர்களான மரியதாஸ், நடராசா ஆகியோரின் சகோதரனும். காலஞ்சென்ற நல்லையா மற்றும் பொன்னம்மா, தம்பிஐயா, (இளைப்பாறிய தபால் அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு டிசம்பர் 15, 2010 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

| | | | |
|---|---|---|---|
| மலர் | 416 | 736 | 9696 |
| அகிலன் | 647 | 348 | 0539 |
| பரஞ்சோதி | 01194 | 7724 | 63031 |
| சந்திரா | 01194 | 2422 | 25844 |
| மகேந்திரம் | 01194 | 7758 | 47430 |
| சின்னக்கிளி | 01194 | 2449 | 05568 |
| சின்னத்தம்பி | 01194 | 2422 | 23630 |
| கலா | 01194 | 7754 | 952077 |



## திருமதி. குமாரசாமி பொன்னம்மா

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி பொன்னம்மா அவர்கள் டிசம்பர் 02, 2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு மரகதமொழி இணையரின் மகளும், சுப்பிரமணியம் தங்கச்சிப்பிள்ளை இணையரின் மருமகளும், காலஞ்சென்ற M.S. குமாரசாமி(குமரன் ஸ்ரோர்ஸ்) அவர்களின் மனைவியும், மகேஸ்வரன் (ராசா-லண்டன் குமரன்ஸ் உரிமையாளர்), நெடுஞ்செழியன்(செழியன்), கிருஷ்ணமூர்த்தி(மூர்த்தி), காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் (பாலு), ராஜேஸ்வரி (இராசாத்தி), மதியழகன் (அழகன்), தனலட்சுமி (தனம்) ஆகியோரின் தாயாரும், வேணி, மலர், பாமினி, வரதராசா, ஜெயந்தி, சோதிராசா ஆகியோரின் மாமியும், குமாரசாமி, சிவகாமிப்பிள்ளை, புஷ்பம், வெற்றிவேல், மருதையனார் (மருது), காலஞ்சென்றவர்களான நாகேந்திரம், பார்வதி ஆகியோரின் சகோதரியும், கண்மணி, தனலட்சுமி, சத்தியபாமா, விக்னேஸ்வரி, சிவசம்பு, பூபதி, மேரிபுஷ்பம், காலஞ்சென்றவர்களான பராசக்தி, தையலம்மா, பொன்னம்மா, கதிரவேலு, தியாகராஜா, சபாபதிபிள்ளை, கனகசபை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு டிசம்பர் 12, 2010 அன்று பிரித்தானியாவில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| மகேஸ்வரன் | பிரித்தானியா | 447590047232 |
| செழியன் | பிரித்தானியா | 447988249710 |
| மூர்த்தி | பிரித்தானியா | 447970200137 |
| வரதராசா | பிரித்தானியா | 447828741886 |
| அழகன் | பிரித்தானியா | 447958360176 |
| குமாரசாமி | பிரித்தானியா | 447951927765 |
| வெற்றிவேல் | பிரித்தானியா | 442086831011 |
| மருது | பிரித்தானியா | 447940469323 |
| சூரியா | இலங்கை | 94213007677 |
| சோதிராசா | பிரித்தானியா | 442084249268 |



## திரு. பெருமையினார் கணேசலிங்கம்

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும், பிரான்சை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்துவந்தவருமான பெருமையினார் கணேசலிங்கம் அவர்கள் டிசம்பர் 16, 2010 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வேலாயுதம் பெருமையினார் (சந்தைக்கடை) சுந்தரம்மா இணையரின் புதல்வனும், காலஞ்சென்ற இரத்தினராஜா (அதிபர்-நெடுந்தீவு), காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை (சந்திரா ஸ்ரோர்ஸ்) இணையரின் மருமகனும், சந்திரவதனியின் கணவரும், இராஜேஸ்வரி (யாழ்ப்பாணம்), மகாலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், நவமலர் (லண்டன்), நிர்மலாதேவி (கொழும்பு), காலஞ்சென்ற புஸ்பராணி, கதிர்காமலிங்கம் (அப்பன் Maruthi Cash & Carry-லண்டன்) ஆகியோரின் சகோதரரும்,

கயிலாயபிள்ளை (ஆசிரியர்-யாழ்ப்பாணம்), நெடுஞ்செழியன் (லண்டன்), சந்திராதேவி (இந்தியா), சிவஞானம் (இந்தியா), வாணி (லண்டன்), காலஞ்சென்ற பாலச்சந்திரன், ஜெயகௌரி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற பாஸ்கரன், கமலாசினி (லண்டன்), கோசலாதேவி (கனடா), பாலராஜ் (கனடா), காலஞ்சென்ற சுந்தரேசன் ஆகியோரின் மைத்துனரும், சுவாமிநாதன், தவமணி, ரஞ்சி, ரஞ்சன், சாரதா ஆகியோரின் சகலனும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| திருமதி கணேசலிங்கம் | பிரித்தானியா | 442089522953 |
| கயிலாயபிள்ளை | இலங்கை | 94212221352 |
| லிங்கம் | பிரித்தானியா | 447852968116 |
| மலர் | பிரித்தானியா | 447405220820 |
| ராணி | இலங்கை | 94112362258 |
| அப்பன் | பிரித்தானியா | 447956808148 |
| சிவஞானம் | இந்தியா | 91344478398 |
| பாலராஜ் | கனடா | 19054576378 |


உடுப்பிட்டி இந்துக் கல்லூரியின் 100வது ஆண்டு விழாவுடன்
உடுப்பிட்டி பாடசாலைகளின் 17வது
பொங்கல் விழா
JAN 15, 2011
SAT - 5:30 PM
Armenion Youth Centre
50 Hall Crown Place
(401 & V.Park)
Toronto, ON.
MEDIA SPONSOR: ATN
இருப்பு கலைந்ததா? - ஆத்ம அஞ்சலி
நாட்டிய நாடகம்
நாட்டியாஞ்சலி
கனவுகள் மெய்ப்படவேண்டும்
திரை இசை நடனம்
இன்னிசை மழை
வாத்தியகானம்
அப்பா! அப்பப்பா!
நாடகம்
Sponsors:
INSURANCE SERVICES
Tel: 416 284-3003
790 Military Trail
Scarborough
Technos Automotive Inc.
Automotive Specialists


யோகா வகுப்புகள்
Yoga Classes
இன்சுடர் யோகா மையத்தினால்
உங்கள் வயது நோய்களுக்கு ஏற்ற விதத்தில்
● ஆசனம் ● மூச்சுப்பயிற்சி ● தியானம்
கற்பிக்கப்படுகின்றன.
எமது நிலையத்தில் யோகாசனம் பழகும் பெண்கள், ஆண்கள், சிறுவர்கள்
தங்கள் உடல், மனம் சம்பந்தமான நோய்களில்
இருந்து விடுபட்ட அனுபவ உண்மைகளை எமது இணையத்தளத்தில்
சென்று நீங்கள் பார்வையிடலாம்.
வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்
20, Slan Ave(Ellesmere&Scarborough Golf Club),
Scarborough-M1G 3B2, Ontario
திங்கள் காலை 9.00-10.30
செவ்வாய் காலை 9.00-10.45
புதன் காலை 9.00-10.30
வியாழன் காலை 9.00-10.45
சனி காலை 7.00-9.00
ஞாயிறு காலை 7.00-9.00
செவ்வாய் மாலை 7.00-8.30
6.00-7.00
5, Fairview Mall Dr(Don Mills &Sheppard),
North York-M2J 4S4, Ontario
ஞாயிறு காலை 10:15- 11:45
தொடர்புகளுக்கு
தலைமை ஆசிரியர்- இரமணன்
தொலைபேசி - 416 803 6571
www.Yogalight.ca


Energy Expo Present
குளிர்கால ஒன்றுகூடல்
WINTER BLAST 2011
Mukesh
Krish
Ranina
Priyadarshini
Music By
Rhythm Messengers
Next generation's Live Band
A Band like No... Other...
Tickets: $20, $30, $40 & VIP
$20 Tickets Limited Available
JAN 22 SAT
POWERADE CENTRE
7575 KENNEDY ROAD BRAMPTON
FREE PARKING
Ticket information : 416.564.9642
www.ticketmaster.ca | www.TAMIL CARNIVAL.com
DINNER DANCE
WHERE IS THE PARTY
Live Band
VIP & SPONSORS ONLY
St. Peter & Paul Banquet Hall
231 MILNER AVE.
SCARBOROUGH
Limited Seats Available
Call For Your
VIP TICKETS
JAN 23 SUN
Ticket information : 416.564.9642

# தொலைந்து போன சிற்றோடை

நிர்மல் வேர்மா
ஹிந்தி - ஆங்கிலம் வழி தமிழில் - என்.கே. மகாலிங்கம்





**இவர் ஹிந்தியில் ஏற்பட்ட நவீன கதை இயக்கத்தின் முன்னோடி. நாவலாசிரியர், செயற்பாட்டாளர், மொழிபெயர்ப்பாளர், கட்டுரையாளர். இந்திய ஜனாதிபதி விருது பெற்றவர்.**

அவள் கூரையிலிருந்து கீழே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கூரையில் இருக்கவில்லை. அவளுடைய வீடுதான் அங்கிருந்தது. ஒரு செங்கல் சுவர், ஒரு சணல் திரைச் சேலை, ஒரு தகர தகட்டால் வேயப்பட்ட வீட்டின் மேல் கூரை. அவற்றை விட, அவ் வீட்டின் ஒரு பகுதியாகவும் அதேவேளை அழைக்காத விருந்தாளியாகவும் ஒன்றிருந்தது. அதுவே அங்கிருந்த ஓர் அரச மரம். அந்த மரத்திற்கும் தனியே குடும்பம் ஒன்றிருந்தது. சுள்ளிகள், கிளைகள், அதில் தங்கிப் பறந்து செல்லும் பறவைகள். அவை அனைத்தையும் விட, இலைகள்...

இதுவே சூரிய வெளிச்சத்தில் அவை ஒளிரும் நேரம். அத்துடன், இவ்வேளையே இலைகளைக் கிளைகளிலிருந்து விழச் செய்யும் காற்று வீசும் நேரமும்.

ஒவ்வொரு காலையும் அவள் மரத்தை ஒரு முறை ஆட்டுவாள். அப்படிச் செய்தது போதும் என்று அவள் திருப்தியடைந்தவுடன் கீழே பார்க்கத் துவங்குவாள்.

கீழே தான் அவளின் அப்பா தன் சிறிய கடையை வைத்திருந்தார். அந்தக் கடை தேநீரும் பாணும் விற்கும் சிறிய கடை. அக் கடையின் முன்னால் முதுமையேறித் தளர்ந்த நாற்காலிகள் சிலவும், பழசாகிப் போன மேசை ஒன்றும் இருந்தன. மேசைக்கு மேல் ஒரு ஹிந்திப் பத்திரிகை. அது பறந்து போகாமல் கல்லொன்று பாரமாக வைக்கப்பட்டு இருந்தது. வாடிக்கையாளர் வழமையாக வந்து பத்திரிகையை மேற்போக்காக வாசிப்பார்கள், தங்கள் முதலாவது தேநீரையும் குடிப்பார்கள், அவர்களிடம் சைக்கிள் இருந்தால் அதன் மணியை அடித்துக் கொண்டு, சைக்கிளை வலித்துக் கொண்டு போய் விடுவார்கள். சைக்கிள் மணியை மரத்திலிருந்த பறவைகள் கேட்டால் அவை பறந்து சென்று விடும்.

பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்த நேரம் அது.

பரீட்சை வருவதற்கு முன் அந்த ஒழுங்கைக்கு வெள்ளம் வந்து அந்த ஒழுங்கை முழுவதையுமே அடித்துச் சென்று விடவேண்டுமென்று அவள் மிகவும் விரும்பினாள். அல்லது, புயல் வரவேண்டும். அல்லது பூமி அதிர்ச்சி ஏற்பட்டு ஆசிரியரையும் பள்ளிக்கூடத்தையும், தேநீர்க் கடையையும், மற்றவற்றையும் விழுங்கி விட்டு, தனிய அங்கே புளுதி மேகத்தை மட்டும் விட்டுச் செல்ல வேண்டும் என்று விரும்பினாள். அவை அனைத்துமே சாத்தியமான விசயங்கள் தாம்...

அனைத்துமே சாத்தியமான விசயங்கள் தாம். ஆனால் எதுவுமே அப்படி எக்காலத்துமே நடப்பதில்லை. காலம் அசைந்து கொண்டிருக்கிறது, நாட்கள் களைப்படைந்து விடுகின்றன. ஒழுங்கையும் வெளிச்சம் நிறைந்த ஏப்பிரல் மாத மென் காற்றில் தன் வேலையைப் பார்த்துக் கொண்டு செல்கிறது. விழும் இலைகள் அவளுடைய புத்தகங்களில், குறிப்புக்களில், பாடசாலைப் பையில், தலைமயிரில் விழுகின்றன, ஒவ்வொரு இலையும் எவ்வெவ்விடங்களில் விழப் போகின்றது என்று தெரிந்தே விழும் போல. அவளுடைய தாய் அவளுடைய தலைமுடியைச் சீவும்போது அவற்றை எடுத்து விடுவாள், மண்டை ஓட்டில் ஒட்டி இருக்கும் பேனை அல்லது ஈரை எடுப்பதைப் போல.

சரித்திரப் புத்தகத்தில் கண்ணூன்றி இருந்தாள். அலாவுதீன் சித்தூர் கோட்டைக்குள் புகுந்தான். ராணி பத்மினி கண்ணாடியில் தெரிந்தாள்! எல்லாம் பிரகாசமாக இருந்தன. மின்னுகின்ற மணல் ஈக்கள் கோட்டையின் திசையில் தெரிந்தன. முறுவலிக்கும் அவள் முகத்தைக் கண்ணாடி பிரதிபலித்தது...

நீ பள்ளிக்கூடம் போகவில்லையா? எவ்வளவு நேரந்தான் கண்ணாடிக்கு முன்னே நிற்பாய்?

அதைக் கேட்டபோது அவள் கண்ணாடியைத் துடைக்க ஆரம்பித்தாள். ராணி பத்மினி இப்பொழுது மரத்தின் பின்னால் நின்றாள். அவள் ஏணியில் நின்றாள். இரும்பு ஏணியில் விரைவாக இறங்கிக் கொண்டிருந்தாள். அந்த ஏணியை அப்பா கடைக்கும் வீட்டுக்கும் இடையில் பொருத்தியிருந்தார். ஏனெனில் அந்த வீட்டுக்கு ஏறுவதற்குத் தனிப்படிகள் ஏதும் இருக்கவில்லை.

காலையில் வரும் வாடிக்கையாளர்கள் கடையில் காணப்படும் வாங்கில் இருப்பதைப் பார்க்கலாம். அதில் பத்திரிகை விற்கும் பையன் இருப்பான். வேலையில் நடந்து களைத்துப் போன இரவுக் காவலாளியான சர்மாஜி இருப்பார். அவர் தேநீர் குடிப்பதற்காக அங்கு வருவதில்லை, பத்திரிகை படிப்பதற்காகவே வந்திருப்பார். அவள் எல்லோருடைய பார்வையையும் தவிர்த்து ஒழுங்கையில் வந்து கொண்டிருப்பாள். காலையில் அந்தத் தெரு வெறுமையாகவும் ஒருவரும் அற்றும் இருக்கும். வாடிக்கையாளரின் கண்கள் அவள் பின்புறத்தைப் பார்க்கும். அவள் ஒழுங்கையால் திரும்பும்போது, உடுப்புக்குள் புகுந்துவிட்ட பூச்சியை உதறுவதைப் போல அவற்றை உதறி விடுவாள்.

வளர்ந்து வரும் ஓர் உடல் பல கண்களை கவர்கின்றது...

விரைவாக நடப்பது அவளுக்குப் பழக்கமானதே. ஆனால் அப்படி விரைந்து செல்லும் ஆளல்ல, அவள். இரண்டு கால்கள் பாரமான ஒரு பொருளைத் தூக்கிக் கொண்டு போவது போன்ற ஒரு விசயம் அது. அது ஒரு உடல் கூட இல்லை. அது சல்வார், கமிஸ், ச்சுன்னி. அத்துடன், ஒரு பைக்குள் அடக்கப்பட்ட புத்தகங்கள். அவை அனைத்தும் திணித்து வைக்கப்பட்டு நடந்து செல்லும் ஓர் உலகம் அது. அந்த வீட்டுக் கூரை ஒரு நுனியிலும், பச்சைக் கேற் போட்ட பள்ளிக் கூட நுனியிலும் கட்டி இணைக்கப்பட்ட துடிக்கும் இதயமுள்ள உலகம் அது. திறந்து கிடந்த கேற் வெளியால் பள்ளிக்கூடத்தின் தரையைப் பார்க்கலாம். அங்கே பச்சை நிறங்களில் பெருந் திரளாகக் கொக்கரிக்கும் மாணவ, மாணவி களைக் காணலாம். அவர்களின் கூட்டுப் பிரார்த்தனையின் சத்தம் மேலெழுந்தும் கீழ் விழுந்து கொண்டும் இருக்கும்... உங்கள் விருப்புகள் எங்கள் நாவில் பிரார்த்தனைகளாக வெளி வருகின்றன, என்று பாடினார்கள்.

அவர்கள் பிரார்த்திக்கிறார்கள், தம் விருப்பை...

மூடிய கண்களின் பின்னே விருப்புப் புயல்கள் கூடுகின்றன...

வயல்களைக் கடந்தும்...

பள்ளிக்கூட மணி அமைதியைக் குலைக்கின்றது. அவர்கள் வகுப்புக்களை நோக்கி முட்டி இடித்துக் கொண்டுக் கலைகின்றார்கள். வகுப்புக் கதவுகள் அவர்களை ஒவ்வொருவராக விழுங்கிக் கொண்டிருக்கின்றன. வெற்றுத் திடல் மேலும் வெற்றாகியது போலக் காணப்பட்டது, மூங்கில் மரத் தடிகளில் கட்டப் பட்ட பாட்மின்ரன் வலை இடத்தைத் தவிர. அந்த வலைகள் சர், சர், சர் என்று மென் காற்று ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன.

வகுப்பறை ஜன்னலிலிருந்து அவளுக்கும் அச்சத்தம் கேட்டது. ஒரு மணியொலி மற்றதைத் துரத்திக் கொண்டிருந்தது. வரலாறு, கணிதம், புவியியல் வகுப்புக்கள் என்று முடிய முடிய. வரைதல் வகுப்பு முறை வரையும், அது தொடர்ந்தது. அப்போதுதான் அனைத்துமே ஒரு முடிவுக்கு வருவதுபோல இருக்கும். அவளுடைய குறிப்புப் புத்தகம் வகுப்பு முழுவதற்கும் காட்டப்படும்...

பாருங்கள், இவள் வரைந்திருப்பதை!

சர்மாஜி பென்சிலின் நுனியிலிருந்து தோன்றுவார் - என்றும் போல் கறுப்பாக, ஊளைச் சதை குலுங்க, காகத்தின் கண்களைப் போன்று - எச்சரிக்கை உணர்வுடனும் தந்தி ரத்துடனும். உலர்வுச் சலவைத் தொழில் செய்யும் ஹரிலால் எப்பொழுதும் கண்ணாடி முன் நின்று தலையிழுத்துக் கொண்டும் தன்னுடைய உருவப் பிரதிபலிப்பை கண்ணாடியில் பார்த்து கண்ணடித்துக் கொண்டும் நிற்பார். அத்துடன், வங்காளி பாபு. அவரை எல்லாரும் ரைப் மாஸ்ரர் என்றே அழைப்பார்கள். ஏனெனில் அவர்தான் அந்த ஒழுங்கையில் ரெமிங்கரனில் ஆங்கிலத்தில் ரைப் பண்ணும் ஒரேயொருவர். ஆனால் அவருங்கூட தன்னுருவத்தை சுவரில் பார்த்து ரஸித்துக் கொண்டு இருப்பதையே விரும்புவார்.

'இது முழுமையானதொரு உருவப்படக் கலைக்காட்சிக்கூடம்! இந்த முகங்களை எங்கே பார்த்தாய்?' ஆசிரியர் கேட்டார்.

அதை எப்படி அவள் விளங்கப் படுத்துவாள்? தேநீர்க் கடைக்கு மேலே உள்ள காற்று வரும் கூரை அரண்மனையில் -அவள் வாழ் வதாகவும், அங்கிருந்து எவரையும் குறிப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் சொல்ல முடியுமா? அவர்களின் துருவிப் பார்க்கும் கண்கள் அவளுடைய இடத்தில் நிலைப்பதாகச் சொல்லி விளங்க வைக்க முடியுமா? குசினிக்குள் இருக்கும் சட்டி பானைகள், ஆல மரத்தில் வெட்கமில்லாமல் தொங்கும் - அவளே அந்த மரத்தில் நிர்வாணமாகத் தொங்குவதுபோல - உடுப்புக்கள் பற்றி... சொல்ல முடியுமா?

இல்லை, ரீச்சர், அந்த முகங்கள் என்னைக் கண்டு கொள்ளும்! என்றாள்.

மழை பெய்யும் பொழுது அல்லது புயல் வீசும் பொழுது? ஆசிரியர் முகம், அப்படிக் கேள்வி கேட்பதாகத் தோன்றும்.

அப்படியில்லாவிட்டால் எது?

அவள் சிரிக்க ஆரம்பித்து விடுவாள். அது ஆசிரியரின் அமைதியை எப்பொழுதுமே குலைத்து விடும். சாம்பரைக் கிளப்பி விடும். மற்றவர்களின் முகத்தை வரையும்போது உனது அயையாளத்தை நீ இழந்து விடுவாயா? நீ சாம்பராக மாறி விடுவாயா?

புயல் வரும்போது என்ன நடக்கின்றது?

புயல் அல்ல. சூறாவளியையே நான் பார்த்திருக்கிறேன். அது என்னுடைய உடுப்புக்களையே ஆல மரத்திலிருந்து பறித்தெடுத்துச் சென்று வீதிகளின் வழியாக தறிகெட்ட முட்டாள்கள் போல ஓடியிருக்கின்றது. அதிர்ஷ்ட வசமாகப் புயலுடன் இருளும் வந்தது. அதனால்

தொடர்தல் 88ம் பக்கம்


உயர்ந்தெழும்பும் அந்தத் தூசிப்படலத்திலூடாக அதை எவரும் பார்க்கவில்லை. எவரும் உங்களுடையவர்கள் அல்ல. எவரும் உங்களுடன் இருப்பவர்கள் அல்ல. பாருங்கள் ரீச்சர், நாங்கள் சொல்லும் கைக்குட்டையோ, துவாயோ, சட்டையோ, மேலங்கியோ... அவை ஒவ்வொன்றுக்கும் உயிர் இருக்கின்றது. மிருகக் காட்சிச்சாலை மிருகங்கள் போல எங்களுடன் அவை கட்டப்பட்டுள்ளன. தையல்கடையில் எப்பொழுதாவது நீங்கள் உடுப்புக்களைப் பார்த்திருக்கிறீர்களா? அங்கே உடுப்புக்கள் இறைச்சிக் கடையில் மிருகங்களின் உடல்கள் தொங்குவது போல தொங்கிக் கொண்டிருக்கும்... நீங்கள் சிரிக்கிறீர்கள்... நான் பொய் சொல்லவில்லை. அப்படியில்லாவிட்டால் பார்த்தவுடனேயே அவை எங்கள் காட்சியிலிருந்து காணாமல் போய்விடும் அல்லவா?

‘ஆனால் அந்த இரவுதான் அதன் எல்லை. எங்களால் எதையுமே பார்க்க முடியவில்லை. எங்கள் உடுப்புக்கள் எங்கே போய் எங்கே மறைந்து போயின என்று எங்களுக்குத் தெரியாது. புயல் சிறிது தணிந்தபோது, நான் என்னுடைய தம்பியையும் கூட்டிக் கொண்டு என் உடுப்புக்களைத் தேடிப் போனேன். பெரிய உடுப்புக்களை முதலில் கண்டு கண்டோம். அம்மாவின் சேலை, என்னுடைய சல்வார் கமீஸ் போன்றவை. அவை பாரமானவை என்றபடியால் வெகு தூரம் அடித்துச் செல்லப்படவில்லை. ஆனால் நாங்கள் உடுக்கும் உள்ளாடைகள் - அவள் இவ்விடத்தில் குலுங்கிக் குலங்கிச் சிரித்தாள், ரீச்சரும் சிறிதாக வெட்கத்துடன் கன்னஞ் சிவந்தார் - அவற்றை எங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. நாங்கள் திரும்பி வரும்போது, என்னுடைய தம்பி என்னுடைய தோளைப்பற்றி இழுத்து, பஷீர் மியனின் கடையைக் காட்டினான். அக்கடை சைக்கிள் ரயர் ஓட்டை ஒட்டுமிடம். பஷீர் மியன் அந்தக் கடையை ரயர் ஒட்டும் கடை என்ற குறிப்பிட்டுக் காட்டுவதற்காக ஒரு பழைய ரயரை அதில் தொங்கப் போட்டிருந்தான். அந்த ரயரில் என்னுடைய மார்புக் கச்சை வவ்வால் ஒன்றைப் போலத் தொங்கிக் கொண்டிருந்தது. அதைத் தம்பியின் தோள்களில் ஏறிக் கஷ்ரப்பட்டு எடுத்தேன்.

அடுத்த நாள் பஷீர் மியன் எங்கள் வீட்டுக்கு வந்து திருடன் ஒருவன் தன் கடைக்கு முந்தின இரவு வந்துள்ளான் என்று சொன்னார். அந்தப் பழைய ரயரை மட்டுமே அந்தக் கள்வன் கண்டிருக்கிறான், அதற்குக் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும், என்றார்.

அப்படி அடிக்கடி நடப்பதில்லை. வழக்கமாக, பொழுது நல்லபடியாகத்தான் முடியும். அப்படியான வேளைகளில் ஒழுங்கையில் உஷ்ணம் அதிகரிக்கும். அப்படியான நேரங்களில் ஏன் மக்கள் அத்தனை நேரத்துடன் வீட்டுக்கு திரும்ப வேண்டும் என்று எண்ணுகிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்ரமாக இருக்கிறது. தங்கள் பயணம் முடிவுக்கு வந்து விடும் என்று அப்படிப் பயப்படுகிறார்களா? அதற்குப் பிறகு ஒன்றுமில்லை. அதன் பிறகு ஒன்றுமில்லை என்றால் ஏன் பயப்பட வேண்டும்?

அந்தப் பயம்தான் அவர்களை போதிராஜியிடம் வரவழைக்கின்றதா? அவர் தன்னுடைய சிம்மாசனத்தில் குந்திக் கொண்டே இருக்கிறார். அவருடைய மர மேசையில் கையால் தயாரித்த ஒரு ஏடு... ஒரு திரையினால் பாதி மறைக்கப்பட்டு இருக்கிறார். அவள் அந்தக் கடைப் பக்கத்தால் போகும் போதெல்லாம்



*அம்மா குசினியில் இருந்தாள். தம்பி ஒழுங்கையில் நின்றான். அப்பா அவர் கடையில் இருந்தார்... அவள் மட்டும் தனியாக பரீட்சைப் பூதத்துடன் வீட்டில் இருந்தாள். அந்தப் பூதத்திடமிருந்து தப்ப ஏதாவது வழியிருக்கிறதா?...*

அவருடன் ஒருவர் எவ்வேளையும் நின்று கொண்டிருப்பார். துன்பம், ஏக்கம், கவலை ஆகியவற்றுடன் அவர்கள் அவரிடம் வருவார்கள். போதிராஜி அவர்கள் தன் ஏட்டிலுள்ள விண் மீன்கள் குழுமத்திலிருந்தும் கிரகங்களின் சேர்க்கையிலிருந்தும் அந்த ஏட்டில் பார்த்துச் சொல்வதில் தான் அவர்களுக்கான தீர்ப்பு தங்கியிருப்பதாக அவர்கள் எண்ணியுள்ளார்கள் போலும். பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பும்போது அந்த இடத்தில் சிறிது நேரம் நின்று, அவரிடம் போய் அவர் தனக்குரிய தீர்ப்பை அறிவிக்கும்போது நிற்க விரும்பினாள், அவள். பரீட்சையின் பெறுபேற்றையும் இப்படியாக அறிவிப்பார்களா-சித்தி அல்லது தோல்வி என்று. போதிராஜைத் தனியாக ஒருநாள் சந்தித்து, தன்னுடைய கையைப் பார்ப்பதற்கு விரும்பினாள். காற்றுப் புகும் அரண்மனையிலிருந்து தான் வருவதாகவும் அதிலிருந்து அவருடைய கடையின் பெயர்ப் பலகையைப் - பேராசிரியர் போதிராஜ் சாஸ்திரி, தத்துவஞானி, நண்பர், வழிகாட்டி என்று போட்டிருக்கும் பெயர்ப்பலகையைப் பார்க்க முடியும் என்று சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். எனக்கு என்ன நடக்கும் என்பதைச் சொல்லுங்கள்?

போதிராஜி தன் தலையைத் தூக்கிப் பார்த்தார். அவருடைய களைத்துப் போன கண்கள் அவர் போட்டிருந்த கண்ணாடியூடாகக் கூர்ந்து வந்து அவளின்மேல் நின்றன.

என்ன மகளே? ஏன் அங்கு நிற்கிறாய்? உன்னுடைய வழியைத் தவற விட்டு விட்டாயா?

அவள் போய்க் கொண்டிருந்தாள்... உண்மையாக அவரால் மனங்களை வாசிக்க முடியும் போலும்! அவர் எப்படி வழி தவறி அவரிடம் வந்து விட்டேன் என்று அவருக்குத் தெரிந்தது... அப்பொழுதுதான் அவளுக்கு ‘தத்துவஞானி’ என்ற சொல்லின் பொருள் தெரிந்தது. அதாவது. தொலைந்து போன இரண்டு இடங்களுக்கிடையே கடையொன்றை வைப்பது எப்படி என்பதைத் தெரிந்தவர். அத்துடன், வழியைத் தவறவிட்ட எவரும் வழியைக் கண்டு பிடிப்பதற்கு அவரிடம் செல்லலாம்.

அப்படியானால் நட்சத்திரங்கள்? அவரின் ஏட்டில் எல்லா விண்மீன்களும் அடைத்து வைத்துப் பட்டிருக்கின்றனவா? அவள் தன் கூரை வீட்டிலிருந்து பார்க்கக் கூடிய எல்லா விண்மீன்களும் அதில் இருக்கின்றனவா? மாலை வீட்டுக்குத் திரும்பும்போது அரச மரத்தின் இலைகள் ஊடாகத் தெரியும் மின் மினிப் பூச்சிகள் போல் மினுங்கும் அவற்றை அவள் பார்ப்பாளே!

அம்மா குசினியில் இருந்தாள். தம்பி ஒழுங்கையில் நின்றான். அப்பா அவர் கடையில் இருந்தார்... அவள் மட்டும் தனியாக பரீட்சைப் பூதத்துடன் வீட்டில் இருந்தாள். அந்தப் பூதத்திடமிருந்து தப்ப ஏதாவது வழியிருக்கிறதா? அவள் தன் பாயை வெளியே எடுத்தாள். தன் லாந்தர் விளக்கை எடுத்து சுவர் விளிம்பில் வைத்தாள். தன் குறிப்புக் கொப்பியை எடுத்து எழுத ஆரம்பித்தாள். தன்னுடைய கையின் நிழலைக் கண்டு, எழுதுவதை நிறுத்தினாள். நிழலும் நின்றது. அவள் சிந்திக்க வெளிக்கிட்டாள், கையும் சிந்திப்பது போல இருந்தது. நிழலைக் கொஞ்ச நேரம் அவதானித்தாள். அது வேறெவருடைய கையைப் போல இருந்தது. போதிராஜி அவளுடைய கையை வாசித்திருந்தால் அவர் சொல்லியிருப்பார், ‘பெண்ணே இந்தக் கை ஒரு அரசியின் கை. உன் உள்ளங்கையைக் காட்டு’. இது என்னுடைய கை, போதிராஜி. நான் காற்றுள்ள அரண்மனையில் வாழ்கின்றேன். உங்களுடைய கடைக்கு முன்னாலுள்ள அரண்மனையில். அதுதான் இந்த ஒழுங்கையிலுள்ள மிக உயர்ந்த இடம். ஒவ்வொரு நாளும் பத்மினி அரசி என்னைப் பார்க்க வருவாள்... அவளுடைய முகத்தை இலைகளின் பின்னாலுள்ள என்னுடைய கண்ணாடியில் பார்ப்பேன். அவள் தன்னுடைய புத்தகத்தை விட்டு சுவரின் விளிம்புக்குச் சென்றாள்...

போதிராஜி எப்போவோ போய் விட்டார்... தெரு விளக்கின் ஒளியில் பெயர்ப்பலகை - அதில் தான் அவருடைய பெயரும் அத்துடன் தத்துவஞானி, வழிகாட்டி, நண்பன் என்றும் கொட்டை எழுத்தில் எழுதப் பெற்றிருந்தது- பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவள் அந்தப் பெயர்ப் பலகையைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பின் எதையோ கண்டு திடுக்கிட்டுப் போனாள். யாரோ ஒருவன் கடையடியில் எதையோ குசுகுசுத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். நெருக்கமாகப் பார்ப்பதற்காகக் குனிந்தபோது இரண்டு பேர் ஒரு மோட்டார் சைக்கிளில் இருந்தார்கள்... அவர்கள் இருவரும் அத்தனை வயது வந்தவர்களாகத் தெரியவில்லை, கல்லூரி மாணவர்களாக இருக்கலாம்... திடீர்த் தூண்டுதலுக்கு உள்ளாகுபவர்களாக, உலகாயுத அறிவற்றவர்களாக, சிலவேளை சிறிது பயப் படுபவர்களாக, ஆனால் சந்தோசமிக்கவர்களான மாணவர்களாக இருக்கலாம். கடைக்கு அருகாமையிலுள்ள சுவர்ப் பக்கத்தை அவர்கள் கண்டது சொர்க்கத்தைக் கண்டது போல இருக்கலாம். அவர்கள் இங்கு வந்தது, தங்களைக் கூர்ந்து கவனிக்கும் கண்களிலிருந்து மறைவாக இருப்பதற்காக இருக்கலாம். ஆனால் இங்கும் அவர்களை யாரோ கண் காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது.

அவளுக்கு அவர்களை நன்றாகப் பார்க்க முடியவில்லை. ஒரு பையன் நின்று கொண் டிருந்தான். மற்றவன் மோட்டார் சைக்கிளில் இருந்தான். இருந்து கொண்டிருந்தவன் எங்கோ கால்களுக்குப் பின்னாலிருந்து பை ஒன்றுக்குள்ளிருந்து எதையோ எடுத்தான். மற்றப் பையனின் கையில் கிளாஸ் ஒன்றையும் கண்டாள்... அவர்கள் அங்கே என்ன செய்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டாள். கடைக்காரர்கள் தங்கள் கடைகளைப் பூட்டிய பின், வீட்டில் தொட முடியாததை விரைவாக இங்கே விழுங்கி விட்டு, இருட்டில் மறைந்து போவார்கள். ஆனால் இந்தப் பையன்கள்? இவர்கள் கடைக்காரர்களின் போலித்தனத்தால் தொடப்படாதவர்கள் போலக் காணப் பட்டார்கள். அவர்கள் தங்களுக்குள் குசுகுசுத்துக் கொண்டார்கள், சிரித்தார்கள், சிறு சத்தம் கேட்டவுடனே தங்கள் கிளாசுகளை மறைத்தார்கள். அவர்கள் இந்த இடத்தைச் சேர்ந்தவர்களாகத் தெரியவில்லை. இந்த உலகத்தைச் சேர்ந்தவர்களாகவும் தெரிய வில்லை... அவர்கள் வித்தியாசமாகத் தெரிவதற்குக் காரணம் என்ன? அவர்களின் சிரிப்பா? அவர்களின் குசுகுசுப் பேச்சா? அவர்களின் சந்தோசமா? குடிப்பதால் ஏற்படும் சந்தோசமா?

சந்தோசத்திற்கான
வழி இதுவா?
இந்த இருட்டுச் சந்தா?



mahalingam.k@thaiveedu.com

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO)

**துயர் துடைக்க விரும்புவோருக்கான பங்களிக்கும் முறைகள்:**

1. தபால் மூல முகவரி: (காசோலையாக) "IMHO Canada", 5637 Finch Avenue East, Unit #7, Scarborough, ON M1B 2T9
2. இணைய த்தள மூலம் : www.imhocanada.org → Paypal
3. வங்கிக் கிரமக்கழிவு: இணையத்தளத்திலிருந்து அதற்கான படிவத்தை தரவிறக்கி நிரப்பி அனுப்பலாம் (Monthly contribution)

தொடர்புகளுக்கு

**416 321 9555**
**contact@imhocanada.org**

# 2010 - கவனிக்க வைத்தவை

கந்தசாமி கங்காதரன்



கடந்துபோன 2010, வந்துபோன தடமெதையுமே வைக்காமற் சென்றுவிடவில்லை. சில தடங்கள் மிக இனியமையாக இருக்கும். வேறு சில கொடூரமானவையாக இருக்கும். இயற்கையின் சீற்றம், மனிதனின் கவனக் குறைவு என்று பல்வேறு காரணங்களாலும் சில பேரழிவுகளும் பல்வேறு நாடுகளிலும் நிகழும் பொருளாதார, அரசியல் ஏற்ற இறக்கங்களும் மாற்றங்களும் சில வேளைகளில் சில மீட்பு நடவடிக்கைகளும்கூட உலகம் முழுவதையுமே திரும்பிப் பார்க்கவைத்திருக்கின்றன.

அமெரிக்காவில் Associated Press நிறுவனம் ஆண்டுதோறும் செய்தி நிறுவனங்கள், ஊடகங்களின் செய்தித் தொகுப்பாளர்கள், இயக்குநர்களிடையே கருத்துக் கணிப்பொன்றை நடத்துகின்றது. 2010இன் அதிக கவனம் பெற்ற செய்திகளில் தொகுப்பை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. குறித்த ஒரு நிறுவனம் குறிந்த ஒரு துறைசார் பணியாளர்களிடம் நடத்திய இந்தக் கணிப்பில் உலக அளவில் உண்மையிலேயே அதிகக்கவனம் பெற்ற செய்திகளே இருக்கும் என்று பொருள் கொள்ள முடியாது.

இனி அந்தப் 10 செய்திகளையும் பார்ப்போம்.

## 10ம் இடத்தில் ஆப்கானிஸ்தான்:

அமெரிக்கப் படையினரை ஈராக்கிலிருந்து மீளப்பெற்று ஆப்கானிஸ்தானுக்கு மேலதிக படையினரை அனுப்பும் அதிபர் பராக் ஒபாமா அவர்களின் முடிவு ஆதரவு, எதிர்ப்பு எனப் பரவலாகக் செய்திகளில் அடிபட்டது.

1979இலிருந்து 1989 வரைவில் ஆப்கானிஸ்தானில் குடிகொண்டிருந்து 15,000 படையினரை இழந்தது சோவியத் ஒன்றியம். ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட ஆப்கானிய உயிர்கள் இந்தக் காலகட்டத்தில் சோவியத், ஆப்கானியப் படையினராலும் கிளர்ச்சியாளர்களாலும் காவு கொள்ளப்பட்டிருந்தன. அப்போது கிளர்ச்சியாளர்களுக்கு மூன்றாம் நான்காம் தரப்புக்களுடாக ஆயுதம் வழங்கிய அமெரிக்கா இப்போது வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கின்றது. (ஓர் உபரித் தகவல் உங்களுக்கு கந்தஹார் விமானப்படைத்தளத்துக்குப் போகும் வாய்ப்புக்கிடைத்தால் அங்குள்ள ஆப்கானிஸ்தானின் ஒரேயொரு Tim Hortonsஇல் ஒரு டபிள் டபிள் வாங்கி அடிக்கலாம்)

## 9ம் இடத்தில் விக்கிலீக்ஸ்:

2010 இன் பிற்பகுதியில் அதிக பரபரப்பாகப் பேசப்பட்ட விடயம் இது. ஆனாலும் 9வது இடத்தைத்தான் கொடுத்திருக்கின்றனர். அதிகம் அடிவாங்குவது அமெரிக்கா என்பதாலோ தெரியவில்லை. 2011 இலும் முதல் 10இற்குள் இது இருக்குமென எதிர்பார்க்கலாம்.

## எட்டாம் இடத்தில் ஈராக்:

தேர்தலுக்கு முன்னர் சொல்லிக் கொண்டிருந்தது போல, அதிபர் ஒபாமா ஈராக்கில் படை நடவடிக்கைகளை முடித்துக் கொள்வதாக அறிவித்தமை பலத்த வரவேற்பைப் பெற்றது. முந்தைய அதிபர் ஜோர்ஷ் புஷ் கொண்டுபோய் மாட்டிவிட்டதை மீட்டெடுத்திருக்கின்றார் ஒபாமா. இந்த ஆண்டு டிசம்பருடன் அமெரிக்கப் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறுகின்றன. பில்லியன் கணக்கில் செலவு செய்து 4,700க்கும் அதிகமான அமெரிக்கப் படையினரின் உயிர்கள் எதற்காக இழக்கப் பட்டன என்பதை யாரேனும் விளக்கினால் நல்லது.

## ஏழாவது இடம் சிலி சுரங்கத் தொழிலாளர் மீட்பு:

ஓகஸ்ட் 5ம் நாள் சுரங்கத்துக்குள் அகப்பட்டுக்கொண்ட 33 தொழிலாளர்கள் 69 நாட்களுக்குப் பின் மீட்கப்பட்ட சம்பவத்தை முழு உலகமே வியப்போடு பார்த்து மகிழ்ந்தது. எல்லோரும் மீட்கப்படும் வரையில் சிலி நாட்டு மக்கள் காட்டிய ஆதரவு, துயரத்தில், தவிக்கும் எல்லோருக்குமே முன்னுதாரணம்.



## ஆறாவது இடம் Tea Party Movement :

இது 2009இல் அமெரிக்காவில் தோற்றம் பெற்ற வலதுசாரி அமைப்பு. குறைந்த வரி, திறந்த சந்தை போன்றவற்றை வலியுறுத்தும் இவ்வமைப்பு ஒபாமா அறிமுகப்படுத்திய அமெரிக்க சுகாதாரக் காப்பீட்டுச் சட்டம், நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பில்லியன் டொலர் கணக்கிலான நிதியுதவித் திட்டம் போன்றவற்றோடு ஒபாமா அரசையும் கடுமையாக எதிர்த்து வருகின்றது. கடந்த ஆண்டில் நடைபெற்ற அமெரிக்க இடைக்காலத் தேர்தல்களில் குடியரசுக்கட்சி வேட்பாளர்களுக்குத் தம் ஆதரவை வெளிப்படுத்தியது. இவர்களின் ஆதரவு பெற்ற பலரும் வெற்றிபெற்றனர்.

1773இல் பிரித்தானியப் பேரசுக்கு எதிராக அமெரிக்கக் குடியேறிகளால் நடத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டமான Boston Tea Party யிலிருந்து தன் பெயரை உருவாக்கிக் கொண்டது Tea Party Movement. வரிகளைத் தாம் செலுத்தினாலும் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லாதிருந்த குடியேறிகள் பொஸ்டன் துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பல்களில் ஏறி அங்கிருந்த தேயிலைப் பெட்டிகளைத் தூக்கிக் கடலில் எறிந்தனர். அந்நிகழ்வே Boston Tea Party. பிரித்தானிய அரசுக்கு இது ஒரு பேரடியாக அமைந்திருந்தது.

## ஐந்தாம் இடத்தில் ஹெய்ட்டி நிலநடுக்கம்:

ஜனவரி 12ம் நாள் ஏற்பட்ட இந்நிலநடுக்கம் 230,000க்கும் மேற்பட்டோரைப் பலியெடுத்தது. மேற்கு அரைக் கோளத்தின் மிக வறிய நாட்டின் மில்லியன் கணக்கிலானோர் வீடு வாசல்களையும் இழந்திருந்தனர். (இது குறிந்த விவரமான கட்டுரை தாய்வீடு பெப்ரவரி 2010 இதழில் வெளியாகியிருந்தது.)

## நான்காம் இடத்தில் அமெரிக்கப் பொருளாதாரம்:

பொருளாதார மந்தநிலை அல்லது தேக்கநிலைக்குப் (Recession) பின் மெது மெதுவாக மீண்டெழுகின்றது அமெரிக்கப் பொருளாதாரம். ஆனாலும் வேலை வாய்ப்பின்மை 9% ஆக இருக்கின்றது. கேள்வி குறைந்ததால் வீட்டு விலைகளும் சரிந்துள்ளன. ஆண்டிறுதியில் நுகர்வோரின் செலவு அதிகரித்துள்ளமை வணிக நிறுவனங்களுக்கு வயிற்றில் பாலை வார்த்துள்ளது.

## மூன்றாம் இடத்தில் அமெரிக்க இடைக்காலத் தேர்தல்:

பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மையையும் சில மாநில அரசுகளில் பெரும்பான்மையையும் மேலும் சில மாநில ஆளுநர்களையும். குடியரசுக் கட்சிக்கு வழங்கிய இத்தேர்தல் பராக் ஒபாமா அரசுக்குக் கொஞ்சம் பின்னடைவு தான்.

## இரண்டாமிடத்தில் அதிகம் சர்க்கைக்குள்ளான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம்:

சுகாதாரக் காப்பீட்டினால் பாதுகாக்கப்படும் அமெரிக்கர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவு அதிகரித்திருக்கும் இந்தத் திட்டத்தை, தேர்தல் வாக்குறுதியில் சொன்னது போல் நிறைவேற்ற அதிபர் பராக் ஒபாமா பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. இதற்கெதிராக குடியரசுக் கட்சியினரும் தீவிரமாகக் களமிறங்கியிருந்தனர். ஆனாலும் தடைகளையும் தாண்டி ஒரு ட்ரில்லியன் டொலர் திட்டம் சட்டமாகியது.

## முதலாம் இடம் யாருக்கு அல்லது எதற்கு?

கடந்த ஆண்டு உலகைக் கலக்கிய கசிவுகள் (Leaks) இரண்டு. ஒன்று விக்கிலீக்ஸ். மற்றையது மெக்சிக்கோ வளைகுடாவில் ஏற்பட்ட மசகு எண்ணெய்க் கசிவு. கசிவு என்றாலும் அது பெருவெள்ளமாக 4.9 மில்லியன் பீப்பா எண்ணெயைக் கடலில் கலந்தது. எண்ணெய் அகழ்வு மேடையொன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தினால் 11 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் எண்ணெய்க் கசிவு அதிகரிக்க அதிகரிக்க அரசின் கோபத்தையும் அதிகரித்தது. மாதக் கணக்கில் ஊடகங்களின் பேசுபொருளாக இருந்தது இந்த விடயம். ஒருவாறு பிரச்சினைக்குரிய கிணற்றுக்கு மூடி போட்ட BP நிறுவனத்தினால் ஊடகங்களின் வாய்க்குப் மூடி போட முடியவில்லை. முன்விளைவு, பின்விளைவைப் பற்றியெல்லாம் தொடர்ந்தும் ஆராய்ந்தன ஊடகங்கள்.

21 பில்லியன் டொலர் நட்டஈடு BP நிறுவனத்திடம் அமெரிக்க அரசினால் கோரப்பட்டுள்ளது. ஒரு பீப்பாவுக்கு $4300. எவ்வளவு கிடைக்குமென்பது பெரும்பாலும் 2011இல் இன்னொரு செய்தியாகும்.

கனடாவிலும் CBC நிறுவனம் ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளது. அதிக கவனம் பெற்ற செய்திகள் பட்டியலில் வன்கூவர் பனிக்கால ஒலிம்பிக்கில் கனடிய வீரர்கள் 14 தங்கப் பதக்கங்களை வென்றமை, G20 மாநாட்டின் போது ரொறன்ரோ காவல் துறையினரின் நடவடிக்கைகள், ரஸல் வில்லியம் கைதும் தண்டனையும், சமூக வலைத் தளங்களின் பங்கு, பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு ஆகியனவே Associated Press பட்டியலில் இல்லாத விடயங்கள்.

2010இன் கவனம் பெற்ற செய்திகளைப் பார்த்தோம். இவ்விரு பட்டியல்களிலும் சிலி நாட்டுத் சுரங்கத் தொழிலாளர்களின் மீட்பு நடவடிக்கையும் கனடியர்களின் ஒலிம்பிக் வெற்றியுமே முழு மகிழ்ச்சியை ஊட்டக்கூடியவை. ஏனையவை எல்லாமே இழப்பு, துன்பம், துயரம், கசப்பு, அழிவு என்று மனதுக்கு சங்கடத்தையும் வேதனையையுமே தருவனவாக உள்ளன.

மலரும் இந்த 2011இன் கவனம் பெறும் செய்திகளின் பட்டியலில் மகிழ்வான நிறைவான ஆக்கபூர்வமானவை நிறைய இடம் பெறட்டும்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■




சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A

Broker

Ottawa: 613.276.SALE (7253)

Toronto: 416.659.SELL (7355)

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER

கடந்த மாதத்தில்...

# நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...



டிசம்பர் 02, 2010 - **Cheetahs Soccer Club** இன் **Remember** நிகழ்வில்



டிசம்பர் 04, 2010 - கிரீடம் விருந்தினர் மண்டபத்தில் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் நடத்திய நத்தார் ஒளி விழாவில்.



டிசம்பர் 04, 2010 - **church of Epiphany** இல் இராமநாதபுரம் மக்கள் ஒன்றியம் நடத்திய நத்தார் விழாவில்.



டிசம்பர் 02, 2010 - முதியோர் இல்ல விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்ற முதுதமிழர் மன்றத்தின் நத்தார் விழாவில்.



டிசம்பர் 12, 2010 - **Malvern Library Hall** இல் நடைபெற்ற வி. ரி. இளங்கோவனின் இரு நூல்களின் அறிமுக விழாவில்



டிசம்பர் 11, 2010 - **Scarborough Civic Centre** இல் நடைபெற்ற மகாஜனா கல்லூரியின் சர்வதேச நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவில்.

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.




On Dec 18th, Michael's No Frills made the latest generous donation of $5,100 to make the total upto $40,000 in 7 years. In photo, Owner Michael Lo Presti with various Dept. Managers, staff and TSH Foundation President & CEO, Michael Mazza.




Scotiabank raised $90,000 and donated to TSH Foundation.
left to right: Michael Mueller, Chair, TSH Board of Directors; Joseph D'Cruz, member, TSH Foundation Board of Directors; Nigel Samaroo, Scotiabank Branch Manager, Cedarbrae Mall; Christine Williams, Scotiabank District Vice-President, Toronto East and TSH Foundation Board member; Michael Mazza, TSH Foundation President & CEO; Arthur Heinmaa, member, TSH Foundation Board of Directors; and Ralph Anstey, TSH VP Finance & Support Services.



டிசம்பர் 04, 2010 - **Jasmine Banquet Hall** இல் நடைபெற்ற **HomeLife / Today Realty Inc.** இன் வருடாந்த ஒன்று கூடல் மற்றும் பரிசளிப்பு நிகழ்வில்



டிசம்பர் 06, 2010 - **New Century Palace Restaurant** இல் நடைபெற்ற **HomeLife / GTA Realty Inc.** இன் வருடாந்த ஒன்று கூடல் மற்றும் பரிசளிப்பு நிகழ்வில்



டிசம்பர் 02, 2010 - சங்கமம் விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்ற 'மனோன் மியூசிக் அக்கடமி'யின் நான்காவது ஆண்டு விழாவில்.



டிசம்பர் 10, 2010 - **Princess Banquet Hall** இல் தமிழ் முதியோர் மன்றம் நடத்திய நத்தார் ஒளி விழாவில்.

# கழிந்துபோன ஆண்டும் எஞ்சிய நாட்குறிப்பின் பக்கங்களும்

நாட்குறிப்பு எழுதுவது ஒரு கலை என எப்போதோ எவரோ சொன்ன ஒரு வாசகம், கடந்த ஆண்டு (2010) எனது நாட்குறிப்பினைப் பார்த்தபோது ஓர் அதிர்வோடு என் ஞாபகத்தில் பட்டு எதிரொலிக்க நின்றது. முந்நூற்று அறுபத்தைந்து நாட்களைக்கொண்ட நாட்குறிப்பில் பதினெட்டுப் பக்கங்களைத் தவிர மீதி எழுதப்படவேயில்லை.

இந்த பதினெட்டுப் பக்க நிகழ்வுகள் மட்டும் தானா கடந்துபோன ஆண்டில் நான் குறிப்பிடக்கூடியதாக என் வாழ்வில் சம்பவித்தவை?

நினைத்துப் பார்க்கையில் ஒவ்வோராண்டும் கூட நாட்குறிப்பின் எஞ்சும் பக்கங்கள் என்னை அதிரவைத்தே சென்றிருப்பது ஞாபகமானது. பின் எதற்காகத்தான் ஒவ்வோராண்டின் முடிவிலும் ஏதோ தவறவிட்டுவிடக்கூடாத கைங்கரியம்போல் நாட்குறிப்பினை தேடி, ஓடி வாங்கி எழுத ஆரம்பிக்கின்றேன்?

எப்போதும்போல் இந்த ஆண்டும் பக்கங்கள் எஞ்சுவதுபற்றிய விஷயத்தை விட்டுவிட முடியாது. இதுபற்றி தீர்க்கமாக நான் யோசித்தே ஆகவேண்டும்.

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் மார்க் அரேலியஸ் எழுத ஆரம்பித்ததிலிருந்து இந்த நாட்குறிப்புப் பழக்கம் தொடங்கியதாகக் கருதப்படுகிறது. கிரேக்கச் சொல்லின் மூலத்திலிருந்து இந்த டயறி (நாட்குறிப்பு) என்ற ஆங்கிலப் பதம் தோன்றியிருப்பினும், இதை எழுதும் பழக்கம் மத்திய ஆசியாவிலும், கிழக்கு ஆசியாவிலும் தான் தொடர்ச்சியிலிருந்து இன்றைய வடிவமும், கருத்துருவமும் பெறக் காரணமாகியிருந்திருக்கிறது.

மிகப்பெரும் பூகோள, வரலாற்று நிகழ்வுகள் இவ்வகை நாட்குறிப்புகளில் பதிந்து வைக்கப் பட்டு, பின்னர் நூல் வடிவம் பெற்றபோது மிகப்பெரும் கவனங்களை ஈர்த்து அதுவரை நிலவியிருந்த நிச்சயங்களை அடியோடு மாற்றியிருக்கின்றன.

அறியப்படும் முதல் நாட்குறிப்பாளரான சாமுவேல் பெப்பிஸ் (1633-1703)இன் தினவரைவுகள் அதுவரை கேம்பிரிட்ஜ் மெக்டலின் கல்லூரியில் பாதுகாப்பாயிருந்து 1825இல் தான் வெளியுலகை அடைந்தன. ஆங்கில வரலாற்றைக் கட்டமைப்புச் செய்வதில் இது முக்கியமான பங்கை ஆற்றியிருப்பதாகக் கூறுகிறார்கள் ஆங்கிலேய வரலாற்று அறிஞர்கள்.

இதுபோலவே சாமுவெல் பெப்பிஸுக்கு சமகாலத்தவரான ஜோன் ஈவ்லின் எழுதி வைத்த நாட்குறிப்பும், அக்காலத்தில் நிகழ்ந்த ஆங்கிலேய அரசின் மீளமைவினதும் (பதினேழாம் நூற்றாண்டின் ஆறாம் தசாப்தம்), மாபெரும் பிளேக் நோய்ப் பரவலினதும், லண்டனின் மிகப்பெரிய தீவிபத்தினதும் கண் கண்ட சாட்சியங்களின் பதிவுடனான ஆவணமாகக் கருதப்படுகிறது.

எல்லாவற்றையும்விட, தன்வரலாறு என்ற பகுதி இலக்கிய வகையினமாக அங்கீகாரம் பெற்றிருப்பதற்கான காரணம்தான் என்னைப் பொறுத்தவரை முக்கியமான விஷயமாகத் தென்படுகிறது.

## தேவகாந்தன் பக்கம் 03

ஒரு நாட்குறிப்பென்பது வரலாற்று, சமூக நிகழ்வுகளினது மட்டுமேயில்லை, மாறாக தனிமனித இச்சைகளதும் ஏமாற்றங்களதும் தோல்விகளதும் பதிவாகவும் அது இருக்க முடியும்.

தனிமனிதனின் அந்தரங்கமாய் இருக்கும் ஒரு நாட்குறிப்பு, அச்சு எந்திரம் ஏறவேண்டிய பிரதானம் அடைவது இரண்டு காரணங்களிலெனத் தெரிகிறது. ஒன்று, அது சகமனிதர்களின் வாழ்வனுபவங்களுக்கு நேர்நேர் எதிரானதாக இருந்திருக்கவேண்டும். அல்லது அது அம்மனிதர்களின் வாழ்வனுபவங்களுக்கு மிகமிக நெருக்கமானதான உணர்வுகள், நிகழ்வுகளைக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

இந்த இரண்டில் எந்த ஒன்றாலுமே ஒரு படைப்பாக்கம் ஒரு இலக்கியப் பிரதியாக வடிவமெடுக்க முடியும். சுயவரலாற்றுப் பிரதிகள் இலக்கிய வகையினமாக ஆன சூட்சுமம் இங்கிருந்துதான் விடுபாடடையத் தொடங்கியது. எனது எஞ்சும் நாட்குறிப்பின் பக்கங்களுக்கான விடையையும் நான் இங்கிருந்து சென்றே அடைதல் முடியும்.

வரலாறா இலக்கியமா என்று கணிக்கமுடியாத அளவுக்கு ஒரு பிரதி அதன் செய்நேர்த்தியால் மகத்தான கவனிப்பைப் பெறமுடியும் என்பதற்கு Vladimir Nobokov எழுதிய Speak, Memory என்ற நூல் உடனடியாக ஞாபகத்துக்கு வரும் ஓர் உதாரணம். Lolitaவுக்கும், The Defenceக்குமுள்ள அதேயளவு முக்கியத்துவம் அவரது Speak, Memoryக்கும் இலக்கிய உலகில் உண்டு. ஆயினும் அது பேசியது தன்னை மட்டுமில்லை, தன் கால வரலாற்றினையும் பற்றித்தான்.

ஒரு நாட்குறிப்பு ஒருவரின் அந்தரங்கத்தின் பதிவாக இருக்கிறதெனில், எனது நாட்குறிப்புகளில் எஞ்சிய பக்கங்கள் என் அந்தரங்கமின்மையின் ஓரம்சமாகக் கருதப்பட முடியுமோ? நாட்குறிப்புகளாக விரியும் பன்னூற்றுக்கணக்கான இணைய தளங்களும், வலைப்பூக்களும் உலகின் பல்வேறு மொழிகளில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. முதன்முதலில் உலக வலைத்தளத்தில் ஏறியது ‘Open Diary’ என்ற Claudio Pinhanez இன் நாட்குறிப்பாகும்.

இன்றைக்கு நாட்குறிப்பானது தன் வடிவங்களைப்போலவே தனது உபயோக நோக்கங்களையும் மாற்றிக்கொண்டிருக்கிறது. தன்னை, தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒருவகையான காட்சிப்படுத்தும் மனநிலையின் தனிமனிதம் சார்ந்த விடுதலை, இந்த நாட்குறிப்பின் நோக்க விரிவுகளைத் தாராளமாகப் பயன்படுத்துவதாக தயங்காமல் சொல்லமுடியும்.

இந்தவகையில் பார்க்கும்போது, என் நாட்குறிப்புகளின் எஞ்சிய பக்கங்கள், என் ஏக்கங்களும் தோல்விகளும் அபிலாசைகளும் எழுத்தினால் நிரப்பப்படாதவையென்றே கருதத் தோன்றுகிறது. அவை எனக்கு மட்டுமானவை. என் மீள்பார்வைக்கு மட்டுமேயானவை. ஒரு குறிப்பிட்ட ஆண்டின் எந்த என் நாட்குறிப்பை எடுத்தாலும், அதன் எழுதப்படாப் பக்கங்களில் எனது ஏமாற்றங்களின் தோல்விகளின் அவமானங்களின் அவலங்களின் இழைக்கப்பட்ட துரோகங்களின் பதிவுகளை என்னால் வாசிக்க முடிகிறது.

இவையே ஒருபோது சிறுகதையாக, கட்டுரையாக, நாவலாக வடிவமாகிவிடுகிறது என்பது இப்போது நினைத்துப் பார்க்கையில் புரிகிறது. என் நாட்குறிப்பின் எழுதப்படாப் பக்கங்களை நிரப்பவேண்டிய வரிகளையே படைப்பாக எழுதிக்கொண்டு இருக்கிறேனெனில், அவற்றுக்காக நான் ஏன்தான் கவலைப்பட வேண்டும்? அதுமட்டுமில்லை, இனிமேலும் என் புதிய புதிய நாட்குறிப்புகளின் பல பக்கங்களும் எழுதப்படாமலேதான் இருக்கப் போவதாய்ப் படுகிறது. அதற்காக இனிமேல் நான்
சந்தோஷப்படலாம்,
இல்லையா?



devakanthan@thaiveedu.com

TORONTO BUSINESS COLLEGE



COMPUTERIZED ACCOUNTING
EARN YOUR DIPLOMA IN 6 MONTHS
- CURRENTLY RECEIVING EI ✔
- RECEIVED EI WITHIN LAST FIVE YEARS ✔
- RECEIVED MATERNITY BENEFITS WITHIN LAST 5 YEARS ✔

You May Be Eligible For Financial Assistance
Our Experienced Counselor Will Help You To Apply For Funding
- 100% INSTRUCTOR LED
- HIGH EMPLOYMENT RATE
- SMALL CLASS SIZE
- INDIVIDUAL ATTENTION
- TTC ACCESSIBLE / FREE PARKING

CERTIFICATE COURSES
QUICKBOOKS, SIMPLY ACCOUNTING, ACCPAC
WORD, EXCEL, POWER POINT, ACCESS
WINDOWS, KEYBOARDING, DATA ENTRY

416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.t-businesscollege.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

AZ வாகன சாரதிகள் தேவை

கனடா மற்றும் அமெரிக்காவில் (USA, Canada)
கனரக வாகனங்கள் செலுத்துவதற்கு அனுபவமுள்ள
(Dry Van and Reefer experience ) AZ வாகன சாரதிகள் தேவை.

Tel: 416 749 5392
Fax: 416 749 5087

## நாடகத்தின் வேரும் வளர்ச்சியும்:

# கிரேக்க இன்பியல் நாடகம்

தொடர் - 10

- ஞானம் லேம்பட் -

கிரேக்க கடவுளான டையோனியஸ் வழிபாட்டுக் காலங்களில் இன்பியல் நாடகங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. எனினும் கிரேக்க இன்பியல் நாடகங்கள் பற்றிய செய்தி மிகக் குறைவாகவே கிடைக்கக் கூடியதாயுள்ளது. கி.மு. 463ஆம் ஆண்டளவில் இந்நாடகங்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கி.மு. 487ம் ஆண்டில் இன்பியல் நாடகங்கள் டையோனிசஸ் விழாவில் நடாத்துவதற்கு அதிகாரபூர்வமான அனுமதியும் அதற்குப் பரிசும் அளிக்கப்பட்டதாக ஆய்வாளர் A.E.ஹெய்க் கூறிகிறார். அதாவது கிரேக்க இன்பியல் நாடக மேதையான அரிஸ்ரோபன்ஸ் நாடகங்கள் எழுதுவதற்கு அரை நூற்றாண்டுகட்கு முன்னரே இன்பியல் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன.

இன்பியல் நாடகங்களுக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கு காரணமாக, கி.மு. 5ஆம் நூற்றண்டில் டையோனிசஸ், லீனிய விழாக்களில் மூன்று நாடகங்களே மேடையேற்றப்பட்ட போதும் கி.மு. 4ஆம் நூற்றாண்டில் நாடகத்தொகை ஐந்தாக உயர்ந்தது. கோரஸின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டமை, நாடகச் செலவீனம் குறைந்தமை, நாடகத் தயாரிப்பு நேரக்குறைவு ஆகியன இன்பியல் நாடக வளர்ச்சிக்கு உதவின. மேற்கூறிய விழாக்களில் ஒரு கவிஞர் இரு இன்பியல் நாடகங்கள் தயாரிக்கவும் அனுமதி அளிக்கப் பட்டமையும் இன்பியல் நாடகங்கள் வளர உதவிற்று.

டையோனிசஸ் விழாவில் பாடப்பட்ட கீழ்த்தரமான கேளிக்கைப் பாடலான "கோமுஸ்" இல் இருந்தே கொமெடி (Comedy) எனப்படும் இன்பியல் நாடகங்கள் தோன்றியதாகவும், அங்கு நடாத்தப்பட்ட காமக்களியாட்டங்களின் விளைவுகள் இன்பியல் நாடகங்களுக்கு உந்து சக்தியாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. கீழ்த்தரமான உணர்வுகளும், அநாகரிகமும் இன்பியல் நாடகங்களின் பிரதான பகுதிகளாக இருந்தன. நடிகர்கள் எப்பொழுதும் இலிங்கவுருவை அணிந்திருந்தனர். நடிகர்களுடைய உடைகள் தலை, கை, கால் என்பவை தவிர்ந்த ஏனைய பகுதிகளை மறைக்கக்கூடியதாய் அடுக்கடுக்காக நெய்யப் பட்டு மிகவும் ஊதிப் பெருத்ததாகக் காட்சியளிக்கும். உள்ளாடைகள் இழுபடக்கூடிய துணியாற் செய்யபட்டு மனிதத்தோலின் நிறத்தை ஒத்ததாக வர்ணம் பூசப்பட்டிருக்கும்.

முகமூடிகள் அன்றைய கிரேக்க நாடகங்களுக்கு ஒரு முக்கிய ஒப்பனைப் பொருளாக இருந்துள்ளது. பழைய இன்பியல் நாடகங்களின் முகமூடிகள் உண்மையான ஒரு பாத்திரத்திற்கு அவரை ஒத்த முகமூடிகளும் (சொக்ரடீஸ், அரிஸ்ரோட்டல் என்பன போன்ற பாத்திரங்களுக்கு அவர்களைப் போன்ற முகமூடிகள்) கற்பனைப் பாத்திரங்களுக்கு செயற்கை உணர்வுகளைத் தரும், மிகவும் பெரிதாகக்கப்பட்ட கண் இமைகளும் உருச் சிதைந்த வாயும் கொண்ட முகமூடிகளும் அணியப்பட்டன. ஆனால் புதிய இன்பியல் நாடகங்களுக்குரிய முகமூடிகள் அதனை அணியும் நடிகர்களை இலகுவில் அடையாளங் காணக்கூடியனவாக இருந்துள்ளன.

வயது முதிர்ந்த பாத்திரங்களுக்கு வெள்ளை அல்லது நரை தலை மயிரும், சிவப்பு நிற தலைமயிர் போக்கிரிகளுக்கும் அடிமைகளுக்கும், அடர்ந்த சுருள்முடி பலசாலிகளுக்கும், பறட்டைத்தலை படைவீரர்களுக்கும் ஒப்பனை செய்யப்பட்டது.

முகமூடிகளுக்கும் பாத்திரங்களுக்கேற்ற வர்ணங்கள் கொடுக்கப்பட்டன. கறுப்பு அல்லது மரநிறம் போர்வீரர்கள், கிராமத்து இளைஞர்களுக்கும், வெள்ளைநிறம் பெண்தன்மையுடையோருக்கும், வெளுறிய நிறம் காதலர்களுக்கு அல்லது நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டது.

முகமூடிகளின் மூக்குகளிலிருந்தும் பாத்திரங்களில் குணாம்சங்களை அறியக் கூடிய விதமாக மூக்குகளை அமைத்தனர். பொதுவான கதாபாத்திரங்களின் மூக்குகள் நீண்டிருக்கும். முதியோர், சூழ்ச்சிக்காரர் ஆகியோரின் மூக்குகள் தூண்டில் போல் வளைந்தும், கிராமத்து இளைஞரின் மூக்குகள் சப்பையாயும் காணப்படும்.

புதிய இன்பியல் நாடகப் பாத்திரங்களின் ஆடைகள், பாத்திரங்களுக்குரிய இயல்பான தாயிருந்தாலும் நிறவித்தியாசங்கள் காணப்பட்டன. முதியோருக்கும், அடிமைகளுக்கும் வெள்ளை நிறமும், இளைஞர்களுக்கு ஊதா நிறமும், கறுப்பு அல்லது நரைநிறம் அண்டி வாழ்வோருக்கும், பச்சை அல்லது நீலம் இளம் பெண்களுக்கும், விலைமாதர் ஊதா நிறத் தலைப்பட்டியும் கொடுக்கப்பட்டன.

இத்தகைய குணாம்சங்கள் கொண்ட இன்பியல் நாடகங்களை பலர் எழுதித் தயாரித்த போதும், இன்பியல் நாடகத் தந்தை எனப் போற்றப்படுபவர் அரிஸ்ரோபன்ஸ் என்பாரே.

### அரிஸ்ரோபன்ஸ் (Aristophanes)


கிரேக்க பழைய இன்பியல் நாடகங்கள் ஆசிரியர்களான கிறேன்ரியஸ், கிறேரஸ், மெக்னஸ், சியோனைடஸ், எக்பென்ரைடஸ் ஆகியோரின் நாடகங்கள் எல்லாம் அழிந்து போக, அரிஸ்ரோபன்ஸ் எழுதியவற்றில் இருபத்தி நான்கு இல்லாமற் போக பதினான்கு மட்டுமே எஞ்சியுள்ளது.

எனினும் பழைய இன்பியல் நாடக ஆசிரியர்களில் இவரே மிகச் சிறந்தவர் எனவும், இவரே இன்பியல் நாடகங்களின் தந்தை எனவும் வர்ணிக்கப்படுகிறார். இவருடைய நாடகங்களில் காமம் இருந்தது. ஆனால் காதல் இருக்கவில்லை. இவர் தனது ஒவ்வொரு நாடகங்களிலும் ஏதென்ஸ் நாட்டின் அழிந்து போகும் சமூக, அரசியல், ஒழுக்கச் செயற்பாடுகளை எடுத்துக் காட்டினார். இதன் மூலகாரணம் நாடு விவாசயச் செய்கையிலிருந்து மாறி புதிதாக நுழையும் கைத்தொழிலும், வியாபாரமும், அத்தோடு புதிதாக உருவாகும் கலையும், தத்துவவாதிகளின் சிந்தனைகளுமே என்றார். அழிந்துவரும் உயர் குடியரசினரும், அவர்கள் சார்ந்த சமயம், ஒழுக்கம், குறிக்கோள்கள், சமூக அமைப்புகள் என்பனவும் விவசாயம் சார்ந்தே இருந்தன என மிகத் தீவிரமாக நம்பினார். நவீனத்தை எதிர்த்ததோடு, பழமை வாதத்தை மாற்றும் நவீன சிந்தனையாளர்களையும் நிராகரித்தார். தத்துவவாதிகள், விஞ்ஞானிகள், மெய்யியலாளர்கள் என்போர் நாட்டையும், குடியாட்சி முறையையும், கலையையும் அழிக்க வந்த போலிகள் என வர்ணித்தார். இன்றைய ஐக்கிய நாடுகள் சபை போன்று அன்று கிரேக்க நாட்டிலிருந்த 'டேலியன் லீக்' (The Delian League) என்ற சபை தேவையற்ற ஒன்றெனவும், அவ்வுறுப்பினர்களை கிரேக்க தேசியவாதம் பேசும் சாத்தான்கள் என்றும் கூறினார்.

இவர் வாழ்ந்த காலம் உலகெங்கும் கொந்தளிப்பு நிறைந்து காணப்பட்டது. போரும் ஆக்கிரமிப்பும், மூர்க்கத்தனமான மாற்றங்களும், பழைமை வாத மறுப்பும் மலிந்து கிடந்தன. போர் வீரர்களாலும், வியாபாரிகளாலும் புதிய சமயங்கள் கீழை நாடுகளிலிருந்து கிரேக்க நாட்டில் புகுத்தப்பட்டன. இதன் காரணமாய் மக்களின் வாழ்க்கை முறையும், ஒழுக்க முறைகளும் பெரும் மாற்றத்திற்குள்ளாயின. இதன் காரணமாக மாற்றங்களை மிக மூர்க்கத்தனமாக எதிர்த்தார். இதன் பின்னணியிலேயே விவசாயிகளே ஒரு திடமான சமூகத்தை அமைத்து, உறுதியான ஒரு உலகை அமைப்பர் என்ற கருத்துக் கொண்ட 'பறவைகள்' (The Birds) என்ற நாடகத்தை எழுதினார்.

உலகின் சிக்கல்களைத் தீர்த்து, சமாதானத்தைக் கொண்டுவருவது, கம்பளித் துணியின் சிக்குகளைப் படிப்படியாக அவிழ்ப்பது போலாகும் என்று லைசிஸ்ருட்டா (Lysistrata) என்ற நாடகத்தில் கூறுகிறார்.

ஆனால் கிரேக்க மக்கள் இவர் வழி தொடர மறுத்து விட்டனர். வேண்டி நின்ற சமூக மாற்றத்தில் தோல்வி அடைந்தாலும், இலக்கிய விமர்சனத்தில் காத்திரமான பங்களிப்பைச் செய்து சிரேக்க இலக்கிய விமர்சனத்தின் தந்தை என மகுடம் சூட்டப்பட்டார். கவிதைகள் ஒழுக்கத்தைக் கற்பிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்த இவர், துன்பியல் நாடக ஆசிரியர்களை வெகுவாகச் சாடினார். எல்லாக் கலையும் கலாச்சாரமும் கல்வியூட்டுதலையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென நம்பினார்.



இவரது பிறந்த திகதி பலவாறு தரப்பட்டாலும் கி.மு. 445 இற்கும் 375இற்கும் இடைப்பட்ட காலமெனவும், இவரது தந்தை பிலிப்பஸ் என்றும் கூறப்படுகிறது. இவருடைய வாழ்நாளின் பெரும்பகுதி, இவரது நாடு போரிடுதலேயே ஈடுபட்டிருந்தமையினால், போரின் கொடுமைகளையும், அதன் அழிவுகளையும் இவரது நாடகங்கள் பெரிதும் விரித்துக் காட்டின.

ஏதென்ஸ் நகரின் வீழச்சிக்குக் காலாயிருந்த கிளியோன் (Cleon) மீது மிக வெறுப்புற்றிருந்த இவர் தனது நாடகங்களில் கிளியோன் மீது தனது கோபக்கணைகளை வீசியிருந்தார். ஜனநாயகம் புத்திசாதுரியமுள்ளவர்களால் மட்டுமே பேணப்படும், உணர்வாதிகளும், சுயநலவாதிகளும் ஜனநாயகத்தை வளம்படுத்த மாட்டார்கள் எனக் கூறினார்.

கிரேக்க துன்பியல் நாடகங்கள் சோபக்கிளிஸ், ஈறிப்டிஸ் ஆகியோரின் மரணத்தின் பின் தொடர்ந்து நடைபெறாதுவிட்டாலும், இன்பியல் நாடகங்கள் அரிஸ்ரோபன்ஸின் மரணத்தின் பின்பும் தொடர்ந்து நடைபெற்றது. இவருடைய நாடகங்கள் அன்றியஸ் டிவஸ் (Andreas Divus) என்பவரால் லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு ஐரோப்பா எங்கும் வினியோகிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வேறு பலமொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டது.

அரிஸ்ரோபன்ஸ் தொடக்க காலங்களில் நாடகத்தின் இடையே அதை நிறுத்தி, தனது பின்னணிப் பாடகர்களைக் கொண்டு, சபையோரை முன்னிறுத்தி நாடகங்களுக்கு நல்ல வரவேற்புத் தரவேண்டுமென பாடுவிப்பார். கி.மு.423இல் தனது 'மேகங்கள்', 'சமாதானம்' ஆகிய நாடகங்களில் இதனைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

போரின் அனர்த்தங்களையே தனது நாடகக் கருவாகக் கொண்டாலும் அதனை ஒரு மகிழ்வூட்டுதலாகக் கைக்கொண்டார். லைசிஸ்ருட்டா என்ற நாடகத்தில், நீண்டகால போரின் காரணமாக வீடு திரும்ப முடியாதிருந்த கணவனுக்காக ஏங்கியிருந்த பெண், கணவன் போரிலிருந்து வீடு வந்தபின் பாலுறவு மறுப்பை மேற்கொள்வதாகக் காட்டுகிறார். இதில் ஒரு பெண் இரவு படுக்கைக்குப் போய் கணவன் இவளுக்காகப் படுக்கையில் காத்திருக்கையில் தன் துயில் உரிந்த பின் வேறு பொருட்களை எடுப்பதற்காக 6-7 தடவைகள் படுக்கையை விட்டு வெளியேறி, கணவனைச் சிற்றின்ப வேட்கையின் துயரை அடையச் செய்வதாகக் காட்டுகிறார்.

யூரராகக் கடமையாற்றும் ஒரு தந்தை வீட்டிலும் யூரரைப் போலவே நடப்பதையும், மற்றவர்களைக் கட்டுப்படுத்தி, தீர்ப்புகளை வழங்குவதையும் கண்ட அவரது மகன், இவரை வெளியில் போகவிடாது கட்டுப்படுத்தவும். இவரது நடத்தையைக் கேலி செய்யும் முகமாகவும், வீட்டில் தங்களது நாய் பாற்கட்டியை திருடியதாகக் கூறி, அவர்களது வீட்டிலேயே ஒரு நீதிமன்றத்தை நிறுவி, அதற்கு தீர்பளிக்குமாறு தனது தந்தையிடம் கேட்பதாக 'குளவிகள்' என்ற நாடகத்தில் காட்டுகிறார்.

இவரது படைப்புகளில் மகிச் சிறந்ததெனச் சொல்லப்படுவது 'பறவைகள்' என்ற நாடகம். இந்நாடகம் ஏதென்ஸ் போரில் ஈடுபட்டிருந்த காலத்தில் எழுதப்பட்டது. இது போரின் அழிவுகள் பற்றிக் கூறும் ஒரு நாடகம். ஏதென்ஸ் நகரைச் சேர்ந்த இருவர் தங்கள் நாட்டில் போரின் அழிவின் அவலத்திலிருந்து தப்பி, பறவைகளோடு சேர்ந்து வானில் பறந்து திரிகின்றனர். பின்னர் வானிலே ஒரு நகரைக் கட்டுமாறும், தாங்களே அந்நாட்டை ஆளப் போவதாகவும், கடவுளுக்கு எவ்வித அன்பளிப்பு உபகாரங்களும் செய்யாது அவரைப் பட்டினி போடப்போவதாயும் கூறுகின்றனர். சிறிது காலம் செல்ல பறவைகள் ஒரு நகரைக் கட்டிய பின் அம்மனிதரில் ஒருவர் பெண் கடவுளைத் திருமணஞ்செய்து தன்னைச் சிறகுள்ள கடவுளாகப் பிரகடனஞ்செய்து அப்புதிய நாட்டை ஆட்சி செய்வதாகக் காட்டி, மனிதர்களுக்கு என்றுமே நாட்டை எப்படியாவது ஆட்சி செய்வதிலும், மற்றைய நாடுகளைப் போரிட்டு கபளிகரம் செய்வதிலுமே நாட்டம் என்பதைக் காட்டுகிறார்.

மேற்கூறிய நாடகங்கள் போலவே ஏனைய நாடகங்களும் அவலங்களை இன்சுவையாக செய்திகளைக் கூறுகின்றன.

இவர் தனது 53ஆவது வயதில் எழுதிய 'எக்ளிளேசியேசூசே' என்ற நாடகமே பழைய இன்பியல் நாடக முறையிலிருந்து புதிய இன்பியல் நாடகமுறையின் ஆரம்பத்திற்கு வழி கோலிற்று.

உசாத்துணை நூல்கள்:

*Aristophanic Comedy – K.J. Dover*

*Wasps, Women at the Thesmophoria – D. Barrett*

*Incongruity in Arstophanes – C.C Jernigan*

*The Art of Greek Comedy – K. Lever*

*Aristophanes and the Comic Hero – C.H. Whitman*

*Greek Comedy – G. Norwood*

*Studies in Later Greek Comedy – T.B.L. Webster*

ganam.lambert@thaiveedu.com

■ ■ ■

## வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 17

K.S. பாலச்சந்திரன்



# மன்னாரில் ஒரு 'கின்னஸ்' சாதனை

ஒரு முறை மன்னாரில் நிகழ்ச்சி செய்வதற்கு என்னை அழைத்திருந்தார்கள். அங்கு தெரிந்தவர்கள் பலர் இருந்ததினால் நான் முதல் நாளே அங்குபோய் அவர்களையெல்லாம் சந்திப்பதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்படியே நான் முன்னதாகப் போய்விட்டேன்.

என் நிகழ்ச்சியைத்தவிர டாக்டர் ஆபிரகாம் கோவூரின் 'மனோவசிய' நிகழ்ச்சியும். எனது சக நகைச்சுவைக் கலைஞர்களான ராம்தாஸ். ராஜகோபால், செல்வசேகரன் ஆகியோரின் 'கோமாளிகள்' நாடகம் என்று பெரிதாக விளம்பரப்படுத்தியிருந்தார்கள்.

மாதக்கணக்காக செய்த விளம்பரத்தின் பலனாக, பெருந்தொகையான மக்கள் தொலைவில் இருந்தெல்லாம் வந்துவிட்டார்கள். மன்னார் திறந்தவெளி மைதானத்தில்தான் நிகழ்ச்சி. ஏராளமான ரிக்கற்றுக்கள் விற்பனையாகி விட்டன என்று பேசிக்கொண்டார்கள்.

நான் தங்கியிருந்த விருந்தினர் விடுதியின் விறாந்தையில் இருந்துகொண்டு, சாரி சாரியாக மக்கள் கூட்டம் மைதானத்தை நோக்கிப் போவதை பார்த்துக்கொண்டிருந்தேன். இன்றைய நிகழ்ச்சி பெருத்த வெற்றி தரப்போகிறது என்று நினைத்துக்கொண்டேன்.

“கோமாளிகள்” நாடகக்கலைஞர்கள் அன்று காலை கொழும்பிலிருந்து புறப்படும் புகையிரதத்தில் பயணம் செய்து பிற்பகல் வந்து சேர்வதாக ஏற்பாடு. ஆபிரகாம் கோவூர் வேறெங்கோ நிகழ்ச்சி செய்து விட்டு காரில் வருவதாகச் சொன்னார்கள்.

பிற்பகல் கடந்து மாலையாகியது. வரவேண்டியவர்கள் கொழும்பில் இருந்து வந்த புகையிரதத்தில் வரவில்லை. செல்லிடத் தொலைபேசி புழக்கத்தில் இல்லாத காலம், நிகழ்ச்சி அமைப்பாளர் கொழும்புக்கு 'டிரங்கால்' போட்டுவிட்டு, தபால்கந்தோரில் பழிகிடக்கிறார் என்று செய்தி வந்தது.

ஆறுமணிக்கெல்லாம் மைதானம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அலைமோதும் மக்கள் கூட்டத்தினரை சாந்தப்படுத்தும் நோக்கத்துடன், யாரோ ஒரு புண்ணியவான், ஒலிபெருக்கியில் 'கரடியாக' கத்திக்கொண்டிருப்பது எனக்கும் கேட்டது. “நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் கலைஞர்கள்” என்று எங்கள் பெயர்களை வரிசையாகச் சொல்லி, சற்று நிதானித்து “மன்னார் நகருக்குள் வந்து விட்டார்கள்” என்று முடித்தார்

நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்த ஒருவரிடம் (நிகழ்ச்சிக்காரரின் கையாள்தான்) ராம்தாஸ் குழுவினர் உண்மையாக வந்து விட்டார்களா என்று கேட்டேன். அவர் மிகுந்த கவலையுடன் மேலே கையைத்தூக்கி காட்டினார்.

“பிளேனில் வருகிறார்களா” என்று சிரிக்காமல், 'சீரியசாக' முகத்தை வைத்துக்கொண்டு கேட்டேன். பாவம் மனுஷன்... எனது நையாண்டியைப் புரிந்து கொள்ளாதவராய் நடந்ததைச்சொல்லி முடித்தார்.

“கோமாளிகள்” புகையிரதத்தை பிடிக்கமுடியாமல் போய்விட்டதாகவும், அங்கிருந்து காரில் புறப்பட்டுவிட்டதாகவும், எப்படியாவது வந்து விடுவோம் என்று சொல்லியிருப்பதாகவும், கடவுளுக்குத்தான் தெரியும் (இதுதான் மேலே கைகாட்டியதின் அர்த்தம்) என்று சொல்லிமுடித்தார்.

“அவர்கள் தற்செயலாக வராவிட்டால்” என்று சொல்லி முடிப்பதற்கிடையில், “தம்பி அப்படிச்சொல்லாதையுங்கோ.. பிறகு நாங்கள் இங்கை இருந்தபாடில்லை. போதாக்குறைக்கு நிகழ்ச்சியை ஒழுங்கு பண்ணினவர் தப்பேலாது” என்று சொன்னவரின் குரல் நடுங்கியதுபோல இருந்தது.

“சரி இப்ப என்ன செய்யப்போகிறீர்கள்” என்று கேட்டதிற்கு, “எட்டு மணி மட்டுக்கும் பாட்டைப் போட்டுக்கொண்டு, சமாளிக்கிறம். அதுக்குப்பிறகு உங்களை வந்து கூட்டிக் கொண்டு போறம் “என்று சொல்லிவிட்டுப் போனார்.

சொன்னமாதிரியே பாட்டும், இடையிடையே அறிவிப்புகளும் கேட்டன. வீட்டில் இருந்து ரேடியோவில் 'ஹாயாக' பாட்டுக்கேட்பதை விட்டு, திறந்த வெளியான மைதானத்தில் வீசும் குளிர்காற்றில் நடுங்கிக்கொண்டு எவ்வளவுநேரம்தான் பாட்டுக்கேட்பார்கள். அதுவும் ரிக்கற் எடுத்துவிட்டு.

எட்டுமணி கடக்கவும் யாரோ வந்து கதவைத் தட்டினார்கள். திறந்தால் அவர் தான். முதலில் வந்தவர். “வந்து விட்டார்களா?” என்று கேட்டதிற்கு, 'இல்லை' என்பதாக தலையாட்டிக்கொண்டே என்னை அழைத்துச் சென்றார். எனக்கு 'சகுனம்' சரியாகப்படவில்லை.

சனக்கூட்டத்தின் மத்தியில் இருந்த மேடைக்கு என்னை அழைத்துச்செல்லும்போது, “இதோ வந்து விட்டார்.... நீங்கள் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்த…” என்று ஒலிபெருக்கியில் முழக்கினார்கள். “இவர் நேற்றே வந்திட்டாரே” என்று யாரோ சொல்லிக் கேட்டது. என்னை முதன் நாளே மன்னாரில் கண்டவராயிருக்கவேண்டும்.

என்ன செய்வது. கேட்டதும் கேட்காததுபோல முகத்தை வைத்துக் கொண்டு போய் மேடையில் ஏறினேன். தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக என் தனிநடிப்பு நிகழ்ச்சிகளைச் செய்தேன். “அண்ணை றைற்”. “ஓடலி ராசையா”. “தியேட்டரில்” என்று நிகழ்சிகள் வர, பார்வையாளர்களும், வராதவர்களை தற்காலிகமாக மறந்து விட்டு, ரசித்து, சிரித்துக்கொண்டிருந்தார்கள். வழக்கத்தை விட நான் நீட்டிமுழக்கிச் செய்ததினால் ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள் கழிந்து விட்டன.

மேடையில் நின்றவாறே, வரவேண்டிய மற்றவர்கள் வரும் 'சாடை' தெரிகிறதா என்று அடிக்கடி பார்த்துக்கொண்டேன். அந்தச் சங்கதியே இல்லை. “சரி இனிப்போதும்” என்று எனது நிகழ்ச்சியை முடித்து கொள்ளப்போவதாக, 'வணக்கம்' சொல்லவும், 'அவர்' மேடையில் பாய்ந்தேறி, “தம்பி இன்னும் கொஞ்சம் தாக்காட்ட (சமாளிக்க) இயலாதோ” என்று என் காதுக்குள் சொன்னார். “அண்ணை... சாமமாய்ப் போச்சுது... இனி தாலாட்டத்தான் இயலும்” என்று சொல்லி மேடையை விட்டு இறங்கிவிட்டேன்.

எப்படியோ நான் தங்கியிருந்த விடுதிக்குப் போய்ச் சேர்ந்து, கதவை தாளிட்டுக்கொண்டு படுத்து விட்டேன். தனியொருவனாக எவ்வளவு நேரம்தான் நேரத்தைக் கடத்த முடியும்? பார்வையாளர்களுக்கு கொஞ்சம், கொஞ்சமாக சுவாரஸ்யம் குறைந்து, 'அளவுக்கு மிஞ்சின அமிர்தம் நஞ்சாகுவது போல' எனக்கு இருக்கிற மரியாதையையும் இழந்து, வராதவர்களுக்காக 'கல்லெறியும்' வாங்கும் ஆபத்தும் ஏற்படலாம் என்று என் உள்மனம் சொல்லியது. பேசாமல் படுத்து விட்டேன்.

சாமமாகும் போது, மனோவசியக்காரர் (கோவூர்) வந்திருக்கவேண்டும். அறிவித்தல்கள் கேட்டன. அவர்தான் பாவம். எத்தனைபேரை வசியம் பண்ணி மயங்கவைப்பார். ஏதொ தன்னால் இயன்றவரை கொஞ்சப்பேரை மேடைக்கு அழைத்து மயங்கவைத்து விட்டு, 'இவ்வளவுதான்' என்று சொல்லிவிட்டு போய் விட்டார்.

மயங்க வைக்கப்படாத மற்றவர்கள், “கோமாளிகள் எங்கே” என்று கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியுடன் வந்து நிகழ்ச்சிகாரர்கள் என் கதவை மீண்டும் தட்டினார்கள். அவர்களின் மன்றாடலை தாங்கமுடியாமல் அரைகுறை நித்திரையுடன் அவர்களுடன் மைதானத்துக்கு சென்றேன்.

கூச்சலிடுபவர்களைத் தவிர அனேகமாக மற்றவர்கள் என்னைப்போல அரைகுறைத் தூக்கத்தில் இருந்தார்கள். ஒருமாதிரி மேடையில் ஏறி, எப்போதோ நான் வானொலியில் நடித்த நாடகங்களை ஞாபகப்படுத்தி குரலை மாற்றி மாற்றி, எல்லா பாத்திரங்களையும் நானே செய்து கொண்டே போனேன். ஒரு கட்டத்தில், அவர்களுக்கு என்மீது இரக்கம் வந்திருக்கவேண்டும். கரகோஷம் எழுப்பினார்கள். எனக்கும் அவர்கள் மீது இரக்கம் வந்தது.


அத்தோடு மெதுவாக இறங்கி, மீண்டும் விடுதிக்குப் போய் படுக்கையில் வீழ்ந்தேன். உடனே உறக்கம். அவ்வளவு அசதி.

விடியும் நேரமாக, அந்த விருந்தினர் விடுதி பணியாளர்கள், நிகழ்ச்சி பார்த்துவிட்டு வந்து கதைப்பது கேட்டது. அரைகுறையாக கதவைத் திறந்து (பயந்தான்) “என்ன மாதிரி முடிந்தது” என்று கேட்டேன்.

“கோமாளிகள்” வரவேயில்லை என்றும், நானாட்டான் பகுதியில், பள்ளிக்கூடநிகழ்ச்சி செய்துவிட்டு படுத்திருந்த, 'ஈழத்துச் சதன்' என்ற 'மிமிக்றிக்காரரை (குழந்தை அழுவது, நாய் குரைப்பது போல எல்லாம் சிறப்பாக செய்வார்). சாமத்தின் பின் அழைத்து வந்து கொஞ்சநேரம் 'தாக்காட்டினார்களாம்'. “அது முடிய அவ்வளவுதான்” என்றார்கள்.

அந்த நிகழ்ச்சியின் பெயர் - மனோ இரவு (மனோவசியக்காரருக்காக வைத்த பெயராக இருக்கலாம்). எனது மிக நீண்ட நிகழ்ச்சி 'கின்னஸ்' சாதனைக்காரர்களுக்கு தெரியாமல் போயிருக்கலாம். ஆனால் என்னால் அந்த நிகழ்ச்சியையும் அது நடந்த திகதியையும் மறக்கமுடியாமல் இருக்கின்றது.

1976ம் ஆண்டு
செப்ரெம்பர் 11ந்திகதி.



ksbala@thaiveedu.com

# YOU CAN GET WHAT YOU WANT, WHAT YOU REALLY TRULY WANT

**NO PAYMENTS** FOR **90 DAYS** ON ALL NEW 2010 & 2011 HONDA PURCHASES∑

Bring home a HONDA

**PURCHASE FINANCING** AS LOW AS **0.9%**† 24 MONTHS ON NEW CIVICS & ACCORDS ONLY



2011 Civic SE
model FA1E6BJX



2011 Accord SE
model CP2E6BE

## THE NEW 2011 CIVIC | THE NEW 2011 ACCORD

# SPECIAL EDITIONS

- 1.8L 140hp i-VTEC® engine
- Power moonroof with tilt feature
- Air conditioning
- Cruise control
- 16" Aluminum alloy wheels
- Chrome exhaust finisher
- USB device connnector
- Power locks & windows
- Keyless remote with electronic trunk release
- Front & rear disc brakes ...and much more.

**$21,110** MSRP‡
INCLUDES FREIGHT & FEES

LEASE FOR/APR
**$248# @ 4.9%£**
PER MONTH FOR 48 MONTHS WITH $2,550 DOWN ON APPROVED CREDIT
INCLUDES FREIGHT & FEES
CIVIC MODELS AVAILABLE AS LOW AS $16,420

AN ADDITIONAL **$500** CASH BONUS¥ ON CIVIC & ACCORD

- 2.4L 177hp i-VTEC® engine
- Air conditioning
- 16" Aluminum alloy wheels
- Bluetooth® HandsFreeLink®
- Premium audio system with subwoofer
- 8-way power driver's seat
- Power windows with auto up/down...and much more.

**$26,475** MSRP‡
INCLUDES FREIGHT & FEES

LEASE FOR/APR
**$328# @ 4.9%£**
PER MONTH FOR 48 MONTHS WITH $2,750 DOWN ON APPROVED CREDIT
INCLUDES FREIGHT & FEES

## அதீசன் (SHAN) சர்வானந்தன்


**CELL (416) 720-1184**

FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465

#Lease and finance offers are based on new 2011 Honda models. Lease examples based on new 2011 Honda Civic Sedan SE, model FA1E6BJX / 2011 Honda Accord Sedan SE, model CP2E6BE available through Honda Financial Services on approved credit. £4.9% / 4.9% lease APR for 48 / 48 months. Monthly payment (includes freight and PDI, environmental fees and OMVIC fee) is $247.93 / $328.42. Down payment or equivalent trade of $2,550.00 / $2,750.00, first monthly payment and $0 / $0 security deposit due at lease inception. Total lease obligation is $16,464.22 / $21,056.00. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. 96,000 / 96,000 kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. Retailer may lease for less. Retailer order / trade may be necessary. †Limited time financing offer based on new 2011 Honda models. Finance example based on new 2011 Honda Civic Sedan SE, model FA1E6BJX available through Honda Financial Services on approved credit. ‡MSRP is $21,110.00 (includes $1,530.00 freight and PDI, environmental and OMVIC fees) financed at 0.9% APR equals $887.85 per month for 24 months. Cost of borrowing is $198.46 for a total obligation of $21,308.46. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. MSRP is $26,475.00 for a new Honda Accord Sedan SE, model CP2E6BE and includes $1,685.00 freight and PDI, environmental and OMVIC fees. License, insurance, lien registration (if applicable) and taxes are extra. Retailer may sell for less. Retailer order / trade may be necessary. ∑No payments for 90 days offer applies to purchase finance offers on all new 2010 and 2011 models purchased and delivered by January 3rd, 2011. Offer available only through Honda Financial Services on approved credit. Monthly payments are deferred for 90 days. Contracts will be extended accordingly. Interest charge (if any) will not accrue during the first 60 days of the contract. After 60 days, interest (if any) starts to accrue and the purchaser will repay principal and interest (if any) monthly over the term of the contract. ¥$500.00 Cash Bonus offer applies only to retail customer purchase, lease or finance agreements on select new 2010 and 2011 Civic and Accord models. Cash Bonus offer includes HST where applicable. Valid only on purchase, lease or finance agreements concluded at participating Honda retailers. ◊No purchase necessary. Open to residents of Ontario (age of majority) who are the parent/legal guardian of a child 12 years of age or under. One entry per child. Contest ends December 31st, 2010 at 11:59:59 p.m. ET. Visit www.hondaontario.com/newspaper for full prize descriptions and contest rules. #/£/∑/†/¥Offers valid from December 1st, 2010 through January 3rd, 2011 at participating Honda retailers. Offers valid only for Ontario residents at Ontario Honda Dealers locations. Offers subject to change or cancellation without notice. Visit www.hondaOntario.com or see your Honda retailer for full details.

from the firm foundations of creative photos

l a p h o t o g r a p h i e e s t u n a r t



Karuna Photography

digimedia Creations Photography

- Wedding Photography
- Complete Online Workflow
- Online Slideshows
- DVD Slideshows
- Custom Designed Digital Albums
- Parent Albums/ iPhone Galleries
- Online Digital Proofs and Online albums Proofs
- E-Com Site
- Canvas and Metal Printing

facebook
www.facebook.com/digimediaphoto

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952


HomeLife Future
Award Night 2010
HOMELIFE
HIGHER STANDARDS


Maple Vision
PROFESSIONAL VIDEO
நேரடி ஒளிபரப்பின்
மூலம் வெளிநாடுகளில்
உள்ள உங்கள் உறவுகளும்.
உங்கள் நிகழ்வுகளுடன்
இணைந்திருக்கலாம்
(இணையத்தளம்)
Weddings | Birthdays | Puberty Ceremonies
Arangetrams | Stage Programs | Any other Occasions
HD Format (Wide Screen)
we also do
DVD Video and
Multisystem Conversion
Varan: 416 888 7626
www.maplevision.net
maplevision@gmail.com

# பதற்றம்

- அ. முத்துலிங்கம் -

எனக்கு வரும் பதற்றம் நானாக உருவாக்குவதில்லை. பக்கத்தில் இருப்பவர் அதை உருவாக்குவார். நேபாளத்திலிருந்து நண்பர் வந்து ரொறொன்ரோவில் இறங்கியதும் அது ஆரம்பித்தது. இவருடைய வேலை தேசம் தேசமாக சுற்றிக்கொண்டிருப்பது. உலகத்து நாடுகளில் 72 நாடுகளுக்கு பயணித்திருக்கிறார். கனடாவுக்கு பல தடவை வந்து போயிருக்கிறார். கையில் எதை எடுத்தாலும் அதை முதல் காரியமாக தொலைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். அவர் வந்து இறங்கி சில நிமிடங்கள் கூட ஆகாதபோது 'என்னுடைய செல்பேசியை கண்டீர்களா?' என்று கேட்பார்.

அவர் உட்கார்ந்ததும் தன்னைச் சுற்றி பொருட்களை பரவி விட்டுக்கொள்வார். அவருடைய மேல்கோட்டை கழற்றி கதிரையின் பின்பக்கத்தில் கொழுவுவார். கால்சட்டை பைகளில் இருந்து செல்பேசி, பணப்பை, சாவிக்கொத்து முதலியவற்றை வெளியே எடுத்து தனித்தனியாக வைப்பார். மடிக்கணினியை சுவரில் இருக்கும் ஏதோ ஒரு மின்னிணைப்பில் சொருகுவார். மூக்குக்கண்ணாடியும் பேனையும் தேவைக்கு தக்கமாதிரி அவ்வப்போது அவர் உடம்பிலும் சமயங்களில் மேசையிலும் தங்கும். வந்து இறங்கிய சில நிமிடங்களில் என்னுடைய முழு வீடும் அவருக்கு சொந்தமாகிப் போகும். ஒரு வேலை செய்து பாதியில் இன்னொரு வேலையை ஆரம்பிப்பார். செல்பேசியில் வந்த ஒரு தகவலை சட்டைப் பையில் குத்தியிருந்த பேனாவால் குறிப்பெடுப்பதற்கு மூக்கு கண்ணாடியை அணிவார். பின்னர் மடிக்கணினியில் எதையோ அவசரமாகப் பார்ப்பார். சாவியை எடுத்து சூட்கேசைத் திறந்து அவர் கலந்து கொள்ளப் போகும் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலை ஆராய்வார். பின்னர் மூக்குக் கண்ணாடியையும் சாவிக் கொத்தையும் தேடுவார்.

இவர் என் வீட்டில் காலடி வைத்த மறு கணத்திலிருந்தே நான் அவர் சேவகனாக மாறிவிடுவேன். ஓர் இடத்திலிருந்து வேலை செய்யும் பழக்கம் அவரிடம் கிடையாது. சாப்பாட்டு மேசையில் வைத்து குறிப்புகள் எடுப்பார். அவருடைய சூட்கேஸ் படுக்கை அறையில் இருக்கும். செல்பேசியில் பேசும்போது நடந்து நடந்து ஓய்வெடுக்கும் அறைக்குள் போய்விடுவார். என்னுடைய வேலை அவருடைய பொருள்களைக் காபந்து பண்ணுவதுதான். அது தெரிந்தோ என்னவோ அவர் அவற்றைப் பற்றி கவலைப்படாமல் மிக அமைதியாக தன் வேலைகளைக் கவனிப்பார்.

நண்பர் மொன்றியலில் நடக்கும் உலக பொறியியலாளர் மாநாட்டுக்கு வந்திருந்தார். ரொறொன்ரோவிலிருந்து மொன்றியல் 500 கி.மீட்டர் தூரம். அவர் வாடகை கார்பிடித்து அங்கே போய் இரண்டு நாள் தங்கி மாநாட்டில் கலந்துவிட்டு திரும்ப வரப்போகிறார். 'நீங்களும் வருகிறீர்களா?' என்று கேட்டார். நான் என்ன சொல்லியிருக்கவேண்டும். மாட்டேன். அப்படிச் சொல்லவில்லை. ஊழ்வினை உறுத்து வந்தூட்டும் அல்லவா? நானும் புறப்பட்டேன். மறக்கமுடியாத இரண்டு நாட்களாக அது அமைந்தது அப்படித்தான். நண்பரின் வேலையாளாக, காரியதரிசியாக, உதவியாளராக, எடுபிடியாக நான் செயல்பட்டேன். அந்த வேலையில்கூட எனக்கு வெற்றி கிடைக்காமல் அவர் பார்த்துக்கொண்டார்.

மொன்றியலுக்கு போகும் வழியில் நண்பர் காலைச் சாப்பாடு என்றார். ஒரு மணிநேரம் முன்புதான் அப்படி ஒன்றைச் சாப்பிட்டிருந்தோம். காரை நிறுத்தி உணவகம் ஒன்றில் மீண்டும் சாப்பிட்டுவிட்டு நெடுஞ்சாலையில் பயணித்தோம். 60 கி.மீட்டர் கடந்த பின்னர்தான் கடன் அட்டையை உணவகத்தில் விட்டு விட்டது அவருக்கு தெரிந்தது. வந்தவழியே திரும்பவும் 60 கி.மீட்டர் பயணித்து கடன் அட்டையை மீட்கவேண்டியிருந்தது. ஹொட்டல் அறையில் தங்கியிருந்த ஒவ்வொரு பத்து நிமிடமும் நான் பதற்றத்தின் உச்சியில் இருந்தேன். ஹொட்டல் அறைக் கதவை திறக்கும் மின் அட்டையை அடிக்கடி மறந்துவிடுவார். ஹொட்டல் மனேஜர் வந்து திறந்துவிடுவார். இவருக்கு நினைவூட்டுவதும், இவர் தொலைப்பதை எடுத்துக்கொடுப்பதும், இருப்பதை தொலைக்காமல் பாதுகாப்பதுமே என் முழு நேர வேலையாக மாறியது. மூக்குக்கண்ணாடியை கைமாறி வைப்பது இவருடைய பொழுதுபோக்கு. மூக்குக்கண்ணாடி மூக்கிலேயே இருக்கவேண்டியதுதானே. என்ன பிரச்சினை? அடிக்கடி கழற்றி வைப்பார். பின்னர் தேடுவார். நான் நினைவூட்டும்போது அவர் சொல்லும் வாசகம் 'நான் 72 நாடுகளுக்கு பயணம் செய்திருக்கிறேன்' என்பது.

இவர் ஏதாவது பொருளை உங்களிடம் கடன் கேட்டால் அதை ஒருமுறை கடைசித் தடவையாக கண்டு களித்துவிட்டு நீங்கள் கொடுத்தால் நல்லது. அது திரும்பி வரப்போவதில்லை. அதை பாவித்துவிட்டு அதே இடத்தில் விட்டு விட்டு நகர்ந்துவிடுவார். நீங்கள்தான் தேடி எடுக்கவேண்டும். மொன்றியலில் இருந்த நாட்களில் இவர் காரிலிருந்து இறங்கியதும் கார் சாவியை பறித்து நான் வைத்துக்கொள்வேன். ஆரம்பத்தில் சாவியை தொலைப்பதும் தேடுவதுமாகவே இருந்தார். சாவியை கேட்டதும் எடுத்துக் கொடுப்பேன். பின்னர் பார்த்தால் அவரைச் சுற்றியிருக்கும் என்ன பொருள் தேவையென்றாலும் என்னைக் கேட்க ஆரம்பித்தார். ஆகவே இவருக்குப் பக்கத்தில் வீணே என் வயதை அதிகரித்தபடி எந்த நேரமும் நான் நிற்கவேண்டி நேர்ந்தது. மாநாட்டில் பேச அழைத்ததும் மேடையில் நின்றபடி இரவு முழுக்க தயாரித்த குறிப்புகளை சட்டைப் பையிலும், கால் சட்டையிலும், கோட்டுப் பைகளிலும் தேடினார். கிடைக்கவில்லை. ஆனால் அன்றைய அவருடைய பேச்சு தடங்கல் இல்லாமல் ஒரு சிறந்த பேச்சுக்கு உதாரணமாக அமைந்தது.

மாநாடு ஒருவாறாக முடிந்து ரொறொன்ரோ வந்த பின்னர்தான் அவருடைய செல்பேசி chargerஐ ஹொட்டலில் விட்டுவிட்டு வந்தது தெரிந்தது. ஒரு நாள் முழுக்க ரொறன்ரோ கடைகளில் அலைந்து இன்னொன்று வாங்க வேண்டியிருந்தது. நண்பர் தன்னை செயல் திறன் மிக்கவராக நினைக்கிறார். இவருடைய நேரத்தில் பாதி நேரம் தொலைத்தவற்றை மீட்பதில் செலவாகுகிறது. ஆனால் அவர் அப்படி நினைக்கவில்லை. ஒரே சமயத்தில் தன்னால் பல காரியங்களை ஆற்றமுடியும் என்கிறார். பல பொருட்களை ஒரே நேரத்தில் தொலைப்பதை சொல்கிறாரோ தெரியாது. இவர் எப்படி தன்னுடைய கடவுச்சீட்டுகளையும், விமான டிக்கட்டுகளையும் செல்பேசியையும் மடிக்கணினியையும் தொலைக்காமல் வெற்றிகரமாகப் பயணம் செய்து திரும்புகிறார் என்பது என்னால் எப்பவுமே அவிழ்க்கமுடியாத புதிர்தான்.



இவர் மாத்திரமல்ல. நிறைய பயணம் செய்யும் மற்றவர்களிடமும் இதே குணம் இருப்பதை நான் அவதானித்திருக்கிறேன். எல்லாவற்றையும் தொலைப்பார்கள் ஆனால் எப்படியோ உலகத்தை சுற்றி வருவார்கள். அதிக எச்சரிக்கை அறிவு உள்ளவர் பயணம் செய்வதே கிடையாது. எனக்கு ஜெகன் என்று ஒரு நண்பர் இருக்கிறார். இவர் தண்ணீரில் கடந்த தூரம் நிலத்தில் கடந்த தூரத்திலும் பார்க்க அதிகம். மறதி மன்னர். உலகத்தின் பல பாகங்களுக்கும் சென்று தன்னுடைய கம்பனி விற்பனையை அதிகரிப்பது இவர் தொழில். ஒரு முறை சான்பிரான்சிஸ்கோவில் வாடகை காரை எடுத்து நீண்ட தூரம் பயணம் சென்ற போது காரிலே பெற்றோல் தீர்ந்ததால் எதிரில் வந்த நிலையத்தில் பெற்றோல் போட்டுக் கொண்டு காரை ஓட்டினார். ஆனால் பத்து மைல் தூரம் போவதற்குள் அவரை இரண்டு பொலீஸ் கார்கள் துரத்தின. இவர் காரை நிறுத்தினார். பார்த்தால் பெற்றோல் போட்ட இடத்தில் காசைக் கட்டிவிட்டு காரை எடுத்திருக்கிறார் ஆனால் பெற்றோல் போட்ட ட்யூபை அகற்ற மறந்துவிட்டார். பத்து மைல் தூரம் அதை அறுத்து ரோட்டில் இழுத்துக்கொண்டு காரை ஓட்டிய கதையை அவர்தான் சொன்னார்.

ஜெகனுடைய தந்திரம் எந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் சமநிலை இழக்காமல், அமைதியாக இருப்பது. விமான நிலையத்தில் ஒரு மணிக்கு நிற்கவேண்டுமென்றால் இவர் மிகத்தாமதமாக ஆசுவாசமாக வெளிக்கிடுவார். அவரைச் சுற்றியிருப்பவர்கள் அந்தரப் படுவார்கள். பதகளிப்பார்கள். விமானம் தவறிவிடுமோ என்று தவிப்பார்கள். ஜெகன் அசையவே மாட்டார். அவர் செய்யும் காரியம் எல்லாம் பக்கத்திலிருப்பவரை பதற்றமடைய திட்டமிட்டு செய்வதுபோலவே இருக்கும். ஒரு சப்பாத்துக் கயிற்றைக் கட்டிவிட்டு மற்றதைக் கட்டாமல் உங்களுடன் பேசுவார். சாப்பாட்டுக் கரண்டியை வாய்க்கு கிட்ட கொண்டுபோவார் ஆனால் வாயை திறக்கமாட்டார். கார் சாவியை சாவி துவாரத்தினுள் நுழைப்பார் ஆனால் காரை கிளப்பமாட்டார். இவரைப் போன்றவர்களின் வெற்றியின் ரகஸ்யம் தங்கள் பதற்றத்தை மற்றவர்களுக்கு கடத்தி தங்கள் பதற்றத்தை இல்லாமல் செய்வது என்றுதான் நினைக்கிறேன்.

அடிக்கடி பயணம் செய்பவர்களின் குணாம்சம் பொதுவானதாகவே இருக்கிறது. நேபாள நண்பர் போகும்போது நடந்ததையும் சொல்லி விடுகிறேன். அவர் தன்னுடைய சாமான்கள் எல்லாம் வீட்டின் பல பாகங்களிலுமிருந்து சேகரித்து சூட்கேசில் அடுக்கி பூட்டிய பிறகு, ஏதாவது தவறவிட்டிருப்பாரோ என்று பயந்து நான் மறுபடியும் வீட்டை சோதனை செய்தேன். நண்பர் சிரித்தபடி சொன்னார். 'நான் சாமான்கள் அடுக்குவதில் திறமைசாலி. கொண்டுவந்த பொருட்களை திரும்ப ஒரு சூட்கேசில் போட்டு மூடுவதற்கு புத்திக்கூர்மை எண் ஐம்பது இருந்தாலே அதிகம். நண்பரே, பதற்றம் வேண்டாம். அமைதியாக இருங்கள். நான் 72 நாடுகள் பயணம் செய்திருக்கிறேன்.' எப்படியோ அவரை விமான நிலையத்தில் கொண்டுபோய் ஏற்றிவிட்டு திரும்பவும் வீடு வந்து சேர்ந்தேன். பள்ளிக்கூடம் விட்டு பிள்ளைகள் எல்லாம் போனபிறகு காட்சியளிக்கும் வகுப்பறை போல வீடு வெறுமையாகவும் அமைதியாகவும் இருந்தது. என் நெஞ்சு படபடப்பு அடங்க ஒரு மணி நேரம் எடுத்தது. ஆனால் கதை முடியவில்லை என்பதை ஊகித்திருப்பீர்கள்.

நண்பரிடமிருந்து குறுஞ்செய்தி வந்தது. 'அனைத்துலக பொறியியலாளர் மாநாட்டின் மலரை எங்கேயோ கைமாறி வைத்துவிட்டேன். அது மிகவும் முக்கியமானது. ரொறன்ரோ தலைமையகத்துக்கு சென்று ஒரு மலரை பெற்று அதை உடனடியாக எனக்கு அனுப்பினால் நல்லது. நான் பயணத்திலிருக்கிறேன். 12 - 14ம் தேதிக்குள் எனக்கு கிடைக்குமென்றால் இந்த விலாசத்துக்கும், 15 - 18ம் தேதிக்குள் கிடைக்குமென்றால் இந்த விலா சத்துக்கும், 19ம் தேதிக்கு பின்னர் என்றால் இந்த விலாசத்துக்கும் அனுப்பிவிடுங்கள்.' இந்தக் குறுஞ்செய்தியை அவர் விமானத்தில் ஏறிய பின்னர் அனுப்பியிருந்தார்.

எனக்கும், உலக பொறியியலாளர் தலைமையகத்துக்கும், தபால் கந்தோருக்கும் பெரிய தலையிடியை கொடுத்துவிட்டு நண்பர் 35,000 அடி உயரத்தில் அமைதியாக பறந்துகொண்டிருந்தார். விமானத்தின் முதல் வகுப்பு இருக்கையை பின்னால் நல்லாய் சாய்த்து விட்டு, திரையில் ஓடும் படத்தை பார்த்தபடி, கால்களை நீட்டி, வெள்ளை வைன் அருந்தியவாறு அவருடைய பொழுது ஆனந்தமாய் போய்க்கொண்டிருக்கும்.



muththulingam.a@thaiveedu.com

இலக்கிய உறவுகள்

# உறவுகள் பலவகை

### முன்னுரை

'மனைவி தாய் தந்தை மக்கள் மற்றுமுள சுற்றம்' என்பர் அப்பர் சுவாமிகள்.

இதனை இரத்த உறவு அல்லது குடும்ப உறவுக்குள் அடக்கலாம். உறவுகள் கல்வி உறவு, சமூக உறவு, தொழில் உறவு, நட்புறவு எனப் பலவகைப்படும். அவை அடிப்படைக் காரணங்களுக்கேற்ப வேறுபடும். அவரவர் கண்ணோட்டத்துக்கேற்பவும் பாகுபாடு




வேறுபடலாம். இது உறவியல் சம்பந்தமானது.

இலக்கிய அடிப்படையில் நான் உறவு கொண்ட பலரை இத்தொடரில் நினைவுகூருகின்றேன். இலக்கியத் துறைக்கு என்னை இட்டுச்சென்றவர்கள், தற்கால ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உழைத்தவர்கள், என்னுடன் சேர்ந்து யாழ் இலக்கிய வட்டம் மூலமாகவும் பிற தாபனங்கள் மூலமாகவும் ஆக்க இலக்கியப் பணியில் ஈடுபட்டவர்கள் எனப் பல அறிஞர்களுடனும் நண்பர்களுடனும் உறவாடிய அனுபவங்களை நீள நினைக்கின்றேன்.

அருகில் இருக்கையில் அருமை தெரியாது என்பார்கள். பிரிந்திருக்கையிலேதான் பெருமை விளங்கும். மேலும், வள்ளுவர் பெருமாள் கூறும் -

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது

(1201)

என்பது இலக்கிய நண்பர்களுக்கும் நன்கு பொருந்தும்.

எனது இலக்கிய உறவுகள் இன்பகரமானவை, அற்புதமானவை. சிலர் போட்டி பொறாமைகளால் அருமையான இவ்வுறவுகளை அனுபவிக்கும் வாய்ப்புக்களை இழந்திருக்கலாம். எனக்கு அத்தகைய நிலைமை என்றைக்குமே ஏற்பட்டதில்லை. ஏனெனில், மிகுந்த தன்னம்பிக்கையுடனும் அப்பழுக்கற்ற உள்ளத்துடனும் இயன்ற அளவுக்கு இலக்கியப் பணி புரிந்து வந்த அதேவேளையில், ஏனைய இலக்கிய கர்த்தாக்களையும் நன்கு மதித்துப் பழகி வந்திருக்கின்றேன்.

கொள்கைப் பூசல்களும் என்னைக் குழப்பியதில்லை. கொள்கை வேறுபாடுகள் இருக்கவே செய்யும். இருக்கவேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பது ஒருவகை வீரம், விவேகம். இலக்கியத்தின் இலட்சியமும் அதுவாகவே இருக்க வேண்டும். இந்த அடிப்படையில், மாறுபட்ட கொள்கையாளர்களையும் மதித்து வகுக்கப்பட்டதுதான் எனது இலக்கியப் பாதை.

எனினும், நில்லா உலகில் தமது கொள்கையே நிலைக்குமென நினைத்து, அதனையே ஒரு சீனச்சுவராக்கி, தமக்கு ஒத்துவராத கொள்கையாளரைக் 'கீழ்ச் சாதியினர்' எனக் கருதியவர்களும் என்னைச் சுற்றி இருக்கவே செய்தனர். இவர்களுள் மறைந்து நின்று என் கவிதைகளையும் பேச்சுக்களையும் கேட்டு மகிழ்ந்தவர்களும் உள்ளனர். சிலர் பிற்காலத்தில் நெருங்கிய நண்பர்களுமாயினர்.

இலக்கிய நெஞ்சங்கள் பகைமை உணர்ச்சியற்றவை. பகைவரைப்போல வெளியே பேனாக்களாலும் நாவன்மையாலும் வெட்டிப் பிடுங்கினாலும், உள்ளுக்குள்ளே ஒரு பெரியார் -ராஜாஜி உறவு, மதிப்பு ஒருவருக்கொருவர் இருக்கவே செய்யும்.

அதாவது,

இலக்கியவாதிகள் பரந்த மனப்பான்மையுள்ளவர்கள், அழுக்காறு அற்றவர்கள், நெஞ்சுரம் மிகுந்தவர்கள், நீதி நியாயம் அறிந்தவர்கள், சுருக்கமாகச் சொன்னால் அஃகி அகன்ற அறிவுடைச் சான்றவர்கள், அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையெனும் ஐந்தும் வாய்த்தவர்கள்.

இத்தகைய சான்றோருடன் உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதலைத் தொழிலாகக் கொண்டிருந்த காலம் எனது பொற்காலம்.

அந்த உறவுகள் நீங்காத நினைவுகள். அவற்றை எழுத்தில் வடிக்கும் காலம் வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

யான் பெற்ற இன்பம் பெறுக என் தமிழினம்.

*இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்*
*துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் அன்பமைத்துச்*
*சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே*
*ஊராகக் கொண்டா னுவந்து.*

(திருவாசகம்: திருவெண்பா)

ஒரு சிறு எச்சரிக்கை! இவை ஆய்வுக்

- வி. கந்தவனம் -

கட்டுரைகளல்ல, அனுபவக் கட்டுரைகள். அறிவு முயற்சியாயினும் உறவு நவிற்சியே மேலோங்கி நிற்கும். உறவு உண்மையானது, ஒட்டிவரும் சம்பவங்களும் உண்மையானவையே. ஆயின், ஒரு தக்க சரித்திரமாகக் காட்டிச்செல்லப் போதிய ஆதாரங்கள் எதுவும் கைவசம் இல்லை. அதனால், முழுக்க முழுக்க எனது நினைவாற்றல் ஒன்றை மட்டுமே நம்பித் தொடர்கின்றேன். நம்புவார் தொடர்க, கைவிடேன், கைவிடேனே!

### குறு குறு சிறகு

ஒரு தடாகம். அதனைக் கரையிலே இருந்து பார்ப்பது வேறு, உள்ளே இறங்கிக் குளிப்பது வேறு. குளித்த சுகத்தை மற்றவர்க்கு எடுத்துச் சொல்வது என்பது இன்னொன்று. கரையிலே இருப்பவர் பார்வையாளர், இறங்கிக் குளிப்பவர் இரசிகர், எடுத்துச் சொல்பவர் கலைஞர்.

சொல்வதற்குப் பல வழிகள் உண்டு. எழுத்து முறையைக் கையாள்பவன் எழுத்தாளன்.

எழுத்தாளர்களும் பலவகையினர். இலக்கிய எழுத்தாளர் தனிவகை. அவரைத் தனி வகையாக்குவது அவரது கற்பனை வளம். இலக்கிய கர்த்தாவுக்குக் கற்பனை இன்றியமையாதது. ஒருவரின் கற்பனை வளத்துக்கு அவர் பிறந்த சூழல், வளர்ந்த முறை, பெற்ற அனுபவங்கள் என்பன அடிப்படைக் காரணங்களாகின்றன.

நான் எனது பெற்றோரைச் சிறுவயதில் இழந்து, தாய்மாமன் தம்பியையா தம்பாப்பிள்ளை அவர்களுடைய அரவணைப்பில் வளர்ந்தவன். தங்கையின் பிள்ளை தறுதலையாகப் போகக் கூடாது என்ற கவனத்தில் மிகுந்த கண்டிப்போடும் கட்டுப்பாட்டோடும் அவர் என்னை வளர்க்கப் பாடுபட்டார்.

அவரது கட்டுப்பாடுகளையும் மீறிக் கண்டபடி திரிவேன். அவர் வீட்டுக்கு வருகையில் நான் இல்லாதுபோனால், அயல் அட்டையெல்லாம் என்னைத் தேடி அலைவார். எங்காவது ஒரு வெட்டையில், கட்டார வெயிலில் பெடியளுடன் விளையாடிக்கொண்டிருப்பேன், துரத்திப் பிடித்துத் தூக்கிக்கொண்டுபோய் மாமியிடம் கொடுப்பார், மாமி என்னைக் குளிப்பாட்டும் வரை சாப்பிடாமற் காத்திருப்பார், குளிப்பாட்டல் முடிந்ததும் பக்கத்தில் இருத்தி எனக்கு ஊட்டி ஊட்டித் தானும் உண்பார்.

ஒருமுறை நான் சாப்பிட மறுத்தபொழுது, 'சூரன் போருக்குப் போகவேணும், சாப்பிடு கெதியாய்' என்று சொன்னது ஞாபகமிருக்கிறது. இவர் ஆண்டுதோறும் மட்டுவில் கந்தசாமி கோயிலில் என்னைப் பார்க்கவைத்த சூரன் போர்கள் பிற்காலத்தில் கந்த புராணத்தை விரும்பிப் படிக்கவைத்தனவெனின் மிகையாகாது. மேலும், இவர் மடியிலிருந்து நான் பார்த்த கோவலன் சரித்திர நாடகம் எனது முதல் இலக்கியப் பாடமாகவும் அமைந்தது. இவரே ஒரு கூத்துக் கலைஞர், அழகாகப் பாடுவார். இவர் ஆடிய நொண்டி நாடகத்தைப் பார்த்திருக்கின்றேன். அப்பொழுது எனக்கொன்றும் விளங்கவில்லை. ஆயினும், இவரது கூத்துப் பாட்டுக்கள்தாம் எனது சின்னஞ்சிறு செவிகளில் ஓசை உணர்வை ஊட்டியிருக்க வேண்டுமென நம்புகிறேன்.

இலக்கியக் கதைகளைச் சிறுபராயத்தில் எனக்கு அதிகம் கூறியவர் எனது தமையனார் திரு.வி. பசுபதி அவர்கள். சிவபெருமான் உபதேசம் ஆலமரத்தின் கீழ் நிகழ்ந்தது. எனது இலக்கியப் படிப்பு மாமரத்தின்கீழ் அடிக்கடி நடைபெற்றது. இராமர் கதையை எனக்குப் படிப்பிக்க அவருக்குப் பல நாட்கள் பிடித்தன. காரணம் கதையின் நீளமல்ல, தசரதனுக்கும் எனக்குமிடையில் நடந்த போர். அவர் பெயரைச் சொல்ல எனக்கு வரவே வராது. ததசரன், தசதரன், என்றெல்லாம் சொல்வேன். பாவம் என் அண்ணன்.

தொடர்தல் 104ம் பக்கம்


Buy.. Sell.. Homes, Business ,Lands..
புதுவருட வாழ்த்துக்கள்!
25 Power Of Sale Homes From...........105K...
Selling Commission only 1.25%*
அனுபவம்! திறமை! நேர்மை!
email: rpushpakanthan@trebnet.com
Pat Pushpakanthan
Full time Broker with 14 years Experience*
Real Estate BROKER
7 time centurian award
Hall of fame award
416- 490-7653
Possession March 05/2011
Mccowan / 16 th ave
BRAND NEW
43' lot 2880 /2975 sf
Luxury 4bm/4 wsrm detached brick home with Library on main floor Brand new home in brand new subdivision Granite counter top Hardwood floor in main floor and 2nd floor hall way Oak stairsLook out basement backing to beritage conservation ravine , and more
Century 21
Brokerage*
AFFILIATE REALTY INC.
80 CORPORATE DR. TORONTO,
ONT. M1H 3G5
416-290-1200
416-894-1187
9 th line
Detached home 3bm/ 3 wsrm 415 000.00
Scarborough
newer
3 bm/ 3 wsrm
newer home
Walkout basement
Scarborough 149K
2 bm 2 wsrm million dollar amenities gated security move in condo
5, 10, 20, 100 acres Land, Farm for sale
2 Cafetaria fr sale from 39k
5 Restaurant for sale from 20k
2 Variety store from 41k
2 dollar store from 129K
4 Hair Salon from 23K
MOTEL, Farms, land, Cottage and….
Northern ontario
142 Acre ,
27 Acre,
12 Acre….
Farm,
cottage
Brimly/Denison
3 bm/ 3 wsrm
Detached HOME
Scarborough/401
new
4 bm/ 3 wsrm
Detached HOME
walk-out basement
Scarborough /Ellesmere
Detached bungalow
$289 900
Rent and live
Pay* as rent 1100/-/mo
3 bm bsmnt apt
One owner
Scarborough
Business
Bar fr sale
Excellent income
Markham/Steeles
Retail location for sale or Lease
Scarborough
3 bdrm condo apt
99 000.00
Mccowan/Denison
4 bm/ 2 bm bsmnt fin , sep entrance rentable ,ttc
Brimly /denison
Detached home 3 bm
Fin bsmnt, excellent home
FOR SALE
Richmond Hill Lot size: 41'X 109' 3045 Sq ft Sq.ft
Brand new home in brand new subdivision Granite counter top Hardwood floor in main floor and 2nd floor hall
Luxury 4bm/4 wsrm detached brick home with Library on main floor, walkout bsmnt, Oak stairs…..
Markham/Denison
Markham/Denison
Retail Location for Sale or Lease close to cotsco canadian tire and Home depot
249 900/-
*some condition applies ** not intended to solicit to the buyers under contract *Each office independently owned and operated
வீடு, வியாபாரம், காணி
Mortgage 2.19% ..Refinance also.
E
Your SOLD AGENT
This certificate entitles you to a complementary market analysis of your home's current value

Wishing You & Your Family

# Happy New Year 2011




4+1 Bedrooms, 4 Washrooms
Fully Renovated With New Carpet




2+1 Bedrooms, 2 Washrooms
Close To All Amenities




3+1 Bedrooms, 2 Washrooms
Close To Schools, Park, Hwy 401




3 Bedrooms, 3 Washrooms
Well Maintained Mattamy Home




4 Bedrooms, 3 Washrooms
Parquet And Ceramic Throughout




2 Bedrooms, 2 Washrooms
Luxury Condo By Tridel




3 Bedrooms, 3 Washrooms
Preferred Williamsburg Area




2 +1 Bedrooms, 2 Washrooms
Large Bsmt Apartment




4 Bedrooms, 3 Washrooms
Green Park Built Approx 2400 Sq



***Need New Listing at***

***Scarborough, Markham, Mississauga***


**"List your Home with a Professional & Save Money"**

**Hariharan Nadarajah**
*Sales Representative*
**Direct: 416-856-4276**
**Office: 416-298-3200**
E-Mail: harisells@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today**
**Realty Ltd., Brokerage**
INDEPENDENTLY OWNED AND OPERATED
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

*Call **Hariharan Nadarajah** for information on homes available in area of your choice*



# எல்லை வேலியை ஒழுங்காய் நிறுத்தி வைக்கும் பூவரசு

- பொ. கனகசபாபதி -

எங்கள் வீட்டு வளவின் நான்கு புறமும் ஓலை வேலி. வேலியை அடைப்பதற்கு வடலி ஓலையைத் தான் பாவிப்பார்கள். வீடு, மற்றும் மாட்டுத் தொழுவம் மேய்வதற்குத்தான் பனை ஓலை உபயோகிப்பட்டது. அந்த வேலியை ஒழுங்காக நிறுத்துவதற்கு வரிசையாய் பூவரசுமரம்.

நம்மவர்கள் எல்லையை வரையறுக்க உபயோகிக்கும் மரங்களிலேயே ஒரு தேர்வு இருப்பதனைக் காணமுடிகிறது. வீட்டு வளவு எல்லை வேலியை ஆக்கிரமிப்பது பூவரசு என்றால் முற்றத்து வேலியையும் கிணற்றடி வேலியையும் தாங்கி நிற்பது முள்முருக்கை மரமாகும். முற்றத்திலே இடையிடையே நிழல் தரநிற்பவை சீர்மைக்கிளுவை (Glyciridia) இந்த இரண்டுவகை மரங்களுக்கும் பூவரசிலும் பார்க்க நீர்த்தேவை அதிகம். சீர்மைக்கிளுவை நிழல் தருவதுடன் கால்நடைகளுக்கும் போஷாக்கான உணவு. மேலும் கோடை காலத்திலே மயிர்க் கொட்டிகள் படைப்படையாக பூவரசம் இலைகளினதும் முள்முருக்கை இலைகளினதும் கீழ்ப்புறத்தில் காணப்படுவதுடன் வெய்யில் ஏறஏற மெல்லிய நூல் இழைகள் மூலம் கீழே இறங்குவதைக் கண்டிருப்பீர்கள். ஏன் அந்த மயிர்கொட்டி தரும் இன்பத்தைக்கூட அனுபவித்து இருப்பீர்கள். சீர்மைக்கிளுவையால் இந்தப் பிரச்சினை இல்லை. எனவே முற்றத்தைக் தாராளமாக ஆக்கிரமிக்கலாம்.

திடலாக அல்லது புலவுகளாக உள்ள காணிகளுக்கு கிளுவைவேலி போட்டிருப்பார்கள். கிளுவையிலும் முட்கிளுவை பால்க்கிளுவை என இருவகை. அவைக்கு நீர் அவ்வளவாகத் தேவையில்லை. வளர்ச்சியும் மந்த கதிதான். கிளுவந்தடிக்கு கார்த்திகை விளக்கீட்டின் போதுதான் மவுசு. பாம்பு அடிப்பதற்கும் கிளுவந்தடி உகந்தது என்பார்கள்.

பூவரசு எல்லா வயதினருக்கும் உபயோகமாக உள்ளது. பூவரசு இலையில் குழல் செய்து நாதஸ்வரம் வாசித்ததை மறந்திருக்க மாட்டீர்கள் என என்னுகிறேன். காய்ந்த பூவரசம் பழத்தில் பம்பரம் விட்டதைக்கூடவா மறந்திருப்பீர்கள். அதுதான் போகட்டும் பள்ளிக் கூட வேலியில் உள்ள பூவரசம் தடியின் உரிசையை உணராத மாணவர் இருக்க முடியாது.

காலையில் காலைக்கடன் கழிப்பதற்காகத் தோப்பு நோக்கிச் செல்லும் ஊர்பெரியவர்கள் வாயில் வேப்பம் குச்சி அல்லது ஆலம் விழுதுத் துண்டு அல்லது பூவரசம் குச்சி இருப்பதைக் காணமுடியும். இக்காலத்தில் Tinfoil பாவிப்பார்கள் என்றால் அம்மா காலத்தில் பழப்புளி மற்றும் வெண்ணை போன்றவை சுற்றி வைப்பதற்கு பூவரசம் இலைதான் மிகவும் பிரயோஜனம். இன்னும் சொல்வதனால் அம்மா குழைத்துத் தரும் சோற்றினை பூவரசம் இலையிலே வைத்துக் 'கவ்விக் கவ்விக்' சாப்பிடுவதில் எத்தனை இன்பம். நன்கு முற்றி வளர்ந்த பூவரசம் மரத்தின் உட்புறம் நல்ல சிவப்புடன் கூடிய மண்ணிறமாக இருக்கும். தமிழ் நாட்டிலே தவில் செய்வதற்கு இதனைப்பிரயோசனப் படுத்துவார்களாம். எமது நாட்டிலே இடியப்ப உரல் மற்றும் வண்டிச்சில்லின் சில்லுச்சட்டங்கள் இதிலிருந்துதான் செய்வார்கள். இந்த மரக்கூறு பொலிஷ்சினை நன்கு எடுத்து மினுங்கிக் கொண்டிருக்கும் என்பதால் இதனைப்பெரிதும் விரும்புவார்கள். மேளகாரரின் தவிலினைப் பார்த்தால் அதன் மினுக்கத்துக்கான காரணம் புரியும்.

சங்ககாலத்திலே பூவரசினையே மருத மரம் என அழைத்துள்ளார்கள் எனத் தெரிய வருகிறது. "பூவரசம் பூப் பூத்தாச்சு பெண்ணுக்குச் சேதியும் வந்தாச்சு" என்பது கிராமப் புறங்களில் வழங்கும் பழமொழி. பெண் பூப்படைவதைக் குறிப்பது. ஆயுள் வேதவைத்திய முறையிலும் பூவரசுக்கு நல்ல பெயர் உள்ளது. அதன் பழத்தின் உள்ளே ஒரு மஞ்சள் நிறத்திரவம் உள்ளதாம். அது முகப்பருவுக்குச் சிறந்த மருத்து என்கிறார்கள். பழங்காலத்தில் பெண்கள் கருத்தரிப்பதைத் தடைசெய்வதற்கு பூவரசம் பட்டையினைக் காய வைத்து பொடி செய்து சாப்பிட்டு வந்துள்ளனர் என்கிறார்கள். நான் சிறுபிள்ளையாக இருந்த காலத்தில் கால் கைகளில் புண் வந்தால் பழுத்த பூவரசம் இலையினால் சுற்றிக் கட்டிவிடுவார்கள். அதனால் சீழ் நீர்வடிவதைக் காணமுடியும். இலையில் Tannin எனும் இரசாயனப் பொருள் உள்ளதாகவும் அது பற்றீரியா எதிர்த் திறன் (Antibacterial) உடையதாகவும் இப்போ அறிகிறேன்.

*நூற்றாண்டுக்கு சென்றதொரு நுண் பூ வரசம் வோர்*
*தூறாண்ட குட்டைத் தொலைக்குங்காண் - வீறிப்*
*பழுத்த இலை விதைப் பூப் பட்டையவை கண்டாற*
*புழுத்த புண்வி ரேசனமும் போம்.*

(அகத்தியர் குணயாடம்)

பூவரசின் தாவரவியல் பெயர் Thespesia populnea. செவ்வரத்தைக் குடும்பத்தினைச் (Malvaceae) சேர்ந்தது. அழகான செம்மஞ்சள் நிறமான பூக்கள் ஓலை வேலிக்கு மேலே கிளைகளை அழகுபடுத்தியிருக்கும்.

பூவரசு தென்கிழக்கு ஆசிய நாடுகள் எங்கும் உள்ளது என்கிறார்கள். உள்மரம் நல்ல அழகான நிறமுடையதாகவும் கடைதல் வேலைக்குச் சுலபமானதாகவும் உள்ளமையால் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலே கடவுள் உருவங்களை பூவரசம் மரத்தில் கடைந்து எடுத்து விற்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக நமது நாட்டிலே பூவரசம் மரம் இன்னொரு விதத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. வீட்டுச்சொந்தக்காரர் ஒருவர் மரணித்தால் வேலியில் உள்ள பெரிய பூவரசு மரம் தறிக்கப்படும். அவரது நெஞ்சாங்கட்டை இந்தப் பூவரசு மரம் என்பார்கள். அது அவரது உரிமை பேணுவதாகும்.

எமது கிராமம் முழுக்க முழுக்க விவசாயிகளைக் கொண்டது. சிலருக்குத் தான் வயலும் தோட்டமும் இருந்தது. பெரும்பாலோருக்கு வயல் மாத்திரமே இருந்தது. எல்லோர் வீடுகளுக்கும் பூவரசம் வேலிதான் ஆகவே தாராளமாகப் பூவரசம் குளை எங்கும் பொலிந்து காணப்படும்.

சின்னண்ணை எம் ஊரவர். விவசாயி. குளை வியாபரம் அவரது துணைத்தொழில் சின்னண்ணைக்கு அப்போது 50 வயதிருக்கும் கட்டுமஸ்தமான உடல். பார்ப்போர் அவருக்கு 40-45 வயது தான் மதிப்பார்கள். கறுப்பு நிறமான வயிரம் பாய்ந்த உடல் என்றாலும் அதில் இந்த வயதிலும் ஒரு கவர்ச்சி இருக்கவே செய்தது. ஒரேயொரு மகள். அவருக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுத்துவிட்டார். இரண்டு வருடங்களுக்கு முன்னரே திருமணம் நடந்தது. மாப்பிள்ளை உள்ளூர் வாசி. தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியராக உள்ளார். சின்னண்ணன் மகளுடன் தான் வாழ்கிறார். அவரது மனைவி இறக்கும்போது பெண் பிள்ளைக்கு 10 வயது. அண்ணனை எத்தனையோ பேர் மறுதாரம் செய்யுமாறு வற்புறுத்தியும் அதற்கு மறுத்து விட்டார். எப்படியோ கஷ்டப்பட்டு மகளை வளர்த்துக் கட்டியும் கொடுத்துவிட்டார். ஆனால் இதற்கும் பெரிது உதவியது அவரது மனைவியின் தாயார் என்பதையும் மறுப்பதற்கில்லை.

சின்னன்ணையின் தொழில் விவசாயம் மற்றும் குளைவியபாரம் ஆனால் பொழுதுபோக்கு மாட்டுச்சவாரி. அதற்காகக் கிறாதிமாட்டு வண்டில் ஒன்றும் இரண்டு புஷ்டியான வன்னி மாடுகளும் வைத்திருந்தார். சவாரிக்குப் போகும்போது இரண்டு இளந்தாரிகளைத் துணைக்கு கொண்டுபோவார். கோஷமிடுவதற்கு எனக்கும் என்னோட்டை பெடியளுக்கும் 'குசால்' தான். அதிகமான போட்டிகளில் வெற்றியீட்டுவார். ஆகவே வீடு திரும்புகையில் தாராளமாகக் கொறியல்கள் கிட்டும். சவாரியின் போது அவரின் ஒரேயொரு செயற்பாடு தான் கொஞ்சம் மனதுக்கு வேதனைதரும். சவாரியின் போது கைகுள் ஒரு கட்டை வைத்திருப்பார். அதன் முனையில் கூரிய ஒரு ஆணி. மாடுகளை வேகமாக ஓடச்செய்ய அதனால்க் குத்துவார். பரிதாபமாக இருக்கும். தோட்ட விவாசயத்திற்காக இரண்டு வடக்கன் மாடுகளும் பெரிய வண்டிலும் வைத்துள்ளார். மாடுகளை மிகவும்

தொடர்தல் 104ம் பக்கம்

# எல்லை வேலியை...

103ம் பக்கத் தொடர்ச்சி...

அக்கரையுடன் பராமரித்து வருவார்.

எமது கிராமத்தில் விவசாயம் செய்யாதவர்கள் தவிர ஏனையோரின் வேலி பூவரசமரக் குளைகள் யாவும் சின்னண்ணைக்குத்தான். பூவரசம் குளை சிறந்த பசுமை உரம் (Green manure) புகையிலை மற்றும் சிறுபயிர்கள் செய்வோர் அதனை தோட்டங்களில் புதைப் பார்கள். குளை வாங்கிய வீடுகளில் சின்னண்ணை வேலியில் உள்ள கிளைகளை வெட்டிச்சிறாய்ப்பார். கதியால்களை வீட்டாருக்குக் கொடுத்துவிட்டு குளைகளைத் திரட்டிச் சிறுசிறு கட்டுகளாகக் கட்டி தனது பெரிய மாட்டு வண்டியில் ஏற்றிப் புன்னாலைக் கட்டுவன், ஈவினை போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று காசாக்கி விடுவார். கணிசமான இலாபம் கிடைக்கும். நானும் எனது நண்பர் குழாமும் சின்னண்ணைக்கு குளை பொறுக்கி கட்டாக்குவதில் உதவி செய்வோம் எங்களுக்கும் தகுதிக்கு ஏற்ப காசுகிடைக்கும். ஆகவே சின்னண்ணை கிராமத்து இளவட்டம் முதல் எல்லோரது அபிமானத்துக்கு உரியவராய் இருந்தார். வருடாவருடம் அவருக்கு விவசாயத்துடன் துணைத்தொழிலாகவும் இது இருந்து வந்தது.

அன்று மாலை சின்னண்ணை குளை விற்று விட்டு வீடுதிரும்புகையில் அவரது வண்டியில் ஒரு அம்மா உட்கார்ந்திருந்தார். ஒரு இறங்குப் பெட்டியும் உடன் வந்தது. மறு நாட்காலை பத்து மணிக்குள் விசயம் ஊரெல்லாம் பரவி விட்டது. சின்னண்ணை ஒரு பொம்பிள்ளையைக் கொண்டுவந்து விட்டாராம் என்றது செய்தி. சந்திக்குச் சந்தி குசுகுசுப்பு. இது கலிகாலம் என்றது ஒரு கும்பல். இவனுக்கு என் இந்த வயதில் இந்த எண்ணம் என்றது இன்னொரு கும்பல்.

இரண்டொருநாள் சென்றது அப்பெண்மணி யாரென்பதை அறிந்து கொள்ள. அதற்கான உதவி ஊரில் உள்ள வயதானோர் மூலமாகக் கிடைத்தன. சில உண்மைகள் வெளியாயின. சின்னண்ணையின் குடும்பம் விவசாயக் குடும்பம். பெரிதாக இல்லாவிட்டாலும் வசதியோடு வாழ்ந்தது ஏகபுத்திரனான சின்னத்தம்பி எனும் சின்னண்ணை செல்லப்பிள்ளையாக வலம் வந்தார். சின்னண்ணைக்குப் படிப்பில் ஆர்வமில்லை. சிறப்பாக பள்ளிக் கூடத்தில் இருவருடத்துக்கு ஒருவகுப்பாக உபாத்தியாகளின் கருணையால் முன்னேறினார். சிறாப்பர் பாடசாலையை விட்டு கந்தரோடைக்கு அனுப்பிப் பார்த்தனர் அது அப்போ ஒரு சிறிய ஆங்கிலப்பாட சாலையாகவே இருந்தது. ஆனால் சின்னண்ணையின் வேறோரு திறமை அங்கே அவரை துலங்கச் செய்தது. படிப்பு அங்கேயும் அதேகதிதான். ஆனால் எல்லா விளையாட்டுக்களிலும் சின்னண்ணை முன்னணி வீரர். ஆனால் எப்படி முயன்றும் சின்னன்னையால் எட்டாம் வகுப்புக்கு மேலே தாண்டமுடியவில்லை.



**வீடு திரும்புகையில் அவரது வண்டியில் ஒரு அம்மா உட்கார்ந்திருந்தார். ஒரு இறங்குப் பெட்டியும் உடன் வந்தது. மறுநாட் காலை பத்து மணிக்குள் விசயம் ஊரெல்லாம் பரவிவிட்டது.**

அப்போது சின்னண்ணையின் வாழ்க்கையில் ஒரு முக்கிய சம்பவம் ஏற்பட்டது. சின்னண்ணையின் மேல் பல பெண்களின் பார்வை பட்டாலும் அவர் கண்களுக்குப்பட்டது செல்லம்மாளின் அழகு. வீட்டுப் படலையில் சிறுநகையொன்றுடன் தொடங்கிய சகவாசம் வீட்டின் பின்புற வேலிக்கு மேலாகக் கண்டு களிப்பது வரை முற்றிவிட்டது. அதன் மணம் செல்லாம்மாளின் பெற்றோரின் நாசிகளுக்கும் எட்டியது. அவர்கள் குடும்பம் கொஞ்சம் பசையான குடும்பம். வேலை வெட்டியில்லாத காவாலிக்கு காதல் ஒரு கேடா என்றனர் செல்லம்மாளின் பெற்றோர். செல்லம்மா கிணற்றில் குதிக்கும் வரை அவர் காட்டிய எதிர்ப்பு பயன் தரதவில்லை. அவசர அவசரமாக ஒரு தேயிலைத் தோட்டத்துப் பாடசாலை ஆசிரியருக்கும் அவருக்கும் திருமணம் நடந்தது. அவரும் கணவருடன் டொலஸ்பாகே தேயிலைத் தோட்டம் போய்விட்டார். இனி அந்த ஊர்ப்பக்கம் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டேன் என்று வெகு சினத்துடன்கூடிய சபதத்துடன் தான் செல்லம்மா கணவனுடன் சென்றார். அவர்கள் வாழ்க்கை எப்படியோ ஓடியது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் திடீரென வந்த மாரடைப்பு அவர் கணவனைக் கொண்டு சென்று விட்டது. திக்குத் தெரியாமல் நின்ற செல்லம்மாவுக்கு தேயிலைத் தோட்ட நிர்வாகம் provident fund எனச் சில ஆயிரங்களைக் கொடுத்தது. தந்தையார் இறந்து விட்டமையால் தனியே வாழ்ந்து வரும் தாயார் தன்னுடன் வந்து வசிக்குமாறு அழைத்தா. செல்லம்மா மறுத்துவிட்டார். ஈவ்வினையில் வாழும் அவர் கணவரின் சகோதரி தம்முடன் வந்து வசிக்குமாறு கெஞ்சிக் கேட்டார். மறைந்த அண்ணன் நினைவாக அவரைக்காண ஆசைப்படுவதாக கேட்டமையால் அங்கே சென்றவருக்கு இராச மரியாதை. ஆனால் இரண்டு வருடங்களில் அவரிடம் இருந்த பணம் பறிபோய் விட்டது. இப்போ அவர் அவ்வீட்டாரின் ஊதியமற்ற வேலையாள்.

குளை பறித்து விட்டு சற்று ஓய்வாக கடை ஒன்றின் முன் உட்கார்ந்திருந்த சின்னண்ணன் அக்கடையில் ஏதோ வாங்கிக் கொண்டிருந்த பெண் ஒருவரைக் கண்டதும் திகைத்துவிட்டார். சேல்லம்மாவா? 30 வருடங்களின் பின்னர் பார்க்கிறார். செல்லம்மா அவரைக் கவனிக்கவில்லை. கூப்பிடுவோமா, விடுவோமா என்ற மனப்போராட்டம். கடைசியில் ஆசை மிஞ்சியது. செல்லம்மா என்றார். திரும்பிய செல்லம்மாவின் கண்களில் இருந்து சொரிந்த நீர் அவர் இன்னும் பழைய ஞாபகங்களுடன் தான் வாழ்கிறார் என்பதைப் புலப்படுத்தியது. ஒரு வறட்டுச் சிரிப்பினை உதிர்த்து விட்டு அவர் வேகமாகச் சென்று விட்டார். "பாவம் அண்ணை! புருஷன் இரண்டு வருடத்துக்கு முன்னர் இறந்துவிட்டார். மச்சாள் வீட்டில் வந்து இருந்து கஷ்டப் படுகிறது" என்றார் கடைக்காரர். இரண்டொரு நாட்களின் பின்னர் ஒரளவுக்கு இருவரும் சாதாரணமாக கதைக்கத் தொடங்கினர். தான் படும் அல்லலை அவர் கூறினார். சின்னண்ணைக்கு ஒரு முடிவு தெரிந்தது. அதை எடுத்துக் கூறவும் அவர் தயங்கவில்லை வாதப்பிரதி வாதங்கள் நடந்தன. அதன் முடிவு தான் செல்மாவின் மாடு வண்டிப் பிராயணம்.

ஒவ்வொரு ஊரிலேயும் பொம்பிளைகளைக் கொண்ட ஒரு வம்பர் குழாம் இருக்கும்தானே. ஆலங் குளையிலும் அதற்கென்ன குறை. "என்னடி அம்மா கொப்பன் இப்படித் தறிகொட்டுப்போய் நிற்கிறான் இந்த வயதில்" என்றது அந்தக் குழாம். "எனது அம்மா இறக்கும் பொழுது எனக்கு வயது ஏழு. இப்போ 25. இந்தப் 18 வருடமும் எனக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து எனக்காக வாழ்ந்தவர் எனது அப்பா. இனியாவது அவர் தனக்காக வாழட்டும் நீங்கள் நிம்மதியாய் போங்கோ என்றார் சின்னண்ணையின் மகள். "இது நல்ல விண்ணாணம் என்று கோபித்துக் குரலெழுப்பியபடி தம்மது ஜம்பம் பலிக்காத ஏமாற்றத்துடன வெளியேறியது வம்பர் குழாம். மறுநாள் சனிக்கிழமை காலை. மாகியப்பிட்டியில் குளை வெட்டுவதற்காக சின்னண்ணை வண்டி பூட்டி வெளிக்கிட்டார். எனது நண்பர் குழாத்துடன் நானும் வண்டியில் ஏறினேன். நண்பர்கள் சிலர் "மாப்பிள்ளை வந்தார். மாப்பிள்ளை வந்தார். மாட்டு வண்டியிலே" எனப்பட்ட வேறு சிலர் பூவரசம் இலையில் நாதஸ்வரம் வாசித்தோம். அண்ணன் சிரித்தபடி என்னைப் பார்த்து, "எடேய் இனிமேல் குளை பொறுக்குவதற்கு முன்போல் உங்களுக்குக் காசுதர மாட்டேன்" என்றார். "ஏன் சின்னண்ணை"? என்றேன். இன்னொரு ஜீவனுக்கும் சாப்பாடு போடவேண்டுமெல்லே காசு மிச்சம் பிடிக்க வேண்டாமோ? என்றார் சின்னண்ணன். நாங்கள் சிரித்தோம். அண்ணனைப் பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரியும்.



kanagasabapathy.p@thaiveedu.com

# உறவுகள் பல...

100ம் பக்கத் தொடர்ச்சி...

இதற்காக எத்தனையோ மிட்டாய்களையும் குப்புத்தடிகளையும் வீணாக்கியிருக்கின்றார். சில சமயங்களில் பொறுமையை இழந்து முதுகிலே தட்டுவார், நான் அழுவேன். நோகாதுபோனாலும் பாடம் முடியட்டும் என்று அழுவேன், தூக்கி முத்தமிடுவார். நித்திரையாக்கும்பொழுதும், 'எங்கே சொல் த-ச-ர-தன்' என்று அழுத்துவார். அதைக்கேட்டதும் எனக்குத் தூக்கம் வந்து விடும். 'தசம்' என்றால் பத்து, 'ரதம்' என்றால் தேர் என்ற பொருளை அவர் எனக்கு விளக்கிச் சொன்னதாக ஞாபகமில்லை.

பசுபதி அண்ணர் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் வேலை பார்த்தவர். அங்கு வெளியிடப்படும் சிறுவர்களுக்கான நூல்களைக் கொண்டுவந்து படிக்கச்சொல்லி வாசிப்புப் பழக்கத்தையும் ஏற்படுதினார்.

'ஈழகேசரி'ப் பத்திரிகையை எனக்கு அறிமுகஞ்செய்து வைத்தவரும் அண்ணர்தான். அதிலுள்ள 'பாலர் பகுதி'யில் வரும் கதைகளையும் கட்டுரைகளையும் படிக்கச்சொல்லிக் கேள்விகள் கேட்பார். 1943ல் இவரைக் காண முதன் முறையாக நான் திருமகள் அழுத்தகத்துக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது அங்கு சரஸ்வதி பூசை நடந்துகொண்டிருந்தது. கலைவாணியின் கருணைபோலும் பிற்காலத்தில் திருமகள் அழுத்தகத்தாருடன் நெருங்கிய உறவு ஏற்படலாயிற்று.

எமதூர்ப் பிள்ளையார் கோயிலில் மார்க்கண்டையர் என்ற அந்தணப் பெருந்தகை பூசை செய்துவந்தார். பூசை நடக்கையில் நான் சேமக்கலம் அடிப்பேன். பரிசாக ஐயர் அவர்கள் தாமரை இலையில் அமுதளிப்பார். பிள்ளையார் என்னை ஆட்கொண்ட விதம் இவ்வாறாம். சேமக்கல அடிப்பு தாளலய உணர்வுக்கு அத்திவாரமிட்டது.

மேலும், திருவிழாக் காலங்களில் திருவாளர் சுப்பையாபிள்ளை அவர்களின் தலைமையில் கூட்டுப்பாடல் நிகழ்ச்சி நடக்கும். மத்தளத்தை அடித்தவாறு பாட்டுக்களைப் பாடுவார், பக்தர் கூட்டம் தொடர்ந்து பாடும். இந்தக் கூட்டத்தில் நானும் ஒருவனாக இருந்து பாடுவேன். இவர் ஓர் இராமலிங்க பக்தர். இராமலிங்க சுவாமிகளின் அருட்பாக்களையே பெரிதும் பாடுவார்.

*நடராசர் எல்லோர்க்கும் நல்லவரே – அவர்*
*நல்லதெல்லாம் தர வல்லவரே*

என்று தொடங்கும் பாடலை அடிக்கடி பாடுவார். பாடுகின்றபொழுது சந்தங்கள் தொனிக்கப் பிரித்துப் பிரித்துப் பாடுவார். அதற்கேற்ப மத்தளம் பேசும். திரு. சுப்பையாபிள்ளை அவர்களின் இந்த அரும்பணி எனக்களித்த பரிசு சந்தத் தொனி விளக்கம்.

வீரபத்திரக் கடவுள் எமது குலதெய்வம். வீட்டுக்குப் பக்கத்தில் அவரது ஆலயம். திருவாளர் தம்பு என்பவர் மூலம் வீரபத்திரர் வெளிப்படுவது வழக்கம். பறைமேள அடிப்புக்கேற்பத் தெய்வம் ஆடிக்களிக்கும். பறை மேளம் அடிக்கையில் இலகுவான, அளவொத்த காலம் குறிலாகவும் நெடிலாகவும் வேகத்தைப் பொறுத்துப் பின்பற்றப்படும். இந்தப் 'பறை மேளத் தாளத்தை'ப் பிற்காலத்தில் எனது கவிதைகளில் முறையாகப் பயன்படுத்தியிருக்கிறேன்.

உடுக்கடி ஓசையையும் உடுக்கடிகாரரின் பாட்டுக்களையும் தனது ஆலயத்தில் கேட்டுக்களிக்கும் வாய்ப்புக்களையும் வீரபத்திரப் பெருமான் தந்தருளினார். முத்து மாரி, நல்ல தங்காள், சாவித்திரி என்பன நான் கேட்டு அனுபவித்த உடுக்குக் கதைகளுட் சில.

இவையெல்லாவற்றிலும் மேலாக என்னைக் கவியாட வைத்தது நான் கண்டு களித்த இயற்கை வளப்பமாகும். கவிதை இலக்கணத்தை நான் யாரிடமும் கற்றவனல்லன். ஒருவனைக் கவிஞனாக்குவது அவனின் இயற்கையுணர்வுத் திறனே என்பதனை என் அனுபவ வாயிலாகக் கண்டிருக்கிறேன்.

நுணாவிலூர் எனது பிறப்பிடம், முல்லையும் மருதமும் நெய்தலும் சேர்ந்த சிறப்பிடம். அழகான தாமரைத் தடாகங்கள், பரந்த நெல் வயற் பரப்புகள், தென்னந்தோப்புகள், பனங் கூடல்கள், பற்றைக் காடுகள்...

குழைக்காடு என்றால் பலருக்குக் கோபம் வரும், எனக்கு இன்பத்தேனாய் இனிக்கும். குழைக்காட்டின் குளிர்ச்சியிற் குளித்தெழும் சுகம் பரம சுகம்.

நுணாவிலூரின் வளப்பத்தையும் பெருமையையும் 'ஈழநாடு' வார இதழில் தொடர் கட்டுரைகளாக எழுதினேன். வேலைப் பழுக்களின் அதிகரிப்பால் கல்வயற் பகுதிபற்றி ஆராய்ந்து எழுத வாய்ப்புக் கிடைக்கவில்லை. கல்வயல் கவிஞர் வே. குமாரசாமி அவர்களைக்கொண்டு அந்தப் பணியை முடிக்க எண்ணியிருந்தேன். அதற்கு முன்னதாகவே 'நுணாவிலூர்' நூல் வெளிவரநேர்ந்துவிட்டது.

நுணாவிலூரின் இயற்கை வளம் என்னைக் கவிஞனாக்கிய வித்தைப் பலவாறு பாடிக் களித்திருக்கின்றேன். எனது 'பாடு மனமே' என்ற கவிதைத் தொகுப்பிலுள்ள 'ஓருருவம் ஒளியுருவம்' என்ற பாடலில் இது வெளிப்படையாகவே பேசப்படுகின்றது. அதன் ஒரு பகுதி இது:

*இயலிசையிற் கிளிகுயில்கள் நாட கத்தில்*
*இனியமயிற் சோலைவள நுணாவி லூரின்*
*வயல்வெளியின் பருவவெழில் தண்ணென் காட்சி*
*வரம்பினுயர் பூக்குளங்கள் வழங்கும் மாட்சி*
*அயலழகுப் பனங்கூடல் காட்டும் மீட்சி*
*ஆனைமுகன் செலுத்துமருள் ஆட்சி யென்றே*
*செயலற்றந்து திளைத்தின்புற் றொன்றி மூழ்கித்*
*தெவிட்டாத துறுதலையாய்த் திரிந்த காலை*

*ஓருருவம் ஒளியுருவம் ஒருநாள் வந்தென்*
*னுள்ளுணர்வைத் தெருட்டியருள் ஊற்றொன் றூன்றக்*
*கார்முகிலாய்க் கோடைமுகில் மாற்றங் கண்டு*
*கனத்தமழைக் கடலொழியக் காலம் வந்த*
*நீர்மைதனைப் போலமிகக் கனிந்து நெஞ்சம்*
*நின்றுண்மை விளக்கத்தில் நேராய்ப் பார்க்கும்*

*பார்வையினிற் படுகின்ற ஒவ்வொன் றுள்ளும்*
*பலகவிதைப் பொருள்வெளிக்கக் கண்டே னம்மா!*

இவ்விதம் நான் பிறந்த குடும்பமும் வளர்ந்த சூழலும் இலக்கிய உலகத்தில் நான் பறந்து திரியச் சிறு சிறு சிறகுகளை முளைக்கச் செய்தன.



kandavanam.v@thaiveedu.com

# Thinking of Buying or Selling!!

## First Impression Counts

**A stage home will sell for more and faster**
**I provide home staging for all my listings**

**SOLD FOR OVER ASKING PRICE**

**Markham Rd/14th Ave**




3 Bedrooms, 3 washrooms

**Markham/14th Ave**




3+2 Bedrooms, 4 washrooms

**Bovaird/Chincousey**




4 Bedrooms, 3 washrooms

**Markham/Steeles**




3 Bedrooms, 2 washrooms

**Introducing Home Life Unique Home Warranty Program.**
**I can offer your buyers peace of mind by warranting your home**
**For one Full year from closing**

Warranted homes sell up to 15% faster than
unwarranted homes and offer selling price up to 3%more

**Edenbrook/Chingacousy**




4+1 Bedrooms, 4 washrooms

**9th Line/14th Ave**




3+1 Bedrooms, 3 washrooms

**Danforth / Midland**




2+1 Bedrooms, 2 washrooms

**9th Line/ 14th Ave**




3 Bedrooms, 3 washrooms

**புதுவருட, தைப்பொங்கல் வாழ்த்துக்கள்**



Thanks to all my
clients for their
continuous support

HOMELIFE 25 ANNIVERSARY

PLATINUM CLUB
AWARD - 2010
WINNER

**Raja V.S. Rajagopal**
Sales Representative
**416.727.8647**

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc.,**
**Brokerage***
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
**B: 905.201.9977 F: 905.201.9229**
MLS MULTIPLE LISTING SERVICE®


மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
Wanless/Hurontario
For Sale
$449,900
Detached 2- Storey,
4+1 Bedrooms,
4 Washrooms
Warden/407
SOLD
$299,900
Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms
Veterans/Touchette (Barrie)
Sold
$279,000
Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$699,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$535,000
Detached Bangalow
The Gore/Ebenezer
Sold
$399,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/Ebenezer
Sold
$397,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/ Hwy 7
Sold
$1,100,000
Detached 2- Storey, 4+2 Bedrooms, 5 Washrooms
Brisdale/Sandalwood
Sold
$370,000
Detached 2-Storey
Bovaird/Worthington
Sold
$428,000
Detached 2-Storey
Cottrelle /Gore
Sold
$469,000
Detached 2-Storey
The Gore/Ebenezer
Sold
$680,000
Detached 2-Storey
Bellamy / Lawrence
Sold
$358,000
Detached Bungalow, 3+2 Bedrooms, 3 Washrooms
Markham Rd/14th Ave
Sold
$393,000
Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Markham/14th Ave
Sold
$421,000
Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms
Hwy 10/Bovaird
Sold
$272,750
Semi-Detached 2 Storey
Vankirk / Mayfield
Sold
$363,500
Detached 2-Storey
-digi Media-
நல்ல நிலையில் இயங்கிவரும்
Banquet Hall விற்பனைக்குண்டு.
Please call for more details.
Call before you list,
See the Difference!!!
TOP PRODUCER - 2009
Top 5% Sales Person in Canada 2009
HOMELIFE
HIGHER STANDARDS
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும். இந்த நோக்குடன் “தாய்வீடு” பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், ‘தாய்வீடு’ தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*

## ஆழத்து முத்துக்கள் 40

# முதுபெரும் கலைஞன் என்.எஸ். மணியம்

**- சேகர் தம்பிராஜா -**

கடந்த இருபது ஆண்டுகளாக மேடையலங்காரம், ஒப்பனை ஆடையமைப்பு, காட்சியமைப்பு, நாடகம், கூத்து, நாடக நெறியாள்கை என பன்முகப்பட்ட விடங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வரும் ஒரு கலைஞனின் பதிவாக இம்மாத ஆழத்து முத்துக்கள் பகுதியமைகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை என்ற வளம் நிறைந்த பிரதேசத்தில் கலைஞர்கள் பலர் வாழ்ந்து வந்ததை, வருவதை தமிழ் கலையிலக்கிய உலகம் நன்கறியும். அந்த முள்ளியவளைக் கிராமத்தில் ஒப்பனை, எழுத்து, ஓவியம், காட்சியமைப்பு, நடிப்பு, கூத்து, நெறியாள்கையென மிகுந்த ஈடுபாட்டுடன் கலைப்பணி ஆற்றி வந்த திரு.நடேசு சுப்பரமணியம் (என்.எஸ். மணியம்) அவர்களின் கலைவாழ்வு இங்கு விரிகிறது.

முள்ளியவளை என்பது பத்துக் கிராமங்களுக்கு நடுவில் காணப்படுவதால் கூடிப் பல கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் இடமாக இருந்தது. கோலாட்டம், கும்மி, நாடகம், நாட்டுக் கூத்து என பல்துறைக்கலைஞர்கள் வழிமுறை வழி முறையாக வாழ்ந்து வந்த ஒரு ‘கலை பிறந்த மண்’ ஆக இருந்து வருகிறது.

அழகியலில் இருந்த ஆர்வத்தினால் தன்னை அடையாளப்படுத்திக்கொள்வதற்கான சாதனமாக இத்துறையில் இறங்கி இன்று அவரது பெயரை இக் கலைச்சமூகம் உச்சரிக்கும் அளவுக்கு அடையாளப்படுத்தியுள்ளார். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பனை துறையில் ஈடுபட்டு வரும் இவருக்கு ஓவியத் துறையிலும் நாட்டம் இருந்ததனால் தனது ஒப்பனைத்துறைக்கும் காட்சியமைத்தலுக்கும் ஓவியம் பெரிதும் உதவியாக அமைந்தது என்கிறார். தேடலும் கற்பனையும் அழகியல் நுகர்வும் அனுபவமுந்தான் இந்தத் துறையில் முள்ளியவளை மூன்றாம் வட்டாரத்தில் பிறந்த இவர், ஆரம்பக் கல்வியினை முள்ளியவளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் இடை நிலை, உயர்தரக் கல்வியினை முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியிலும்



கற்றார். தனது சிறுபராயத்தில் இருந்தே நாடகங்கள் நடித்து வந்த இவருக்கு முள்ளியவளை கலைத்தாய் நாடக மன்றத்தின் ஊடாக பெயர் பெற்றன. இந்த இரண்டு வகைக்குள்ளும் அடங்காத தனித்துவமான கூத்துகள் வன்னியில் இருந்ததாகவும் அவை இன்று மறைந்து விட்ட தாகவும் ஆனால் முல்லைதீவுக்கே உரிய கோவலன் கூத்து இன்றும் அங்காங்கே ஆடப்பட்டு வந்தததாகவும் குறிப்பிடுகிறார். இந்த கூத்து எந்தக் கூத்தையும் தழுவாதது. இதில் வருகின்ற ஆட்டம், பாட்டு, உடைகள் எல்லாமே வித்தியாசமானவை என ஆராய்ந்த அறிஞர்களான முல்லைமணி, கலாநிதி ரகுநாதன், கலாநிதி அருந்தாகரன் போன்றோர் இதனை ‘முல்லைமோடிக் கூத்துக்கள்’ என வரையறை செய்து இது வன்னிக்குரிய தனித்துவக் கூத்துவடிவம் எனப் பதிவு செய்துள்ளனர்.

இந்தக் கூத்து எங்களின் சொத்து. இந்த வகையான கூத்துக்களில் பலதரப்பட்ட வேடங்கள் தாங்கியிருக்கும் இவர் 1974ஆம் ஆண்டு கொழும்பு லும்பினி மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் நாடக விழாவில் கோவலன் கூத்தினை மேடையேற்றி முதலிடம் பெற்றது மட்டுமன்றி இதில் பாண்டியனாக நடித்து சிறந்த நடிகருக்கான விருதினையும் பெற்றுள்ளார். இவற்றை விட 1980ஆம் ஆண்டு யாழ் கலை இலக்கிய வட்டத்தால் ‘நாட்டுக்கூத்துக் காவலன்’ விருதும் 2006ஆம் ஆண்டு வன்னி நுண்கலைப் பீடத்தால் ‘முதுபெரும் கலைஞன்’ என்ற விருதும் வழங்கப்பெற்ற பெருமைக்குரியவர். இவற்றை விட சிறந்த ஒப்பனையாளர், சிறந்த நெறியாளர் எனப் பல பரிசில்களை அவ்வப் போது பெற்றிருக்கிறார்.

கூத்துகலையில் உள்ள நுணுக்கங்களாகிய ஆட்டம், தாளம், பாட்டு நன்கு தெரிந்திருப்பதோடு எப்படித்தான் ஆடிக்களைத்திருந்தாலும் ராகம், சுருதி பிசகாமல் பாடக்கற்றுக்கொள்ள வேண்டும். நடிகனுக்கும் பிற்பாட்டுக்காரனுக்கு வன்னிப் பெருநிலப்பரப்புக்கென 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நாட்டுக்கூத்துப் பாரம்பரியம் உள்ளது. கோவலன் கூத்தினை இப்பொழுது ஐந்தாவது தலைமுறையும் ஆடுகிறது. இவற்றை விட வெடியரசன் கூத்து, நொண்டி நாடகம், கண்ணன் கூத்து போன்றவையும் கோவலன் கூத்தைப் போல நீண்ட பாரம்பரியத்தை கொண்டு வட்டக்களரியில் ஆடப்படுபவை எனவும் கோவலன் கூத்தைத் தவிர மற்றவைகள் இப்பொழுது வழக்கொழிந்து போயுள்ளதாகவும் கூறிகிறார். இக்கோவலன் கூத்து முள்ளியவளை, வற்றாப்பளை, சிலாவத்தை, முள்ளிவாய்க்கால் பகுதிகளில் ஆடப்பட்டு வந்ததாகவும், விசேடமாக முள்ளியவளையைச் சேர்ந்தவர்கள் ஆண்டுதோறும் ஆடி வந்ததுடன் அவற்றை வெளியிடங்களிலும் சென்று மேடையேற்றியதாகவும் குறிப்பிடுகிறார்.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற வட மாகாண இலக்கிய விழாவில் அண்ணாவியார் ஆ.பாலசுந்தரம் அவர்களுடன் இணைந்து தானே நெறியாள்கை மற்றும் ஒப்பனை செய்த கூத்தென்றினை மேடையேற்றிய பெருமை அவர் மிளிர்வதற்கு காரணமாக அமைந்தது. இவற்றோடு அந்தக் காலங்களிலே ஒப்பனை சிறப்பாக அமையவேண்டும் என்பதற்காக - பொருளாதார நிலைமைகளை கருத்தில் கொள்ளாது சீனாவில் இருந்து ஆடைகளை இறக்குமதி செய்து நாடகங்களுக்கு, கூத்துக்களுக்கு பயன்படுத்தியவர் இவர்.

நாடக ஒப்பனை பற்றி நன்கு தெரிந்திருக்கும் இவர், “ஒப்பனைத்துறையில் வெற்றிபெற வேண்டுமானால் நாடகம் பற்றிய ஓர் ஆழமான அறிவு வேண்டும்” என்கிறார். மேலும், “ஒப்பனைக்குரிய பாத்திரத்தின் தன்மையையும் பாத்திரத்தின் வயதெல்லையையும் வாழ்ந்த காலத்தையும் முக்கியமாக கருத்திற் கொண்டு முகவலங்காரம், உடையலங்காரம் முதலிய ஒப்பனைகளையும் மேடையமைப்பையும் செய்ய வேண்டும்” என்கிறார். “அரச நாடகமாகவிருந்தால் மன்னன், மந்திரி, சிப்பாய் போன்ற பாத்திரங்களுக்கு கீழுடை கட்டுவதில் இருக்கும் வேறுபாடுகளை கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் உயரமானவரை உயரம் குறைந்தது போல் காட்டுவது, உயரம் குறைந்தவரை உயரமானவராக காட்டுவது போன்ற உடையலங்காரத்தில் இருக்கும் நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும்” என்றும் செல்கிறார்.

அண்ணாவியார் பாலசுந்தரத்தின் நெறியாள்கையில் ‘அமுதாவின் ஆசை’ எனும் நாடகத்தில் நடித்தது ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அதனை தொடர்ந்து முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்களின் நெறியாள் கையில் பண்டாரவன்னியன் நாட்டுக்கூத்தில் பண்டாரவன்னியனாகவும் அதனைவிட மார்க்கண்டேயர், இலங்கேஸ்வரன் ஆகிய நாடகங்களில் நடித்தமை இவரது நாடகத் துறைக்கு ஆரம்பப் படியாக அமைந்தவை. இவற்றுடன் கொள்ளைக்காரன், சங்கிலியன், அரிச்சந்திரா, கண்ணகி, அவனைக் கொன்றவன் நீ எனும் நாடகங்களிலும் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர் என்.எஸ். மணியம் அவர்கள்.

இதுமட்டுமன்றி ஊர் திருந்தட்டும், பறந்தார் பத்தாயிரம், சூரப்பன், எல்லாளன் போன்ற நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றியுளார். இவற்றோடு நின்று விடாது கோவலன் கூத்து, பண்டாரவன்னியன் கூத்து என்பவற்றை முப்பது வருடங்களுக்கு மேலாக நெறியாள்கை செய்து மேடையேற்றி வந்துள்ளார். 1995ஆம் ஆண்டில் பண்டாரவன்னியன் நாடகத்தை யாழ் பல்கலைகழக மேடையில் ஆரம்பித்து 22 மேடையேற்றங்களைக் கண்ட பெருமை இவரைச்சாரும். நாட்டுக்கூத்து எனப்படும் போது வடஇந்திய, தென்னிந்தியக் கூத்துக்கள்தான் வடமோடி, தென்மோடி எனப் மிடையில் ஒத்துப் போகும் தன்மை என்பது முக்கியமாகப் பின்பற்றப்படவேண்டும். இவை தான் நல்லதொரு கூத்துக் கலைஞனை உருவாக்கும் என்று தனது அனுபவத்தை விபரிக்கிறார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் அண்ணாவியாரை தனது மானசீக குருவாக ஏற்றுக்கொள்ளும் இவர் “இன்றைய கால கட்டத்தில் குருபக்தி என்பது முற்றாக அழிந்து விட்ட நிலை காணப்படுகிறது. ஆனால் பாரம் பரிய நாடகங்களைப் பொறுத்தமட்டில் குரு சிஷ்ய முறையைப் பின்பற்றி கையாள்வது அவசியம்” என தனது வாதத்தை முன்வைக்கும் இவர், “இளங்கலைஞர்களுக்குக் கலையார்வம் மட்டுமன்றி கீழ்ப்படிவும் அவசிய மானதாகும்” என்கிறார். “பாரம்பரியக் கலை வடிவங்களாகிய கூத்து வடிவங்களை இந்த இளந்தலைமுறையினரும் கல்விமான்களும் அழிந்துபோகாமல் பாதுகாத்து முன்னெடுத்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்ல வேண்டிய தலையாய கடமை உள்ளது” எனத் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தும் இவர், நடந்து முடிந்த பேரும் போரில் எமது பண்பாடு, பாரம்பரியம், கலைகள் என்பனவும் அழிந்து போயுள்ளதாகத் தனது வேதனையையும் வெளிப்படுத்துகிறார்.

இவருக்குரியதாகிறது.

இவ்வாறு பாரம்பரிய கலைகளுடன் தனது வாழ்வைக் கொண்டு சென்ற இவர் இக் கூத்துகள், நாடகங்களுக்கு முக்கியமானவையாக விளங்கும் திரைச் சேலைகள், ஒப்பனைப் பொருட்கள் மற்றும் ஆர்மோனியம், உடுக்கு போன்ற இசைக்கருவிகள் என மேடைக்கு தேவையான அத்தனை பொருட்களையும் சேகரித்து வைத்திருந்து மேடையளிக்கைகளின் போது பயன்படுத்தியும், தனது குடும்பப் பொருளாதாரத்திற்கு உதவியாக அவற்றை வாடகைக்கு கொடுத்தும் கலையும் குடும்பமுமாய் வாழ்ந்து வந்தவர்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுப் போரின் போது, அவ்வப்போது இழப்பதும் மீண்டும் சேகரிப்பதுமாக இருந்தாலும் இன்று எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாக வவுனியாவில் வாழும் போதும் ஒப்பனை மற்றும் மேடை அலங்காரப் பொருட்களை மீண்டும் சேகரித்து தனது கலைவாழ்வைத் தொடர்வதில் நம்பிக்கையுடனும் உறுதியுடனுமுள்ளார்.



sekar.thambyrajah@thaiveedu.com

இணையத்தளத்திலும் ‘தாய்வீடு’

www.thaiveedu.com

## ஆழத்து முத்துக்கள் 41

# ஈழக்கூத்தன் தாசீசியஸ்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

அமைதியான அன்பொழுகும் பேச்சு, அற்புதமான சொற்பிரயோகம் யாழ்ப்பாணக் காத்தான் கூத்து, கத்தோலிக்கக் கூத்து, மட்டக்களப்பு வடமோடிக் கூத்து, கண்டிய நடனம் என்று கூத்தின் சகல பரிமாணங்களையும் பயின்றவர். சிறந்த கூத்துப்பாடகர். குரல் தொடக்கம் மூச்சு என்ற மூலாதாரம் பயிற்சி வரை



பயிற்றுவிக்கும் பட்டறை ஆசான். சிறந்த நடிகர், நாடக நெறியாளர், நாடகாசிரியர் என்று மொத்தத்தில் தன்னை 'நாடகன்' என்று அழைப்பதில் பெருமை கொள்ளும் மாபெரும் கலைஞன் ஏ.சி. தாசீசியஸ் அவர்களைப் பற்றி எழுதுவது மகிழ்ச்சியைத் தருகிறது

ஈழத்தின் வடபுலமான யாழ்ப்பாணத்தின் தாழையடி என்ற ஊரில் பிறந்த இவர் நாட்டின் நிலைமை காரணமாக 85இலிருந்து இலண்டனில் வாழ்ந்து வருகிறார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற காலத்தில் தனது ஏழு வயதில் பாரதியார் வேடம் ஏற்று தனி நடிப்புக்கான முதற்பரிசைப் பெற்றதிலிருந்து கனடா இலக்கியத் தோட்டம் வழங்கிய வாழ்நாள் இயல் விருதையும் தாண்டி இன்றும் கலையில் பயணித்துக் கொண்டிருக்கிறார்.

2007இல் ரொரன்டோ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இலக்கியத் தோட்டத்தின் விருது வழங்கும் வைபவத்தில் தாசீசியஸ் அவர்கள் பற்றிய சிறப்புரை ஆற்றும் பெருமை எனக்குக் கிடைத்தது. அதில் குறிப்பிட்டது போல் இவருக்குப் பத்து வயதாக இருக்கும் போது பாடசாலை நாடகமொன்றில் குசேலரின் மூத்த மகனாக மேடையில் பாடி ஆடி நடித்தபோது இவரது மெய்மறந்த நடிப்பைப் பார்த்து பார்வையாளர்கள் பெரிதாகச் கரகோஷம் செய்தனர். காரணம் அணிந்திருந்த உடைகளன்று மேடையில் அவர் நிர்வாண நிலையிலிருந்தார். தாசீசியஸ் அவர்கள் தனது ஏற்புரையில் இச்சம்பவத்தைக் குறிப்பிட்டு இந்த நிர்வாண விபத்தே தன்னை நாடகத்தில் நிலைப்படுத்திய சம்பவம் என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண சம்பத்திரிசியார் கல்லூரியில் உயர் வகுப்புப் பயின்ற இவர் 1962இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவரின் ஆசான்கள் பேராசிரியர்கள் மு. கணபதிப்பிள்ளை, வீ.செல்வநாயகம், சு.வித்தியானந்தன், கைலாசபதி, வேலுப்பிள்ளை, சண்முகதாஸ் ஆகியோரிடம் மொழி வளமும், பேராசிரியர் ஆஷ்லி ஹப்பே அவர்களிடம் நாடக அரங்கப் பயிற்சியும் பின்னாளில் இலங்கை நாடக மேதை ஏர்னெஸ்ட் மக்கின்ரேயர் அவர்களிடம் மேற்குலக நாடகப் பயிற்சியும் பெற்றார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட நாடக டிப்ளோமாவில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களிடம் கிரேக்க-தமிழ் நாடக ஒப்பியல் வரலாறு, கொழும்பு அக்குவனய்ஸ் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட நாடக டிப்ளோமா பயிற்சியில் சந்தித்த சிங்கள நாடகக் கலைஞர்களுடனான தொடர்புகள் என்பன இவரது நாடகத் தேடலை அதிகரிக்கச் செய்தன.

இவ்வாறு நாடக அறிவும், பயிற்சியும் பெற்றுக் கொண்ட தாசீசியஸ் அவர்கள் கொழும்பில் நாடோடிகள் என்ற நாடக மன்றத்தை நிறுவி பல நாடகங்களை மேடையேற்றினார்.

மகாகவியின் 'கோடை' என்ற பா நாடகமே இவர் நெறியாள்கை செய்த முதல் நாடகம். முருகையனின் கடூழியம், அம்பியின் வேதாளம் சொன்ன கதை, மகாகவியின் புதியதொரு வீடு என்பன நாடோடிகளில் மேடையேற்றிய ஏனைய நாடகங்களாகும். இதே காலகட்டத்தில் ஞானம் லம்பேட் மொழிபெயர்ப்பு செய்த அலெக்சி ஆபுசோவின் "பிச்சை வேண்டாம்" நாடகம் பெரும் அதிர்வலைகளை அன்று ஏற்படுத்தியது. இந்நாடகத்தை தாசீசியஸ் அவர்களே நெறியாள்கை செய்திருந்தார்.

இதன் பின்னர் நா. சுந்தரலிங்கத்தின் அபசுரம் என்ற அபத்த நாடகத்தில் பொதுவர் என்ற முக்கிய பாத்திரத்தை இவர் ஏற்று நடித்திருந்தார். நா.சுந்தரலிங்கத்தின் அடுத்த நாடகமான விழிப்பு நாடகத்துக்காக இவருக்கு சிறந்த நடிகருக்கான முதல் தேசிய விருது கிடைத்தது.

இந்நாளில் நாடோடிகள், கூத்தாடிகள் என்ற இரு நாடக மன்றங்கள் இணைந்து நடிகர் ஒன்றியத்தை ஆரம்பித்தார்கள். இதன் முதல் மேடையேற்றமாக நெல்லியடி அம்பலத்தாடிகளின் கந்தன் கருணை நாடகத்தை நெறியாள்கை செய்த இளைய பத்மநாதன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணைய நடிகர் ஒன்றியம் மூலம் கந்தன் கருணை நாடகம் புதிய மெருகேற்றம் பெற்றது. சாதி ஒடுக்கு முறையைச் சாடிய இந்நாடகம் காத்தவராயன் கூத்துப்பாடல், மலையகப் பாடல், மற்றும் மன்னார், மட்டக்களப்பு வடமோடி, தென்மோடி நடனங்கள் என்று தாசீசியஸ் அவர்களின் நெறியாள்கையில் சிறப்பாக மேடையேறியது.

மகாகவியின் புதியதொரு வீடு நாடகத்தில் வரும் சூறவளிக் காட்சியில் இடம்பெறும் கண்டிய நடனங்களும், கந்தன் கருணை நாடகத்தில் வரும் ஆட்டங்கள், குறிப்பாக முருகனும் நாரதரும் ஆடும் நடனம் இன்றும் என் கண்ணுள் நிற்கின்றன.

1978இல் யாழ். நாடக அரங்கக் கல்லூரியினூடாக தமிழ் நாடக உலகுக்கு இவர் செய்த சேவையை யாரும் இலகுவில் மறந்து விட முடியாது. ஒவ்வொரு வாரமும் வெள்ளி மாலை கொழும்பில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்திருந்த அரங்கக் கல்லூரியில் சனி, ஞாயிறு இரு தினங்களும் நாடகர்களுக்கான பயிற்சிகளை அளித்துவிட்டு ஞாயிறு மாலை கொழும்பு திரும்பினார். பயிற்சி பாதி, நாடகத் தயாரிப்பு பாதி என்று மூன்றாண்டு காலம் இதனை விடாமல் செய்தார். கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, சிசு நாகேந்திரா, அரசையா போன்ற பெருங்கலைஞர்களும் இவரிடம் பயிற்சி பெற்றவர்களுள் அடக்கம்.

யாழ். நாடக அரங்கக் கல்லூரி அனைத்துலக குழந்தைகள் ஆண்டில் மேடையேற்றிய குழந்தை சண்முகத்தின் 'கூடிவிளையாடு பாப்பா' என்ற நாடகத்தில் இவரது பங்களிப்பு சிறப்பானது. தாசீசியஸ் அவர்கள் எழுதி நெறியாள்கை செய்த அரங்கக் கல்லூரியின் அடுத்த தயாரிப்பான 'பொறுத்தது போதும்' நாடகம் அகில இலங்கை நாடகப் போட்டியில் சிறந்த நாடகத்துக்கான ஜனாதிபதி விருது மற்றும் சிறந்த பிரதிக்கான விருது தாசீசியஸ் அவர்களுக்கும், சிறந்த நடிகருக்கான விருது பிரதான பாத்திரம் ஏற்ற பிரான்சிஸ் ஜெனம் அவர்களுக்கும், இசை விருது கண்ணனுக்கும் கிடைத்தது.

1995இல் பொறுத்தது போதும் நாடக மேடையேற்றத்துக்காக கனடா வந்த போது டி.பி.எஸ் ஜெயராஜின் 'மஞ்சரி' பத்திரிகைக்காக தாசீசியஸ் அவர்களைப் பேட்டி காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. லம்பேட் அவர்களின் இல்லத்தில் இடம்பெற்ற அச்சந்திப்பிலிருந்து சில பகுதிகள்...

"மகாகவியின் புதியதொரு வீடு நாடகத்துக்கான பாடல்களைத் தேடி நீர்கொழும்பு, சிலாபம், மன்னார் போன்ற இடங்களுக்கு நடந்தே சென்றேன். மன்னார் தாழ்வுப்பாட்டில் மாலை ஆழக் கடல் போய் காலை கரை மீளும் மீனவர் படகொன்றில் நானும் மகாகவியும் ஏறினோம். கரைவலைப் பாடல், வைகறையில் வலை இழுக்கும் போதான பாடல் என்று மீனவர் பாடல்களில் மூழ்கிப் போனோம். நான் என் தமிழ்க் கலையின் மூல வேரைத் தேடத் தொடங்கினேன்..."

"சிலாபம் போன்ற பல கரையோரக் கிராமங்களிலும், சிங்களக் கிராமங்களாக மாறிவிட்ட நீர்கொழும்பு போன்ற தமிழ்க் கிரா மங்களுக்குச் சென்று அங்கிருந்த பழைய கூத்துச்சுவடிகளை எடுத்து முதியவர்கள் பாட அவற்றை நான் ஒலிப்பதிவு செய்து கொண்டேன்..."

"...கண்டிய நடனத்தை குருநான்சே சோமலாய முதுன்கொத்கேயிடம் பயின்று கொண்டேன். ஒருமுறை வரவேற்பொன்றில் ஆடவேண்டிய கண்டிய நடனக் குழுவில் ஒருவர் வரவில்லை. உடனடியாக அவர் இடத்தை நான் நிரப்பி ஆட, அனைத்துக் சிங்கள கலைஞர்களும் எனது ஆட்டத்தைப் பாராட்டினர்..."

"நாடகத் தேடலின் போது நான் சந்தித்த சித்தர்கள் மூலம் மூச்சுப்பயிற்சி, யோகாசனம் என்பவற்றைக் கற்றுக்கொண்டேன். புளியம் பொக்கனை நாகதம்பிரான் கோவிலில் பாடப்படும் பாடல் ஒன்றைப் பதிவு செய்யச் சென்ற போது சந்தித்த ஏரம்புச் சித்தரிடம் மூச்சு, மூலாதாரப் பயிற்சிகளையும், சுபசிங்க என்ற சிங்களச் சித்தரிடம் யோகாசனப் பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டேன்."

தாசீசியஸ் அவர்கள் புலம் பெயர்ந்த பின்னர் 90களின் பிற்பகுதியில் தமிழ்நாட்டில் மேற்கொண்ட நாராய்... நாராய்... என்ற நாடகப் பயணம் முக்கியமானது. லண்டன் வாழ் தமிழ்க்கலைஞர்களும், வேறு சில ஈழத்துக் கலைஞர்களும் இணைந்து எமது நாடக அரங்கை தமிழகத்திற்கு அறியச் செய்த பயணமாக அது அமைந்திருந்தது.

'சிறசலாமி' என்ற இவரது நாடகம் சுவிஸ் மக்கள் முன்னிலையில் 24 தடவைகள் மேடையேறியது. முதன் முறையாக ஒரு தமிழ் நாடகம் தமிழ், ஆங்கிலம், ஜேர்மன் மொழிகளில் அமைக்கப்பட்டது சிறப்பு அம்சமாகும்.

இவர் லண்டனில் உருவாக்கிய களரி நாடக இயக்கம் இளைய பத்மநாதன் எழுதிய 'மீண்டும் ராமாயணம் மீண்டும் பாரதம்' என்ற நாடகத்தை மேடையேற்றிப் பாராட்டைப் பெற்றுக்கொண்டது. களரியின் உடனடி அரங்கு மூலம் மண்வாசனை கொண்ட பல குறும் நாடகங்கள் உருவாக்கம் பெற்றன.

தாசீசியஸ் அவர்கள் நாடகனாக மட்டுமல்லாது ஊடகனாகவும் செயல்பட்டுவந்தார். லண்டன் பி.பி.சி தமிழ், ஐரோப்பிய ஐ.பி.சி தமிழ் ஆகிய வானொலிகளிலும், பிரான்ஸ் ரீ.ரீ.என் தொலைக்காட்சியிலும் இணைந்து அவற்றைச் சீர்மைப்படுத்தினார்.

இவ்வண்ணம் ஈழத்தமிழர்களின் பாரம்பரிய கலைவடிவங்களான கூத்துவகைகளின் மூல வேர்களைத்தேடி, அறிந்து அவற்றிற்குப் புத்துணர்ச்சி ஊட்டியதோடு பிறமொழிக் கலைகளையும் குறிப்பாக மேலத்தேய நாடகங்களின் சிறப்புகளையும், கற்றறிந்து, ஏனையோருக்கும் பயிற்றுவித்து வரும் 'நாடகன்' தாசீசியஸ் அவர்களது கலைப்பணி என்றென்றுமாக நினைவு
கொள்ள வேண்டியது.



sriskandan@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

**FRENCH TUITION - பிரெஞ்சு வகுப்புகள்**

**திறமை வாய்ந்த ஆசிரியரால் French மொழி, தரம் 4இல் இருந்து தரம் 12 வரை கற்றுக் கொடுக்கப்படுகின்றது.**

தெடர்புகளுக்கு:

**நளா: 905 808 2064**

**தமிழ் தட்டச்சு மற்றும் மொழிபெயர்ப்பு**

**தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு: $2 டொலர்**
**தமிழ் மூலம் ஆங்கிலம் மொழிபெயர்ப்பு: $8 டொலர்**

**தெடர்புகளுக்கு:**

**சாம்: 011 91 936 272 8808**
asamdaniel@gmail.com

## Buying or Selling a Home / Commercial Property ?

HOMELIFE HIGHER STANDARDS

**Use your rental payments to buy a family home!**
**Invest your savings into owning a property for a bettter return!**
**It's as easy as a phone call!**
**Now's the time to make your dream come true!**
**We Offer ...**

- ☑ Quality Homes
- ☑ Affordable Prices
- ☑ Low Low Mortgage Rates
- ☑ Free Market Evaluations
- ☑ Sell your House Faster and at the Best Price
- ☑ We have Qualified Buyers Waiting to Buy your Home
- ☑ Friendly & Professional Services





To switch to home ownership...
Please Call Direct :
416-625-2870 / 416-843-8585

**Mathan Selvendarakumaran**
Sales Representative


**Kuga Raveendrarajah**
Real Estate Broker

**HomeLife Today Realty Ltd.**, Brokerage* 31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
OFF: **416-298-3200** FAX: 416-298-3440

Not intended to solicit properties or clients contract



## இவரின் புன்னகைக்கான காரணம்



வயது: 75
காப்புறுதி தொகை: 25,000
வைத்திய பரிசோதனை: இல்லை
மாதாந்த கட்டணம்: $282.53
வாங்கிய திகதி: மே, 20ம் திகதி
காப்புறுதி முகவர்: கென் கிருபா

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
Unity Life of Canada
Canada Protection Plan



**KEN KIRUPA**
Life Insurance Broker
759 Warden Ave., Toronto, ON
www.familyprotection.ca

## Non-Medical Insurance

No medical exam required. Offered to individuals from 40 to 85 years of age.
Premiums and coverage will never change. Coverage ranging from $1,000 to $50,000.
Immediate coverage — no waiting period. Benefits could triple in case of accidental death.

CELL 416-830-8191 OFFICE 416759-5453

# ஆயுட் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும்போது...

**சிறீதரன் துரைராஜா**
- ஆயுட் காப்புறுதி முகவர் -



## ஆயுட்காப்புறுதிக்கு விண்ணப் பிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.

எம்மில் பலர் காப்புறுதி செய்துள்ளோம் சிலர் காப்புறுதி செய்யாமல் எப்போதாவது வசதி வரும்போது செய்யலாம் என்று காத்தி-ருக்கின்றோம். நாங்கள் எவ்வளவு காலமும் காத்திருக்கலாம் ஆனால் நமது உடல் ஆரோக்கியமும், வயதும் எமக்காகக் காத்தி-ருக்காது.

காரணம் உடல் ஆரோக்கியமாக இல்லாவிட்-டால் அல்லது நோய்வாய்பட்டால் காப்புறுதி பெற்றுக்கொள்வது கடினம். அல்லது வயது கூடக்கூடக் எமது காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணம் அதிகரிக்கும். ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள விரும்பு பவர்கள் இளவயதில் உடல் ஆரோக்கியமாக இருக்கும்போது கூடிய தொகைப் பணத்திற்கு காப்புறுதி பெற்றுக்கொள்வது இலகுவாகும்.

பண வசதி குறைவாக இருந்தாலும் கூட மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் வசதிக்-கேற்ப குறைந்த வருடங்களுக்கு தற்காலிக மான தவணைக்காப்புறுதி பெற்றுக்கொள்ள முடியும். இப்படியான தவணைக் காப்புறுதிகள் தற்காலிகமான திட்டங்களில் இருந்தாலும் இது உங்களுக்கு இப்போது பாதுகாப்பு வழங்குவதோடு மட்டுமல்லாமல் நீங்கள் வசதி வரும்போது ஆயுட்காப்புறுதித் திட்டமாக மாற்றக்கூடிய திட்டங்களாகும். அதாவது 30 வயதுடையவர் $500,000 டொலர்களுக்கான தவணைக்காப்புறுதியை மாதம் $30 டொலர் களுக்குள் பெற்றுக்கொள்ள முடியும். பின்பு அவர் வசதியாக இருக்கும் போது அவரின் தேகைக்கேற்ப அந்த தற்காலியமாக தவணைக் காப்புறுதியை ஆயுட்காலம்வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதியாக மாற்ற முடியும்.

இப்படி மாற்றம் செய்யும் போது மருத்துவ பரிசோதனை எதுவும் செய்ய வேண்டிய அவசியமில்லை. எனவே தவணைச் காப்புறுதி (Term Insurance) பெறும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில் அந்தத் திட்டம் ஆயுட்காப்புறுதித்திட்டமாக மாற்றக்கூடியதா என்பதாகும்.

## தவணைக்காப்புறுதி (Term Insurance)

நீங்கள் ஒரு தற்காலிகமான தவணைக்காப்-புறுதி வாங்கும்போது அந்தத் திட்டம் புதுப்பிக்-கூடியாதகவும் ஆயுட்காப்புறுதியாக மாற்றக் கூடியதாகவும் (Renewable and Convertible) இருக்கவேண்டும். சில குறிப்பிட்ட நிறுவ-னங்கள் வழங்கும் தவணைக் காப்புறுதியில் இந்தச் சலுகைகள் எதுவும் இல்லை.

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

ஆயுட்காப்புறுதிப் பத்திரத்தை பாதுகாப்பாகவும் எமது பயன் பெறுபவருக்கு கிடைக்கக்கூடிய-தாகவும் வைத்திருப்பது அவசியம். காரணம் நாங்கள் இறந்தவுடன் எங்கள் பலன் பெறு-பவர் காப்புறுதிப் பணத்தை பெறுவதற்கு விண்ணப்பம் செய்யவேண்டும். அப்போது ஆயுட்காப்புறுதிக்கான பத்திரம் இல்லாவிட்-டால் அதைப்பெற்றுக்கொள்வது கடினமாக இருக்கும். எனவே ஆயுட்காப்புறுதி சம்பந்த-மான தகவல்களை இரண்டு அல்லது மூன்று இடங்களில் வைத்திருப்பது அவசியம். ஆயுட்காப்புறுதியின் பணம் பெறுவதற்கு தேவையான தகவலகள்.

- ஆயுட்காப்புறுதி நிறுவனத்தின் பெயர்.
- ஆயுட்காப்புறுதி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தின் முகவரியும் தொலைபேசி இலக்கமும்.
- ஆயுட்காப்புறுதியின் இலக்கம் Policy Number.
- ஆயுட்காப்புறுதி முகவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம்.

இந்த விபரங்கள் யாவும் உங்கள் பலன் பெறுபவரிடம் இருந்தால் அவர்களுக்கு ஆயுட்காப்புறுதியின் பணத்தை பெறுவது இலகுவாக இருக்கும்.

எனவே உங்கள் காப்புறுதிப் பத்திரங்களை உங்கள் கணவன், மனைவி, பிள்ளைகள் அல்லது பலன் பெறுபவர்களாக நியமிக்கப் பட்டவர்களிடம் கொடுத்து வைத்திருக்கவேண்டும். ஆயுட்காப்புறுதி நிறுவனங்களுக்கு பணம் கட்டுவது இலகுவான விடயம். ஒருவருக்கு மரணம் ஏற்ட்டாலும் பணம் மீளப்பெறும் போது சில தகவல்கள் இல்லாவிட்டால் பணம் மீளப் பெறுவதில் தாமதம் ஏற்படும். மரணம் அடைந் தவரிடம் தகவல்கள் பெறமுடியாது. அவரின் பத்திரங்களில் உள்ள தகவல்கள் மிகவும் முக்கியமானவை.

## காப்புறுதி பணம் பெறுவதற்கு தேவைப்படும் பத்திரங்கள்:

- ஆயுட்காப்புறுதிப் பத்திரம் (Policy).
- மரணப் பதிவுப் பத்திரம் (Death Certificate).
- இறந்தவரின் பிறந்த திகதியுடன் கூடிய அடையாளப் பத்திரம். (Identification Document).
- எப்படி, எங்கே மரணம் ஏற்பட்டது, அதற்-கான மருத்துவரின் சான்றுப்பத்திரம். அத்துடன் பலன் பெறுபவரின் விபரங்கள் யாவும் ஒரு விண்ணப்பத்தில் பூர்த்தி செய்ய வேண்டும். தேவையான தகவல்களை ஆயுட்காப்புறுதி நிறுவனத்திற்கு கொடுத்-தவுடன் பணம் கிடைப்பது இலகுவாக இருக்கும். ஆயுட்காப்புறுதித்திட்டத்தினைப் பெற்று இரண்டு வருடங்கள் முடிந்திருந் தால் பணம் பெறுவதற்கான நிபந்தனைகள் குறைவாக இருக்கும்.

ஆயுட்காப்புறுதி முகவருடன் தொடர்பு கொண்டு தேவைப்படும் பத்திரங்களை சமர்பிக்கவேண்டும் அல்லது ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டால் அவர்கள் தேவையான தகவல்கள் தருவார்கள்.

## மருத்துவ பரிசோதனைகள்:

ஆயுட்காப்புறுதி நிறுவனங்களின் மருத்துவ பரிசோதனைகள் நீங்கள் பெற்றுக்கொள்ளும் காப்புறுதித்தொகை, உங்கள் வயது என்ப-வற்றை பொறுத்து மருத்துவ பரிசோதனைகள் ஏற்பாடு செய்யப்படும். Para Medical எனப்-படும் மருத்துவ பரிசோதனை அதிகமாக எல்லா ஆயுட்காப்புறுதி விண்ணப்பங்களுக்கும் தேவைப்படும். அதில் சிலவேளைகளில் உங்கள் Urine Sample, Blood profile அல்லது ECG போன்ற பரிசோதனைகள் மேற்கொள்-ளப்படும். இந்தப்பரிசோதனைகள் நிறுவனத்-திற்கு நிறுவனம் வேறுபடலாம். காப்புறுதி தொகை அதிகரிக்கும் போது மருத்துவ பரிசோதனைகளும் அதிகமாகும். இந்த பரி-சோதனைகளை செய்வதற்கு ஆயுட்காப்புறுதி நிறுவனம் ஒரு அங்கிகரிக்கப்பட்ட மருத்துவ தாதி ஒருவரை அனுப்புவார்கள். (Licensed Health Professional அல்லது Registered Nurse). மருத்துவ பரிசோதனைக்கான பணம் எதுவும் நீங்கள் செலுத்த வேண்டியதில்லை.

உங்களுக்கு என்ன பரிசோதனை செய்ய வேண்டும் என்பதை ஆயுட்காப்புறுதி நிறுவனம் உங்கள் முகவர் மூலம் உங்களுக்கு அறியத் தரும். மருத்துவ பரிசோதனைக்கான நாள் நேரம் என்பவற்றை நீங்கள் தீர்மானிக்கலாம். அத்துடன் உங்களுக்கு விரும்பிய இடத்திற்க்கு அவர்களை அழைத்து மருத்துவ பரிசோதனை செய்யமுடியும். உங்கள் மருத்துவ பரிசோ-தனை முடிந்த பின்பு தகவல்கள் யாவும் ஆயுட்காப்புறுதி நிறுவனத்திற்கு அனுப்பி-வைக்கப்படும்.

நீங்கள் கொடுத்த தகவல்கள் மற்றும் உங்கள் மருத்துவ பரிசோதனையின் முடிவுகளைப் பொறுத்து ஆயுட்காப்புறுதி நிறுவனம் உங்கள் காப்புறுதியின் மாதாந்தக் கட்டணத்தை தீர்மானிப்பார்கள். உங்கள் ஆயுட்காப்புறு-திக்கான மாதாந்தக் கட்டணம் உங்கள் மருத்துவ பரிசோதனைகளின் பின்பு அதிக-ரிக்கலாம் அல்லது உங்களுக்கு ஆரம்பத்தில் கூறப்பட்ட கட்டணத்தைவிட குறைவாகவும் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது சில சமயங்களில் ஆயுட்காப்புறுதி இப்போது பெற்றுக் கொள்ள முடியாது என்று நிராகரிக்கவும் படலாம்.

## மருத்துவப் பரிசோதனையும் நீங்களும்:

- உங்கள் மருத்துவ பரிசோதனையை காலை நேரத்தில் செய்வது மிகவும் சிறந்தது. காரணம் மருத்துவ பரிசோத-னையின் போது (Blood Pressure) இரத்த அழுத்தம் பரிசோதனை செய்வர்கள். காலை நேரத்தில் இரத்த அழுத்தம் சாதாரண-மாக இருக்கும். எப்போதும் ஆழ்ந்த நித்திரையின் பின்பு செய்வது சிறந்தது.
- மருத்துவ பரிசோதனைக்கு முன்பு கோப்பி, மதுபானம் (Coffee, Alcohol) போன்ற-வற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- மருத்துவ பரிசோதனைக்கு முன்பு நன்றாக நீர் அருந்தவேண்டும். அத்துடன் அதிக அளவு கொழுப்பு சாப்பாடுகள் சாப்பிடு-வதையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.
- நித்திரை குறைவாக அல்லது மிகவும் கடினமான வேலைக்கு பின்பு மருத்துவ பரிசோதனை செய்வதை தவிர்க்க வேண்டும். உதாரணமாக மருத்துவ பரிசோதனைக்கு முதல் நாள் நல்ல நித்திரை, அளவான உணவு போன்றவை உங்களுக்கு நல்ல பெறுபேறுகளைத் தரும்.
- நீங்கள் பாவிக்கும் மருந்துகள், மற்றும் உங்கள் குடும்ப வைத்தியரின் பெயர் போன்ற தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும். நீங்கள் இதற்கு முன்பு ஏதாவது மருத்துவ பரிசோதனைகள் செய்திருந்தால் அது பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும்.

ஆயுட்காப்புறுதி நிறுவனத்தின் மருத்துவ பரிசோதனையின் பின்பு சில சமயங்களில் மேலதிக தகவல்களுக்கு உங்கள் குடும்ப வைத்தியரிடம் இருந்து தகவல்களைப் பெற றுக்கொள்வார்கள். இதனை APS –Attending Physician’s Statement என அழைப்பார்கள். குடும்ப வைத்தியர் உங்கள் தகவல்களை அனுப்பிய பின்பு தீர்மானம் எடுக்கப்படும். சில குடும்ப வைத்தியர்கள் இந்தத் தகவல் களை உரிய நேரத்தில் அனுப்பாவிட்டால் உங்கள் காப்புறுதி கிடைப்பது தாமதம் ஆகலாம். காரணம் உங்கள் குடும்ப வைத் தியரிடம் நீங்கள் ஒரு வருடத்துக்கு மேலாக போகாவிட்டால் அவர்களுக்கு உங்களின் தற்போதைய தகவல்கள் அனுப்புவது கடின மாக இருக்கும். எனவே அடிக்கடி உங்கள் குடும்ப வைத்தியரிடம் சென்று பரிசோதிப்பது உங்களுக்கும் நல்லது. வருடத்தில் ஒரு முறையாவது உங்கள் குடும்ப வைத்திய-ரிடம் மருத்துவ பரிசோதனை செய்யுங்கள்.

## The Medical Information Bureau:

நீங்கள் ஏதாவது ஒரு ஆயுட்காப்புறுதி நிறு-வனத்தில் ஆயுட்காப்புறுதிக்கு விண்ணப்பம் செய்தவுடன் உங்கள் மருத்துவ ரீதியான தகவல்கள் யாவும் MIB என அழைக்கப் படும் மருத்துவத் தகவல்களுக்கான நிறுவ-னத்தில் பதிவு செய்யப்பட்டுவிடும். இதன்பின்பு உங்கள் மருத்துவத் தகவல்கள் இந்த நிறு-வனத்தில் மிகவும் பாதுகாப்பாகப் பேனப்படும். இந்தக் தகவல்களை ஆயுட்காப்புறுதி நிறுவ-னங்கள் மட்டும் ஒருவர் ஆயுட்காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது பார்வையிடமுடியும். எனவே நீங்கள் எற்கனவே ஆயுட்காப்புறுதி பெற்றிருந்தால் அல்லது விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டிருந்தால் அந்தத் தகவல்கள் ஆயுட்காப்புறுதி நிறுவனத்திற்கு மறைக்க முடியாது.

ஆயுட்காப்புறுதி விண்ணப்பத்தில் கேட்கப்படும் அனைத்துத் தகவல்களையும் சரியாகக் கொடுப்பது அவசியம். ஆயுட்காப்புறுதி நிறு வனங்கள் தற்போதைய உங்கள் மருத்துவ ரீதியான உடல் நிலையைப் பொறுத்தே தீர்மானம் எடுப்பார்கள். எனவே உங்களின் பழைய மருத்துவத் தகவல்களை மறைப்ப-தால் பாதிப்பு உண்டு. சரியான உண்மை-யான தகவல்களை கொடுப்பதால் பாதிப்பு இல்லை.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

**இறுக்கமான சூழலில் இ ல கு வா ன தீர்வு**

• நிரந்தர ஆயுட் காப்புறுதி
• கொடிய நோய்களுக்கான காப்புறுதி
• ஈட்டுக்கடன் காப்புறுதி
• வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி
• RRSP • RESP

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. Unity Life of Canada Canada Life™

**சிறீதரன் துரைராஜா**
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
**416.918.9771**
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



# நீங்கள் அதிஷ்டசாலி

## கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

## நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

- கொடிய நோய்களால் ஏற்படும் வருமான இழப்பை தவிர்ப்பதற்கான காப்புறுதி.
- புற்றுநோய் (Cancer), மாரடைப்பு (Heart attack), பாரிசவாதம் (Stroke) போன்ற 25 விதமான கொடிய நோய்களுக்கு காப்புறுதி.
- ஆரோக்கியமாணவர்களுக்கு அதிகுறைந்த கட்டணத்தில் அதிகூடிய பாதுகாப்பு.
- 1 மில்லியன் டொலருக்கு ஆயுட்காப்புறுதி :

**10 year term life - age 30 non - smoker - male**

**1 000,000.00 - $41.40**

**100,000.00 - $11.25**

- $ 200,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

### Critical Illness Insurance

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

### Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

### RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

### Mortgage Insurance

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

- dig Media -

**TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009**

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · IA Industrial Alliance Insurance and Financial Services Inc. · Unity Life of Canada · Canada Life · LiLand Insurance Inc.

**Million dollar advice from #1 advisor**
















போரால், நடந்து செல்வது தடைசெய்யப்பட்ட பல்லாயிரம்பேருள் ஒருவர்





இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**தேவா குணசிங்கம்**

ரொறன்ரோவில் வசிக்கும் ஓவியரும் புகைப்படக் கலைஞருமான இவர் பல விவரணத் திரைப்படங்களையும் உருவாக்கியுள்ளார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.





